# பொருளியல் நோக்கு

ஜன./பெப். 1995

இரட்டை இதழ்


## அமைப்பு ரீதியான சீராக்கம்

### சிறு உற்பத்தியாளரின் தடுமாற்ற நிலை




மக்கள் வங்கி வெளியீடு

# உற்பத்தி நிகழ்வுப் போக்கில் சிறு உற்பத்தியாளர்கள்




தொழில்நுட்ப முறைகள்







தொழில் முயற்சி உலகுக்குள் பிரவேசம்



மாற்றியமைக்கும் முறை



கிராமத்தில் அதிகாரத்தை
பகிர்ந்து கொள்ளல்





தகவல் இடைவெளியொன்றை உருவாக்குதல்

குறிப்பாக மக்களின் உள்ளூர் அறிவு குறித்த விடயங்களை மக்களுக்கு தெரிய வைப்பது மிக முக்கியமாகும். கிராமியச் சமூகங்கள் தமது அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றின் மதிப்பை புரிந்து கொள்வது அவசியமாகும். சமூகங்களுக்கிடையில் தகவல்களைப் பகிர்ந்து கொள்வது அதனை ஆவணப்படுத்துவதைப் போலவே முக்கியமானதாகும்.

ஆதாரம்: இடைநிலை தொழில்நுட்ப நிறுவனம், இலங்கை.

# பொருளியல் நோக்கு

மலர் 20 இதழ்கள் 10/11 ஜன./பெப். 1995


உள்ளே

## சிறப்புக் கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| ஏ.ஜே.சத்தரசிங்க | 46 | கல்வியில் மகளிரின் பங்கேற்பும் அபிவிருத்தியில் அதன் தாக்கமும் |
| ரஞ்சித் மலிகஸ்பே | 60 | இயற்கை இறப்பர்: சர்வதேச விலை உறுதிப்படுத்தல் வழிமுறைகள் |



வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.


## விசேஷ அறிக்கை

### அமைப்பு ரீதியான சீராக்கம் : சிறு உற்பத்தியாளரின் தடுமாற்ற நிலை


| | | |
|---|---|---|
| மாதவி ஆரியபந்து<br>விசாகா ஹிதல்லகே<br>தரங்கி விஜேசிங்க | 3 | அமைப்பு ரீதியான சீராக்கம் |
| | 15 | காப்பு வரிகளுக்கான பொது உடன்பாட்டு அமைப்பு (GATT), உலக வர்த்தக நிறுவனம் மற்றும் வளர்முக நாடுகள் |
| | 18 | அபிவிருத்தி, வளர்ச்சி மற்றும் அமைப்பு ரீதியான சீராக்கம் |
| | 24 | பேரண்ட மட்டத்தில் வளர்முக நாடுகளின் நிலை : ஒரு கண்ணோட்டம் |
| சமன் கலேகம<br>என். திருச்செல்வம் | 44 | அமைப்பு ரீதியான சீராக்கமும் இலங்கையில் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கமும் |


## நிரல்கள்


| | | |
|---|---|---|
| டப்.ஏ.விஜேவர்தன | | குற்றங்களின் பொருளியல் |
| | 53 | மாணவர் பொருளியல்: இலங்கையில் இறைக் கொள்கையின் அமைப்பு |


பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒருசமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பவையுமல்ல. இக்கட்டுரைகட்கு [illegible]களும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

அடுத்த இதழ் :

மகளிரும் பொருளாதாரமும்

அட்டைப்படம் : தர்ஷண கருணாதிலக

# முன்னோட்டம்


அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை (அசீநி) உருவாக்கிய உலகவங்கி 1994 அக்டோபர் 16ஆம் திகதியன்று தனது 50ஆவது வருட நிறைவினை கொண்டாடியது. அரசியல் சுதந்திரம் கிடைத்து பல வருடங்கள் கழிந்து விட்ட பின்னரும் கூட, மூன்று அபிவிருத்தித் தசாப்தங்கள் முடிவுக்கு வந்திருக்கும் இன்றைய நிலையில் தென்னாசியப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும் பெருந்தொகையான வளர்முக நாடுகள் மிகத் தீவிரமான பொருளாதார, சமூக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. உலக வங்கியின் 1994 ஆம் வருடத்துக்கான மானிட அபிவிருத்தி அறிக்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளை உலகின் வளர்ச்சி குன்றிய பத்து நாடுகளுக்குள் வரிசைப்படுத்தியுள்ளது. இந்த வகையில், இந்நாடுகளின் மொத்தக் குடித்தொகையில் வறிய மக்களின விகிதம் முறையே 40%, 28% மற்றும் 78% என இருந்து வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில், வறியவர்கள் மொத்தக் குடித்தொகையில் 30% ஆக உள்ளனர்.

சுமார் மூன்று தசாப்த காலம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் சீர்திருத்தங்களும் இந்நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளபோதிலும் அந்நாடுகளில் மிகவும் பிரமாண்டமான அளவில் வறுமை நிலவி வருகின்றது. இந்த சீர்திருத்தங்கள் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி, வளர்ச்சியுடன் கூடிய மீள் பகிர்வு, அடிப்படைத் தேவைகள் மற்றும் வறுமை ஒழிப்பு என பல்வேறு வகைகளில் அமைந்திருந்தன. வளர்முக நாடுகளில் வளர்ச்சி தோன்றுவதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் 1980 களின் தொடக்கத்தில் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் (SAP) அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. இவை செயற் படுத்தப்பட்டு சுமார் பத்தாண்டுகள் கழிந்திருக்கும் இன்றைய நிலையில், வளர்முக நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் விஷயத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் ஆற்றல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. உண்மையிலேயே, வளர்முக நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான விமர்சகர்கள் இந்த அசீநி கள் தீங்கு விளைவிக்கக் கூடியவை என்பதனை சுட்டிக் காட்டியுள்ளனர். வறுமை பெருகி வருவது இவற்றின் தெட்டத்தெளிவான விளைவுகளில் ஒன்றாகும். குறைந்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வருமானம், உயர் அளவிலான இறக்குமதிகள் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சாதாரண பொதுமக்களுக்கு சேமநலனும் பொது வசதிகளும் கிடைக்காதிருத்தல், கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற பொது வசதிகளின் தரத்தில் ஏற்படும் வீழ்ச்சி, கைத்தொழில் வளர்ச்சிக்கு சாதகமாக வேளாண்மைத் துறை புறக்கணிக்கப்படுதல் என்பன இவற்றின் விளைவுகளாகும். இறுதி விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம், போஷாக்கின்மை, எழுத்தறிவின்மை, வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் கிராமப்புற வறுமை என்பன படிப்படியாக பெருகி வருகின்றன.

வளர்முக நாடுகள் பொதுவாக கிராமியத்துறை சார்ந்த விவசாயப் பொருளாதாரங்களையே பெருமளவுக்குக் கொண்டுள்ளன. இந்நாடுகளில் சிறிய நுண்மட்ட அளவிலான உற்பத்தியாளர்களின் ஆதிக்கமே நிலவி வருகின்றது. இந்தத் துறை புறக்கணிப்புக்கு ள்ளாக்கப்படும் பொழுது, அதன்விளைவாக, வறுமை பெருகி வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்களினால் ஆதரித்துப் பேசப் பட்டுவரும் அபிவிருத்திக் கொள்கைகள் இந்த விடயத்தை போதியளவில் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. இக் கொள்கைகள் வறியோர், வசதி வாய்ப்புக்கள் குறைந்தோர், சிறு அளவு வேளாண்மைத் துறையை அடிப்படையாகக் கொண்ட கிராமியத் துறையினர் போன்றவர்களுக்கு பாதகமானவையாக இருந்து வரும் அதே வேளையில், நகர்ப்புறத்தை அடிப்படையாகக் கொண்ட பாரிய அளவில் சொத்துக்களை வைத்திருக்கும் துறையினருக்கு சாதகமானவையாக இருந்து வருகின்றன. அசீநி கள் ஊக்குவித்து வரும திறந்த பொருளாதாரம், வசதிபடைத்த சிறு தொகையினருக்கு மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. சமூகத்தில் வாழும் பெருந்தொகையானோரால் அதன் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே, அசீநி களின் ஒட்டுமொத்த தாக்கம் பெரும்பாலான சந்தர்ப்பங் களில் சர்ச்சைக்குரியதாகவும், கேள்விக்குரியதாகவும் இருந்து வந்திருப்பதனைக் காண முடிகின்றது. இத்திட்டங்களை செயற்படுத்தி வந்துள்ள பல நாடுகளின் அனுபவங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன.

இந்தப் பின்புலத்தில்; சர்வதேச அரசு சாராத அமைப்பொன்றான இடைத்தர தொழில்நுட்ப அபிவிருத்திக் குழு (ITDG) தென்னாசிய பிராந்தியத்தைச் சேர்ந்த சிறு அளவு உற்பத்தியாளர்கள் மீது அசீநி கள் எடுத்து வரும் தாக்கத்தினை கண்டறிந்து கொள்வதற்காக ஆராய்ச்சி செய்திட்டமொன்றினை துவக்கி வைத்தது. இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக பொருத்தமான மாற்று அணுகுமுறைகளை இனங்கண்டு கொள்வதும் இந்த ஆராய்ச்சித்திட்டத்தின் நோக்கமாக இருந்தது. இந்த ஆய்வு ஐந்து நாடுகள் தொடர்பான தனித்தனியான ஆய்வுகளை உள்ளடக்கியிருந்தது: பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை. வளர்முக நாடுகளில் அசீநி களின் பொதுவான தலைப்பில் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி செய்திட்டமோன்றின் பாகமொன்றாக இது இருந்தது.

இந்த இதழில் தரப்பட்டிருக்கும் அசீநி கள் தொடர்பான அறிக்கை இந்த ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், இரண்டாந்தர மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வேறு சில குறிப்புக்களையும் உள்ளடக்குகிறது.



# அமைப்பு ரீதியான சீராக்கம் சிறு உற்பத்தியாளரின் தடுமாற்ற நிலை

பின்னணி

அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் (Structural Adjustment Programmes) அண்மைக் காலத்தில் இலங்கையிலும் சர்வதேச அளவிலும் பெருமளவுக்கு விவாதங்களை தூண்டிவிட்டுள்ளன. பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங்களான உலக வங்கி (உவ) மற்றும் சர்வதேச் நாணய நிதியம் (சநாநி) என்பவற்றால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இக்கொள்கைகள் இப்பொழுது பெரும்பாலான வளர்முக நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1970 களுக்கு முன்னர், சநாநி கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்துரைக்கப்பட்ட செய்திட்டங்களுக்கு குறுங்கால கடன்களை வழங்கி வந்தன. வளர்முக நாடுகள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகள் குறுங்கால இயல்பு வாய்ந்தவை என கருதப்பட்டிருந்தது. இக்கடன்கள் பேரண்டப் பொருளியல் சீர்திருத்தங்களுடன் பிணைக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், வளர்முக நாடுகளுக்குள் பேரளவில் சநாநி நிதியங்கள் உட்பாய்ச்சப்பட்டு வந்த போதிலும், அந்நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் வர வர மோசமடைந்து கொண்டு வந்து 1980 களில் நெருக்கடி கட்டத்தை எட்டியிருந்தன. 1973-74 இல் எண்ணெய் விலைகள் நான்கு மடங்குகளில் உயர்ந்ததனையடுத்து தோன்றிய இரு எண்ணெய் விலை அதிர்ச்சிகளும், பிந்திய 1970 களின் உலக பொருளாதார பின்னடைவும் உலக பொருளாதாரத்தில் தலைகீழ் மாற்றங்களை எடுத்து வந்தன. எண்ணெய்யை இறக்குமதி செய்யும் நாடுகளின் வர்த்தக நியதிகள் சீர்குலைந்து சென்றதுடன், அதன் விளைவாக மிகக் கடுமையான சென்மதி நிலுவை நெருக்கடிகள் தோன்றின.

அச்சந்தர்ப்பத்தில், வளர்முக நாடுகளின் அந்நியச் செலாவணி சம்பாத்தியங்களில் சுமார் அரைவாசிப் பகுதி ஆரம்பப் பண்டங்களின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்து வந்தது. இவை பொதுவாக வேளாண்மைத் துறை உற்பத்திகளாகவும், கனிப் பொருட்களாகவும் இருந்தன. இப்பண்டங்களின் விலைகள் ஸ்திரமற்றவையாக இருந்து வந்ததுடன், கடந்த 30 வருட காலமாக அவை வளர்ச்சியடைந்த நாடுகளினால் நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளன. இந்த நிலைமையை விருத்தி செய்யும் நோக்கில் சர்வதேச பண்ட உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், இதில் ஓரளவுக்கு மட்டுமே வெற்றி கிட்டியது. வளர்முக நாடுகள் பெருமளவுக்குச் சாதகமான வர்த்தக நியதிகளை பெற்றுக் கொள்வதற்கு இடையறாது முயற்சிகளை மேற்கொண்டு வந்த போதிலும், 1973-74 எண்ணெய் விலையேற்றம் இடம் பெற்ற சந்தர்ப்பத்திலேயே இதற்கு சாதகமான எதிர்விளைவு கிடைத்தது. மூலப் பொருட்களின் தொடர்ச்சியான வழங்கலை உறுதி செய்து, தமது சொந்த நலன்களை காத்துக் கொள்ள வேண்டுமானால், தாம் வளர்முக நாடுகளுக்கு சாதகமான நிலைமைகளை வழங்க வேண்டியுள்ளது என்ற உண்மையை வளர்ச்சியடைந்த நாடுகள் அப்பொழுது ஏற்றுக்கொண்டன. 1974 மே மாதத்தில் இடம் பெற்ற ஐ.நா. விசேஷ அமர்வொன்றின் போது புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்குக்கான (புசபொஒ) சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த புதிய பொருளாதார ஒழுங்கு வளர்முக நாடுகளில் வர்த்தகத்தையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துவது தொடர்பாக எட்டு பிரதான யோசனைகளை கொண்டிருந்தது. மேலைய உலகம் 1970 களின் பிற்பகுதி அளவில் புசபொஒ இல் ஆர்வம் இழந்ததுடன், அதன் பின்னர் அதனை புறக்கணித்து வந்துள்ளது. எண்ணெய் அதிர்ச்சி ஒரு தற்காலிக நெருக்கடி நிலையை மட்டுமே உருவாக்கியிருந்தது என்பதும், மேலைய உலகின் கைத்தொழில் நாடுகளுடன் பேரம் பேசக் கூடிய சக்தியை வளர்முக நாடுகள் இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் அப்பொழுது மிகத்தெளிவாகத் தெரிந்திருந்தது.

*அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்களின் பரிணாம வளர்ச்சி*

மிக மோசமான பேரண்டப் பொருளாதார கட்டமைப்புக்குள் செயற்படுத்தப்படும் ஒரு நல்ல செய்திட்டமும் கூட தோல்வியடைய முடியும் என்ற உண்மையை 1980 களின் தொடக்கத்தில் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் உணரத் தொடங்கியிருந்தன. எண்ணெய் அதிர்ச்சிகளை அடுத்து வளர்முக நாடுகளில் தோன்றிய நெருக்கடிகள், பிரதானமாக உள்நாட்டுக் கொள்கைகளிலும் நிறுவனங்களிலும் தொடர்ச்சி

அட்டவணை 1

தென்னாசிய கடன் குறிகாட்டிகள் 1982-1991

| மொத்தக் கடன் /மொதேஉ | 1982 | 1985 | 1990 | 1991 |
|---|---|---|---|---|
| இலங்கை | 54.5 | 59.5 | 73.2 | 72.6 |
| பங்களாதேஷ் | 38.9 | 42.5 | 54.9 | 56 |
| நேபாளம் | 14.7 | 23.6 | 52.5 | 53.5 |
| பாகிஸ்தான் | 38.3 | 40.4 | 50.3 | 50.1 |
| இந்தியா | 14.9 | 19.3 | 23.7 | 29.2 |
| கடன் சேவை/ஏற்றுமதி | | | | |
| பங்களாதேஷ் | 19.8 | 21.7 | 28.7 | 19.9 |
| இந்தியா | 14.3 | 22.7 | 28.3 | 30.6 |
| பாகிஸ்தான் | 15.6 | 24.2 | 22.9 | n.a |
| நேபாளம் | 6.1 | 7.6 | 17.7 | 13.6 |
| இலங்கை | 14.9 | 16.5 | 13.9 | 14 |

மூலம்: உலக வங்கி கடன் அட்டவணைகள்

அட்டவணை 2

தென்னாசியாவில் தலைக்குரிய மெய் மொஉஉ வளர்ச்சி விகிதங்கள் (%)

| நாடு | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1986/90 |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 2.73 | 8.08 | 3.44 | 3.69 | -1.38 | 3.31 |
| பாகிஸ்தான் | 3.25 | 4.40 | 1.81 | 2.18 | 3.30 | 2.99 |
| நேபாளம் | 1.41 | 4.70 | 1.60 | 3.43 | 1.89 | 2.61 |
| இலங்கை | 0.01 | 1.27 | 0.99 | 5.07 | 3.28 | 2.61 |
| பங்களாதேஷ் | 3.09 | 0.95 | 0.60 | -1.74 | 0.56 | 0.69 |

மூலம் : சநாநி நிதி புள்ளிவிவரங்கள் 1993, உலக வங்கி, 1987

அட்டவணை 2.1

வளர்முக நாடுகளின் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதங்கள் (1965-1990) (%)

| தொகுதி | 1965-73 | 1973-80 | 1980-89 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|---|
| உப-சகாரா ஆபிரிக்கா | 4.8 | 3.2 | 2.1 | 0.2 | 2.9 | 2.9 | 1.5 |
| கிழக்காசியா | 8.1 | 6.6 | 7.9 | 8.9 | 9.7 | 5.5 | 6.7 |
| தென்னாசியா | 3.6 | 4.2 | 5.1 | 4.3 | 8.2 | 4.5 | 4.2 |
| மத்திய கிழக்கு, வட ஆபிரி | 7.7 | 3.9 | 2.9 | 1.2 | 2.1 | 1.5 | -0.8 |
| இலத்தீன் அமெரிக்கா | 6.5 | 5 | 1.6 | 3.1 | 0.5 | 1.3 | -0.7 |
| உலகம் | 5 | 3.3 | 3.1 | 3.5 | 4.4 | 3.3 | 2.5 |

மூலம்: உலக அபிவிருத்தி அறிக்கை, 1991

அட்டவணை 3

தென் / தென்கிழக்காசிய நாடுகளின் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் என்பவற்றின் பெறுமதி 1950-1991

| | 1950 | 1960 | 1970 | 1980 | 1989 | 1990 | 1991* |
|---|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 3981 | 4876 | 7480 | 39790 | 78750 | 89867 | 100462 |
| இறக்குமதிகள் | 3273 | 6165 | 9037 | 53840 | 95143 | 115724 | 128155 |
| வர்த்தக நியதி | 708 | -1289 | - 1557 | -14050 | -16393 | -25857 | -27693 |

மூலம் : சர்வதேச வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி புள்ளிவிவர கைநூல், 1990, நியூயோர்க்

யாக நிலவி வந்த பலவீனங்களின் விளைவாகவே தோன்றியுள்ளன என உலக வங்கி கருதியது. கடன் பிரச்சினையும் வளர்ச்சிப் பிரச்சினையும் ஒன்றாக இணைக்கப்பட்டு, அவற்றுக்குத் தீர்வுகள் கண்டறியப்பட வேண்டும் என உலக வங்கியும் சநாநியும் கருதின. அந்த வகையில், பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படை செயற்பாடுகளை இலக்காக் கொண்ட மாற்றுக் கொள்கைகளின் தொகுதியொன்றுக்கான அவசியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வெளிக் காரணிகளிலிருந்து வரக் கூடிய எதிர்கால அதிர்ச்சிகளை எதிர் கொள்ளும் பொருட்டு, வளர்முக நாடுகளில் சீராக்கங்கள் செய்யப்படுவது அவசியமாக உள்ளது என்பதனை இந்த நிறுவனங்கள் உணர்ந்து கொண்டன. சென்மதி நிலுவை சமநிலை தொடர்பாக உள்ளக நிதி முறைமைகள் காட்டி வரும் எதிர்விளைவுகளை குறிப்பிடுவதற்காகவே சீராக்கல் (Adjustment) என்ற பதம் பயன்படுத்தப்பட்டது. அதிகரித்தளவிலான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை அனுபவித்து வரும் நாடுகள், ஏற்றுமதிகளை அல்லது இறக்குமதி பதிலீடுகளை உற்பத்தி செய்வதற்கு மூலவளங்களைத் திசை திருப்ப வேண்டுமென கேட்டுக்' கொள்ளப்பட்டன.

இந்த சீராக்கல் கொள்கைகள், பொருளாதாரங்களை மேலும் அதிகளவுக்கு செயல்திறன் மிக்கவையாக மாற்றி, சந்தைச் சமிக்ஞைகளுக்கு ஏற்ற விதத்தில் மூலவளங்களை ஒன்று திரட்டி பகிர்ந்தளிப்பதற்கு வகை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. உலக வங்கி சநாநி யுடன் இணைந்து அமைப்புரீதியான சீராக்கல் கடன்களை வழங்கியதுடன், அசீநிகளையும் துவக்கி வைத்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், குறிப்பாக சென்மதி நிலுவை தொடர்பான நெருக்கடிகளை தணித்து விடுவதற்கு உதவும் என அவை அபிப்பிராயப் பட்டன. இந்த நிகழ்சிசித்திட்டங்கள் பல்வேறு சீர்திருத்தங்களுக்கு ஊடாகவும், நாணய மற்றும் வர்த்தக கொள்கைகளுக்கூடாகவும் பொருளாதாரத்தின் அடிப்படை கட்டமைப்பினை முற்றிலுமாக மாற்றியமைப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தன. அசீ கடன்கள் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்கள் வரை தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வரும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், இந்தக் காலப் பிரிவுக்குள் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவில்லை; அதற்கு மாறாக, மெய்வட்டி வீதங்கள் அதிகரித்து, கடன் நெருக்கடி உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவினை எடுத்து வந்த அதே வேளையில், பல வளர்முக நாடுகளில் வர்த்தக நியதிகள் சீர்குலைந்து சென்றன. கைத்தொழில் வளர்ச்சி முன்னைய தசாப்தங்களின் அளவுகளிலும் பார்க்கக் குறைந்த மட்டங்களில் நிலவி வந்தது.

வர்த்தக நியதிகள் சீர்குலைந்து வந்ததுடன் இணைந்த விதத்தில், அமைப்பு ரீதியான சீராக்கல் கடன்கள் குறைவடைவதற்குப் பதிலாக அதிகரித்து வந்தன. கடன் பளுவினால் அல்லலுற்று வந்த நாடுகள் சநாநி விதித்துரைத்த பொதுப் பரிகார முறைக்கூடாக சிறிதளவு விருத்தி நிலையை மட்டுமே காட்டி வந்த ஒரு சூழ்நிலையில், சநாநி யின் நிகழ்ச்சித் திட்டங்கள் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருந்தன. இந்த நிலையில், 1985இல் பேக்கர் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இந்தத் திட்டம், உலக வங்கியை, சிக்கன வழிமுறைகளை வலியுறுத்தும் ஒரு நிறுவனம் என்ற முறையில் அல்லாது, ஓர் அபிவிருத்தி நிறுவனம் என்ற முறையில் சித்திரித்துக் காட்டுவதற்கு முயன்றது. இந்த பேக்கர் திட்டம் அசீ கடன்கள் மீதான உச்ச வரம்புகளை நீக்கியது. மேலும், உடனடியான சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான குறுங்கால வழிமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்த அசீ கடன்கள், ஓர் நீண்ட கால இயல்பினை பெறுவதற்கு இடமளிக்கப்பட்டது. அசீநி கள் பொருளாதாரத்தின் இதயப் பகுதியில் ஊடுருவிச் செல்லும் கொள்கைகளாக உருவாகி வந்தன. அசீநி கள் கடன் பெறும் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கியமான துறைகள் அனைத்தையும் உள்ளடக்கியிருந்தன. வர்த்தகம், நாணய மற்றும் செலாவணி விகிதக் கொள்கைகள், வேளாண்மை மற்றும் கைத்தொழில், தேசிய முதலீட்டுக் கொள்கைகள், வட்டி விகிதங்கள் மற்றும் கடன் முகாமை ஆகிய அனைத்துமே சீர்திருத்தங்களின் கீழ் எடுத்து வரப்பட்டன.

### அசீநி கள் என்றால் என்ன?

அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள், கொடுகடனை, குறிப்பிட்ட ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கையுடனும் நிறுவன ரீதியான மாற்றங்களுடனும் பிணைக்கின்றன. உலக வங்கி இவற்றுக்கு பின்வருமாறு (1989) வரைவிலக்கணம் வழங்கியுள்ளது: "கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் சீர்திருத்தங்கள்; வரிகள் போன்ற பேரண்டப் பொருளியல் மற்றும் பொதுத்துறை திறமையின்மை போன்ற நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள்." ஒரு நாட்டின் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் உற்பத்தித் திறன் கொண்டவையாகவும், நாட்டின் அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு நிலையான ஒரு அடிப்படையில் பங்களிப்புச் செய்யக் கூடியவையாகவும் அந்தத் துறைகளை அனைத்துமடங்கிய விதத்தில் மீளமைப்பு செய்து, நிர்வகித்து ஒருங்கிணைப்பதாகும்." அசீநி கள் சமநிலையான பேரண்டப் பொருளியல் சூழ்நிலையொன்றை உருவாக்கும் என்றும், மறுபுறத்தில், நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியையும், முதலீட்டினையும் அனைத்து மக்கள் பிரிவினர்களுக்கும் சிறந்த வாழ்க்கை நிலைமைகளையும் எடுத்து வருவதுடன், பொருளாதார வாய்ப்புக்களை சனநாயகமயமாக்கும் என்றும் உலக வங்கி எதிர்பார்க்கின்றது. அசீநி தன்னளவில் ஒரு அபிவிருத்தி அணுகுமுறையாக இருந்துவரவில்லை; ஆதலால் அது இறுதி உற்பத்திப் பொருள் ஒன்றை எடுத்து வருவதில்லை. அபிவிருத்திக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு உசிதமான பொருளாதார சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு வழிமுறையாக மட்டுமே அது உள்ளது.

சீராக்கலின் முதன்மைக் கவனம் வெளிச்சமநிலை இன்மையை ஒழிப்பதாகும்; பொதுவாக, சீராக்கல் வெளிப் பற்றாக்குறைகளை நீக்கும் பொருட்டு உள்நாட்டுத் தேவையை கிடைக்கக் கூடியதாக இருக்கும் உள்ளூர் மூலவளங்களுடனும் மாறி வரும் வளங்கள் மற்றும் உற்பத்திக் கட்டமைப்புடனும் பிணைக்கும் ஒரு நிகழ்வுப்போக்கினை எடுத்து வருகிறது. வழமையாக அமைப்பு ரீதியான சீராக்கலுடன் சம்பந்தப்பட்டுள்ள மூன்று வகையான கொள்கைகளை சரீஸ் என்பார் (1990) எடுத்துக் காட்டுகின்றார்: வர்த்தகம், மூலவளங்களை ஒன்று திரட்டுதல் மற்றும் மூலவளப் பாவனையின் செயல்திறன், அசீ கொள்கை வழிமுறைகளை செயல்படுத்துவதில் பின்வரும் பொறிமுறைகள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன:

ஏற்றுமதி மேம்பாடு மற்றும் இறக்குமதி தாராளமயமாக்கல் என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தகக் கொள்கை

செலாவணி விகித சீர்திருத்தங்கள், ஏற்றுமதித் தீர்வைகள் மற்றும் வரிகள் என்பவற்றின் குறைப்பு, ஏற்றுமதி கோட்டா விதிமுறைகள் தளர்த்தப்பட்டமை, ஏற்றுமதி மானியங்கள் மற்றும் நிதிசார் ஊக்குவிப்புக்கள் என்பவற்றின் அறிமுகம், ஏற்றுமதியாளர்களுக்கான கடன் வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு தீர்வை யற்ற இறக்குமதி வசதிகளை அளித்தல் போன்ற நிதிசார் ஊக்குவிப்புக்களுக் கூடாக ஏற்றுமதி மேம்பாடு சாதிக்கப் படுகிறது. ஏற்றுமதி அபிவிருத்தி நிதியங்களை ஸ்தாபித்தல், சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் போன்ற நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை ஏனைய ஆதரவு வழிமுறைகள் உள்ளடக்குகின்றன. கோட்டாக்கள் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் என்பன ஒழிக்கப்படுவதன் மூலமும், தீர்வைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை விவேகபூர்வமான முறையில் வைத்துக் கொள்வதன் மூலமும், இறக்குமதி ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றில் சாதகமான மாற்றங்களை எடுத்து வருவதன் மூலமும் இறக்குமதி தாராளமயமாக்கலுக்கு ஆதரவளிக்கப் பட்டு வருகின்றது.

அரசிறைக் கொள்கைகள் நாணய மற்றும் கொடுகடன் கொள்கைகள், வெளிக்கடன் கொள்கைகள் என்பவற்றுக்கூடாக மூலவளத் திரட்டல் சாதிதத்துக் கொள்ளப்படுகிறது. அரசிறைக் கொள்கைகள் வரிகள், செலவு இலக்குகள், மானியக் குறைப்பு மற்றும் பொதுச் செலவினக் குறைப்பு போன்ற பொது முதலீடுகளில் மாற்றங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. நாணய மற்றும் கொடுகடன் கொள்கைகள் பொது மற்றும் தனியார் துறை கடன் வட்டி விகிதங்கள் மீதான உச்சவரம்புகள் மற்றும் குறித்துரைக்கப் பட்ட பற்றாக்குறை இலக்குகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வெளிநாட்டுக் கடன் தொடர்பான கொள்கைகள் புதிய வெளிநாட்டுக் கடன்படுதல் மீதான உச்சவரம்புகள் மற்றும் விருத்தியாக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் என்பவற்றை உள்ளடக்கு கின்றன.

பொது முதலீடு, விலையிடல் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கொள்கை வழி முறைகளுக் கூடாக மூலவளப் பாவனையின் செயல்திறன் சாதித்துக் கொள்ளப்படுகிறது. செய்திட்டத் தெரிவு மற்றும் தனியார்மயமாக்கல் என்பவற்றுக்கான விருத்தியாக்கப்பட்ட விதிமுறைகள் தொடர்பான கொள்கை களுக்கூடாக பொது முதலீட்டு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படு கின்றன. விவசாய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் விலைகள் என்பவற்றிலும் இடுபொருள் விலைகள் மற்றும் வலு விலைகள் என்பவற்றிலும் மாற்றங்களை எடுத்து வருவதற்கும், நுகர்வோர் விலைகளில் விலைக் கட்டுப்பாடுகளை இல்லாமல் செய்வதற்கும் விலையிடல் கொள்கை கள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுத்துறை தொழில் முயற்சிகளை மீளமைக்கும் அல்லது தனியார் மயமாக்குதல், ஒழுங்குவிதிகளை குறைத்தல் மற்றும் விவசாய நிறுவனங்களில் மாற்றங்களை ஏற்படுத்துதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்ட கொள்கை களை நிறுவன ரீதியான சீர்திருத்தம் உள்ளடக்குகின்றது.

எந்த ஒரு வகையைச் சேர்ந்த சீராக்கத்தினையும் குறுகிய காலத்தில் எடுத்துவர முடியாது என்பது இப்பொழுது உணரப்பட்டுள்ளது. அது ஒரு படிப்படியான நிகழ்வுப்போக்காக இருந்து வருவதுடன், பல வருட சீர் திருத்த முயற்சிகளின் பின்னர் மட்டுமே பெறுபேறுகளை எடுத்து வருகின்றது. இது ஒரு நாட்டின் முன்னுரிமைகளை மீள ஒழுங்குபடுத்துவதுடன் சம்பந்தப் பட்டுள்ளது.

தென்னாசியப் பிராந்தியத்தில் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் செய்யப்படுவதற்கு வழிகோலிய பின்னணியையும், நிகழ்வுகளையும் அடுத்து வரும் பகுதி சுருக்கமாக எடுத்து விளக்குகின்றது.

அசீநி கள்: தென்னாசிய அனுபவம்

அசீநி கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதற்கு முன்னர், தென்னாசிய நாடுகள், பூகோளம், பொருளாதார அடித்தளம், உலக சந்தையுடனான தொடர்பு, சமூக அபிவிருத்தி, அரசியல் சித்தாந்தங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் என்பவற்றில் அடிப்படையில் பல பொதுப் பண்புக் கூறுகளையும், அதேபோல வேறுபாடு களையும் கொண்டிருந்தன. இத்தகைய வேறுபாடுகள் நிலவி வந்த போதிலும், அசீநி கள் தென்னாசியா முழுவதிலும் சார்பு ரீதியில் ஒரே சீரான முறையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. இந்தியாவும் பாகிஸ்தானும் தாம் பெற்றுக் கொண்டிருந்த பூகோள அரசியல் அனுகூலம் காரணமாகவும், சக்தி வாய்ந்த பொருளாதாரங்கள் காரணமாகவும் அசீநி களை எதிர்த்து நின்று, பேரம் பேசக்கூடிய நிலையில் இருந்தன. நேபாளம் 1980 களின் தொடக்கம் வரையில் சார்பு ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது; ஆனால், அசீநி களின் அறிமுகத்துக் கூடாக அது உலக பொருளாதாரத்துக் குள் இழுத்து வரப்பட்டது. பங்களா

தேஷிலும் இலங்கையிலும் அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் அதிக எதிர்பார்ப்புக்களின்றி அசீநி களையும் அவற்றின் நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டன.

பெரும்பாலான தென்னாசிய நாடுகள் பாரிய விவசாய கிராமியத் துறையை தம்மகத்தே கொண்டுள்ளன. இத்துறை அளவில் சிறிய, எண்ணற்ற உற்பத்தி அலகுகளை உள்ளடக்குகிறது. பிராந்தியத்தின் குடித்தொகையில் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்டவர்களுக்கு இத்துறையே வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றது. ஆனால், அசீநி களின் அறிமுகத்தினையடுத்து பெருந் தொகையான அமைப்பு ரீதியான மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டன. இக்கட்டுரையின் முதன்மை நோக்கம், தென்னாசியாவின் சிறு உற்த்தித்துறையின் மீது அசீநி கள் எடுத்து வந்துள்ள தாக்கங்கள் மீது கவனம் செலுத்துவதாகும்.

## இலங்கை அனுபவம்

இலங்கையின் பொருளாதாரம் 1970 களின் தொடக்க காலத்தில் உள்நோக்கிய இயல்பினைக் கொண்டிருந்தது. அது இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்மயமாக்கல் உத்தியொன்றினைப் பின்பற்றியது. இந்தத் தசாப்தத்தின் பிற்பகுதியளவில் பொருளாதாரம் ஒரு தேக்க நிலையை அடைந்திருந்ததுடன், (பொருள் உற்பத்தி மற்றும் சேவைகள் என்பன தவிர்ந்த) பெரும்பாலான துறைகளில் வளர்ச்சி ஓர் எதிர்மறையான போக்கினைக் காட்டி வந்தது. கடுமையான அந்நியச் செலாவணித் தட்டுப்பாடுகளும், உயர்மட்டத்திலான வேலையில்லாத் திண்டாட்டமும் அன்றைய பொருளாதாரத்தின் குணாம்சங்களாகக் காணப்பட்டன. இந்த நிலையில், 1977 இல் நாட்டில் அரசாங்க மாற்றம் இடம்பெற்றது. அதனையடுத்து, நாடு பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையை பின்பற்றிச் செல்லத் தொடங்கியது. பொருளாதாரத்தை மீளமைப்புச் செய்யும் நிகழ்வுப்போக்கில் இரு வேறுபட்ட கட்டங்கள் இடம்பெற்றன: 1977–1988 காலப்பிரிவில் முதல் கட்டம் இடம் பெற்றது; இரண்டாவது கட்டம் 1989 இல் தொடங்கி நீடித்து வருகிறது (குலேகம, 1994).

## முதலாவது கட்டம்

முதலாவது கட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்கை சீர்திருத்தங்கள் பெருமளவுக்கு பாரம்பரியத் துன்மை வாய்ந்தவையாக இருந்தன. அவையாவன : (i) (46 சத வீதத்தினால்) கணிசமான அளவிலான நாணயப் பெறுமதி இறக்கம், செலாவணி விசிதங்களை ஒருமுகப் படுத்தியமை, ஏற்றுமதித் தீர்வைகள் மூலம் அளவு ரீதியான கட்டுப் பாடுகளை மீண்டும் எடுத்து வந்தமை, பெயரளவு பாதுகாப்பு விகிதங்களை குறைத்தமை மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகளை ஓரளவுக்கு தாராயமயமாக்கியமை; (ii) நிதிச் சந்தையை ஓரளவுக்கு தாராளமய மாக்கியமை; வட்டி விசிதங்கள் சந்தை மட்டங்களுக்கு அண்மித்த விதத்தில் நிர்ணயிக்கப்பட்டதுடன், இலங்கையில் வெளிநாட்டு வங்கிகள் இயங்குவதனை இயலச் செய்வதற்கென நிதிச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் எடுத்து வரப்பட்டது; (iii) விலைகள் சந்தைச் சக்திகளுக்கு ஏற்ப மாறிச் செல்வதற்கு இடமளிக்கும் வகையில் விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன; உணவு மானியங்கள் ஒழிக்கப்பட்டதுடன், அவற்றின் இடத்தில் உணவு முத்திரைத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டமை; (iv) வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு உறுதியான ஓர் ஊக்குவிப்புத தொகுதி வழுங்கப்பட்டதுடன், சுதந்திர வர்த்தக வலயமொன்று ஸ்தாபிக்கப்பட்டமை.

அசீநி களின் இந்த தொடக்க கட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தொகுதியின் முக்கிய கவனம் வர்த்தகத்தின் மீதே – அதாவது, செலாவணி விசித சீராக்கம் மற்றும் தீர்வை குறைப்பு என்பவற்றின் மீதே- குவிமையப்படுத்தப்பட்டிருந்தது. ஏற்றுமதிகளுக்கு உசிதமான ஊக்குவிப்புக்கள் முறையொன்றினை எடுத்து வருதல், அரசாங்கத் தலையீட்டினை குறைத்தல், சந்தைச் சக்திகள் சுதந்திரமாக இயங்குவதற்கு இடமளித்தல் ஆகியன இதன் முதன்மை நோக்கங்களாகும். உள்நாட்டு, வெளிநாட்டுத் தனியார் துறை பொருளாதாரத்தில் முனைப்பு மிகுந்த ஒரு பங்கினை வகித்து வர வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஒட்டுமொத்த பொருளாதார உறுதிப்பாட்டினை எடுத்து வருவதற்காக இறைக் கொள்கைகளும் நாணயக் கொள்கைகளும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டன. மூலவளங்களை நுகர்விலிருந்து முதலீட்டுக்கு திசை திருப்புவது இறைக் கொள்கையின் நோக்கமாக இருந்தது. நாடு மிகப்பிரமாண்டமான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றினை முன்னெடுத்துச் சென்றது. நீர்ப்பாசன கட்டமைப்புகள் மற்றும் மின் உற்பத்தி என்பவற்றையும் உள்ளடக்கிய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் இந்தத்திட்டங்கள் கவனம் செலுத்தின. எனினும், வெளிநாட்டு உதவிக்கு இணையான விதத்தில் உள்நாட்டு நிதிகளை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையினால், இந்தத் திட்டங்கள் ஓரளவுக்கு மட்டுமே வெற்றியளித்தன. எனவே, 1977–88 காலப்பிரிவின் போது வரவுசெலவுத் திட்ட பற்றாக் குறைகள் உயர்ந்த அளவில் நிலவி வந்தன. 1980 களின் தொடக்கததின் போது பேரண்டப் பொருளாதார முகாமை பெருமளவுக்குக் கடினமானதாகக் காணப்பட்டது.

குறுங்காலத்தில் நிலவும் பொருளாதாரச் சூழ்நிலை தனியார்துறை முதலீட்டுக்கும் வளர்ச்சிக்கும் எந்த வகையிலும் உசிதமானதாக இருந்து வரவில்லை. பொதுத்துறைத் தொழில் முயற்சிகளின் செயல் திறன் மிகக் குறைவாக இருந்து வந்தமையினால், அவை, தேக்கமடைந்திருந்த பொருளாதாரத்துக்கு தாங்கிக் கொள்ள முடியாத சுமைகளாக இருந்தன. கைத்தொழில் துறையில் மூலதன முதலீடுகளை மேற்கொள்வதற்கு போதியளவில் வளங்கள் கிடைக்கவில்லை. இதன் விளைவாக, கைத்தொழில் துறை நாட்டின் மொதேஉக்குப் பங்களிப்புச் செய்யும் முனைப்பு மிகுந்த ஒரு துறையாக நிலைமாற்றம் காணத் தவறிவிட்டது. ஏற்றுமதித்துறையில் ஏற்பட்டு வந்த மெதுவான வளர்ச்சி அந்நியச் செலாவணி நெருக்கடிகளை எடுத்து

வந்தது. இதன் இறுதி விளைவாக, இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்கள் என்பவற்றில் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இக்காலப் பிரிவின்போது முன்னுரிமைத் துறைகளுக்கு மூலவளங்களை நெறிப்படுத்தும் பொருட்டு, கடன் மீள் நிதி செயற்பாட்டில் முக்கியமான ஒரு திருத்தம் எடுத்து வரப்பட்டது. ஏற்றுமதி கைத்தொழில் துறைக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்பட்டது. பொருள் உற்பத்தித் துறைக்குச் சார்பான ஏற்றுமதி முறையொன்றை எடுத்து வருவதே இதன் நோக்கமாக இருந்தது. எனினும், இரட்டை இலக்கப் பணவீக்க மட்டம், செலாவணி விகிதம் கணிசமான அளவில் பெறுமதியேற்றம் அடைவதற்கு வகை செய்தது. அத்துடன் இலங்கையின் ஏற்றுமதிகளின் போட்டித்திறன் குறைவடைந்தது. மறுபுறத்தில், உள்நாட்டுப் பொருட்களிலும் பார்க்க இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் ஒரு நிலை உருவாகியிருந்தது. இது உள்ளூர் சிறு உற்பத்தியாளர்களை சந்தையிலிருந்து ஓரங்கட்டியது.

தாராயமயமாக்கல் இடம்பெற்ற முதல் கட்டத்தின் போது, மூலவளப் பகிர்வில், விவசாயத் துறையிலிருந்து பொருள் உற்பத்தித் துறையை நோக்கிய ஒரு நகர்வு இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்புக்கு மாறாக, சேவைத் துறையை நோக்கியே மூலவள நகர்வு இடம்பெற்றது. இதன் விளைவாக, பொருள் உற்பத்தித்துறை எதிர்பார்க்கப்பட்ட காலப் பிரிவுக்குள் பொருளாதாரத்தின் முன்னணிக் கூறாக உருவாக முடியாது போய்விட்டது. ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது, தாராளமயமாக்கலின் முதலாவது கட்டம் எதிர்கொண்ட மிக முக்கியமான தோல்வி, சேவையை அடிப்படையான நடவடிக்கைகளிலிருந்து கைத்தொழில் நடவடிக்கைகளை நோக்கிய நிலை மாற்றத்தினை அதனால் எடுத்து வர முடியாதிருந்தமையை காண முடிகிறது.

இந்தக் கால கட்டத்தின் போது நாடு மிக முக்கியமான பல உள் மற்றும் வெளி நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. ஒருபுறத்தில், எண்ணெய் விலையேற்றங்களும் 1980 களின் தொடக்கத்தில் இடம்பெற்ற உலக பொருளாதாரப் பின்னடைவும் நாட்டின் பொருளாதார உறுதிப்பாட்டினைச் சீர்குலைத்திருந்தன. மறுபுறத்தில், வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வந்த யுத்தமும் தென் இலங்கையில் தலைதூக்கிய வன்முறைகளும் இந்த சீர்குலைவினை மேலும் தீவிரப்படுத்தின. இலங்கை, இதன் பின் விளைவாக, மாறிவரும் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ற விதத்தில், சீராக்கல் வழிமுறைகளை இடையறாது மாற்றியமைத்துக் கொண்டு வந்தது. இந்தப் பின்னணியில், உள்நாட்டுக் கைத்தொழில்களை பாதுகாத்துக் கொள்வதற்கு அல்லது செயல் திறனற்ற இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்களை ஏற்றுமதி வழிப்பட்ட கைத்தொழில்களாக மாற்றியமைப்பதற்கு அவசியமான கொள்கை வழிமுறைகள் காணப்படவில்லை. பெரும்பாலான நடுத்தர மற்றும் சிறிய கைத்தொழில்கள் சந்தைச் சக்திகளின் நெருக்குதல்களை எதிர்கொண்டு ஒன்றில் நட்டத்தில் இயங்கி வந்தன; அல்லது இழுத்து மூடப்பட்டன.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை வளர்ச்சிப் பாதையில் முடுக்கி விடும் விஷயத்தில் தாராளமயமாக்கல் தோல்வி கண்டது. சந்தைச் சக்திகளின் செயற்பாட்டுக்கு ஊடாக, செயல்திறனற்ற கைத்தொழில்கள் செயல்திறன் மிக்க கைத்தொழில்களுக்கு வழிவிட வேண்டும் என்பதே தாராளமயமாக்கலின் அடிப்படை அணுகுமுறையாகும். உயர் அளவில் பாதுகாப்பினை பெற்று, நிலைத்து வந்த சிறிய மற்றும் நடுத்தர

அட்டவணை 4

பிரதான பேரண்ட பொருளியல் குறிகாட்டிகள் 1978-93 (இலங்கை)

| | 1970-77 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வளர்ச்சி (% வருடமொன்றுக்கு) | 2.8 | 8.2 | 6.5 | 5.5 | 6.1 | 4.8 | 4.9 | 5.1 | 4.9 | 4.3 | 1.5 | 2.7 | 2.3 | 6.2 | 4.6 | 4.3 | 6.0 |
| வ.செ. திட்ட பற்றாக்குறை (கொடைகளுக்கு முன்னர்) மொ.உ.உ. வின் % ஆக | -9.3 | -13.8 | -13.8 | -23.1 | -15.5 | -17.4 | -13.4 | -9.0 | -11.7 | -12.2 | -11.1 | -15.6 | -11.2 | -9.9 | -11.6 | -7.4 | -8.1 |
| பணவீக்கம் (%) | 5.8 | 12.1 | 10.8 | 26.1 | 18.0 | 10.8 | 14.0 | 16.6 | 1.5 | 8.0 | 7.7 | 14.0 | 11.6 | 21.5 | 12.2 | 11.4 | 11.2 |
| நடைமுறைக் கணக்கு (சென்மதி நிலுவை) மொ.உ.உ. வின் % ஆக x | -1.2 | -2.4 | -6.8 | 16.4 | -9.9 | -11.9 | -9.2 | -0.9 | -7.0 | -6.6 | -5.1 | -5.6 | -4.4 | -3.2 | 5.4 | -3.6 | -5.4 |
| மெய் செலாவணி விகிதம் (வர்த்தக சுட்டெண் நிறைவேற்றப்பட்டது) | · | 100 | 100 | 98 | 99 | 99 | 93 | 77 | 101 | 117 | 118 | 114 | 121 | 118 | 113 | 112 | - |
| முதலீடு மொ.உ.உ. வின் % ஆக | 14.4 | 19.9 | 25.2 | 31.2 | 31.2 | 31.9 | 31.0 | 28.3 | 25.9 | 25.8 | 23.3 | 22.5 | 21.6 | 21.9 | 22.6 | 23.5 | 24.0 |
| பொது முதலீடு (மொ.உ.உ. வின் %) xx | 6.0 | 12.1 | 12.2 | 18.3 | 14.6 | 16.7 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| உள்நாட்டு சேமிப்புக்கள் மொ.உ.உ. வின் % ஆக | 13.4 | 15.3 | 13.8 | 11.2 | 11.7 | 11.9 | 13.8 | 19.9 | 11.9 | 12.0 | 12.8 | 12.0 | 12.2 | 14.3 | 12.7 | 15.3 | 15.5 |
| வர்த்தக நியதி | 163 | 189 | 136 | 110 | 87 | 82 | 100 | 122 | 100 | 89 | 99 | 93 | 91 | 87 | 86 | 89 | - |
| ஏற்றுமதிகள் % மொ.உ.உ. வின் % ஆக | 14.5 | 25.2 | 29.2 | 26.5 | 24.1 | 21.3 | 20.5 | 24.2 | 20.4 | 18.9 | 20.9 | 21.1 | 22.3 | 24.7 | 22.6 | 25.9 | 26.6 |
| இறக்குமதிகள் மொ.உ.உ. வின் % ஆக | 17.0 | 30.6 | 43.1 | 51.0 | 42.6 | 41.9 | 37.1 | 31.9 | 31.6 | 30.7 | 31.0 | 32.1 | 31.8 | 33.4 | 33.7 | 36.0 | 39.3 |
| பெயரளவு வட்டி விகிதம் | 10.1 | 15.8 | 16.0 | 21.1 | 21.1 | 22.3 | 21.8 | 21.9 | 21.2 | 20.6 | 19.8 | 18.9 | 20.0 | 20.0 | 20.75 | 20.0 | 21.5 |
| மெய் வட்டி விகிதம் | 4.1 | 3.0 | 4.7 | -4.0 | 2.6 | 10.4 | 6.8 | 4.5 | 19.4 | 11.7 | 11.2 | 4.3 | 7.5 | -1.2 | 7.7 | 7.7 | 9.3 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள்
x நடைமுறைக் கணக்கு சேவைகளிலான வர்த்தகத்தை உள்ளடக்குகிறது
xx 1988 க்கு பிற்பட்ட காலம் தொடர்பாக பொது முதலீட்டு விபரங்கள் கிடைக்கவில்லை

கைத்தொழில்கள் ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்தினை பெற்றிருக்கவில்லை. எனவே, அவற்றினால் போட்டியை தாக்குப் பிடிக்கும் திறனை பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. இந்த நிலையில், அவை ஒன்றில் தம்மை சீராக்கம் செய்து கொள்ள வேண்டியிருந்தன; அல்லது மூடப்பட வேண்டியிருந்தன. சிறிய நிறுவனங்கள் சந்தைச் சக்திகளின் நெருக்குதலினை தாக்குப் பிடிக்கக் கூடியளவுக்கு செயல் திறன் அற்றவையாக இருந்து வந்தால், அவை தமது ஊழியத்தினையும் மூலதனத்தினையும் அதிக இலாபகரமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும் என ஒருவர் வாதிட முடியும்.

சிறிய கைத்தொழில்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், பிரதானமாக அவற்றின் 'அளவிலிருந்தே தோன்றின. அவை அளவில் சிறியவையாக இருந்து வந்தமையால் தாராளமயமாக்கலிலிருந்து அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருந்தன; அல்லது பாரிய கைத்தொழில்கள் தமது பிரமாண்டமான அளவு காரணமாக சிறந்த போட்டி அனுகூலமொன்றினை பெற்றிருந்தமையினால் சிறு கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டன. மேலும், இந்த சிறு கைத்தொழில்கள் பெரிய நிறுவனங்களுக்கான உப ஒப்பந்த அமைப்புக்கள் என்ற முறையில் மட்டுமே ஏற்றுமதி மேம்பாட்டில் பங்கேற்க முடிந்தது. உள்நாட்டு உப ஒப்பந்தக்காரர்களுக்கு நிறுவன ரீதியான சலுகைகள் இல்லாதிருந்தமையினால் இந்தப் பங்கேற்பும் கூட நடைமுறைச் சாத்தியம் அற்றதாக இருந்தது.

## இரண்டாவது கட்டம்

தாராளமயமாக்கல் போதியளவில் இடம் பெறாதிருந்தமையாலேயே முதலாவது கட்டத்தின் போது பிரச்சினைகள் உருவாகின என உலக வங்கி கருதியது. பொதுத் துறைக் கூட்டுத்தாபனங்களின் செயல் திறன் குன்றிய நிலை, நேரடி உற்பத்தித் துறைகளிலும் செலாவணி விகித பெறுமதி ஏற்றத்திலும் தொடர்ச்சியாக அரசாங்கம் ஈடுபட்டு வந்தமை போன்ற காரணிகளை அது

### கிழக்காசியாவின் வெற்றிக் கதைகள்

சில நாடுகள் சந்தைப் பொருளாதாரத்தின் பல்வேறு மாறுபட்ட வடிவங்களையும் வெற்றிகரமான முறையில் பின்பற்றி வந்துள்ளன. ஜேர்மனியின் சமூகச் சந்தைப் பொருளாதாரம், அரச தலையீட்டுக்கூடாக வளர்ச்சி எடுத்துவரப்பட்ட கிழக்காசிய நாடுகளின் திறந்த பொருளாதாரங்கள், தொடக்கத்தில் விவசாயிகளையும் விவசாய அபிவிருத்தியையும் பாதுகாத்துக் கொள்வதிலும், அரசாங்கத்தினால் நிர்வாக வழிகாட்டலை வழங்குவதிலும் முழுக்க முழுக்க கவனம் செலுத்தி வந்த ஜப்பான் மற்றும் உலகிலேயே மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரமாக சீனாவை உருவாக்கிய சோஷலிஸ சந்தைப்பொருளாதாரம் என இவை விரிந்து செல்கின்றன. கிழக்காசிய நாடுகள் பின்பற்றி வந்த சந்தைப்பொருளாதாரமே பெருமளவுக்கு சிலாகித்துப் பேசப்பட்டு வருகின்றது.

கிழக்காசியாவைச் சேர்ந்த ஹொங்கொங், தென்கொரியா, தாய்வான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகளும் பெருமளவுக்குப் பாராட்டத்தக்க விதத்தில் சர்வதேச வர்த்தகத்திலிருந்து பயனடைந்துள்ளன. "நால்வர் அணி" என அழைக்கப்பட்டு வரும் இந்த நாடுகள் 1960 கள் தொடக்கம் பிரமிப்பூட்டத்தக்க வகையில் பொருளாதாரத் தளத்தில் ஒன்றன்பின் ஒன்றாக சாதனைகளை ஈட்டிக் கொண்டுள்ளன. தயாரிக்கப்பட்ட உற்பத்திகளுக்கான வெளிநாட்டுச் சந்தைகளில் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு அடிப்படையில் அவை வெற்றிகரமாக ஊடுருவிச் சென்றன. தொடக்கத்தில் இந்நாடுகள் புடவைகளையும் ஆடைகளையுமே வெளிநாட்டுச் சந்தைகளுக்கென உற்பத்தி செய்தன. ஆனால், பின்னர் அவை இந்த உற்பத்தி அடித்தளத்தைப் படிப்படியாகப் பன்முகப்படுத்திக் கொண்டதுடன், இலத்திரனியல் பொருட்களின் பாகங்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களையும் உருவாக்கிக் கொண்டன.

1970 களின் தசாப்தத்தின் போது ஏற்றுமதிகளின் அளவும் அதேபோல நவீன தொழில்நுட்பத்தின் அளவும் துரிதமாக அதிகரித்துச் சென்றது. கிழக்காசியாவின் புதிதாக கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சி விகிதங்கள், உலகின் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்திருந்த நாடுகள் இதே காலப்பகுதியில் பெற்றிருந்த வளர்ச்சி விகிதங்களிலும் பார்க்க பெருமளவுக்கு உயர்வாக இருந்து வந்தன. அதாவது, 1965-85 காலப்பிரிவின் போது, இந்த நான்கு நாடுகளிலும் மொ.தே.உ. ஆண்டொன்றுக்கு 6% க்கும் மேலாக அதிகரித்து வந்தது. 1970 களில் இடம்பெற்ற இரண்டு எண்ணெய் விலையேற்றங்கள் மற்றும் தொடர்ச்சியான உலக பொருளாதார மந்தம் என்பவற்றுக்கு மத்தியில் இந்த வளர்ச்சி சாதித்துக் கொள்ளப்பட்டுள்ளது என்ற விடயத்தையும் நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

பொருள் உற்பத்தித்துறையில் ஏற்பட்டு வந்த துரிதமான விஸ்தரிப்பு இந்த வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளது என்பதற்கு சான்றுகள் உள்ளன. அடிப்படை நுகர்வுப் பொருட்களை மட்டுமன்றி நடுத்தர பொருட்களையும் அதேபோல மூலதனப் பொருட்களையும் உள்ளடக்கியிருந்த பொருள் உற்பத்தித் துறை ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தும் முயற்சியில் பெருமளவுக்குக் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. பல பொருட்களின் இறக்குமதிகளுக்கெதிராக விதிக்கப்பட்டிருந்த தடைகள் முன்னேற்றத்துக்கு இடையூறாக இருந்து வந்தன; ஆனால், அவற்றால் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. கிழக்காசிய நாடுகள் முன்னேற்றப்படிகளில் இடையறாது மேல் நோக்கி நகர்ந்து சென்றன. இந்நாடுகள் அளவில் சிறியவையாக இருந்து வந்தமையும், பூகோள ரீதியில் சீனாவையும் ஜப்பானையும் அண்மித்து அமைந்திருந்தமையும் ஒரு வாய்ப்பாக இருந்து வந்துள்ளது எனச் சிலர் கருதுகின்றனர்.

இந்த 'நான்கு நாடுகளினதும் பாதையைப் பின்பற்றிச் செல்வதில் பெரும்பாலான வளர்முக நாடுகள் பல சிரமங்களை எதிர்நோக்க முடியும். சில இலத்தீன் அமெரிக்க நாடுகள் ஏற்றுமதி வழிப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றி தோல்வி கண்டுள்ளன. கிழக்காசிய நாடுகள் செய்ததைப் போல கைத்தொழில்மயமாக்குவதற்கும், தயார் செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் அவசியமான போதிய முதலீட்டு மட்டமோ அல்லது கொள்ளளவுச் சக்தியோ பல வளர்முக நாடுகளிடம் காணப்படவில்லை.

சுட்டிக் காட்டியது. அசீநி களின் இரண்டாவது கட்டம் 1989/90 காலப்பிரிவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டம் இருவழி முறைகளை வலியுறுத்தியது. வியாபாரம் செய்யக் கூடிய பொருட்களின் உற்பத்திக்குச் சாதகமான ஊக்குவிப்பு கட்டமைப் பொன்றினை எடுத்துவரும் பொருட்டு, மேலும் அதிகளவில் தாராளமய மாக்கல் வழிமுறைகளை எடுத்து வருவது இதில் முதலாவது வழி முறையாகும். தனியார் துறை "வளர்ச்சியின் உந்து விசை" என அங்கீகரிக்கப்பட்டதுடன், மூலதனச் சந்தையை உயிர்ப்பிப்பதற்கும், மேலும் வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைத்து விடுவதற்கு உறுதிப்படுத்தல் நடவடிக்கைத் தொகுதியொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதில் இரண்டு கூறுகள் சம்பந்தப்பட்டிருந்தன. உயர் வட்டி விகிதக் கொள்கை; மற்றும் தனியார்மய மாக்கல் நிகழ்ச்சித்திட்டம்.

உயர் வட்டி விகிதக் கொள்கையின் விளைவாக உற்பத்திச் செலவில் அதிகரிப்பு ஏற்பட்டது. சர்வதேச நிதி நிறுவனங்களின் வற்புறுத்தலின் பேரில், ஏற்றுமதி அபிவிருத்தி மீதான மானியங்களும் உர மானியங்களும் நீக்கப்பட்டன. இந்தத் தாக்கங்களும் சேர்ந்து கொண்ட பொழுது நிலைமை மேலும் மோசமடைந்தது. தனியார்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் மூலவளப் பகிர்வின் செயல்திறனை விருத்தி செய்த போதிலும், குறிப்பிட்ட சில பொதுத் துறை தொழில்முயற்சிகளுக்கு உப ஒப்பந்த அடிப்படையில் பொருட்களை உற்பத்தி செய்து கொடுத்த சிறு கைத்தொழில்கள், இந்தத் தொழில் முயற்சிகள் தனியார்மயமாக்கப்பட்ட பின்னர் தமது செயற்பாட்டை நிறுத்த வேண்டியிருந்தன. மேலும், புதிதாக தனியார்மயமாக்கப்பட்ட கம்பெனிகள் இறக்குமதி செய்யப்பட்ட பதிலீடுகளையே விரும்பின. தாராள மயமாக்கலின் முதலாவது கட்டத்தில் போலவே இரண்டாவது கடடத்திலும், பாரிய கைத்தொழில்களுக்கும் சிறிய கைத்தொழில்களுக்குமிடையே பிணைப்புக்களை எடுத்து வருவதற்கு உறுதியான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. முதல் கட்டத்தின்போது உற்பத்திக் கட்டமைப்பு தொடர்பான பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலை வர்த்தகம் செய்யப்பட முடியாத துறைக்கு அதிகளவுக்குச் சாதகமானதாக இருந்து வந்தது. இரண்டாவது கட்டத்தின் போது, இந்த நிலைமைக்கு பரிகாரம் காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும், சீரற்ற கொள்கை உருவாக்கம் காரணமாக, இது வெற்றி பெற முடியவில்லை. தாராளமய மாக்கப்பட்ட சூழ்நிலையொன்றில் சிறிய கைத்தொழில்களை மேம் படுத்துவதற்கு ஆதரவான பேரண்டப் பொருளாதார சூழ்நிலை மட்டுமன்றி, பொருத்தமான நிறுவனரீதியான கட்டமைப்பும் இருக்க வேண்டியது அவசியமாகும். எனினும், சிறு கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கான நிறுவனங்களை முடுக்கி விடுவதற்கோ அல்லது புதிய நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கோ அரசாங்கம் எத்தகைய முயற்சிகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

பங்களாதேஷ்

பங்களாதேஷைப் பொறுத்த மட்டில், 1980 களின் தொடக்கத்தில் பொருளாதார நெருக்கடி மிகவும் தீவிரமான கட்டத்தை எட்டியிருந்தது. தொடர்ச்சியான தேக்க நிலை, வெளி மற்றும் உள் கணக்குகளில் நிலவிய பற்றாக்குறைகள், எதிர்மறையான வளர்ச்சி முதலியவை இந்த நெருக்கடியின் குணாம்சங்களாக இருந்தன. முன்னைய தசாப்தங்களின் போது பின்பற்றப்பட்டு வந்த அபிவிருத்திக் கொள்கைகள் தோல்வி கண்டமையின் விளைவாகவே பங்களாதேஷில் அசீநி கள் செயற்படுத்தப்பட்டன எனக் கருதப்படுகிறது.

## உறுதிப்படுத்தலும் அமைப்பு ரீதியான சீராக்கலும்

உறுதிப்படுத்தல் ( Stablisation) மற்றும் அமைப்பு ரீதியான சீராக்கல் (Structural Adjustment ) ஆகிய இரு பதங்களும் ஒன்றுக்கொன்று இணையான விதத்தில் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. சில சந்தர்ப்பங்களில் உறுதிப்படுத்தலையும் அமைப்பு ரீதியான சீராக்கல் வழிமுறைகளையும் குறிப்பதற்காக "அமைப்பு ரீதியான சீராக்கல்" என்ற பதம் பெருமளவுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கொள்கை உள்ளடக்கத்தில் இந்த இரண்டு பதங்களும் வேறுபட்டவையாக இருந்து வந்த போதிலும், இவை இரண்டும் கேள்வி-வழங்கல் ஏற்றத்தாழ்வுகளை அல்லது சீராக்கத்தினை தீர்த்து வைக்கும் நோக்கத்தினையே கொண்டுள்ளன என கிராண்டியா என்பவர் வாதிடுகிறார்.

உறுதிப்படுத்தலின் கேள்வி முகாமை வழிமுறைகள், பேரண்டப் பொருளியல் ஏற்றத்தாழ்வுகளை குறுங்காலத்தில் குறைத்து விடுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளன. பொதுச் செலவுக் குறைப்பு, நாணயப் பெறுமதியிறக்கம் மற்றும் பணநிரம்பலைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன. இந்த சீர்திருத்தங்களின் -குறிப்பாக, மெய் செலாவணி விகித மதிப்பிறக்கத்தின்- குறிக்கோள் உற்பத்திசார் மூலவளங்களை வியாபாரம் செய்ய முடியாத துறைகளிலிருந்து வியாபாரம் செய்யக் கூடிய துறைகளுக்கு மாற்றியமைத்து, பணவீக்க விகிதத்தினை சமாளித்துக் கொள்ளக்கூடிய ஒரு மட்டத்துக்குக் குறைத்து விடுவதாகும். சென்மதி நிலுவை தொடர்பான பிரச்சினைகள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், உயர் பணவீக்கத்தை எடுத்து வருகின்றன என்றும், பாரிய நிதிப் பற்றாக்குறைகளை தோற்றுவித்து வருகின்றன என்றும் பொதுவாக நம்பப்படுகிறது.

மறுபுறத்தில், அமைப்பு ரீதியான சீராக்கல் வழிமுறைகள் பொருளாதாரத்தை செயல்திறன் மிக்கதாக ஆக்கிக்கொள்வதனையும், நடுத்தர காலத்தில் பொருள் வழங்கலை ஊக்குவிப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இறக்குமதி தாராளமயமாக்கல், ஏற்றுமதி மேம்பாடு, தனியார்மயமாக்கல் மற்றும் விலை தொடர்பான ஒழுங்கு விதிகள் என்பவற்றை அவை உள்ளடக்குகின்றன.

அட்டவணை 5

| மொ.உ.உ. வின் விகிதமாக பொதுக் கடன் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1974/75 | 1984/85 | 1988/89 | 1989/90 | 1990/91 | 1991/92 | 1992/93 |
| 4.75% | 40.5 1% | 39.8% | 44.7% | 48.8% | 60.8% | 63.8% |

மூலம் : சநாநி, 1993

பங்களாதேஷ் என்ற புதிய தேசம் 1971இல் உதயமாகியதிலிருந்தே எண்ணற்ற பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்துள்ளது. சுதந்திரப் போராட்டத்தின் போது நாட்டின் உள் கட்டமைப்பு வசதிகள் பாரியளவில் அழிக்கப்பட்டதுடன், தொழில்முனைவோர் வர்க்கமும் மறைந்தது. சிதந்திரத்தினையடுத்து, அந்நாட்டில் தொடர்ந்தும் அரசியல் ஸ்திரமற்ற நிலை நிலவி வந்துள்ளது. இவை தவிர, வளைகுடாப் போரும் பல இயற்கை அழிவுகளும் நிலைமைய மேலும் மோசமடையச் செய்தன. மொ.உ.உ. வில் 5- 6% மிதமான வளர்ச்சியொன்றை எடுத்துவருவதற்காக 14-16% முதலீடு தேவையாக இருந்தது. ஆனால், மொ.உ.உ. சுமார் 6-7% சேமிப்பினை மட்டுமே உருவாக்கியது. இந்த நிலையில், பங்களாதேஷ் தொடக்கத்திலிருந்தே வெளிநாட்டு உதவியில் தங்கியிருந்து வந்தது. மக்களின் கடும் ஏழ்மை நிலை, முதலீடுகளுக்காக குறைந்த அளவில் உருவாக்கப்படும் மிகைகள், இயற்கை மூலவளப் பற்றாக்குறை, மிதமிஞ்சிய குடித்தொகைப் பெருக்கம், பொருளாதாரக் கொள்கைகளில் அடிக்கடி ஏற்பட்டு வரும் திடீர் மாற்றங்கள் மற்றும் புறழ்வுகள் என்பன பங்களாதேஷ் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளாகும். நன்கு திட்டமிடப்பட்ட பேரண்டப் பொருளியல் சீராக்கல் திட்டமொன்றை மேற்கொள்வதைத் தவிர பங்களாதேஷுக்கு வேறு வழி எதுவும் இருக்கவில்லை. இந்த நிலையிலேயே அசீநி அங்கு செயற்படுத்தப்பட்டது. அசீநி கள், வெளிச் சமநிலையை பேணி வரும் அதே வேளையில், உயர் பொருளாதார வளர்ச்சி மட்டங்களையும், வறுமை ஒழிப்பினையும் எடுத்து வரும் என்ற நம்பிக்கையில் அங்கு செயற்படுத்தப்பட்டன.

வரவு செலவுத்திட்ட முகாமை மற்றும் பொதுத்துறை நிதி என்பவற்றிலான சீர்திருத்தங்கள், தனியார் துறை அபிவிருத்தி மற்றும் வர்த்தக செலாவணி விகித கொள்கைகள் என்பவற்றை இந்தக் கொள்கைத் தொகுதி உள்ளடக்கியிருந்தது. அசீநி கள் ஒரு சில சாதகமான தாக்கங்களை எடுத்து வந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பணவீக்க விகிதம் (1.3%) குறைந்த மட்டத்தில் நிலைத்து வந்துள்ளதுடன், அந்நியச் செலாவணி ஒதுக்கு 225 கோடி அமெரிக்க டொலராக உயர் மட்டத்தில் இருந்து வந்துள்ளது. எனினும், பொருளாதாரம் ஒரு தேக்க நிலையை எதிர்கொண்டதுடன், 5-6% வளர்ச்சியை சாதிப்பதற்கு முதலீட்டு விகிதங்கள் போதியளவில் இருக்கவில்லை. சணல் மற்றும் ஆடைக் கைத்தொழில்கள் உற்பத்தி வீழ்ச்சியை பதிவு செய்ததுடன், ஏனைய துறைகளில் தனியார் துறை அபிவிருத்தியும் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இடம் பெற்று வரவில்லை. தனியார்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் பல தடங்கல்களை எதிர்கொண்டது. போக்குவரத்து, தொடர்பாடல், ஆடை ஏற்றுமதிகள், இறால் பண்ணைகள் மற்றும் தோல் கைத்தொழில் போன்றவற்றில் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால், இந்தத் துறைகளிலும் கூட, பல்வேறு பொருளாதார, சமூகக் குழுக்களில் பொருளாதார ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் துல்லியமாக கண்டறிய முடியாதுள்ளது.

## இந்தியா

இந்தியா அசீநி களைப் பொறுத்தவரையில் சார்புரீதியில் ஒரு புது வரவாக உள்ளது. இந்நாடு அண்மைக் காலம் வரையில் உள்நோக்கிய அபிவிருத்திக் கொள்கையைப் பின்பற்றி வந்த மூன்றாவது உலக மாதிரியொன்றாக இருந்து வந்துள்ளது. சக்திவாய்ந்த கைத்தொழில் அடித்தளமொன்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் தற்சார்புப் பொருளாதாரமொன்றினை கட்டியெழுப்புவதற்கு அது முயன்றது. எனினும், 1980 களின் நடுப்பகுதியளவில் இறக்குமதிகளுக்கு ஈடுசெய்யக் கூடியளவுக்கு ஏற்றுமதிகள் பரவலாக இருந்துவரவில்லை. இந்தக் குறைபாடு, வெளி நிதி தொடர்பான ஒழுக்காறு அற்ற நிலையுடன் இணைந்த விதத்தில் பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப் படுத்தியது. 1980 களின் நடுப்பகுதி வரையில், பொருளாதாரத்தை தாராள மயமாக்குவதற்கான முயற்சிகள் உள்நாட்டுத்திறன்களை கட்டி எழுப்புவதில் தங்கியிருக்கவில்லை. மாறாக, வெளிக் கடனிலும் அரச மானியங்களிலுமே அவை தங்கியிருந்தன. 1980 களின் தொடக்கத்தில் நாட்டின் வர்த்தக நிலுவைகளும் (சர்வதேச நிதி நிறுவனங்களுடனான) நம்பகத்தன்மையும்மிக மோசமான முறையில் சீர்குலைந்திருந்தது. இரண்டு வாரங்களுக்கான இறக்குமதிகளை நிதிப்படுத்துவதற்கு போதுமான அந்நியச் செலாவணி மட்டுமே கையிருப்பில் இருந்த நிலையில், சநாநி யிலிருந்து பெருமளவுக்குக் கடன்களைப் பெறவேண்டியிருந்தது. 'சீராக்கல் வழிமுறைகளை செயற்படுத்த வேண்டும்' என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இக்கடன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதனை உடனடுத்து, நிதிசார் சமமின்மைகளையும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகளையும் நிவர்த்தி செய்யும் நோக்குடனும், கைத்தொழிலையும் விவசாயத்தையும் செயல்திறன் மிக்க துறைகளாக மாற்றியமைத்து, சர்வதேச ரீதியில் போட்டியிடும் ஆற்றலை விருத்தி செய்து கொள்ளும் நோக்குடனும் அமைப்புரீதியான சீராக்கல் நிகழ்வுப் போக்கொன்று துவக்கி வைக்கப்பட்டது. பல்தேசிய கம்பெனிகளின் பிரவேசம், சந்தைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை மற்றும் உலக அமைப்புடன் பொருளாதாரத்தை ஒருங்கிணைப்பதற்கான சந்தை நட்புக் கொள்கைகள் என்பன இந்த வழியில் மேற்கொள்ளப்பட்ட ஒருசில நடவடிக்கைகளாகும்.

ரூபா 20 சதவீதம் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டதுடன், மேலும் ஒன்றரை வருடங்களின் பின்னர்

இன்னும் 20 சதவீதத்தினால் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டது. லைஸன்ஸ் முறை ஒழிக்கப்பட்டதுடன், கொள்திறன் தொடர்பான கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. மேலும், பல்தேசிய நிறுவனங்கள் பெரும்பான்மை பங்குகளை வைத்திருப்பதற்கும் இடமளிக்கப்பட்டது. பொதுத்துறை கைத்தொழில்களும் வங்கிகளும் தனியார் மயமாக்கப் பட்டன. இறக்குமதி வரிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டதுடன், இறக்குமதிகளும் தாராளமயமாக்கப் பட்டன. வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் பிரவேசம் தொடர்ந்தும் ஊக்குவிக்கப்பட்டு வந்தது; மானியங்களும் கட்டம் கட்டமாக நீக்கப்பட்டன. அசீநி கள் மனித மூலவள அபிவிருத்திக்கு இடமளிப்பதற்கோ அல்லது போட்டித்திறனற்ற தொழில் அலகுகளை மறு சீரமைப்பதற்கோ இடமளிக்கவில்லை. பிரதானமாக, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளையும் பண்டத் துறைகளைச் சேர்ந்த ஏற்றுமதிகளையும் அதிகரிக்கச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படட்டு வருகின்றன. உணவு விலைகள் உயர்ந்து உள்நாப்பு நெருக்கடிகள் உருவாக முடியும் என்ற அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கூட இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படட்டு வருகின்றன. பொருளாதார விவகாரங்களில் அரசின் , பங்கு இப்பொழுது வரையறுக்கப்பட்டுள்ள துடன், உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் அதன் பங்கு உயர்த்தப் பட்டுள்ளது.

இந்தியாவில் செயற்படுத்தப் பட்ட அசீநி கள் பலதரப்பட்ட பெறுபேறுகளை எடுத்து வந்துள்ளன. சாதகமான பக்கத்தை பொறுத்த வரையில் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை ஓரளவுக்கு மீண்டும் கட்டியெழுப்பப் பட்டுள்ளது. அந்நியச் செலாவணி ஒதுக்குகளில் பெரும்பாலானவை, நடைமுறைக் கணக்கு நிலுவைகளிலும் பார்க்க மூலதன உட்பாய்ச்சல்களாகவும் கடன்களாகவுமே இருந்து வருகின்றன. எனினும், இவை இப்பொழுது சுமார் 1,300 கோடி அமெரிக்க டொலர் அளவில் உள்ளன. செய்திட்டங்கள் மீதான வெளிநாட்டு முதலீடு சுமார் 400 கோடி டொலர் அளவில் உள்ளது. இது தவிர, பங்குத் தொகுதிகளில் 120 கோடி டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் நிதிப் பற்றாக்குறை முன்னர் மொதேஉ வில் 8-9 சதவீதம் வரையில் இருந்து வந்தது. இது 1994 இல் இரண்டு சதவீதமாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏற்றுமதிகளிலும் கணிசமான அளவில் விரிவாக்கம் ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இது தவிர, 1991 இல் 16-18 சதவீதமாக இருந்த பணவீக்கம் இப்பொழுது ஒற்றை இலக்கத்துக்கு 6-9 சதவீதம்) எடுத்துவரப் பட்டுள்ளது.

வளர்ச்சி 1991-92 இல் அநேகமாக பூச்சியளவில் இருந்தது; இது 1992-93 இல் 3.8 சதவீதமாகவும், 1993-94 இல் 4 சதவீதமாகவும் அதிகரித்துக் காணப்பட்டது. தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் பருவ மழைகள் உரிய முறையில் இடம் பெற்றமையினால் வேளாண்மைத்துறை நியாயமான ஒரு வளர்ச்சியை பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. எனினும், எந்த ஒரு வருடத்திலும் கைத்தொழில் வளர்ச்சி 4 சதவீதத்தை மிஞ்சியிருக்கவில்லை. கைத்தொழில் வளர்ச்சிக்கான பிரதான மூலம் நுகர்வுப் பொருள் துறையிலிருந்தே (1993-94 இல் 8 சதவீதம்) வந்தது. வெளிநாட்டுக் கூட்டு முயற்சிகள் உள்நாட்டுச் சந்தைகளுக்கான நுகர் பொருட்களை உற்பத்தி செய்தன.

இந்தியாவில் மூலதனப் பொருள்துறை 1993-94 இல் பின்னடைவினை எதிர் கொண்டிருந்தது. இதற்கு இரண்டு காரணங்களைக் கூற முடியும். முதலாவதாக, இந்திய மூலதனப் பொருட்களை பயன் படுத்துவதிலும் பார்க்க தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்வது, உடனடி இலாபத்தினை நோக்கமாகக் கொண்ட இந்தியப் பாவனையாளர் களுக்கு கவர்ச்சிகரமானதாக இருந்தது. இரண்டாவதாக, 1990 களில் கைத்தொழில் கூறுகள் மீதான இறக்குமதித்தீர்வைகள் முழு அளிவல் உற்பத்தி செய்யப்பட்ட மூலதன பொருட்கள் மீதான இறக்குமதி தீர்வைகளிலும் பார்க்க உயர்வாக இருந்து வந்தன. இது உள்ளூர் மூலதனப் பொருள் கைத்தொழிலின் செலவில், இந்தியாவில் வெளிநாட்டு இயந்திர தயாரிப்பாளர்களுக்கு ஒரு சந்தையை உருவாக்கிக் கொடுத்தது.

உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளின் தாக்கம் அழிவுகரமானதாக இருந்து வந்துள்ளது போல் தோன்றுகிறது. மூலதனப் பொருள் உற்பத்திக் கைத்தொழில்கள் ஒரு பின்னடைவினை எதிர்நோக்கி வருவதுடன், வரி அளவீட்டு முறை காரணமாக அதிகரித்தளவிலான வெளிநாட்டுப் போட்டியையும் சந்தித்து வருகின்றன. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் முதலீடு செய்வதற்கு தனியார் துறை கம்பெனிகளுக்கு தாராளமாக வரிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் தொழில்நுட்பங்களை உள் நாட்டில் உருவாக்குவதை விட வெளிநாடுகளிலிருந்து வாங்குவது எளிதாக உள்ளது. ரூபாவின் ஓரளவுக்கு மாற்றத்தக்க தன்மை மற்றும் இறக்குமதிகளின் தா'ராளமயமாக்கல் என்பவற்றின் விளைவாக இது எளிதாக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் சீர்திருத்தங்கள் உள்நாட்டில் மட்டுமே வெற்றி கண்டுள்ளன. நிதிச் சந்தைகளில் உறுதிப்பாடு நிலவி வருவதுடன், பணவீக்கமும் குறைந்த மட்டத்தில் உள்ளது. உற்பத்தி அதிகரித்திருப்பதாகத் தெரியவில்லை. கைத்தொழில் துறையில் ஏற்பட்டிருக்கும் சிறிதளவு முன்னேற்றமும் கூட வெளி நாட்டு ஆதரவுடனேயே ஏற்பட்டுள்ளது. இந்தியா கணிசமான அளவில் சிறு உற்பத்தியாளர்களைக் கொண்ட பொருளாதாரமொன்றாகத் தொடர்ந்தும் நிலைத்து வருகிறது. இந்த சிறு உற்பத்தியாளர் துறை முதல் நிலை உற்பத்தியாளர்கள், பாரம்பரிய (கடற்றொழிலாளர்களையும் உள்ளடக்கிய) அகழ்ந்தெடுக்கும்/ விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியாளர்கள் மற்றும் நவீன சிறு அளவுக் கைத்தொழில்கள் என பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் வாழும் விவசாய சமூகத்தில் சுமார் 80 சதவீதத்தினர் (2 ஹெக்டயர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு

வரும்) சிறிய விவசாயிகளாவார்கள். இத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை 12.5 கோடியாகும். அசீநிகளின் கீழான விவசாய நவீனமயமாக்கல் கொள்கைகள் பாரிய செய்திட்டங்களுக்கு சாதகமானவையாக இருந்து வருவதுடன், சிறு விவசாயிகளுக்கு அவ்வளவாக உதவவில்லை. நில மேற்பரப்பு நீர்ப்பாசன திட்டங்கள் பெரும் எண்ணிக்கையிலான சிறு விவசாயிகளை பாதித்து வருகின்றன. உதாரணமாக, நர்மதா நதி அணைக் கட்டுத் திட்டம் ஆயிரக் கணக்கான சிறு விவசாயிகள் மீது தாக்கங்களை எடுத்து வர முடியும். புதிய கொள்கை உவர் நிலப் பண்ணைத்தொழிலையும் புறக்கணிக்கின்றது. வரண்ட பிரதேசங்களில் வாழ்ந்து வரும் சிறு விவசாயிகளினால் உயர் கொள் திறன் கொண்ட மோட்டார்களையோ அல்லது நீர்ப்பம்புகளையோ கொள்வனவு செய்ய முடியாது. அதன் விளைவாக, அவர்கள் அரிதான, நிச்சயமற்ற மழை வீழ்ச்சியில் மட்டுமே தங்கியிருக்க வேண்டியுள்ளது. உர மானியங்கள் கட்டம் கட்டமாக ஒழிக்கப்பட்டு வருகின்றன. அதே வேளையில், 1991 க்கும் 1993 க்கும் இடைப்பட்ட காலத்தில் உர விலைகள் சுமார் 50 சதவீதத்தினால் உயர்ந்து சென்றுள்ளன. பெரும்பாலான சிறு விவசாயிகள் பொஸ்பேட் உரப் பாவனையைக் குறைத்து, அதற்குப் பதிலீடாக மலிவான உர வகைகளை உபயோகித்து வருகின்றனர். இது தானிய விளைதிறன் வீழ்ச்சிக்கு வழி கோலியுள்ளது.

மேலும், 1990 களில், அசீநிகளின் கீழ் நிதியமைப்பு இறுக்கமானதாக ஆக்கப்பட்டுள்ளது. வட்டி விகிதங்கள் உயர்வானதாக இருந்து வருவதுடன், கிராமிய பண்ணைத் துறைக்கான முன்னுரிமை கடனளிப்புக் குறித்துக் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. கிராமப் பிரதேசங்களில் நட்டத்தில் இயங்கிவரும் சுமார் 500 வங்கிக்கிளைகளை மூடி விட வேண்டும் என வங்கித்தொழில் சீர்திருத்தக் குழு ஒன்று சிபார்சு செய்துள்ளது.

சிறு அளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் கிராமிய கை விளைஞர்கள் மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் போன்ற சமூகப்பிரிவினர்களின் நிலைமையும் அநேகமாக இவ்விதமாகவே உள்ளது. புதிய கொள்கை வழிமுறைகளின் தாக்கங்கள் இச்சமூகப்பிரிவுகளை ஓரங்கட்டி, மாற்று வேலை வாய்ப்புக்களை தேடுவதற்கு அவர்களை நிர்ப்பந்திக்க முடியும். கேரளத்தில் கடற்றொழிலாளர்கள் பலர் சமாயசமயத்தொழிலாளர்களாக மாறியுள்ளனர். உள் கட்டமைப்பு வசதிகள், கடன், முதலீடு மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பவற்றில் சமமான வாய்ப்புக்கள் கிடைக்காதிருப்பதே இதற்கான காரணமாகும்.

## நேபாளம்

நேபாளம் 1970 களில் பாரிய உள் கட்டமைப்பு செய்திட்டங்களை துவக்கி வைத்தது. அன்று தொட்டு அபிவிருத்தி முயற்சிகளில் கடன்கள் முக்கிய இடத்தை பெற்று வந்துள்ளன. மொஉஉ வுடனான பொதுப் படுகடனின் விகிதம் 1974-75 காலத்தில் 4.57% ஆக இருந்து வந்தது; இது 1984-85 இல் 40.51% ஆக பேரளவில் உயர்ந்து சென்றிருந்தது. பிரதானமாக, அபிவிருத்திக்கான உள்நாட்டுச் செலவுகளை நிதிப்படுத்துவதற்காக அரசாங்கம் உள் நாட்டுக் கடன்களை பெற்றுக் கொண்டதுடன், 1980 களின் முதல் அரைப்பகுதியில் ஒதுக்குகளிலிருந்தும் பணத்தை பெற்றுக் கொள்ள தொடங்கியது. தனியார் மற்றும் பொதுத்துறைக் கூட்டுத்தாபனங்களில் தொடர்ச்சியான நட்டங்களை ஈடுசெய்வதற்கான கடன் ஆண்டொன்றுக்கு 25% அளவில் துரிதமாக விரிவடைந்து வந்தது. வெளி நாட்டு ஒதுக்குகள் கடுமையான வீழ்ச்சியடைந்து வந்ததுடன், 1984-85 இல் மூன்று மாதங்களுக்கான இறக்குமதிகளுக்குப் போதிய ஒதுக்குகள்மட்டுமே நிலுவையாக இருந்தன. இத்தகைய சீர் குலைவு நிலைமைக்கு மத்தியில், நேபாள அரசாங்கம் 1985 டிசம்பரில் உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றினை பின்பற்றியதுடன், சநாநி யுடன் ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திட்டது. இது நேபாளத்தில் அசீநி களின்தொடக்கத்தை குறித்தது. 1989 இல் இந்திய-நேபாள வர்த்தக நெருக்கடி உச்ச கட்டத்தை அடைந்த பொழுது அமைப்பு ரீதியான சீராக்கல் கடனின் இரண்டாவது தவணைக்கான தொகை அந்நாட்டுக்கு அளிக்கப்பட்டது.

சீராக்கங்களை மேற்கொள்வதற்கான நேபாளத்தின் தேவை, நாட்டின் வெளிப் பொருளாதார சூழலால் ஏற்பட்ட மாற்றங்களால் உருவாகவில்லை. நான்கு பக்கங்களிலும் நிலத்தினால் சூழப்பட்ட நாடான நேபாளம் சர்வதேச வர்த்தக செல்வாக்குகளை பொறுத்தவரையில் பெருமளவுக்கு தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நாடாகவே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளது. சுருக்கமாகச் சொல்வதானால், 1970 களின் எண்ணெய் விலையேற்றங்களும் கூட அந்நாட்டின் வெளி நிலுவைகளை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. எனவே, நேபாளம் பொருளாதார துறையில் எதிர்நோக்கிய நெருக்கடிகள் பல வருடகால மோசமான முகாமை, துஷ்பிரயோகம் மற்றும் நாட்டின் திட்டமிடல் பொறிமுறையின் செயல் முடக்கம் என்பவற்றிலிருந்தே தோன்றியிருந்தன. நேபாளத்தின் பொருளாதாரத்தை உறுதியான வழியொன்றில் இட்டுச் செல்வதற்காக சீராக்கல் கொள்கைத்தொகுதி பல யோசனைகளை முன் வைத்தது. பேரண்டப் பொருளியல் முகாமை, நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய செலாவணி விகிதங்களுடனான நாணயப் பெறுமதி இறக்கம், கடுமையான அரசிறைக் கொள்கைகள், கட்டுப்படுத்தப்பட்ட கடன் விரிவாக்கம், நிர்வகிக்கப்பட்ட விலைகளில் சீராக்கம், வெளிக் கடன்கள் மீது கட்டுப்பாடுகள் மற்றும் இறக்குமதித்தாராளமயமாக்கல் என்பன இந்த வழிமுறைகளாகும்.

அதிகரிக்கப்பட்ட வரிகளுக்கூடாகவும் வேதனச் செலவுகளில் எடுத்து வரப்படும் வெட்டுக்களுக்கு ஊடாகவும் உள்நாட்டு மூலதனத் திரட்டல் கட்டி எழுப்பப்பட வேண்டியிருந்தது. சென்மதி நிலுவைகளை பலப்படுத்துவதற்காக ஏற்றுமதிக்கான ஆடை உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் என யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. தனியார் துறைக்கு முதலீட்டுக்கு என பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. மூடப்படுவதற்கூடாக அல்லது உரிமை மாற்றத்துக்கூடாக

பொதுத் துறை தொழில்முயற்சிகள் குறைக்கப்பட வேண்டியிருந்தன. விவசாய உள்ளீடுகள் கூட்டுத்தாபனம் மற்றும் நேபாள உணவுக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டு அமைப்புக்களும் குறிப்பாக இதற்கென இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தன. உணவுத் தானியத்தை பொறுத்த வரையில், மானியப்படுத்தப்பட்ட தானிய விற்பனைகள் கட்டம் கட்டமாக நீக்கப்படுவதுடன் இணைந்த விதத்தில் உற்பத்தியாளர்களுக்கான மானியங்கள் அதிகரிக்கப்பட வேண்டியிருந்தன.

வர்த்தகத்திலும் கைத் தொழிலிலும் யதார்த்த ரீதியான செலாவணி விகிதங்கள் அறிமுகப் படுத்தப்பட வேண்டியிருந்ததுடன், விலைத் திரிபுகளின்றி இரு பொருள்கள் வழங்கப்பட வேண்டி யிருந்தன; அத்துடன், மிதமிஞ்சிய ஒழுங்கு விதிக் கட்டுப்பாடு குறைக்கப் பட்டு, பொதுத்துறை நிறுவனங்களின் செயல் திறன் உயர்த்தப்பட்டது. நேபாளத்தின் மொத்தக் குடித் தொகையில் சுமார் 60 சத வீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருவதுடன், பிரதானமாக பிழைப்பூதிய பயிர்ச் செய்கையிலேயே அவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். மேலும், பொருளாதாரத்தின் நாணய மயப்படுத்தப்பட்ட துறையின் அபிவிருத்திகளுடன் அவர்கள் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கவுமில்லை. இந்தப் பின்னணியில், அந்நாட்டில் செயற்படுத்தப்பட்ட கண்டிப்பான சிக்கன வழிமுறைகள் குறைந்தபட்ச சமூகத் தாக்கத்தினை மட்டுமே எடுத்து வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சிறு துறை உற்பத்தியின் மீது அசீநி கொள்கை வழிமுறைகள் நேபாளத்தில் எடுத்து வந்த தாக்கம், இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் இடம் பெற்ற தாக்கங்களை ஒத்தவையாக இருந்தன. நேபாள அரசாங்கம், அரசாங்க வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என கொடை வழங்கும்நாடுகள் வற்புறுத்தி வந்தன. அதன் விளைவாக, தீர்வைகளையும் வரிகளையும் அரசாங்கம உயர்த்தியது. இந்த நிலைமைகளின் கீழ் உள்நாட்டுக் குடிசை கைத்தொழில்கள், பல்தேசியக் கம்பெனிகளிலிருந்து வந்த கடுமையான போட்டியை தாக்குப் பிடிக்க முடியாது மூடப்பட்டன. வழியத்துடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, மூலப் பொருட்களின் செலவில் விகித சமமற்ற முறையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுவந்துள்ளது. தீர்வை அதிகரிப்புக்களும் மானியங்களின் ஒழிப்பும் வர்த்தகர்கள் அதிகரித்த அளவிலான பெறுமதியை சேர்த்துக் கொள்வதற்கு உதவின.

பாகிஸ்தான்

சர்வதேச நாணய நிதியம் 1980 இல் பாகிஸ்தானுக்கு பல நிபந்தனைகளுடன் அமைப்பு ரீதியான சீராக்கல் கடன் ஒன்றை வழங்கியது. அதனையடுத்து, அங்கு அசீநி கள் செயற்படுத்தப்பட்டன. ஜெனரல் ஸியாவுல் ஹக் மரணமடைந்த 1988 ஆம் ஆண்டு வரையில், பாகிஸ்தானின் அரசியல் தலைவர்கள் தமது தேசிய அக்கறைகளுக்கு (அல்லது அதிகாரத்தில் இருந்தவர்களின் அக்கறைகளுக்கு) உசிதமானவையாக இருந்த நிபந்தனைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடிய பேரம் பேசும் ஆற்றலினை பெற்றிருந்தார்கள். பூகோள-அரசியல் நிலவரங்கள் - குறிப்பாக, ஆப்கானிஸ்தான் போர்- இந்த சாதகமான நிலையை எடுத்து வந்திருந்தது. பாகிஸ்தான் அப்பொழுது இராணுவ ஆட்சியின் கீழ் இருந்து வந்தமையும் இதற்கு உதவி இருக்க முடியும். இதன் விளைவாக, பொருளாதாரக் கொள்கையில் ஒரு சில மாற்றங்கள் மட்டுமே எடுத்து வரப்பட்டதுடன், அவையும் கூட எச்சரிக்கையுடன் செயற்படுத்தப் பட்டன. 1985 இல் ரூபாவின் படிப்படியான பெறுமதி இறக்கம் ஆரம்பமாகியது. இந்தத்திட்டத்தின் கீழ், ஸ்டேட் வங்கி நாளாந்த அடிப்படையில் பல்வேறு சர்வதேச நாணயங்களுக்கு எதிரான ரூபாவின் சமவிகிதங்களை வெளியிட்டு வந்தது. திடீர் அல்லது செங்குத்தான மாற்றம் இடம்பெற மாட்டாது என்பதற்கு இது உத்தரவாதம் அளித்தது. இறக்குமதிகளை பொறுத்தவரையில், விசேஷ விதிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பண்டங்களின் பட்டியலொன்று வெளியிடப்பட்டது. அதேபோல, வர்த்தக கொடுகடன் வட்டி விகிதங்கள் ஓரளவுக்கு மட்டுமே உயர்ந்து செல்வதற்கு இடமளிக்கப்பட்டது. அதேவேளையில், வேளாண்மைத்துறை சம்பந்தப்பட்ட மானியங்களையும், அத்தியாவசிய பண்டங்கள் தொடர்பான மானியங்களையும் நீக்குவதற்கு அரசியல் தலைமை மறுப்புத் தெரிவித்தது.

இதற்கு மாறாக, 1988 இன் பின்னர் பாகிஸ்தானில் பதவிக்கு வந்த ஜனநாயக அரசாங்கங்கள் கேள்வி எதுவுமின்றி முழுவிருப்புடன் அசீநிகளை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த கொள்கைகள் அடிப்படையில் பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங்களின் கொள்கைகளாக இருந்தன. வர்த்தகத்திலும் நிதியிலும் அதிகளவுக்குத் திறந்த தன்மை, வெளிநோக்கிய நெறிப்படுத்தல் மற்றும் குறைந்த பட்ச அரசாங்கக் கட்டுப்பாடுகளுடன் கூடிய தாராளப் பொருளாதாரம் என்பவற்றை எடுத்துவரும் நோக்குடன் பாகிஸ்தான் செயற்பட வேண்டும் என இந்தக் கொள்கை தொகுதி வலியுறுத்தியது.

அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகளின் விளைவாக ஒவ்வொரு நாட்டிலும் மிகப் பெரிய உற்பத்தித் துறையான சிறு துறை புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு கொள்கை வழிமுறைகள் அபிவிருத்தியின் மீது மோசமான பல தாக்கங்களை எடுத்து வந்துள்ளன என்பதனை தென்னாசிய அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. ஆபிரிக்காவிலும் தென் அமெரிக்க நாடுகளிலும் கூட நிலைமை இவ்விதமே உள்ளது. அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகளின் அடிப்படைகளாக இருந்து வரும கோட்பாட்டிலும் எடுகோள்களிலும் காணப்படும் உள்ளார்ந்த பலவீனங்கள் காரணமாகவே இது தோன்றியுள்ளது என்பது எமது அபிப்பிராயமாகும்.

அடுத்துவரும் பகுதியில், இலங்கையை ஓர் உதாரணமாகப் பயன்படுத்தி இந்த முரண்பாடுகள் நோக்கப்படுகின்றன.

சுதந்திரச் சந்தை குறித்த எடுகோளுக்கான சவால்.

சந்தை 'முகமற்றது' என கூறப்பட்டு வந்த போதிலும், மனிதப்

# 'GATT', 'WTO' மற்றும் வளர்முக நாடுகள்

1948 இல் ஸ்தாபிக்கப்பட்ட வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைகள் தொடர்பான பொது உடன்பாட்டு அமைப்பு (GATT) ஒரு நிறுவனமல்ல; அது கைத்தொழில் நாடுகளின் முன்முயற்சியுடன் ஆரம்பிக்கப் பட்ட சட்டபூர்வமான சர்வதேச ஒப்பந்தமொன்றாகும். உலக வர்த்தகத்துக்கான நடைமுறை விதிகளை அது விதித்துரைக்கின்றது. பாதுகாப்பான, முன்னுணர்ந்து கூறத்தக்க சர்வதேச வர்த்தக, சூழ்நிலை ஒன்றை பெற்றுக் கொடுப்பதே 'GATT' அமைப்பின் நோக்கமாகும். இந்தச் சூழ்நிலையில் கைத்தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், முதலீடு செய்வதற்கும், வியாபாரம் செய்வதற்கும் தொழில்களை உருவாக்கு வதற்குமான நம்பிக்கையைக் கொண்டி ருக்கும். 1993 இல் நிறைவடைந்த இறுதி உருகுவே சுற்றுக்கு முன்னர் 7 சுற்று 'GATT' பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வந்துள்ளன.

வளர்முக நாடுகள் தொடக்கத்தி லிருந்தே 'GATT' குறித்து அவநம்பிக்கை தெரிவித்து வந்ததுடன், அதில் சேர்ந்து கொள்வதற்கும் கூட தயக்கம் காட்டின. அது "செல்வந்தர்களின் கழகம்" என கருதப்பட்டு வந்ததுடன், வளர்முக நாடுகள் அதில் முக்கியமான ஒரு செல்வாக்கை கொண்டிருக்க முடியாதென்றும் கருதப் பட்டு வந்தது. அதன் உறுப்பு நாடுகளிடையே பாரபட்சம் காட்டாத முறையில் வர்த்தகத்தை மேம்படுத்துதல், அடக்க விலையிலும் பார்க்க குறைந்த விலையில் பொருட்களை வெளி நாடுகளில் எடுத்துச் சென்று குவித்து விற்பனை செய்வதை தடுத்தல் என்பன 'GATT' அமைப்பின் முக்கியமான சில முடிவுகளில் அடங்குகின்றன. விதிமுறைகளை திணிப்பதற்கு 'GATT' அமைப்புக்கு சட்டரீதியான அதிகாரம் இல்லாதிருப் பதனால், இந்த முடிவுகளை செயற் படுத்தும் விஷயத்தில் அது தனது உறுப்பு நாடுகளின் நல்லெண்ணத்திலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. இதன் விளைவாக, 'GATT' முடிவுகள் இணங்கி ஒழுகப்படாத பலசந்தர்ப்பங்கள் இருந்துள்ளன. வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஐ.நா.மாநாட்டு அமைப்பான அங்டாட் வளர்முக நாடுகளின் நலனை கருத்திற் கொண்டு 1964 இல் ஸ்தாபிக்கப்பட்டது. அங்டாட் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளையும் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளையும் பரந்த ஓர் அடிப்படையில் கவனத்தில் எடுத்து வருவதுடன், சர்வதேச வர்த்தகத்தில் நிலவி வரும் ஏற்றத்தாழ்வினை நிவர்த்தி செய்வதற்கு முயன்று வருகிறது.

சுமார் ஆறு ஆண்டு காலம் நீடித்துச் சென்ற 'GATT' அமைப்பின் உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைகள், வியாபாரத்தை தாராளமய மாக்கும்முதன்மை நோக்கத்துடன் ஐக்கிய அமெரிக்காவினாலும் ஏனைய கைத்தொழில் நாடுகளினாலும் ஆரம்பித்து வைக்கப் பட்டன. இதில் கலந்துரையாடப் பட்ட பிரச்சினைகள் புதியவையாகவும் சிக்கலானவையாகவும் இருந்து வந்ததுடன், வளர்முக நாடுகளால் அவற்றை தெளிவாகப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. ஆனால், அவற்றின் தயக்கத்துக்கு மத்தியிலும், அதில் பங்கேற்குமாறு அவை தூண்டப்பட்டன. இந்தப் பேச்சு வார்த்தைகள் தம்மீது எடுத்துவரக்கூடிய தாக்கங்கள் குறித்து வளர்முக நாடுகள் தெளிவற்ற அச்ச உணர்வுகளைக் கொண்டிருந்தன. 'GATT' சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றியடையா விட்டால், வர்த்தகத்தில் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பு இருந்துவர மாட்டாது என்றும், அது வலியவர்கள் மட்டும் உயிர் வாழக்கூடிய ஒரு நிலைமைக்கு வழிகோலிவிடும் என்றும் குறிப்பால உணர்த்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் இறுதி உடன்பாடு, சேவைகளிலான வர்த்த கத்தையும் சர்வதேச முதலீடுகளையும் தாராளமயப்படுத்தி, வேளாண்மைத்துவ முறையிலும் பொருள் உற்பத்தித் துறையிலும் அறிவுசால் சொத்துக்களை பாதுகாக்கும் என்று கருதப்பட்டது. இந்த மூன்று விடயங்களும் 1995 ஜனவரி 01 ஆந் தேதியன்று ஸ்தாபிக்கப்பட்ட உலக வர்த்தக நிறுவனத்தின் (உவநி) ஆளுகையின் கீழ் வரும். உவநி, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுடன் மிகவும் நெருக்கமான முறையில் இணைந்து செயலாற்றுவதன் மூலம் உலக வர்த்தகத்தை நிர்வகித்து வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தயாரிக்கப்பட்ட பொருட்களின் வர்த்தகத்தின் மீது மட்டுமே 'GATT' அமைப்பு அதிகாரங்களைக் கொண்டிருக்கும். 'GATT' இன் இடத்தில் அமர்த்தப்படும் உவநி சேவைகள், வெளிநாட்டு முதலீடு மற்றும் அறிவுசார் சொத்து தொடர்பான உரிமைகள் என்பவற்றின் மீது சட்டபூர்வமான அதிகாரங்களைக் கொண்டிருக்கும். வளர்முக நாடுகள் தொடர்பான தாக்கம் எதிர் மறையானதாகவே உள்ளது. முடிவுகள் வளர்ச்சியடைந்த நாடுகளின் அக்கறைகளுக்குச் சாதகமானவையாக இருந்து வருகின்றன. உதாரணமாக, வளர்முக நாடுகள் சேவைகளின் பிரதான இறக்குமதி நாடுகளாக உள்ளன. இந்நாடுகள் உபரியாகப் பெற்றிருக்கும் ஒரே யொரு சேவை ஊழியம் மட்டுமேயாகும். சேவைகளிலான வர்த்தகம் தொடர்பான தீர்மானம் ஊழியத்தை உள்ளடக்கவில்லை. ஊழியம் வியாபாரத்துக்குரிய ஒரு விடயமாக இருந்துவரவில்லை எனக் கூறி நிராகரிக்கப்பட்டுள்ளது. அதே போல, இந்த முடிவுகள் அறிவுசார் சொத்துக்களை வைத்திருப்பவர்களுக்கு உறுதியான பாதுகாப்பினை வழங்கியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளே வளர்முக நாடுகளுக்கு பெருமளவுக்கு தொழில்நுட்பங்களை ஏற்றுமதி செய்து வருகின்றன. பேட்டன்ட் உரிமைகள் மற்றும் ரோயல்டிகள் என்பவற்றுக் கூடாக வட புலம் உயர் அளவிலான இலாபங்களைப்பெற்றுக் கொள்ளும். வர்த்தகம் சம்பந்தப்பட்ட அறிவுசார் சொத்து உரிமைகளுக்கூடாக தொழில்நுட்ப இடமாற்றம் பெருமளவுக்கு ஏற்பட முடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொழில்நுட்ப இடமாற்றத்தின் மீது கட்டுப்பாடுகளை எடுத்துவரக்கூடிய ஒரு நிலைமைக்கு வழிகோல முடியும்.

வேளாண்மைத் துறை வர்த்தகம் தொடர்பான தீர்மானங்களும் வளர்முக நாடுகளை பொறுத்தமட்டில் மிகவும் மோசமான தாக்கங்களை எடுத்து வர முடியும். விவசாயத்துறை மானியங்கள் குறைக்கப்படுவதனால் பாதுகாக்கப் பட்டிருக்கும் நாடுகளில் வாழும் நுகர்வோர் மலிவான விலையில் உணவைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக் கிட்டும்; மேலும், செயல் திறன் மிக்க உற்பத்தியாளர்களுக்கு இந்நாடுகளில் அது பெருமளவுக்குச் சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுக்கும். ஆனால், தமது உணவுக்காக இறக்குமதி களில் தங்கியிருக்கும் நாடுகளின்மீது இது அழிவுகரமான தாக்கங்களை எடுத்துவர முடியும். மானியப் படுத்தப்பட்டுள்ள உணவு இறக்குமதிகளுடன் போட்டிபோடும் ஆற்றல் இல்லாதிருப்பதனால், அடிப்படை உணவுப் பொருட்களின் உற்பத்தியை பல நாடுகள் இப்பொழுது கைவிட்டுள்ளன. 'GATT' தீர்மானங்களின் விளைவாக உணவு இறக்குமதிகள் செலவு கூடியவையாக மாற்றமடைய முடியும்.

வளர்முக நாடுகள் வருடாந்தம் 50,000 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான பொருளாதார

( 59 ஆம் பக்கம் பார்க்க)

பிறவிகளின் சுயநல இயல்பு, தார்மீக நெறிக்கு மாறான முறையில் உச்சமட்டத் திருப்தியை தேடுவதற்கு அவர்களைத் தூண்டுகிறது. போதியளவில் கடுமையான ஒழுங்கு விதிகள் விதிக்கப்படாதிருந்தால், சக்தி வாய்ந்தவர்கள் உச்ச மட்ட இலாபங்களை ஈட்டிக் கொள்வதற்காக சந்தையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். சட்ட மீறல்களிலிருந்து தப்பிக் கொள்வதற்காக அவர்கள் தமது அரசியல் தொடர்புகளையும் உத்தியோகபூர்வ தொடர்புகளையும் உபயோகித்துக் கொள்கிறார்கள். இது பொதுவில் ஊழலும் இலஞ்சமும் பெருகுவதற்கு வாய்ப்பளிக்கின்றது. அரச இயந்திரம் நாட்டு நலனைக் கவனத்தில் எடுக்காது தனிப்பட்ட நலன்களை கவனத்தில் எடுத்து முடிவுகளை எடுக்கமுடியும். இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் ஏக போகங்கள் செழித்தோங்குகின்றன. போட்டி இடம் பெற்று வந்த போதிலும் அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கும் செலவும் விலைகளுடன் சேர்க்கப்பட்டு விடுகிறது. எனவே, நுகர்வோர் எப்பொழுதும் குறைந்த விலையில் நல்ல தரமான பொருட்களை பெற்றுக் கொள்வதில்லை. கோட்பாடு எடுத்துக் காட்டுவது போல, சுதந்திரமான ஒரு சந்தை சமாந்தரமான ஒரு விளையாட்டுக்களாக இருக்கிவில்லை. சக்தியற்றவர்கள், சந்தை மீது செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்களிடம் தோல்வி கண்டு விடுகிறார்கள். சந்தைகளுக்குள் ஊடுருவிச் செல்ல முடியாதவர்கள் துடைத்தெறியப்பட்டு விடுகின்றார்கள். மிக மோசமான ஏற்றத்தாழ்வுகளின் பின்னணியில் நோக்கும் பொழுது, கட்டற்ற நியாயமான சந்தைப் பொருளாதாரம் என்பது ஒரு மாயத் தோற்றமாகவே தோற்றமளிக்கிறது.

## அசீநி கள்: கோட்பாடுகளும் முரண்பாடுகளும்

அமைப்பு ரீதியான சிராக்களின் பின்னணியில் இருந்துவரும் தத்துவம், மூன்றாவது மண்டல பொருளாதாரங்களை உலக மயமாக்குவதாகும். 'உலகமயமாக்கல்' என்பது பொருளாதாரங்களை உலகச் சந்தைகளுக்கு திறந்துவிடுவதற்கு ஊடாக, அவற்றையும் உற்பத்தியாளர்களையும உலக மூலதனத்துடனும், பண்டச் சந்தைகளுடனும் இணைத்து விடுதல் என்ற பொருளையே தருகிறது. உறுதிப்படுத்தல் மற்றும் சீராக்கல் என்பன சந்தை உறவுகளை உலகமயமாக்குவதற்கான பொறி முறைகளாக நோக்கப்படுகின்றன. (உயன்கொட, 1992). அமைப்புரீதியான சீராக்கல் கொள்கை தெரிவு சந்தை மீதான அனைத்துக் கட்டுப் பாடுகளையும் நீக்கி விடுவதன்மூலம் உலகமயமாக்கலை சாதித்துக் கொள்கிறது. இந்த நிலையில், சீராக்கல் என்பது சந்தைச் சீராக்கலாகவே உள்ளது. அல்லது மிகுந்த உத்வேகத்துடன் கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள சந்தைச் சக்திகளுக்கு எதிர் விளைவு காட்டும் வகையில் பொருளாதாரம் தானாகவே தன்னை சீராக்கிக் கொள்வதற்கு இடமளிக்கப் படுகிறது.

வளர்முக நாடுகளின் பொருளாதாரங்களை உலகச் சந்தையுடன்


### சிலி

சிலி தேசம் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றிக்கு சான்று பகன்று வருகின்றதென உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் கூறி வந்துள்ளன. வளர்ச்சியடைந்து வரும் ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதாரமொன்றைக்கொண்டிருக்கும் அந்நாடு, தென் அமெரிக்காவின் வேங்கையென அடிக்கடி சுட்டிக் காட்டப்படுகின்றது. 1980 கள் தொடக்கம், சிலியின் வெற்றியின் பொருளாதாரக் குறிகாட்டிகள் உறுதியான வளர்ச்சி விகிதம், ஏற்றுமதிகளிலான துரிதவளர்ச்சி, சாதகமான வர்த்தக நிலுவை, அதிகரித்து வரும் வெளிநாட்டு முதலீடு, சார்பு ரீதியில் குறைந்த பணவீக்க விகிதம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. அசீநி கள் பொருளாதாரத்தில் எடுத்துவரும் உறுதியான மாற்றங்களுக்கான நிருபணங்களாக இவை அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்டு வந்துள்ளன.

எனினும், புள்ளி விவரங்களை சற்று விரிவாக நோக்கும் பொழுது அவை முற்றிலும் மாறுபட்ட முடிவுகளை காட்டுவதனை காணமுடிகிறது. வளர்ச்சி மற்றும் சாதகமான வர்த்தக நிலுவை என்பவற்று[க்கு மத்தியிலுதும் கூட, அந்நாடு கடன் பொறிக்குள் வீழ்ந்துள்ளது. 1976 இல் 525 கோடி அமெரிக்க டொலராக இருந்த வெளிநாட்டுக் கடன் 1990 இல் 1900 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மீதான முதலீடு ஆகக் குறைந்த மட்டத்திலேயே இடப்பட்டுள்ளது. இன்னமும் கூட மொத்தக் குடித்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் கடும் வறுமையில் வாழ்ந்து வருவதுடன், 1990 அளவில் வருமான ஏற்றத்தாழ்வு குறைக்கப்பட்டிருக்கவும் இல்லை. இந்த வளர்ச்சியின் விளைவாக, சிலியில் வாழும் சிறு தொகையினரான பொருளாதார மேட்டுக்குடியினரிடையே செல்வம் ஒன்று திரண்டுள்ளதுடன், மிக வறிய 20 சதவீதத்தினர் பெற்றுக் கொள்ளும் வருமானம் இப்பொழுது 4 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது. இலத்தீன் அமெரிக்க கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 1987 இல் ஆறாக இருந்து 1994 இல் 42 ஆக அதிகரித்திருந்தது. வேதனம் குறைந்த தொழில்கள் பெருகிவருவதுடன் இணைந்த விதத்தில் தொழிலாளர்களிடையே பாதுகாப்பின்மை உணர்வு அதிகரித்து வருகின்றது. சிலியில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் மிக மோசமான சுகாதாரப் பராமரிப்பு, மோசமான கல்வி வசதிகள், போதிய சமூகப் பாதுகாப்பற்ற நிலை, பெருகி வரும் சமூக சீர்குலைவு, வன்முறைக் கலாச்சாரம் போன்றவற்றை எதிர்நோக்கி வருகிறார்கள்.

இந்த நிலையில் மகளிரே பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்களின் வேதனங்கள் குறைந்து வருவதனால் பெண்களும் வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஊழியர் படையில் மகளிரின் பங்கு 1980 இல் 22% ஆக இருந்து 1990 இல் 38% ஆக உயர்ந்திருந்தது. இது சிலருக்கு வருமானத்தையும் சுதந்திரத்தையும் வழங்கிய போதிலும் பெரும்பாலான பெண்கள் குறைந்த கூலிகளைக்கொண்ட வேலைகளையே ஏற்க வேண்டியிருந்தது.

வரைபடம் 1 வளர்முக நாடுகளின் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதங்கள் 1965-1990




இணைத்து விடுவதற்கு இரண்டு முக்கியமான கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சி மற்றும் சந்தை தாராளமயமாக்கல் என்பனவே அந்த கருவிகளாகும். ஆனால், இந்த நிகழ்வுப் போக்கிலும் பல உள்ளார்ந்த பலவீனங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, இந்த முரண்பாடுகள் வளர்முக நாடுகளின் நலன்கள்மீது நிர்ணயகரமான தாக்கங்களை எடுத்துவரக்கூடியதாக உள்ளன. இந்த முரண்பாடுகள் உலகளாவிய மட்டம் மற்றும் தேசிய மட்டம் என இருநிலைகளில் அவதானிக்கப்பட்டுள்ளன.

## உலகளாவிய முரண்பாடுகள்

வளர்முக நாடொன்றின் பொருளாதாரத்தை உலகச் சந்தைகளுக்கு திறந்து விடும் பொழுது, சந்தைச்சக்திகள்கட்டற்ற முறையில் செயற்படுவதற்கு இடமளிக்க வேண்டும். மூலவளப்பகிர்வில் பெருமளவுக்கு செயல்திறனை எடுத்து வருவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். அடிப்படையில் உலகச் சந்தை சுதந்திரமானதாகவோ அல்லது செயல்திறன் கொண்டதாகவோ இருந்துவரவில்லையென்பது இங்கு காணப்படும் முதன்மையான முரண்பாடாகும். கடந்த பதினைந்து வருட காலமாக உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் கட்டற்ற சந்தைக் கோட்பாடு மீறப்பட்டு வந்துள்ளது. வேளாண்மைத்துறை உற்பத்திகள் தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகள் அதிகரித்து வந்திருப்பதும், சர்வதேச வர்த்தகத்தின் சில வகைகள் மீது வரையறைகள் விதிக்கப்பட்டு வந்திருப்பதும், இதனை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

சிறு உற்பத்தியாளர்கள் தொடர்பாக தற்பொழுது உலக அளவில் நிலவிவரும் முரண்பாடுகளையும் பிரதிகூலங்களையும் பின்வருமாறு சுருக்கிச் கூற முடியும்:

## அபிவிருத்தி வளர்ச்சி மற்றும் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

அசீநி கள் பல வளர்முக நாடுகளில் - குறிப்பாக ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள பல நாடுகளில் - ஓரளவுக்கு வளர்ச்சியை எடுங்து வந்துள்ள போதிலும், இக் கொள்கைகள் அபிவிருத்து குறித்த சாதகமான விருத்தி நிலைமைகளை எடுத்து வருவதில் வெற்றிகாண முடிய வில்லை என்பது இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில், சர்வதேச நிதி நிறுவனங்களின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி என்பன குறித்த தரிசனம் முரண்பாடுகளைக் கொண்டதாகவும், செயல்தாக்கம் அற்றதாகவும் இருந்து வருகின்றது. வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்ற இரு முரண்பட்ட பொருளாதாரக் குறிக்கோள்களை மீள் இணக்கப்படுத்த வேண்டிய தேவை, மனித முகத்துடன் கூடிய அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் தேவைக்கான பின்புலத்தை வழங்குகின்றது. அசீநி கள் தற்பொழுது உருவாக்கி வரும் பிரச்சினைகளுக்கான ஒரு மாற்று வழியாக விமர்சகர்கள் இந்த மனித முகத்துடன் கூடிய அசீநி, யை முன்வைத்துள்ளனர்.

வளர்ச்சிக் கருதுகோள், அதன் கோட்பாட்டு ரீதியான பொருள் விளக்கத்தை பொறுத்தவரையில் பரவலான முறையில் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. மெய் தேசிய வருமானத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் ஓர் அதிகரிப்பாகவே அது இருந்து வருகின்றது. வளர்ச்சி என்பதனை "மெய் தேசிய வருமானத்தில் நிலையாக ஏற்பட்டு வரும் அதிகரிப்பு" என உலக வங்கி வரைவிலக்கணம் செய்துள்ளது. வளர்ச்சி குறித்த கருதுகோள் பரவலாக புரிந்து கொள்ளப்பட்டுள்ள போதிலும், அபிவிருத்தி குறித்த கருதுகோள் பல வருட காலமாக படிப்படியாக உருவாகி வந்துள்ளது. அது பல்வேறு பட்ட மக்கள் பிரிவினருக்கு பல்வேறு பட்ட பொருள் விளக்கங்களை தரக்கூடிய மயக்கம் தரும் ஒரு பதப் பிரயோகமாக இருந்து வருகின்றது.

தொடக்கத்தில், வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதில் வருமானம் வகித்துவரும் பங்கினை அபிவிருத்தி வலியுறுத்தியது. வறிய மக்களின் மெய் வருமான மட்டங்களை அதிகரிக்கச் செய்து, அவர்களுடைய கொள்வனவு சக்தியை மேம்படுத்து வதற்கான வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென இந்த அணுகு முறையின் ஆதரவாளர்கள் கூறி வந்தனர். வருமானத்தை மையமாகக் கொண்ட இந்த அணுகுமுறை சுகாதாரம், போஷாக்கு மற்றும் கல்வி என்பவற்றை உள்ளடக்கிய மானிட மூலதனத்தின் மீதான முதலீட்டினை, மூலதனச் செலவையும் மிஞ்சியதாக இருந்து வரும் மேலதிக வருமானத்தின் அடிப்படையில் மதிப்பிட்டு வருகிறது. மச்லப் (1967) என்ற மேலைத் தேசப் பொருளியலாளர், அபிவிருத்தி என்பதனை "அதிகரித்து வரும் அல்லது நிலையாக இருந்து வரும் சமூகமொன்றில் ஆள் ஒருவருக்கான தேசிய வருமானத்தின் இடையிறாத வளர்ச்சியை எடுத்து வரக்கூடிய விதத்தில் மூல வளங்களின் உபயோகத்தில் எடுத்துவரப்படும் மாற்றங்கள்" ஆகுமென குறிப்பிட்டுள்ளார். எனவே, இந்தப் பின்னணியில், அபிவிருத்தி என்பது, மெய்தேசிய வருமானத்தில் ஓர் அதிகரிப்பினை எடுத்து வருவதிலும் பார்க்க பரந்துபட்ட பல விடயங்களை உள்ளடக்கியிருப்பதனால் அது வளர்ச்சி என்பதிலும் பார்க்க விரிவான ஒரு தாற்பரியத்தை தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது.

அதனையடுத்து, அபிவிருத்தி தொடர்பாக அடிப்படைத் தேவைகள் குறித்த அணுகுமுறை எழுச்சியடைந்தது. இந்த அணுகுமுறை குறிப்பிட்ட சில அத்தியாவசிய போஷாக்குத் தேவைகள், சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகள் என்பன தொடர்பாக மக்களின் அடிப்படைத் தேவைகளை மதிப்பீடு செய்கிறது. அபிவிருத்தி, அதன் முதல் முன்னுரிமையாக, கடும் ஏழ்மையை ஒழித்துவிடும் முயற்சியில் அக்கறை செலுத்த வேண்டும் என அது கூறுகின்றது. இத்தகைய அபிவிருத்தி ஒன்றை சாதித்துக் கொள்வது, பொருத்தமான வழிமுறைகளை கண்டறிந்து கொள்ளல் மற்றும் அதற்கு அவசியமான அரசியல் துணிவினை ஒன்று திரட்டுதல் ஆகிய இரு அம்சங்களின் அடிப்படையிலும் சிக்கலான ஒரு பணியாக இருந்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், அடிப்படைத் தேவைகள் குறித்த அணுகு முறை அபிவிருத்தி குறித்த கருதுகோளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை சேர்த்து வரும் அதேவேளையில், அது இன்னமும் அபிவிருத்தியில் பண்டத்தை அடிப் படையாகக் கொண்ட முன்னேற்றத்தை மதிப்பிடும் முறையில் வேரூன்றி இருந்து வருகின்றதென வாதிக்கப் படுகின்றது. அந்த வகையில், இந்த அணுகு முறை வருமான அணுகு முறையை ஒத்ததாக உள்ளது.

மானிட அபிவிருத்தி அணுகு முறை மற்றும் மானிட திறன்கள் அபிவிருத்தி அணுகுமுறை என்பன அபிவிருத்து தொடர்பாக முன்வைக்கப் பட்டுள்ள மிகச் சமீபத்திய இரு அணுகுமுறைகளாகும். இதில் முதலாவது அணுகுமுறை, ஒரு நாட்டுக்கு அவசியமான தெரிவு களையும் ஆற்றல்களையும் அறிமுகம் செய்து வைப்பதன் மூலம் அபிவிருத்தி தொடர்பான விவாதத்தினை மேலும் ஒரு படி முன்னே எடுத்துச் செல்கின்றது. அது அந்த வகையில் பாரம்பரிய பண்டங்களை / வருமா னத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து விலகிச் செல்கின்றது. மானிட திறன்கள் அபிவிருத்திக் கருதுகோள் திறன்களை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளையும், அதே போல இத்திறன்களை உற்பத்திசார் முயற்சிகளில் பயன் படுத்திக்கொள்ளும் குறிக்கோளையும் ஒன்றாக இணைக்கின்றது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அபிவிருத்தி மக்கள் மீது முதலீடுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை எடுத்து வருகின்றது. இவ்விதம் மக்கள்மீது முதலீடுகள் மேற்கொள்ளப் படும் போது அவர்கள் பொருளாதார வளர்ச்சிக்கும், உற்பத்திப் பெருக் கத்துக்கும், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்துக்கும் பங்களிப்புச் செய்வார்கள்.

( 43 ஆம் பக்கம் பார்க்க)

- முதலில், சந்தைப் போட்டி ஏற்றத்தாழ்வானதாகவுள்ளது; வளர்ச்சியடைந்த நாடுகளைச் சேர்ந்த நன்கு ஸ்தாபிதமாகியுள்ள, மானியங்களைப் பெற்று வரும் பாரிய உற்பத்தியாளர்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது.

- இரண்டாவதாக, வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையிலான வர்த்தக கூட்டு சமத்துவம் அற்றதாக உள்ளது. சந்தைகள், மூலதனம் மற்றும் பண்டச் சந்தைகள் பற்றிய தகவல் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை அனைவரும் சமமாகப் பெற முடியாதுள்ளது. பொருட்களுக்கான தரங்களை நிர்ணயிப்பதும் விலைகளை நிர்ணயிப்பதும் வளர்முக நாடுகளை பாதிக்கக் கூடியவையாக இருந்து வருகிறது. ஏற்றத்தாழ்வான கூட்டு ஒப்பிட்டு அனுகூலங்கள் மீது வரையறைகளை எடுத்து வருவதுடன், அதன் விளைவாக, அனுகூலங்களும் ஏற்றத்தாழ்வான முறையில் பகிரப்படுகின்றன.

- மூன்றாவதாக, 'உலகமயமாக்கலின் விளைவாக வளர்முக நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்படும் சந்தை அதிகரிப்புகளிலேயே அதிகரித்தளவில் தங்கியிருந்து வருகின்றன.

### வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவிவரும் பாதுகாப்பு வாதம்

பாதுகாப்பு என்பது, தாராளமயமாக்கல் என்பதற்கு நேர் எதிரானதாகும்; பெரும்பாலான கைத்தொழில் நாடுகளில் 1970 களிலும் 1980 களிலும் விவசாயத்துறை மீதான பாதுகாப்பு அதிகரித்து வந்துள்ளது. நுகர்வோரிடமிருந்து வேளாண்மைத்துறைக்கு மாற்றப்பட்ட தொகை 1970 களில் 6,100 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 1980 இல் 27,000 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தன. விவசாயத்துறைக்கான மானியங்கள் 1980 க்கும் 1985 க்கும் இடையில் ஐக்கிய அமெரிக்காவில் 80% னாலும், கனடாவில் 60% னாலும், ஜப்பானில் 21% னாலும் அதிகரித்திருந்தன. (உலக அபிவிருத்தி அறிக்கை, 1991). உலகச் சந்தையில் இடம் பெற்று வரும் உயர் அளவிலான போட்டியிலிருந்து உற்பத்தியாளர்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, பாதுகாப்பு வழிமுறைகள் அதிகரித்தளவில் பின்பற்றப்பட்டு வந்தன.

பாதுகாப்புவாதக் கொள்கைகளின் நேரடி விளைவுகளில் ஒன்று, உலகளாவிய ரீதியில் சந்தைகளின் வளர்ச்சியில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சியாகும். இது உலகளாவிய சந்தைகளுக்குள் பிரவேசிக்கும் வளர்முக நாடுகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்களுக்கு பிரதிகூலமானதாக உள்ளது. இழக்கப்பட்ட ஏற்றுமதிகளின் வடிவில் வளர்முக நாடுகள் 1980 இல் 5,500 கோடி அமெரிக்க டொலர்களை இழந்திருந்தன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்தத்தொகை அவ்வாண்டில் வழங்கப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக்குச் சமமானதாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் உற்பத்தி அதிகரித்தளவில் பாதுகாக்கப்பட்டு வரும் அதே வேளையில், வளர்முக நாடுகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் அசீநி களின் மானியங்களையும் ஏனைய பாதுகாப்பு வழிமுறைகளையும் இழந்து வருகிறார்கள்.

### வர்த்தகத்தில் ஏற்றத்தாழ்வான பங்கேற்பு

ஏற்றத்தாழ்வான வர்த்தக கூட்டிணை எடுத்துவரும் வழிமுறைகள் ஏற்றுமதித்தீர்வைகள், கோட்டாக்கள், சுய விருப்பிலான ஏற்றுமதி கட்டுப்பாடுகள் சுகாதார மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், பொருட்களை மலிவான விலையில் எடுத்துச் சென்று குவிப்பதற்கு எதிரான வழிமுறைகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. கைத்தொழில் நாடுகளின் சராசரி தீர்வைகள் 6% க்கும் குறைவாகக் குறைக்கப்பட்டுள்ள போதிலும், ஏனைய பாதுகாப்பு வழிமுறைகள் 1960 கள் தொடக்கம் அச்சுறுத்தக்கூடிய விதத்தில் அதிகரித்து வந்துள்ளன என்பதனை உலக அபிவிருத்தி அறிக்கை (உலக வங்கி, 1991) சுட்டிக்காட்டுகிறது. வளர்முக நாடுகளில் நிலவி வரும் மோசமான வேலை நிலைமைகள் மற்றும் குறைந்த வேதனங்கள் என்பவற்றை சாக்கிட்டு, வளர்முக நாடுகளிலிருந்து வரும் ஏற்றுமதிகள்மீது தடைகளை விதிப்பதற்கு அண்மையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிய வந்துள்ளது. இந்த முயற்சி வளர்ச்சியடைந்த நாடுகள் பின்பற்றி வரும் மறைமுகமான பாதுகாப்பு வாதத்துக்கான ஒரு புதிய தந்திர உபாயமாக கருதப்படுகிறது.

### சந்தைகளில் தங்கியிருத்தல்

உலக வர்த்தகத்தின் அண்மைய போக்குகள், தங்கியிருக்கும் நிலைவர அதிகரித்து வரும் அபாயத்தினை எடுத்துக் காட்டுகின்றன. சர்வதேச வர்த்தகப்போக்கு கவலையளிப்பதாக இருந்து வருவதுடன், பண்டச் சந்தைகளும் வீழ்ச்சியடைந்து வருகின்றன. 1981 தொடக்கம் உலகப் பொருளாதாரப் பின்னடைவு இடையறாது நிலவி வந்துள்ள ஒரு சூழ்நிலையில், உலக வர்த்தகத்தின் அளவிலும் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களிலும் வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. மேலும், பணவீக்கம் உயர்ந்து வருவதன் விளைவாக பொருட்களுக்கான கேள்வியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது தவிர, பாரிய சந்தைப் பொருளாதாரங்களுக்கிடையே நிலவிவரும் கருத்து வேறுபாடுகளும் உலக வர்த்தகத்தில் நிச்சயமற்ற தன்மைகளை எடுத்து வந்துள்ளன.

### சிறிய உற்பத்தியாளர் என்பவர் யார்?

"சிறு உற்பத்தியாளர்" என்ற பதத்துக்கு தெளிவான, சுருக்கமான வரைவிலக்கணம் ஒன்றை அளிப்பது சிரமமானதாகும். ஏனெனில், அவர்களுடைய சொத்துக்கள், செயற்பாடு மற்றும் சமூக, பொருளாதார பின்னணி என்பவற்றில் சிக்கலான பல்வகைப்பட்ட வேறுபாடுகள் நிலவி வருகின்றன. இவர்களுக்கு வரைவிலக்கணம் வழங்குவதற்கான அளவுகோல் பல்வேறுபட்ட

## வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கு மிடையில் ஒரு முரண்பாடுள்ளதா?

வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகிய இரு பதங்களும் வளர்முக நாடுகளின் நிலைமைகள் மற்றும் தேவைகள் என்பவற்றுக்குப் பொருந்தக் கூடிய விதத்தில் மிகவும தெளிவான முறையில் வரை விலக்கணம் செய்யப்பட்டிருக்குமிடத்து, கருதுகோள் அடிப்படையில் வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருந்துவர வேண்டிய அவசியமில்லை. இந்த இரு கருதுகோள்களும் தனித்தனியாக எடுத்து நோக்கப்படும் சந்தர்ப்பங்களிலேயே இந்த முரண்பாடு தோன்றுகின்றது. பொருளாதார வளர்ச்சி மட்டும் முழு வீச்சுடன் முன்னெடுத்துச் செல்லப்பட்டால், அது, தானாகவே மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதல்லை; மாறாக அனுகூலம் குறைந்த நிலையில் இருந்து வரும சமூகக் குழுக்களின் வாழ்க்கைத தரம் மேலும் சீர்குலைவதற்கும்; பரவலான வறுமைக்கும் அது வழி கோலி விடுகின்றது. வளர்முக நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான அனுபவங்களை மீளாய்வு செய்த் தென் மண்டல ஆணைக்குழு பின்வருமாறு முடிவுரை வழங்கியிருந்தது: "தென் மண்டலத்தில் ஏற்பட்டு வந்த தெட்டத்தெளிவான பொருளாதார வளர்ச்சி அமைப்பு ரீதியான ஏற்றத்தாழ்வுகளை போக்கிவிடவில்லை. நடுத்தட்டு வர்க்க மொன்று எழுச்சியடைந்துள்ளபோதிலும் பல நாடுகளில் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையிலான வருமான இடைவெளி விரிவடைந்து சென்றுள்ளது. இதன் விளைவாக, பொருளாதார வளர்ச்சி (ஓரிரு விதிவிலக்குகள் தவிர) தேசிய ஒற்றுமையையும், உறுதிப்பாட்டினையும், சமூக இணக்கத்தினையும் உருவாக்கத் தவறியுள்ளது. வளர்ச்சி பொதுவாக அதிகரித்தளவிலான ஏற்றத்தாழ்வுகள், திட்டமிடப்படாத நகராக்கம், இறக்குமதிகளுக்கான கேள்விப் பெருக்கம், ஏற்றுமதிகளின் மந்தம் மற்றும் சுற்றுச்சூழல் அழிவு போன்றவற்றுக்கு வழிகோலியுள்ளது.

மறுபுறத்தல், அபிவிருத்திக் குறிக்கோளை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து, முன்னெடுத்துச் செல்லும் பொழுது அது நீண்டகாலத் தேக்கத்தினையும், இறுதியில் குறைவிருத்தியையும் தோற்றுவிக்கின்றது. அபிவிருத்தி மீது மிதமிஞ்சிய அளவுக்கு அழுத்தம் காட்டப்படுவது இரு காரணங்களின் நிமித்தம் தீங்கிழைக்கக் கூடியதாக இருக்க முடியும். முதலாவதாக, அதே மட்டங்களிலான அபிவிருத்தியினை தொடர்ந்து பராமரித்து வருவதற்கு அவசியமான மூலவளங்களை பெற்றுக் கொள்வது ,வரவர கடினமாக இருக்க முடியும்; 1970 களில் பல தென்னாசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இரண்டாவதாக, வளர்ச்சித் தேக்கமும் அபிலாஷைகளுடன் கூடிய அபிவிருத்திச் செலவினமும் ஒன்றாக இணையும் பொழுது அது மோசமான தாக்கத்தினை எடுத்துவர முடியும். உதாரணமாக, பிரமாண்டமான அளவிலான இலவச கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை துவக்கி வைத்துள்ள பெருந்தொகையான வளர்முக நாடுகள், அதன் விளைவாக, இப்பொழுது பிறிதொரு நெருக்கடியை சந்தித்து வருகின்றன. அதாவது, படித்தும் வேலையற்றவர்களாக இருந்து வரும் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் விரக்தி நிலை இந்த நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. எனவே, வளர்ச்சியும் அபிருத்தியும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துச் செல்ல முடியும்: அபிவிருத்தியின் பொருட்டு திருப்திகரமான பொருளாதார வளர்ச்சி விகித மொன்றினை பராமரித்து வருவது மிகமிக முக்கியமானதாகும். ஏதாவது ஒரு காரணத்தினால் வளர்ச்சி மந்தமானதாக இருந்து வந்தால், அபிவிருத்தி உத்தியின் மீது அது அழிவுகரமான தாக்கத்தினை எடுத்துவரும். எனவே, வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது. மாறாக, ஒன்றினை ஒன்று குறைநிரப்பு செய்யக்கூடியவையாக அவை இருந்து வருவது அவசியமாகும்.

### வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் அசீநி கள்

உலக வங்கி முன் வைத்துள்ள அமைப்பு ரீதியான சீராக்கல் வழிமுறை, ஒரு நாட்டின் முறை சார்ந்த பொருளாதாரத்தின் வளர்ச்சியைக் கொண்டு பிரதானமாக அபிவிருத்தியை மதிப்பீடு செய்தது. அதாவது, ஒரு நாட்டின் மொத்த மெய் தேசிய உற்பத்தியின் அதிகரிப்புக்களால் அளவிடப்படும் வளர்ச்சியை அது கவனத்தில் எடுத்தது. இது, இந்த வகையில், அபிவிருத்தி குறித்து வருமான அணுகு முறையை பின்பற்றியது. பல தசாப்தங்களின் பின்னரும் கூட, உலக வங்கியும் சநாநியும், அபிவிருத்தியை வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் விருத்தியுடன் அல்லாது இத்தகைய மொஉஉ வளர்ச்சி விகிதங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கும் ஒரு போக்கினை பின்பற்றி வருகின்றன. இந்த நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் தொடர்பு சாதனங்களுக்கு விடுத்துள்ள அறிக்கைகள் இதனை உறுதி செய்கின்றன: "தரித்திர நிலை மற்றும் வறுமை என்பன தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக கொடுப்பனவுகளை வழங்குவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஒரு சமூக சேவை முகவராக நாங்கள் இருந்துவர வில்லை. கடன் தருபவர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் இணையற்ற பாதுகாப்பினையும், பலத்தினையும் அளித்து வரும் அதேவேளையில், அபிவிருத்திக்கு வசதி செய்து கொடுப்பதற்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் அதி நவீன நுட்பங்களைப் பயன்படுத்திவரும் ஓர் அபிவிருத்தி வங்கியான நாம் செயற்பட்டு வருகின்றோம்" என உலக வங்கியின் முன்னாள் உதவித் தலைவர் ஒருவர் சமீபத்தில் பத்திரிகையாளர் ஒருவரிடம் கூறியிருந்தார்.

எனவே, உலக வங்கியின் கண்ணோட்டத்தில், அபிவிருத்திக் குறிக்கோள் உற்பத்தியில் இடையறாத அதிகரிப்புக்களை எடுத்து வருவதாகவே உள்ளது. இந்த உற்பத்திப் பெருக்கத்தின் சாதகமான தாக்கங்கள் சமுதாயம் முழுவதற்கும் துளிதுளியாக கசிந்து செல்லும் என நம்பப்படுகிறது. ஆனால், மொஉஉ யில் ஏற்படும் அதிகரிப்புக்களுடன் இணைந்த விதத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும், தீவிரமான சமூக ஏற்றத் தாழ்வும் மோசமடைய முடியும் என்பதனை பல வளர்முக நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. இந்நாடுகளில் பெரும்பாலானவை அத்தகைய அபிவிருத்தி ஒன்றை சாதித்துக் கொள்ளும் நிகழ்வுப் போக்கில் தமது மக்களின் சேம நலனை பலியிட வேண்டியிருந்தன. ஆனால், உலக வங்கியும் சநாநி யும் தமது கடன் தருனர்களினதும், பங்குதாரர்களினதும் அனுகூலங்களை ஒரு போதும் பலியிடவேண்டி நேரிட்டதில்லை.

சமூகப் பின் விளைவுகள் குறித்து கிஞ்சித்தும் பொருட்படுத்தாத விதத்தில் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையான வளர்ச்சி விகிதங்களும் கூட சாதிக்கப்படவில்லை. எனவே, இந்த அடிப்படையில், உலக வங்கி முன்வைத்த அபிவிருத்தி மாதிரியை உருவாக்குவதிலும் வருமானம் தொடர்பான இலக்குகளை நிறைவு செய்து கொள்வதிலும் அசீநி கள் வெற்றி காணவில்லை. இந்த வகையில், அசீநி கள் வளர்ச்சி கருதுகோளுக்கும் அதேபோல அபிவிருத்தி கருதுகோளுக்கும் முரண்பட்டதாக இருந்து வந்துள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அசீநி க்கும் வளர்ச்சிக்கும் இடையிலான முரண்பாடுகளிலும் பார்க்க, அசீநி க்கும் அபிவிருத்திக்குமிடையிலான முரண்பாடுகள் தீவிரமானவையாகக் காணப்படுகின்றன. இவற்றை சற்று விரிவாக நோக்குவோம்.

பொருளாதார வளர்ச்சியுடன் மொதேஉ அதிகரித்து வந்துள்ள சந்தர்ப்பங்களில், அதன் விளைவாக, அதனையுடனடுத்து பெரும்பாலான மக்களின் தனிப்பட்ட வருமானங்களில் அதிகரிப்பு ஏற்படவில்லை. வணிக நிலங்களை வைத்திருக்கும் மேட்டுக்குடியினரும், வெளிநாட்டு நிறுவனங்களும் எந்த ஒரு நாட்டினதும் மூலவளங்களின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதனை இது காட்டுகிறது. மொஉஉ வளர்ச்சியின் பயன்களில் தமக்குச் சேர வேண்டிய விகிதத்திலும் பார்க்கக் கூடிய விகிதத்தினை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். இந்த அடிப்படையில், அசீநி என்பதனை வளர்முக நாடுகளில் வாழும் பெருந்தொகையான குடித்தொகையினர் மீது தொடுக்கப்பட்டு வரும் ஒரு தாக்குதலாக பலர் கருதத் தொடங்கியுள்ளனர். மூலவளங்கள் குறைவாக இருந்த போதிலும், பெருமளவுக்கு மூலதனத்தினை கொண்டிருக்கும் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு வளர்முக நாடுகளின் மூலவளங்களை சுரண்டி எடுத்துச் செல்வதற்கான ஓர் ஊடகமாக அசீநி பயன்படுத்தப்பட்டு வருகின்றது என இவர்கள் நம்பத் தொடங்கியுள்ளனர்.

அசீநி களால் ஊக்குவிக்கப்பட்ட துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சி, இயற்கை மூலவளங்களை உபயோகிப்பது தொடர்பாக பாதுகாப்பு நிபந்தனைகள் எவற்றையும் கொண்டிருக்கவில்லை. துரித வளர்ச்சிக்கு மூலவளங்களின் துரித உபயோகம் அவசியமாகும். புதுப்பிக்கப்பட முடியாத மூலவளங்களை உபயோகிக்கும் விஷயத்தில் இது நிர்ணகரமான தாக்கங்களை எடுத்துவர முடியும். இதற்கான மிகச் சிறந்த உதாரணம் பெருவாரியாக இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்தி கைத்தொழில் அபிவிருத்தியை துரிதப்படுத்தி வரும் வளர்ச்சியடைந்த நாடுகளின் செயல்பாடாகும். இந்நாடுகள் பின்விளைவுகள் குறித்து கிஞ்சித்தும் கவலைப்படாது கைத்தொழில் கழிவுப் பொருட்களை பாரியளவில் கொட்டிக் குவித்துள்ளன. இது முழு உலகினையும் பாதிக்கக் கூடிய சுற்றுச்சூழல் தொடர்பான நெருக்கடிகளை எடுத்து வந்துள்ளது.

வளர்முக நாடுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள தொழில்நுட்பங்கள் மலிவானவையாகவும், நவீனத்துவம் குன்றியவையாகவும் உள்ளன. வளர்முக நாடுகளில் செயற்பட்டு வரும் உள்நாட்டு தனியார் கம்பெனிகளும் சில பல்தேசிய கூட்டுத்தாபனங்களும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகளை தவிர்த்துக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகளை தேடி வருகின்றன. இது வளர்முக நாடுகளின் சுற்றுச்சூழல் மீது தொடர்ந்தும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றது. வளர்முக நாடுகள் இறக்குமதி செய்து வரும் சில விவசாய இரசாயனப் பொருட்கள் அவை உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன என்ற விடயமும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

வளர்முக நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களின் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய ஒரு மாற்று அபிவிருத்தி மாதிரி, முழுக்க முழுக்க அந்நாடுகளின் பொருளாதாரங்கள் மீதே கவனம் செலுத்தும் ஒரு மாதிரியாக இருந்துவர வேண்டும். இந்நாடுகள் பிழைத்து வாழ்வதற்கு மட்டும் விரும்பவில்லை. கண்ணியமாக வாழ்க்கை நடத்தவும் விரும்புகின்றன. வாழ்க்கை நடத்துவது என்பது தன்மான உணர்வினை வளர்த்துக் கொள்வது, சிருஷ்டிப்பது, சமூகத்தைக் கட்டியெழுப்புவது, சமூகமயப்படுத்துவது, புரிந்துணர்வினை ஆழமாக்குவது, தொடர்பாடலுக்கும் பங்கேற்பதற்குமென உள்நாட்டு பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புக்களை உருவாக்குவது என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ளது.

மூன்றாவது மண்டல உலகம் விடுக்கும் செய்தி மிகவும் தெளிவானதாகும். அசீநி கள் நிலையான வளர்ச்சி மட்டங்களை எடுத்து வரவுமில்லை; நீண்ட கால அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவு செய்யவுமில்லை. குறுங்காலத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், அந்த வளர்ச்சி எதிர்மறையான பேரண்டப் பொருளாதார மற்றும் சமூகப் பின்விளைவுகளை எடுத்து வந்துள்ளது. வளர்ச்சி நோக்கிலான கொள்கை சீர்திருத்தங்கள் மிதமிஞ்சிய அளவில் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளமையின் விளைவாக, நீண்ட கால அபிவிருத்தி பலியிடப்பட்டுள்ளது.

இயல்பினைக் கொண்டுள்ளது. முதலீட்டின் அளவு, தொழில்நுட்ப வகை மற்றும் வலுத்தேவைகள் போன்ற அளவு கோல்கள் சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பொஸாட் என்பவர் (1992) சிறு உற்பத்தியாளர்கள் குறித்த சில பொதுவான பண்புக் குறுகளை எடுத்துக்காட்டியுள்ளார் :

அட்டவணை 6

| தெரிவு செய்யப்பட்ட துறைகளில் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடும்பங்களின் % (1990 - 1991) | | |
|---|---|---|
| சமூக-பொருளாதார குழு * | % | தலை எண்ணிக்கைச் சுட்டெண் |
| விவசாய வேலை வழங்குபவர் | 0.7 | 16.1 |
| விவசாய தொழிலாளி | 12.8 | 40.5 |
| விவசாயம் - ஏனையோர் | 2.1 | 36.7 |
| விவசாயமல்லாத கூலித் தொழிலாளர் | 4.5 | 53.3 |

மூலங்கள் : ஊழியர் படை, சமூக பொருளாதார ஆய்வுகள் 1980/ 81, 1985/ 86, 1990/ 91

* முலதனம் அறவே இல்லாமல், அடிப்படை உற்பத்தி முறையைக் கொண்டு பிரதான மாக நிலத்தையும் ஊழியத்தை யும் இணைத்து இயங்கி வருதல் (பாரம்பரிய விவசாயம்).

* ஊழியத்தின் குறைந்த விளைதிறன்.

* முலதனத்தின் உயர்ந்த விளைதிறன்.

இலங்கையைப் பொறுத்த வரையில், கைத்தொழில் துறையில் இயங்கி வரும் சிறு உற்பத்தியாளர்களை இனங்கண்டு கொள்வதற்கு பல வரைவிலக்கணங்கள் உள்ளன:

1. நிதி, திட்டமிடல் அமைச்சு, வரி விலக்கு நோக்கங்களுக்காக, (நிலம் மற்றும் கட்டடங்கள் என்பவற்றை உள்ளடக்கிய) சொத்துக்கள் மீதான முதலீடு ரூபா பத்து இலட்சத்துக்கு மேற்படாதிருக்கும் ஒரு நிறுவனத்தை "சிறிய கைத் தொழில்" என வரைவிலக்கணம் செய்கிறது.

2. இயந்திரங்களிலும் உபகரணங் களிலுமான முதலீடு ரூபா 10 இலட்சத்துக்கு மேற்படாதிருக்கும் நிறுவனமொன்றை கைத் தொழில் அபிவிருத்தி சபை "சிறு கைத்தொழில்" என வரைவிலக்கணம் வாங்கி யுள்ளது.

3. இலங்கை மத்திய வங்கியி னாலும், தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தி னாலும் தொகுக் கப்பட்டு வரும் தேசியக் கணக் கீட்டுத் தரவுகள், நகர முறை சாரா துறை முழுவதையும் கிராமிய குடிசை கைத் தொழில்கள் அனைத்தை யும் "சிறு கைத்தொழில்கள்" என வகைப்படுத்துகின்றன.

4. தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் 1982 இல் கைத்தொழில்கள் குறித்த ஒரு தொகைமதிப்பினை மேற் கொண்டது. இந்த மதிப்பீடு, முதலீட்டினை அன்று வேலை வாய்ப்பினை ஓர் அளவு கோலாக கவனத்தில் எடுத்தது. ஐந்து நபர்களுக்கும் குறை வானவர்களை வேலையில் அமர்த்தியிருக்கும் அலகுகள் "சிறிய அளவு தொழில் முயற்சிகள்" என இந்த மதிப்பீட்டில் வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது.

5. தேசிய அபிவிருத்தி வங்கி சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கான கடன் திட்டத்தின்கீழ் கடன்களை பகிர்ந்தளிக்கும் நோக்கத் துக்கென அதன் சொந்த வரை விலக்கணங்களை பின்பற்றி வருகின்றது. சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில் களை நிர்ணயிப்பதற்காக அது பயன்படுத்தி வரும் வெட்டுப்

அட்டவணை 7

| தென்னாசியாவில் வறுமை நிகழ்வு - 1990 | வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடித்தொகை 1990 (%) | | மிக வறிய 40% த்தினர் வருமானத்தில் பெறும் பங்கு 1980-88 |
|---|---|---|---|
| | மொத்தம் | கிராமிய | |
| பங்களாதேஷ் | 86 | 86 | 23.7 |
| நேபாளம் | 60 | 61 | n.a |
| இந்தியா | 48 | 51 | 20.4 |
| பாகிஸ்தான் | 30 | 29 | 19.0 |
| இலங்கை | 25 | 28-32 | n.a |

மூலம் : உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கை 1992; மானிட அபிவிருத்தி அறிக்கை, 1992

அட்டவணை 8

மொ.உ.உ. க்கு சிறு கைத்தொழில் துறையின் பங்களிப்பு (நிலையான விலைகளில்) 1982-1993
சதவீதம்

| துறை/வருடம் | 1982 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991* | 1992 | 1993* |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. விவசாயம் | 26.37 | 23.64 | 23.51 | 22.73 | 23.22 | 22.61 | 21.34 | 20.93 |
| 2. தயாரிப்புத்துறை | 14.37 | 16.17 | 16.48 | 16.83 | 17.35 | 17.71 | 18.48 | 19.1 |
| 2.1 தேயிலை, இறப்பர், தென்னை பதப்படுத்தல் | 3.01 | 2.88 | 2.75 | 2.67 | 2.73 | 2.46 | 2.06 | 2.09 |
| 2.2 தொழிற்சாலை கைத்தொழில் | 9.27 | 11.31 | 11.78 | 12.73 | 13.22 | 13.84 | 14.99 | 15.61 |
| 2.3 சிறுகைத்தொழி | 0.82 | 0.79 | 0.77 | 0.77 | 0.75 | 0.79 | 0.82 | 0.8 |
| 2.4 ஏனையன | 1.27 | 1.19 | 1.17 | 0.65 | 0.65 | 0.62 | 0.61 | 0.61 |

* தற்காலிகம்

புள்ளி காலத்துக்குக் காலம் மாற்றமடைந்துள்ளது.

6. ஏற்றுமதி அபிவிருத்தி சபை, (நிலம் மற்றும் கட்டடம் தவிர்ந்த) 40 இலட்சம் ரூபா வரையிலான மூலதன முதலீட்டினை கொண்டு ஆகக் குறைந்தது 10 ஆட்களை வேலையில் அமர்த்தியிருக்கும் கைத்தொழில்களை "சிறிய கைத்தொழில்கள்" என வரைவிலக்கணம் வழங்கி உள்ளது.

தெளிவான, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வரைவிலக்கணம் இல்லாதிருப்பது தேசிய நிறுவனங்கள் இந்தத்துறை தொடர்பாகக் காட்டி வரும் தெளிவற்ற அணுகு முறையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. மேலே எடுத்துக்கூறப்பட்ட வகைகள் தவிர, பெருமளவுக்கு முறைசாராத துறையில் பெருந்தொகையான சிறு உற்பத்தியாளர்கள் இயங்கி வருகிறார்கள். இவர்கள் எத்தகைய முறை சார்ந்த வரைவிலக்கணங்களுக்குள்ளும் வருவதில்லை. ஆனால், சிறு உற்பத்தியாளர்களிடையே இருந்து வரும் மிகப் பெரிய உப குழுவாக இவர்கள் இருந்து உள்ளனர்.

சந்தையுடனான உறவு

உலகமயமாக்கல் குறித்த புதிய பொருளாதார ஒழுங்கின், அச்சாணி சந்தையாகும். சிறு அளவு உற்பத்தியாளர்கள் பாரியளவு உற்பத்தியாளர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது வேறுபட்ட, குறைவான ஒரு மட்டத்திலேயே சந்தையுடன தொடர்பு கொள்கிறார்கள். உலகமயமாக்கலை சாதித்துக்கொள்ளும் நிகழ்வுப்போக்கில் முழு உற்பத்திக் கட்டமைப்பும் மாற்றங்களை எதிர் கொள்கிறது. புதிய உற்பத்தி மற்றும் சந்தை படுத்தல் உறவு முறைகளுக்கு ஏற்ப தம்மை சீராக்கம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுகிறது.

எனினும், சந்தைப் பொறிமுறையினால் அனைத்து மட்டங்களிலும் உற்பத்தியாளர்களைச் சென்றடைய முடிவதில்லை. உள்ளூர் மட்டத்தில் சந்தை ஒருங்கிணைப்பு நிகழ்வுப் போக்குக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, உள் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஊக்குவிப்புக்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் அமைப்புக்களில் புதிய மாற்றங்கள் என்பன இடம் பெற்றுவருகின்றன. இந்த ஊக்குவிப்புக்களின் அனுகூலங்கள் பெரும்பாலும் பாரிய உற்பத்தியாளர்களையே சென்றடைகின்றன. சங்கிலிப் புணைப்பின் இறுதி முனையில் இருந்து வரும் பெருந்தொகையான சிறு உற்பத்தியாளர்களால் இந்த ஊக்குவிப்புக்களை பெற முடிவதில்லை. ஏனெனில், சந்தையில் பாரிய உற்பத்தியாளர்களுடன் போட்டியிடும் ஆற்றல் அவர்களிடம் இல்லை. அவர்களை பொறுத்தவரையில், உற்பத்தி நிகர்வுப் போக்கில் சீராக்கங்களை செய்து கொள்வது என்பது வேதனை மிகுந்த ஒரு நடைமுறையாகவே இருந்து வருகிறது.

தேசியமட்டத்தில் நிலைமை

ஏனைய பல வளர்முக நாடுகளில் போலவே, இலங்கையிலும் கிராமிய முறை சாராத / ஒழுங்கு படுத்தப்படாத உற்பத்தித்துறை, சார்புரீதியில், முறைசார்ந்த துறையிலும் பார்க்க அளவில் பெரியதாக இருந்து வருகின்றது. ஒழுங்கமைந்த துறையில் செயற்பட்டுவரும் தொழில் முனைவோர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, சிறு முறைசாரா துறையினருக்குக் கிடைக்கும் தகவல், முறை சார்ந்த துறைக்கடன்கள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் என்பன சார்பு ரீதியில் குறைவாகவே உள்ளன. உறுதிப்படுத்தல் மற்றும் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கைகள் பெருமளவுக்கு நகர்புறத்துக்கும் பாரியளவு தொழில்முயற்சிகளுக்கும் சார்பான ஒரு இயல்பினை காட்டி வருகின்றன (அபேசேகர, 1994). ஒழுங்கமைந்த துறையே அசீநி களின் பிரதான கவன மையமாக உள்ளது. ஒழுங்கமைந்த துறையின் நடைமுறையினால் இறை மற்றும் நிதிசார் ஊக்குவிப்புக்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த நிலையில், சிறு உற்பத்தியாளர்கள் போட்டிச் சந்தையில் அனுகூலமற்ற ஒரு நிலையில் இருந்து வருகின்றனர்.

உறுதிப்படுத்தல் மற்றும் அசீநி திட்டங்களின் கீழ், ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சி மற்றும் சந்தை தாராளமயமாக்கல் என்பன பெருமளவுக்கு வலியுறுத்தப்பட்டு வருகின்றன. இக் கொள்கைகளின் கீழ் ஒரு நாட்டின் பொருளாதார செழிப்பு நிலை ஏற்றுமதி துறையின் செயலாற்றத்திலேயே தங்கியுள்ளது என கருதப் பட்டு வருகின்றது. இலங்கையில் பின்வரு வனவற்றுக்கு ஊடாக பொருளதார அபிவிருத்தி இடம் பெறும் என எதிர் பார்க்கப்பட்டது:

- ❑ வேளாண்மைத்துறை ஏற்றுமதிகளுக்கூடாக அந்நியச் செலாவணியைத் திரட்டுதல்.
- ❑ வேளாண்மைத்துறை ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துதல்.
- ❑ ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் மயமாக்கல் (லக்ஷ்மன், 1993).

ஏற்றுமதிச் சந்தையுடன் ஒருங்கிணைந்து கொள்வதன்மூலம் மட்டுமே குடித்தொகையில் பெரும்பான்மையினராக இருந்து வரும் - குறிப்பாக, விவசாயத்தினை நம்பி வாழும் பெருந்தொகையான - சமூகப் பிரிவினரின் வருமானங்களையும், வாழ்க்கை நிலைமைகளையும் மேம்படுத்திக் கொள்ள முடியுமென்று எடுத்துக் காட்டப்பட்டது. தமக்கென, சொத்துக்களையோ திறன்களையோ கொண்டிராத சிறு உற்பத்தியாளர்கள் சந்தைகளில் பிரவேசிப்பது கடினமாக இருந்து வந்துள்ளது (வியாஸ், 1993). அவர்கள் அவ்விதம் சந்தைகளுக்குள் பிரவேசித்தாலும் கூட, நியாயமான அளவில் ஆதாயங்களைப் பெற முடிவதில்லை. இலங்கையில், ஏற்றுமதிச் சந்தை போட்டியுடன் பிணைக்கப்பட்டுள்ள சிறு அளவு உற்பத்தியாளர்கள் பின்வரும் காரணிகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- ✣ ஏற்றுமதிச்சந்தைகளில் சார்பு ரீதியில் பாரிய அளவி லான, நன்கு ஸ்தாபிதமான நிறுவனங்களின் ஆதிக்கம் நிலவி வருகின்றது.
- ✣ சிறு உற்பத்தியாளர்களிடம் தொழில்முனைப்புத்திறன்களுப்

# வளர்முக நாடுகளின் நிலைமை : ஒரு கண்ணோட்டம்

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் (பிரேசில், ஜமைக்கா, சிலி போன்ற) இலத்தீன் அமெரிக்க நாடுகளை "திறந்த சந்தைப் பொருளாதாரங்களுக்கான எழுச்சி கண்டு வரும மாதிரிகள்" என வர்ணித்திருந்தன. ஆனால், அந்த நாடுகளில் பொருளாதார நெருக்கடி தோன்றியதை அடுத்து, ஆபிரிக்க - குறிப்பாக, உப சகாரா ஆபிரிக்க நாடுகளும் மற்றும் தென்னாசிய நாடுகளும அசீநி கள் இடம் பெற்று வந்த கால கட்டம் முழுவதிலும் பல்வேறு சமூக, பொருளாதார, சுற்றுச் சூழல் தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்துள்ளன. கடன் சுமை மற்றும் சாதகமற்ற வர்த்தக நிலுவைகள் என்பன இந்த நெருக்கடியின் பின்னால் இருந்த பிரதான காரணிகளாகும்.

வளர்ச்சியை அதிகரித்து, வளர்முக நாடுகளில் ஒன்று திரண்டுள்ள கடன் சுமையைக் குறைத்து விடக்கூடிய கட்டற்ற சந்தையொன்றை உருவாக்கும் நோக்கில் அசீநி கொள்கைகள் வடிவமைக்கப் பட்டுள்ளன. ஆனால், இந்த சீர்திருத்தங்கள் செயற்படுத்தப் பட்டு ஒரு தசாப்த காலம் கடந்து விட்ட பின்னரும் கூட, இந்த இலக்குகள் இன்னமும் சாதிக்கப்படவில்லை. ஓரளவுக்கு மிதமான வளர்ச்சி விகிதங்களை சாதித்துக் கொண்டிருக்கும் நாடுகளும் கூட பெருமளவுக்குக் கடன் சுமையில் சிக்கித் திணறி வருகின்றன. மூன்றாவது மண்டல நாடுகளின் கடன் இப்பொழுது இதுவரை கால உச்ச மட்டத்தை (1500 கோடி அமெரிக்க டொலர்) எட்டியுள்ளது.

உதாரணமாக, தென்னாசியப் பிராந்தியத்தின் மொதேஉ தொடர்பான மொத்தக் கடனின் விகிதம் வருடாந்தம் சராசரி 10 சதவிகிதத்தினால் அதிகரித்து வந்துள்ளதுடன், ஐந்து நாடுகளின் கூட்டுத் தொகை 1982இல் 32 சதவிகிதமாக இருந்து 1991 இல் 52 சதவிகிதமாக அதிகரித்திருந்தது. இந்தப் பிராந்தியத்தின் தலைக்குரிய மொஉஉ வளர்ச்சி விகிதங்கள் அதிகரித்து வந்துள்ள போதிலும், மெய் பெறுமதிகள் வீழ்ச்சி அடைந்து செல்லும் ஒரு போக்கினையே காட்டுகின்றன. அசீநி களின் நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களின் தோல்வியையே இது சுட்டிக் காட்டுகின்றது. 1980 களின் தசாப்தத்தின்போது உப-சகாரா ஆபிரிக்காவின் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறைகள் அதிகரித்து வந்துள்ளமையையும், முதலீடு/மொஉஉ விகிதம் மற்றும் கடன்/ஏற்றுமதி விகிதம் என்பன பொதுவாக சீர்குலைந்து வந்துள்ளன என்பதனையும் உலக வங்கியே ஏற்றுக் கொண்டுள்ளது.

இன்றைய 1990 களின் உலகப் பின்னணியில், உறுதிப்படுத்தல் மற்றும் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் விரிவாக ஒரு அரசியல் -பொருளாதார அர்த்தத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளன. சந்தை உறவு முறைகளை உலகமயப்படுத்தும் நிகழ்வுப்போக்கின் பொறிமுறைகளாக அவை இருந்து வருகின்றன. உறுதிப்படுத்தல் சீர்திருத்தங்கள் உள்நாட்டுப் பொருளாதாரங்களை உலகச் சந்தையுடன் பிணைத்துவிடும் நோக்கத்தினைக் கொண்டுள்ளன. எனினும், இது வளர்முக நாடுகளுக்கு அவற்றின் சர்வதேச வர்த்தக உறவுகளில் மேலதிக அனுகூலம் எதனையும் வழங்கிவிடவில்லை. வளர்முக நாடுகள் 1990 இல் பெரும்பாலும் வட புல நாடுகளுக்கு 95,100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்தன. அதே வேளையில், அவை 6400 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான அபிவிருத்தி உதவியை மட்டுமே பெற்றுக் கொண்டன. உலகளாவிய சந்தையில் நிலவி வரும் தீர்வை சார்ந்த மற்றும் தீர்வை சாராத தடங்கல்கள் காரணமாக வளர்முக நாடுகள் ஆண்டுதோறும் 50,000 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான பொருளாதார வாய்ப்புக்களை இழந்து வருகின்றன. இது அவை பெற்றுக் கொள்ளும் வெளிநாட்டு உதவியிலும் பார்க்க சுமார் பத்து மடங்கு அதிகமானதாகும். இதன் பின் விளைவாக, வளர்முக நாடுகளின் இறக்குமதிகள் அவற்றின் ஏற்றுமதிகளிலும் பார்க்க உயர் அளவில் நிலைத்து வந்திருப்பதுடன், அவற்றின் வர்த்தக கணக்கிலும் பற்றாக்குறை நிலவி வந்துள்ளது. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக, வளர்முக நாடுகளில் செயல்படுத்தப்பட்டுவரும் அசீநி களிலிருந்து வட புலத்தின் கைத்தொழில் நாடுகள் பிரமாண்டமான அளவிலான பயன்களைப் பெற்றுள்ளன.

வளர்ச்சியடைந்த நாடுகளிலும் அதேபோல வளர்முக நாடுகளிலும் கட்டற்ற சந்தைக் கொள்கைகளும் கட்டற்ற வர்த்தக கொள்கைகளும் செயற்படுத்தப்பட்டமை வறிய சமூகப் பிரிவினருக்கு அதிகளவுக்கு அனுகூலங்களை எடுத்து வரவில்லை. கடந்த மூன்று தசாப்த காலத்தின் போது உலகளாவிய ஏற்றத்தாழ்வு மும் மடங்கினால் பெருகியுள்ளது. உலகக் குடித்தொகையினரில் செல்வந்தரான 20 சதவிகிதத்தினர் வறியோரிலும் வறியோரான 20 சதவிகிதத்தினரின் வருமானத்திலும் பார்க்க 150 மடங்கு அதிகமான வருமானத்தைப் பெறுகின்றனர். வருமான ஏற்றத் தாழ்வு சீர்குலைந்து செல்வதற்கான ஒரு பிரதான காரணம், வளர்முக நாடுகளில் வாழ்ந்து வரும் வறிய சமூகப் பிரிவினர் தொடர்பாக கொள்கைகளில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாகும். அசீநி களும் அதன் அனுசரணையாளர்களும் வளர்முக நாடுகளில் வாழ்ந்துவரும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளிலும் பார்க்க, ஏற்றுமதி/இறக்குமதி புள்ளிவிவரங்களிலும், மொதேஉ வளர்ச்சி விகிதங்களிலுமே பெருமளவுக்குக் கரிசனை செலுத்தி வருவதனைக் காணமுடிகிறது. பல வளர்முக நாடுகளில் தலைக்குரிய

வருமானத்தில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பினை எடுத்துக் காட்டும் சமீபத்திய உலக வங்கி புள்ளி விவரங்கள், செல்வந்தர்கி மேலும் செல்வந்தர்களாகவும் வறியவர்கள் மேலும் வறியவர்களாகவும் மாற்றமடைந்து வரும் ஒரு நிகழ்வுப்போக்கினை மறைதது‌க் கொண்டுள்ளன. இந்த வளர்ச்சியின் அனுகூலங்கள் சமூகத்தின் அடிமட்டம் வரையில் உண்மையிலேயே கசிந்து செல்ல முடியும் என்பதனை உலக வங்கியினால் இன்னமும் நிரூபித்துக் காட்ட முடியவில்லை.

சில விடயங்களில் ஏற்றுமதிகளுக்கும் வளர்ச்சிக்குமிடையிலான புள்ளிவிவர பிணைப்பு உறுதியானதாக இருந்து வருவதுடன், வேறு சில விடயங்கள் தொடர்பாக அது செயலற்றதாக உள்ளது. நாட்டின் பொருளாதாரத்தின் எந்தத் துறை ஏற்றுமதிகளை உருவாக்குகின்றது என்பதிலேயே வளர்ச்சி தங்கியுள்ளது. கைத்தொழில் ஏற்றுமதிகள் துரித வளர்ச்சிக்கு வழிகோலுகின்றன. ஆரம்ப பண்டங்களை ஏற்றுமதி செய்துவரும் நாடுகளின் ஒப்பீட்டு அனுகூல நிலை மோசமானதாக இருந்து வருகின்றது. பிரேசில், கொலம்பியா, மெக்சிக்கோ மற்றும் சிலி ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பொருளாதாரம் அதிகளவில் திறந்து விடப்படுவதற்கும் உற்பத்தித் திறனின் வேகமான வளர்ச்சிக்குமிடையில் ஒரே சீரான ஒரு தொடர்பு நிலவி வருகின்றது என்பதனை நிரூபிக்கத் தவறியுள்ளன.

தென்னாசிய நாடுகளின் வறுமை மட்டங்கள் உலகிலேயே மிக உயர்ந்த மட்டங்களாக இருந்து வருகின்றன. பெருமளவுக்குக் குறைவிருத்தி நிலையில் இருந்து வரும் உலகின் 47 நாடுகளில் நேபாளமும் பங்களாதேஷும் அடங்குகின்றன. அதேவேளையில், கடும் ஏழ்மை நிலை நிலவி வரும் 10 வளர்முக நாடுகளில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களா தேஷ் ஆகிய நாடுகள் அடங்குகின்றன (மானிட அபிவிருத்தி அறிக்கை 1994). உலக வங்கியின் வறுமை ஒழிப்பு உபாயம், வறுமை என்பது வருமான மட்டத்தினால் மட்டுமன்றி வாழ்க்கைத் தரத்தினாலும் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளது.

வளர்முக நாடுகள் தமக்கு அவசியமான நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உலக வங்கியிலும் சநாநியிலும் தங்கியிருந்து வருகின்றன. இந்த நிலையில், அசீநி களை தவிர்க்க முடியாத வகையில அவை பின்பற்ற வேண்டியுள்ளன. இருந்தபோதிலும், சநாநி யின் சிக்கன வழிமுறைகள் நிபந்தனைகளாக விதிக்கப்பட்டு வருவதனால், இந்நாடுகள் அவற்றை அனுசரிக்க வேண்டியுள்ளன. 1980 கள் தொடக்கம் இந்த நிறுவனங்களின் கொள்கை விதிப்புக்கள் மிகவும் கடுமையானவையாக இருந்து வந்துள்ளன. முன்னைய தசாப்தங்களில் வளர்முக உலகம் பின்பற்றி வந்த தவறான அபிவிருத்திக் கொள்கைகளின் விளைவாகவே 1980 களின் பொருளாதார நெருக்கடி தோன்றியது என கைத்தொழில் நாடுகளைச் சேர்ந்த பொருளியலாளர்கள் கருதுகின்றனர். மூன்றாவது மண்டல நாடுகள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, இக்கொள்கைகள் திருத்தப்பட அல்லது சீராக்கம் செய்யப்பட வேண்டும் என அவர்கள் வாதிட்டு வந்துள்ளனர். இயங்குவதற்கு தனக்கு ஒரு விரிவான களம் அளிக்கப்பட்டால், சந்தை, இப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்துவிடும் என அவர்கள் நம்பினர்.

மிக வறிய நாடுகளைப் பொறுத்தவரையில் அசீநி கள் வேதனை மிகுந்தவையாக இருந்து வந்துள்ளன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பொருளாதார ரீதியில் நிலைத்து நிற்க முடியாத, சமூக ரீதியில் அழிவுகரமான, சுற்றுச் சூழலுக்கு உசிதமற்ற ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சியை முன் எடுத்துச் செல்லும் உதாரணங்களாக பல வளர்முக நாடுகள் மாற்றமடைந்துள்ளன. தங்கியிருக்கும் அளவு, காலனித்துவத்துக்கு இணையானதாக கருதப்படக்கூடிய ஒரு மட்டத்துக்கு உயர்ந்து சென்றுள்ளது. அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்ற அசீநி தொடர்பான மாநாடொன்றில் பல அரசு சாரா அமைப்புக்கள் இந்தக் கொள்கைகளை மிக வன்மையான முறையில் கண்டித்து தமது கருத்துக்களை தெரிவித்திருந்தன.

அசீநி கள் வளர்ச்சியடைந்த நாடுகளை வளப்படுத்துவதற்காக, வளர்முக நாடுகளின் தங்கியிருக்கும் தன்மையை வேண்டுமென்றே பயன்படுத்தி வருகின்றன. பெருமளவுக்குக் கடன்பட்டுள்ள நாடுகள் உயர் அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்திலும் அவை அவ்விதம் ஈட்டிக் கொள்ளும் பணத்தை தமது கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காக பயன்படுத்திக் கொள்ளும் விதத்திலும், தனியார் முதலீட்டினை ஊக்குவிக்கும் விதத்திலும் அசீநி கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அமைப்பு ரீதியான சீராக்கலின் உண்மையான தாக்கங்கள் வளர்முக நாடுகளின் தங்கியிருக்கும் நிலை, வறுமை மற்றும் கடன் பளு போன்ற பிரச்சினைகளை மேலும் தீவிரப் படுத்தியே வருகின்றன. இந்த அசீநி கள் அனைத்திலுமே ஒரு பொது இயல்பு தென்படுகின்றது; அதாவது, தரித்திர நிலையில் அல்லல் பட்டு வரும் நாடுகளிலிருந்து, செல்வந்த நாடுகளுக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் பல்பக்க கொடுகடன் முகவர்களுக்கும் பெரும் அளவில் நிதிகளை இடமாற்றம் செய்யும் நோக்கத்தினை அவை கொண்டுள்ளன.

சர்வதேச நிதி நிறுவனங்கள் கடனளிப்பினை மேற்கொள்ளும் பொழுது, வளர்முக நாடுகள் மீது பல நிபந்தனைகளை திணித்து வருகின்றன. சந்தையையும் அரசையும் இணைத்துக் கொள்வதற்கு அரசியல் சீர்திருத்தங்கள் அவசியமென உலக வங்கி கருதுகிறது. இந்த சீர்திருத்தங்கள் அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் என இருவகைகளில் அடங்குகின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் வளர்முக நாடுகளின மீது பொருளாதார நிபந்தனைகளையும், அதேபோல, அரசியல் நிபந்தனைகளையும் இப்பொழுது விதித்து வருவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

( 33 ஆம் பக்கம் பார்க்க)

பயிரசியும், புதிய துறைகளில் துணிகரமாக பிரவேசிக்கக்கூடிய துணிவும் போதியளவில் இருப்ப தில்லை.

✣ தகவல், மூலதனம் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை பெற்றுக் கொள்ளும் விடயத்தில் சிறு உற்பத்தியாளர்கள் பின்தங்கி உள்ளார்கள்.

✣ உலகளாவிய சந்தைக்கு ஏற்று மதி செய்யக்கூடிய வாய்ப்புக் களை கண்டறிந்து கொள்வதற்கு சிறு உற்பத்தியாளர்களுக்கு போதிய ஊக்குவிப்புக்கள் கிடைப்பதில்லை.

✣ அசீநி வர்த்தகக் கொள்கைகள் சிறு உற்பத்தியாளர்களுக்கான ஆதரவு மட்டத்தை குறைத்துள்ள தன் விளைவாக, உரம், டீசல், விவசாய இரசாயனங்கள் மற்றும் நீர் என்பவற்றின் விலை ஏற்றங்களுக்கூடாக உற்பத்திச் செலுவு அதிகரித்துள்ளது.

✣ ஏற்றுமதிச் சந்தைகள் உறுதி யற்றவையாக இருந்து வருவ துடன், நடுவர்களாலும் ஸ்தாபித மாகியுள்ள ஏற்றுமதியாளர் களாலும் சுரண்டப்பட்டு வரும் சிறு உற்பத்தியாளர்கள் உயர் அளவிலான அபாய ஏதுவினை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் உலகளாவிய சந்தைக்கென பாரம்பரியமற்ற பொருட்களை உற்பத்தி செய்து வரும் சிறு உற்பத்தியாளர்கள், ஒன்றுக் கொன்று தொடர்பு பட்ட பல காரணிகளினால் உயர் அளவிலான அபாய ஏதுக்களை எதிர் கொண்டு வருகிறார்கள். இலங்கையின் தலைக்குரிய வருமானம் மிகவும் குறைந்த மட்டத்தில் 500 அமெரிக்க டொலர் அளவில் (உலக வங்கி, 1993) நிலவி வருவதுடன், நகர்ப்புற சந்தைகளின் அளவும் வரையறுக்கப் பட்டுள்ளது. இது, உற்பத்தியாளர்கள் வெளிச் சந்தைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இவற்றின் விளைவாக, சிறு உற்பததியாளர்கள் வெளிச் சந்தைகளில் அதிகளவுக்கு தங்கியிருந்து வருவதுடன், சந்தையில் ஏற்படும் ஒரு சிறு சாதகமற்ற நிலைமையும் கூட அவர்களை மிக எளிதில் பாதிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய ஊறுபடத்தக்க நிலையும் தங்கியிருப்பும் சிறு உற்பத்தியாளர் களின் அவல நிலையை மிக தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

முடிவுரை

அசீநி என்பது, வளர்முக நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைக்கு உலக வங்கியும் சநாநி யும் முன் வைக்கும் ஒரு பொதுப் பரிகாரமாகும். அசீநி கொள்கை தலையீடுகளின் வீச்சு ஒரு நாட்டின் முழு பொருளாதாரக் கட்டமைப்பிலும் வியாபித்துள்ளது. குறுங்காலத்திலும் நடுத்தர காலத்திலும் நீண்ட காலத்திலும் அவை அனைத்து சமூகப் பிரிவினரையும் பாதித்து வருகின்றன. அசீநி கள் செயற்படுத்தப்பட்டு இப்பொழுது ஒரு தசாப்த காலம் கடந்துள்ள நிலையில் பின்வருவன வற்றினை நாங்கள் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது:

⁕ அசீநி கள் 3-4 வருட காலத் துக்குள் பொருளாதார ஏற்றத் தாழ்வு களை சீர்செய்யும் ஆற்றலைக் கொண்டிருக்கும் என ஆரம்பத்தில் எதிர்பார்க்கப் பட்டது. எனினும், இந்த நிகழ்வுப் போக்கு நீண்ட காலத்தை எடுத்துள்ளதுடன், ஏற்றத்தாழ்வுகளும் மோச மடைந்து வருகின்றன.

⁕ நீடிக்கப்பட்ட காலப்பிரிவுக்குப் பின்னரும் கூட எதிர்பார்க்கப் பட்ட அனுகூலங்கள் - அதா வது, சிறந்த சென்மதிநிலுவை நிலைமை, வர்த்தகப் பற்றாக் குறை வீழ்ச்சி, பொருளாதா வளர்ச்சிக்கு உசிதமான ஒரு பொருளாதாரச் சூழ்நிலை, பொருளாதார வாய்ப்புக்களின் சனநாயகமயமாக்கல் மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரி வினருக்கும் சிறந்த வாழ்க்கை நிலைமைகள் போன்றவை - சாதித்துக் கொள்ளப் பட்டிருப்ப தாகத் தெரியவில்லை.

⁕ அசீ கொள்கைகள் ஏற்றத்தாழ் வற்ற விளையாட்டுக் களம் ஒன்றை உருவாக்குவதற்குப் பதிலாக, கிடைக்கக் கூடிய அனைத்து வாய்ப்புக்களையும் பயன்களையும் செல்வந்தர்கள் மட்டுமே அபகரித்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமையை தோற்றுவித்துள்ளன.

⁕ மொஉஉ வளர்ச்சியை சுட்டிக் காட்டும் பேரண்டப் பொரு ளியல் குறிகாட்டிகள் காணப் பட்டபோதிலும், வறியவர் களுக்கும் செல்வந்தர்களுக்கு மிடையிலான இடைவெளி அதிகரித்து வந்துள்ளது. பெருந் தொகையான மக்கள் கடும் ஏழ்மை நிலையில் இருந்து வரு வதுடன், புறமொதுக்கப் பட்டிருக்கும் சமூகப் பிரிவினரின் சீவனோபாய வழிகள் கடுமை யாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

⁕ அசீநி களின் தாக்கத்தினை பேரண்டப் பொருளியல் குறிகாட்டிகளினால் சரியாக மதிப்பிட்டுக் கொள்ள முடிவ தில்லை. சமூக மற்றும் பொரு ளாதார சீரழிவு நிலையை அவை பிரதிபலித்துக் காட்டுவ தில்லை.

தென்னாசிய பிராந்தியத்தை சேர்ந்த நாடுகளிலும் அதேபோல ஏனைய வளர்முக நாடுகளிலும் அசீநி கள் ஒட்டுமொத்தமாக பல தரப்பட்ட விதத்திலான தாக்கங்களை எடுத்து வந்துள்ளன. உள் கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய உற்பத்தி மூலவளங்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்து வந்த உற்பத்தியாளர் குழுக்கள் பொருளாதாரச் சீர்திருத்தங்களி லிருந்தும் உலக மயமாக்கலிலிருந்தும் அதிகளவுக்குப் பயன்களைப் பெற்றுக் கொண்டுள்ளன. ஆனால், பெருந் தொகையான சிறு அளவு உற்பத்தி யாளர்களைப் பொறுத்தவரையில், அசீநி கள் அழிவுகரமானவையாக இருந்து வந்துள்ளன. இது அசீநி களின் கோட்பாடுகளுக்கும் எடுகோல்களுக்கும் சவால் விடுப்பதாக உள்ளது. செயல்திறனை மிக்க

உற்பத்திக்கூடாக வளர்ச்சியை சாதித்துக் கொள்வதே அசீநி களின் பிரதான நோக்கமாகும்; ஆனால், வளர்முக நாடுகளின் பொருளாதாரங்களில் உற்பத்தி அடித்தளமாக இருந்து வரும் சிறு அளவு உற்பத்தியாளர்கள் இக் கொள்கைகளின் விளைவாக, உற்பத்தி நிகழ்வுப் போக்கிலிருந்து வெளியே எடுத்து வீசப்பட்டுள்ளனர்.

செயல்திறனற்ற நடவடிக்கைகளை செயல்திறன் மிக்கவையாகவும், பொருளாதார ரீதியில் நிலைத்து நிற்கக்கூடியவையாகவும் மாற்றியமைக்கும் பொருட்டு, சந்தைப் பொறிமுறையை உபயோகப்படுத்துவது அசீநி களின் மற்றொரு நோக்கமாக இருந்து வந்துள்ளது. சிறு அளவு உற்பத்தியாளர்களின் பொருளாதார நடவடிக்கைகள் பயனுள்ளவையாக இருந்து வருவதுடன், அவை அவர்களுக்கு தொடர்ந்தும் சீவனோபாயத்தை வழங்கி வருகின்றன. எனவே, இந்தப் பின்னணியில், உற்பத்தியிலிருந்து பெருந்தொகையான மக்களை வெளியேற்றும் விதத்தில் "செயல்திறன்" என்ற பதத்துக்கு அளிக்கப்படும் வரைவிலக்கணம் சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

சிறு அளவு உற்பததியாளர்கள் முன்னைய அபிவிருத்திக் கொள்கைகளின் விளைவாக இதுவரை காலமும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். அசீநி கள் அமுலுக்கு வந்த பொழுது, அவர்களால் மூலதனம், தகவல், அறிவு, தொழுல்நுட்பம் மற்றும் பொருளாதார வாய்ப்புக்கள் என்பவற்றை ஓரளவுக்குப் பெற்றுக் கொள்ள முடிந்தது. எனினும், அசீநி கள் சிறு உற்பத்தியாளர்களை உலகச் சந்தைகளில் பலவந்தமாக பிரவேசிக்கச் செய்து, அவர்கள் நியாயமற்ற போட்டியை எதிர்கொள்ள செய்ததன் மூலம் அவர்களுடைய நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன.

சிபார்சுகள்

வளர்முக நாடுகளின் பொருளாதாரங்கள் கட்டியெழுப்புவதனை நோக்கமாக் கொண்ட எந்த வழிமுறைகளும், சுமார் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட உற்பத்தியாளர்கள் சிறிய மற்றும் நுண்ணிய மட்டத்தில் இயங்கி வருகின்றார்கள் என்ற உண்மையை கவனத்தில் எடுப்பது அவசியமாகும். எனவே, இந்த சீர்திருத்த வழிமுறைகள் உள்ளூர் நிலைமைகளுக்குப் பொருந்திச் செல்லக் கூடியவிதத்தில் விசேஷமாக வடிவமைக்கப்படுவது அவசியமாகும்.

வளர்முக நாடுகளுக்கு பொருத்தமான பேரண்டப் பொருளியல் கொள்கை ஒன்று மட்டுமன்றி, அவற்றின் அரசியல், சிவில் மற்றும் சட்ட நிறுவனங்களுக்கான அமைப்பு ரீதியான சீராக்கல்களும் அவசியமாக இருந்து வருகின்றன. சிறு உற்பத்தியாளர்களின் நலன்களை காத்துக்கொள்வதற்கும், சந்தையில் அவர்கள் போட்டித்திறனுடன் இயங்குவதனை இயலச் செய்வதற்கும் உசிதமான சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கும் இச்சீர்திருத்தங்கள் அவசியமாகும்.

இந்த நிலையில், அரசு வகிக்க வேண்டியிருக்கும் பங்கு மிக முக்கியமானதாகும். அசீநி களுக்கு முன்னர் சிறு உற்பத்தியாளர்களுக்கு அரசு ஆதரவு வழங்கப்படுதல் வேண்டும். வழங்கப்பட்டு வரும் ஆதரவு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் போதியதாகவும் திருப்திகரமானதாகவும் இருப்பதில்லை. தற்போதைய சூழ்நிலையில் தேவைப்படும ஆதரவின் இயல்பு வித்தியாசமானதாகும்; சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்தி அக்கறைகளை பாதுகாத்துக் கொடுப்பதற்கு வகை செய்யும் பணியினை அரசு நிறைவேற்ற வேண்டியுள்ளது. மேலும், பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுடன் சமமான நியதிகளில் நின்று சிறு உற்பத்தியாளர்கள் போட்டியிடுவதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையையும அரசு உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

தற்பொழுது கொடுகடன், தகவல், தொழில்நுட்பம் மற்றும் சந்தைகள் என்பவற்றை பெற்றுக் கொள்வதில் சிறு உற்பத்தியாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இது அசீநி க்கு முன்னரான நிலைமையை ஒத்ததாகும். கொடுகடனையும் ஏனைய வசதிகளையும் கிடைக்கச் செய்தால் மட்டும் போதாது. நடுத்தர மற்றும் பாரிய உற்பத்தியார்களுடன் போட்டியிட்டு, சிறு உற்பத்தியாளர்கள் இந்த வசதிகளை பெற்றுக்கொள்வதற்கென வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். உற்பத்தி முறைகளில் பொருத்தமான பயிற்சி, சந்தைப் படுத்தலில் பயிற்சி போன்றவற்றையும் இந்த வழிமுறைகள் உள்ளடக்க வேண்டும்.

இந்த துறைகளில் அரசுக்கும் (கூட்டுறவு வங்கிகள், தொழில்சார் அமைப்புக்கள் முதலிய) ஏனைய தொண்டு ஸ்தாபனங்களுக்கும் இடையில் புதிய உறவுகள் கட்டி எழுப்பப்படுதல் வேண்டும். இந்த உறவுகளை கட்டி எழுப்புவதில் அரசு ஒருங்கிணைப்புப் பணி ஒன்றினை மட்டுமே நிறைவு செய்யவேண்டியுள்ளது. சிறு உற்பத்தியாளர்கள், கொள்கை மாற்றத்துக்கு ஏற்ப தம்மை சீராக்கம் செய்து கொள்வதற்கு முயலும் வகையில் அசீநி வழிமுறைகளை படிப்படியாக எடுத்து வரும் ஒரு பங்கினையும் அரசு வகிக்க வேண்டி யுள்ளது.

அரசு அக்கறை செலுத்த வேண்டிய மற்றொரு முக்கியமான விடயம் தேச நலனாகும். ஏனைய அபிவிருத்தித் தாபனங்களும் உற்பத்தியாளர்களும கூட இந்த விடயத்தை கவனத்தில் எடுப்பது அவசியமாகும். உலகமயமாக்கல் மற்றும் சர்வதேச நெருக்குதல்கள் எனபவற்றின் பின்னணியில், ஏற்றுமதி மேம்பாட்டிலும் பன்முகப்படுத்தலிலும் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வது மிக முக்கியமான ஒரு விடயமாகும். அத்துடன், இயற்கை மூலவளங்கள் எச்சரிக்கையுடன் பெறப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகளின் நீண்ட கால நலன்களை பொறுத்தமட்டில் கல்வி, விழிப்புணர்வினை உருவாக்குதல் மற்றும் இப் பிரச்சினைகளை கலந்துரையாடுதல் என்பன முக்கியமானதாகும்.

மாதவி ஆரியபந்து
விஸாகா ஹிதல்லகே
தரங்கி விஜேசிங்க

# நாடுகள் தொடர்பான தனிப்பட்ட ஆய்வுகள்

## விடய ஆய்வு (1)

### பங்களாதேஷ்

ஹசனாபாத், தேவ்னாவைச் சேர்ந்த ஸஹிதுல்லா (40) மிக ஊக்கமுள்ள இளைஞர்; எவ்வித மூலதனமும் இன்றி 58 கைத்தறிகளைக் கொண்ட வியாபாரமொன்றை அவர் கட்டி எழுப்பினார். தனது மூன்று சகோதரர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் பரம்பரை நிலத்தில் தனக்கு உரித்தான பங்கை விற்று அவர் முதலில் 10 கைத்தறிகளில் முதலீடு செய்தார். 1970 களிலும் 1980 களிலும் பங்களாதேஷின் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் அமுலுக்கு வர முன்னர் அவரும் ஏனைய நெசவாளர்களும் பெருமளவு செல்வம் ஈட்டினர்.

ஒரு தொழில் முயற்சியாளர் என்ற முறையில் ஸஹிதுல்லா தனது பகுதியில் முக்கிய பிரமுகராக விளங்கினார்; சிறு கைத்தறி உரிமையாளர்கள் அவரிடம் ஆலோசனையையும், தொழில்படு மூலதனத்தையும் நாடி வந்தனர். அவருக்கே சொந்தமான வர்ணக் கலவைப் பிரிவு ஒன்று இருந்ததுடன், அதன் மூலம் அவர் வாடிக்கையாளர் சேவையினை வழங்கினார். சிறு கைத்தறியாளர்களிடம் உற்பத்திகளை வாங்கி மொத்த சந்தைக்கு வழங்கினார்.

1992 இன் பிற்கூற்றில் ஏற்பட்ட பங்காளாதேஷின் வர்த்தக தாராளமயமாக்கல் கொள்கையின் முதற் தாக்கம் ஜவுளிச் சந்தையில் ஏற்பட்டது. மறுசீரமைக்கப்பட்ட நிதி, பொருளாதார கொள்கையினால் தீர்வை முரண்பாடுகள் இறக்குமதி செய்யப்பட்ட நூலின் விலையை 45-52% வரை மேலே தள்ளியது. அரசியல் செல்வாக்கினால் உருவாக்கப்பட்ட நெசவுக் கைத்தொழிலின் பாதுகாபபுவாதம் உள்ளூர் நூலின் விலையையும் உயர வைத்து. இவற்றின் விளைவாக ஜவுளிச் சந்தையில் நடைமுறை விலையை விட 10-15% செலவு கூடியதாக இருந்த அவரது சொந்த உற்பத்திகளை விற்க முடியவில்லை. மேலும், இறக்குமதி மூலமும் கள்ளக் கடத்தல் மூலமாகவும் சந்தையில் நிரம்பி வழிந்த இந்திய நூலை அவரது கொள்விலையில் வாங்கக் கூடியதாக இருந்தது. அவரது, இருப்பு விற்பனை யின்றி குவிந்தபோது, ஸஹிதுள்ளா நூல் கொள்வனவு செய்ய தொழில்படு மூலதனம் இன்றித் தவித்தார். முன்னைய வருடங்களில் 30-40 வரையான கைத்தறிகளை இயக்கிய அவர் தற்பொழுது 10-15 கைத்தறிகளை மட்டுமே நடாத்தி வருகிறார். அவரது உற்பத்தி மூன்றில் ஒன்றாக வீழ்ச்சி கண்டுள்ளதுடன், அவரது நெசவுத் தொழிலாளர் தொகை 40 இலிருந்து 20 ஆக குறைந்துள்ளது.

தற்பொழுது வேறு பல போட்டியாளர்களும் தோன்றியுள்ளனர். இந்தியாவுக்கு கடத்தல் செய்யும் நோக்கத்துடன் பொலியஸ்டர் கலந்த புடவைகளை உற்பத்தி செய்ய அவரது பகுதியில் சில மின்தறி நெசவாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்திய ரூபாவுக்கு தாக்காவின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக, இந்திய சந்தையில் ஏற்பட்ட இலாபமற்ற தன்மையினால் உள்ளூர் சந்தைக்கு இவை இப்பொழுது புடவைகளை வழங்குகின்றன.

எனினும், கைத்தறி, மின்தறி நெசவாளர்களின் பொது எதிரியாக இருப்பது இந்தியாவிலிருந்து கடத்தல் செய்யப்படும் புடவைகளாகும். எவ்வாறாயினும், ஸஹிதுள்ளா தனது உற்பத்தியை விரிவாக்க ஒரே ஒரு காரணி மட்டும் உதவியாக உள்ளது. பங்காளதேஷ் செயலகத்தில் (மத்திய அரசுக் கட்டடம்) கடமையாற்றும் அவரது மாமா ஸஹிதுள்ளாவுக்காக பாரிய அரசாங்க புடவை கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டார். இலாபத்தில் பெருமளவு பேரத்தில் ஈடுபட்டவர்களுக்கு சென்றடைந்த போதும், இது ஸஹிதுள்ளாவை இவ் வர்த்தகத்தில் நீடித்து நிற்க வாய்ப்பளித்துள்ளது.

## விடய ஆய்வு (2)

### இந்தியா

30 வயதினரான சுயனேஸ்வர் வோர்லைகர், மீனவர் பரம்பரயினரான அவரது குடும்பத்தின் இளைய அங்கத்தவராவார். பருவ காலத்திற்கேற்ப சுயனேஸ்வரும் அவரது தந்தையும் மாதாந்தம் 2000-3000 ரூபா வரை வருமானமாக ஈட்டுகினறனர். பொதுவில் சுயனேஸ்வரினதும் அவரது தந்தையினதும் நடவடிக்கைகள் மீன் பிடித்தலுடன் மட்டும் நின்று விடுவதில்லை; சந்தைப்படுத்தல், படகு, வலை பழுதுபார்த்தல் மட்டுமன்றி மீனவர் சமூகத்தின் ஏனையோரிடம் கூலி வேலை செய்வதிலும் அவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

பகற் பொழுதில் அவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் பொழுது சுமார் 8 மணித்தியாளங்கள் கடலில் கழிப்பர். இயந்திர படகுகளை வைத்திருப்பவர்களைப்போல் இவர்களிடம் கடும் குளிரூட்டல் பெட்டிகள் இல்லாமையால், ஒரு நாளில் இரண்டு மூன்று தடவைகள் தமது அறுவடைகளை கரைக்கு கொண்டு வந்து சேர்க்க பிரயாணம் செய்ய வேண்டி ஏற்படுவதும் உண்டு. மீன் கூட்டங்கள் கண்ணுக்கு புலப்படாத நாட்களில் கடலில் அல்லது கரையில் பல மணித்தியாலங்களை கழிக்க வேண்டி ஏற்படுகிறது.

சுயனேஸ்வரின் தந்தை (பம்பாயின் உள்ள ஒரு மீனவ கிராமமான) வோர்லி மீனவர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் மத்தியதர இயந்திரப் படகொன்றை பெற்றுக் கொண்டார். கடற் றொழிலுக்கு பொருத்தமற்ற இப்படகின்

பராமரிப்புச் செலவும் அதிகமாகும். எனவே, கயனேஸ்வர் மற்றொரு படகை வாங்க முயற்சித்தார். கூட்டுறவு நிதி சிறு படகோட்டிகளின் நலனை அதிகம் கருத்தில் கொள்ளாத பாரிய மீனவர்களின் கைகளில் இருப்பதால் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை. 1991ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட இந்திய அரசாங்கத்தின் அமைப்புரீதியான சீராக்கல் திட்டத்தின் கீழ் கடன் மற்றும் சந்தைப்படுத்தல் கொள்கைகள், ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட பாரிய இழுவைப் படகு உரிமையாளர்களுக்கும் சார்பானதாக இருந்து வந்தமையால் சிறு மீனவர்களுக்கு எவ்வித கடன் சலுகைகளும் கிடைக்கவில்லை.

தற்சமயம் கயனேஸ்வர் கடற்கரை ஏல விற்பனையாளர்களிடமிருந்து உதவி பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். பாரிய இழுவைப் படகுகள் மிதமிஞ்சிய அளவில் மீன் பிடிப்பதினாலும், கைத்தொழில் கழிவுகள் கடலில் கொட்டப்படுவதாலும் நாளடைவில் மீன்கள் தொகை குறைவடையுமென தந்தையும் தனயனும் நம்புகிறார்கள். பெருமளவு ஆழ் கடல் மீன்பிடிக் கப்பல்களை அறிமுகப்படுத்தும் திட்டத்தினாலும், இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார வலய யோசனையினாலும் கடல் வளம் மேலும் பாதிப்படையும். இத்தகைய இருண்ட எதிர்காலத்தை எதிர்நோக்கும் கயனேஸ்வருக்கும் அவரது தந்தைக்கும் உள்ள ஒரே ஒரு மாற்றீடு பிழைப்புக்காக வேறு வழிகளைத் தேடிச் செல்வதே.

### விடய ஆய்வு (3)

## நேபாளம்

மேற்கு நேபாளத்தில் பல்பா பிரதேசத்தைச் சேர்ந்த பிஷ்னுமான் சரிஷ்தா என்பவர் சத்தியவதி சோப் இன்டஸ்ரீஸின் உரிமையாளர்; இத்தொழிற்சாலை தினசரி உற்பத்தியாக 1200 கிலோ கடின சவர்க்காரத்தை உற்பத்தி செய்கிறது. இச்சவர்க்காரம் உள்ளூரில் தாராளமாக கிடைக்கக்கூடிய செளரி நெய்போன்ற மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. அயல் கிராமங்களில் உள்ள நூற்றுக் கணக்கான குடும்பங்கள் காட்டில் உதிர்ந்து கிடக்கும் இவ்விதைகளை சேகரித்து சவர்க்காரத் தொழிற்சாலைக்கு வ்ழங்குவதன் மூலம் தமது ஜீவனோபாயத்தை தேடிக் கொண்டன. ஒவ்வொரு பருவ காலத்திலும் குறைந்தபட்சம் 2000 ரூபாவை சம்பாதித்து தமக்கு தேவையான ஆடைகள், மருந்து, பாடசாலை புத்தகங்கள் என்பவற்றை இவர்கள் வாங்குவர்.

1985ஆம் ஆண்டு நேபாள அரசாங்கம் சர்வதேச நாணய நிதியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு ஏற்ப அமுல் நடாத்தப்பட்ட உறுதிப்படுத்தல் திட்டத்தினால் சத்தியவதி சவர்க்கார தொழிற்காலை பிரச்சினைகளை எதிர்நோக்க துவங்கியது. அபரிதமான கடன் பளுவில் சிக்கித் தவித்த அரசாங்கம், வரிகளை கூட்டி வருமானத்தை அதிகரிக்கும்படி நன்கொடை அமைப்புக்களால் வற்புறுத்தப்பட்டது. இதன் நேரடி விளைவாக, சத்தியவதி சவர்க்கார உற்பத்திகளுக்கு 6% வீத பண்டவரி விதிக்கப்பட்டது. முன்னர், சரிஷ்த்தாவின் தொழில் மின்சார பாவனையற்ற குடிசை கைத்தொழில் என்ற வகையில் வரி விலக்கு பெற்று வந்தது. மேலும் இரண்டு வருடங்களின் பின்னர் 10% விற்பனை வரியும் சுமத்தப்பட்டது. இறுதியாக, 1989-90 காலப்பிரிவின் நேபாள-இந்தியா வர்த்தக போக்குவரத்து நெருக்கடி சத்தியவதி சவர்க்கார கைத்தொழிற்சாலையை இழுத்து மூட வழிவகுத்தது.

எனினும் நேபாள-இந்திய வர்த்தக போக்குவரத்து நெருக்கடி நிகழாவிட்டாலும் கூட, தாராண்மைவாதக் கொள்கையின் தாக்கத்தினால் இத் தொழிற்சாலை மட்டுமின்றி நேபாளத்தின் பாரிய சவர்க்கார தொழிற்சாலைகளும் மூடப்பட்டிருக்கும். இந்த தாக்கம் கைத்தொழில்களுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை. மானிய பொருளாதாரத்தை நம்பி வாழும் கிராமவாசிகளையும் வருமானக் குறைவினாலும், வரி அதிகரிப்பாலும் வெகுவாக பாதித்துள்ளது. அதிக உற்பத்திச் செலவுகள் தற்பொழுது அவர்ள் மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதே இதன் பொருளாகும்.

### விடய ஆய்வு (4)

## நேபாளம்

நாந்கிஷோர் ராத்தி என்பவர் நேபாளத்தில் உள்ள நூற்றுக்கு மேற்பட்டோர் தொழில் புரியும் "ஸ்வதேசி ஸபூன் உத்யோக்" என்ற மத்திய தர சவர்க்காரத் தொழிற்சாலையின் உரிமையாளராவார். நேபாள மத்திய சவர்க்கார உற்பத்தியாளர்கள் சம்மேளனத்தின் அங்கத்தவர்களான அவரும் ஏனையோரும், அரசாங்கத்தின் அமைப்பு ரீதியான சீராக்கல் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் புதிய வர்த்தகத் தாராண்மைவாதக் கொள்கைகளால் அதிகம் கவலை அடைந்து வருகின்றனர். அண்மைய வருடங்களில் வெளியிலிருந்து தருவிக்கப்படும் சவர்க்காரத்திற்கான வரியை அரசாங்கம் 12 வீதம் வரை தளர்த்தியுள்ளது. எனினும், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு, நேபாள சவர்க்காரத்தின் விற்பனை வரியை அது அதிகரித்துள்ளது. சவர்க்கார உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி மட்டுமன்றி, ஏனைய உள்ளீடுகளுக்கும் - அதாவது, பொதி அடைத்தல் பொருட்கள் (இவை இறக்குமதி செய்யப்பட வேண்டியவை) போன்றவற்றுக்கும் –நேபாளத்திற்குள் வந்த பின்னர் வெவ்வேறு படித்தரங்களில் வரி விதிக்கப்படுகின்றது. இது சவர்க்காரத்தை உள்ளூரில் உற்பத்தி செய்வதை விட இறக்குமதி செய்வது மலிவானது என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, உலகம் முழுவதும் உறுதியான சந்தை

வாய்ப்பினைப் பெற்றிருக்கும் ஐக்கிய இராச்சியத்தின் யுனிலிவர், அதன் துணை நிறுவனமான ஹிந்துஸ்தான் லிவர் போன்ற பல்தேசியக் கம்பனிகளின் சமீபத்திய வருகை சிறு கைத்தொழில் துறையினரை மேலும் அச்சுறுத்தியுள்ளது. நேபாள லிவர் கம்பனியின் முழு உற்பத்தியில் 120 தொழிலாளர்கள் மட்டுமே ஈடுபடும் அதே சமயம், ஸபூன் உத்யோக் மற்றும் ஏனைய சவர்க்கார உற்பத்தியாளர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஏற்கனவே தொழில்வாய்ப்பை அளித்துள்ளனர். மேலும், நடுத்தர உற்பத்தியாளர்கள் தமது மொத்த வருமானத்தில் 2 வீதத்தை விளம்பரத்திற்காக செலவிட்டால் மட்டுமே அவர்களுக்கு வரிக் குறைப்பு வழங்கப்படுகிறது. பல்தேசியக் கம்பனிகள் இத்தகைய எவ்வித நிபந்தனையும் இன்றி சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளமை நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

நிர்வாகத் தடைகளும் அரசாங்க வரிக் கொள்கைகளும் திரு.சாத்தி போன்றவர்கள் வேறு ச்நதைகளுக்கு ஏற்றுமதி செய்வதை சாத்தியம் அற்றதாக்கியுள்ளது. இதன் விளைவாக, இக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான தொழிற்சாலைகள் தற்சமயம் தமது திறனில் 50% உற்பத்தியையே மேற்கொண்டு வருகின்றன.

**விடய ஆய்வு (5)**

## நேபாளம்

மேற்கு நேபாளத்தின் கைத்தொழில் நகரமான புட்வாலில் அமைந்துள்ள நாட்டின் பிரதான இயந்திரப் பொறியியல் வேலைத்தளமான புட்வால் இயந்திரப் பொறியியல் தொழிற்சாலை 1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது குறுக்கோட்ட நீர் உருளை உற்பத்தியில் பிரதான இடத்தை வகிக்கின்றது. 1985ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட நேபாள அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் பூரண அமுலாக்கத்துடன் புட்வால் பொறியியல் ஸ்தாபனமும் அத்துறையிலுள்ள ஏனைய கைத் தொழில் தாபனங்களும் புதிய சவால்களைச் சந்தித்தன. இந்தியாவால் திணிக்கப்பட்ட வர்த்தக போக்குவரத்து நெருக்கடியின் போதும், அதனைத் தொடர்ந்து 1990 இன் அரசியல் சீர்திருத்தங்களின் போதும் மூழ்காமல் தப்பிய இத் தொழிற் சாலைகள் தற்சமயம் உற்பத்திச் செலவு அதிகரிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன.

கடந்த பத்து வருடங்களில் ஒரு கிலோகிராம் இரும்பின் விலை ரூபா 12 முதல் ரூபா 30 வரை அதிகரித்துள்ள அதே வேளையில் ஊழியச் செலவு நாளொன்றுக்கு 30 ரூபா முதல் 60 ரூபா வரை உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்தமாக 1985 இல் நீர் உருளைகளின் உற்பத்திச் செலவில் ஊழியச் செலவு அரைவாசி அளவில் இருந்தது. மூலப்பொருட் செலவு மொத்தச் செலவில் நான்கில் ஒன்றுக்கும் குறைவாகும். அன்றுமுதல், நீர் உருளை உற்பத்திக்கான இறக்குமதிப் பொருட்களின் செலவு இரு மடங்காக அதிகரித்துள்ள அதே வேளையில் தொழிலாளர் செலவு மொத்த செலவில் 60 வீதத்திலிருந்து 37 வீதம் வரையில் வியப்பூட்டும் வீதத்தில் குறைந்துள்ளதை அவதானிக்கலாம்.

முழுமையாக நோக்குமிடத்து "அருண் III" போன்ற அரசாங்கம் மேற்கொண்ட பாரிய அமைப்பு சீராக்கல் திட்டங்களினால் சிறிய நீர் உருளை கைத்தொழில்துறை அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. இவ்வாறான பாரிய செலவுமிக்க நீர்வலு மின்சாரத் திட்டங்களை நாசப்படுத்தி, சிறிய நீர் உருளைகளின் தேவையைக் குறைத்துள்ளன.

**விடய ஆய்வு (6)**

## பாகிஸ்தான்

வாஜித் அலிகான் இன்னமும் 1992 க்கு முன்னைய யுகத்தின் கறுப்பு மஞ்சள் டட்ஸன் வாடகைக் காரையே ஓட்டுகிறார்; நாட்டின் அமைப்புச் சீராக்கத் திட்டத்தினால் அறிமுகத்திற்கு வந்த "மஞ்சள் வாடகைக்கார்" முறையினால் இன்று இவ்வண்டிகள் விரைவாக மறைந்து வருகின்றன. கடந்த 12 வருடங்களாக வாடகை வண்டிகளை ஓட்டிவரும் ஜனாப்கான், வாடகை வண்டிகளை தின அடிப்படையில் வாடகைக்கு எடுப்பதன் மூலம் முதலில் இந்தத் தொழிலில் பிரவேசித்தார். நான்கு வருடங்களுக்கு முன்பு, அவர் சேமித்துக் கொண்ட 80,000 ரூபாவினால் மறுசீரமைக்கப்பட்ட இரண்டாந்தர கார் ஒன்றை வாங்கினார். முதல் சில வருடங்கள் நன்றாகக் கழிந்தாலும், மஞ்சள் கார்கள் வீதிக்கு வந்த பின்னர் மக்கள் அவற்றை நாடி சென்றமையால் அவரது வழமையான தரிப்பிடங் களில்கூட பிரயாணிகளை பிடிக்க முடியாத அளவுக்கு பிழைப்பு கடினமானது. மக்கள் இவரது வழக்கொழிந்த வாடகைக்காரை விட பளபளப்பான புதிய கார்களை விரும்பலாயினர். இறுதியாக தனது வழமையான பகுதியை விட்டு நகரத்தின் வறிய பகுதிக்கு இடம் பெயர்ந்தார். விபத்துக்களும் நெரிசலும் மிக்க இப்பகுதிகளுக்கு மஞ்சள் நிற வண்டிகள் செல்வதில்லை.

இதே பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த ஏனைய கறுப்பு வாடகை வண்டிக்காரர்களும் இப்பகுதிகளுக்கு வந்து சேர்ந்தனர். எனினும், இம் மாறுதல் இன்னொரு புறத்தில் இதுவரை வறிய மக்களுக்கு சேவை ஆற்றிய ஆட்டா ரிக்ஷாகாரர்களை நடுத்தெருவில் இறக்கியது. இன்று பெரும்பாலான கறுப்பு வாடகை வண்டிகளும் ஆட்டா ரிக்ஷாக்களும் குப்பைக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கின்றன. எனினும், இந்த பழைய வாடகை வண்டிகள் குறைந்த செலவில் வாடிக்கையாளர்களுக்கும் நாட்டுக்கும் அதே சேவையை அளித்து வந்தன. ஒப்பீட்டளவில், திட்டத்தின் பிரதிபலனாக வாடகை வண்டிக் கட்டணம் 150 வீதத்திற்கும் 500 வீதத்திற்கும் இடையில் உயர்ந்துள்ள போதும் எரிபொருள் விலை 202 வீதத்திற்கு மேல் உயர்வடையவில்லை.

இத்தகைய பிரச்சினைகளுக்கு மத்தியில் வாடகையோ, தவணைப் பணமோ செலுத்த அவசியமற்ற வாஜித் மூன்று வருடங்களுக்கு முன்னர் சம்பாதித்ததை விட குறைவாகவே தேடுகிறார். ஏனெனில், அவரிடம் புது மஞ்சள் வாடகை வண்டிக்குச் செலுத்த கட்டுப்பணம் இல்லை. அவர் தொடர்ந்து தனது பழைய வாடகை வண்டியினால் வாழ்க்கை நடாத்தி, தனது ஜீவனோபாயத்தை தேடிக் கொள்கிறார்.

### விடய ஆய்வு (7)

### பாகிஸ்தான்

சிந்து மாகாணத்திலுள்ள வரையறுக்கப்பட்ட டெக்னோ பெப்ரிக் தனியார் கம்பெனி, நாட்டில் செழிப்புற்று வரும் மோட்டார் வண்டிகளில் ஒன்றான பாகிஸ்தான் ஸுஸுகி தொழிற்சாலைக்கு முன்பக்க சட்டங்களையும் கூரைகளையும் வழங்கும் ஏகபோக வர்த்தக தாபனமாகும். தற்சமயம் 50 பேர் தொழில்புரியும் டெக்னோ உலைகளில் சுயமாக அபிவிருத்தி செய்து கொண்ட வார்ப்புக்கள் மூலம் வாகன உதிரிப் பாகங்கள் தயாரிக்கப் படுகின்றன, பின்னர் பல்வேறு பாகங்களை ஒன்றிணைத்து உபகரணங்கள் தயாரிக்கப்படுகின்றன. உலைகளில் தயாரிக்க முடியாத இப்பாகங்கள் ஏனைய சிறு உற்பத்தியாளர்களால் வழங்கல் செய்யப்படுகின்றது. கார் இறக்குமதிக்கு விதிக்கப்படும் கடுமையான தீர்வை காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கார்கள் இறக்குமதி செய்யப்பட்ட கார்களை விட மலிவானவையாக இருந்தன.

எனினும், பின்னர் ஸுஸுகி நிறுவனத்தின் கேள்விக் கட்டளைகள் குறையலாயின; முன்னர் 3000 கார்களுக்கு உற்பத்திகளைச் செய்த டெக்னோவுக்கு தற்சமயம் 2000 கார்களுக்கும் குறைவான கேள்விக் கட்டளைகளே கிடைக்கின்றன. இது நாட்டின் அமைப்புச் சீராக்கல் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் சர்ச்சைக்குரிய 'மஞ்சள் வாடகைக்கார் முறை' யின் நேரடி விளைவொன்றாகும். இம்முறையின் கீழ் இறக்குமதி செய்யப்படும் எத் தரத்திலான மோட்டார் கார்களாயினும் அவை மஞ்சள் நிறமும், கம்ப்யூட்டர் மயப்படுத்தப்பட்ட வாடகை மீட்டரும் கொண்டிருப்பின் அவற்றிற்கு இறக்குமதி வரிவிலக்கு அளிக்கப் படுகிறது. ஆனால் இக் கார்கள் எப்போதும் வாடகைக் கார்களாக இருப்பதில்லை; மாறாக இவ்வாடகை கார்கள் உண்மையில் தனியார் வாகனங்களாக வீடுகளில் பாவனை செய்யப்படுகின்றன.

முன்பு பாகிஸ்தானின் வருடாந்த வாகன இறக்குமதி 100,000 இருந்தது; திடீரென 400,000 ஆக கேள்வி அதிகரிக்கவும், அவைகள் யாவும் வாடகைக் காரர்களாக இருக்கவும் காரணம் என்ன என டெக்னோவின் ஜனாட் ரிஸா வினாவுகிறார். இத்தகைய பின்னடைவுக்கு மத்தியில் உள்ளூர் மோட்டார் வாகன உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ரிஸாவும் மற்றையோரும், குறைந்த செலவுக்கும் அதிகரித்த விலைக்கும் மத்தியில் இலாபத்தை ஈட்டி வருகின்றனர். ஸுஸுகி 'ஸீடிகே' முறையில் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தியமையும், முழுத் தீர்வையும் செலுத்தாமல் இறக்குமதியை மீள ஆரம்பிக்க முடியாமையும் இதற்கு காரணங்களாகும். எனவே, டெக்னோ தனது விலையை அதிகரிக்க இயலு மாயிற்று. உற்பத்திச் செலவைப் பொறுத்தவரை தீர்வைகளைக் குறைத்துள்ளமையும் அரசாங்கத்தின் அமைப்புச் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிக் கொள்கைகளால் நிர்வாக நடைமுறைகள் இலகுவாக்கப் பட்டமையும் சிறு பாகங்களின் இறக்குமதியை எளிதாக்கியுள்ளது. அத்துடன் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டு முறைகளின் மேம்பாட்டினால் தொழிலாளர் திறன் முன்னேற்றியுள்ளது.

உள்ளூர் மோட்டார் வாகனக் கைத்தொழில் தனது வாழ்வுப் போராட்டத்தில் பலமாகத் தாக்கப் பட்ட போதும், சிறு அளவிலான ஆதரவுக் கைத்தொழில்களைப் பொறுத்தவரை நிலைமை வேறு பட்டதாக உள்ளது. உண்மையில் மஞ்சள் வாடகைக்கார் திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள கார்கள் உள்ளூர் தயாரிப்புக்களாக இருப்பின் அது போக்குவரத்துச் சேவை, மோட்டார் வாகனக் கைத்தொழில்களில் மட்டுமன்றி, கைத்தொழில்களுக்கு உதிரிப் பாகங்களை வழங்கும் உப ஒப்பந்தக்காரர்கள், வியாபாரிகளைக் கொண்ட கைத்தொழில் துறைகளிலும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும்.

### விடய ஆய்வு (8)

### பாகிஸ்தான்

பாகிஸ்தான், தாராண்மைவாத பொருளாதாரத்தின் கீழ் கணிசமான உள்ளூர் சந்தையைப் பெற்று விளங்கினாலும், பெரும்பாலான தோல் கைத்தொழில்கள் ஏற்றுமதிச் சந்தை யையே தற்சமயம் நாடுகின்றன. மொயிஸ் ஹுசைன் இதற்கு விதிவிலக்கானவர்; இவர் உள்ளூர் சந்தைக்குத் தேவையான பாதணிகளை வழங்கும் ஒரு சிறு தொழிற்சாலையின் உருமையாளர்; இதில் ஆறு பேர் வேலை செய்கிறார்கள். இருபத்தைந்து வருடங்களாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் அவர், பாதணி தயாரிப்புத் துறையில் முப்பதுக்கு மேற்பட்டோரை பயிற்றுவித்துள்ளார். தனது பல பயிலுனர்கள் பாட்டா, சேர்விஸ் போன்ற பாரிய உற்பத்தியாளர்களால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவர் பெருமையுடனும், கவலை யுடனும் குறிப்பிடுவார். தற்பொழுது கராச்சியில் உள்ள பல சில்லறைப் பாதணிக் கடைகளுக்கு வழங்கல் செய்யும் அவர், ஏனைய கடைகளில் உள்ள பாதணிகளையும், சில்லறை விற்பனை நிலையங்கள் தனக்கு வழங்கும் வாடிக்கையாளர் வேண்டுதல்களையும் ஆராய்ந்து வடிவங்களைத் திட்டமிடுவார். புகைப் படங்கள், விளம்பரங்கள் முதலிய வற்றில் தான் கண்ட எத்தகைய பாதணி வடிவங்களையும் பிரதி பண்ணும் ஆற்றல் அவருக்குண்டு.

சமீப காலங்களில் பாகிஸ்தானின் தோல் ஏற்றுமதிக் கைத் தொழிலில் ஏற்பட்ட பாரிய

விரிவாக்கம், தோல் வழங்கலில் கடும் பற்றாக்குறைக்கு வழிவகுத்துள்ளது. இது தோலின் விலையை எக்கச் சக்கமாக உயர்த்தியுள்ளது: ஒரு சதுர அடி பதனிட்ட தோலின் விலை இன்று 36 ரூபாவாகும்: 1993 இல் இது 20 ரூபாவாக இருந்தது. மேலும், வழங்கல் குழுக்களின் தோற்றத்தால் மூலப் பொருட்களுக்குச் செயற்கையான தட்டுப்பாடுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. எனினும் ஹுசைன் தனது தொழிலை நன்றாக நடாத்திச் செல்கின்றார். அவர் அறவிடும் வழமையான விலை இன்று பாகிஸ்தானில் நிலவும் பணவீக்கத்தை ஈடு செய்வதாக அமைந்துள்ளது. ரூபாவின் மதிப்புக் குறைவினால் உயர்ந்து சென்றுள்ள இறக்குமதி செய்யப்படும் பாதணிகளின் விலையை விட குறைவான இவரது விலைக்கு பெரும் மவுசு நிலவுகிறது. மேலும், மக்கள் தரமான பாதணிகளை வேண்டி நிற்பதுடன், அவற்றின் வடிவமைப்பில் கூடிய கவனம் செலுத்துகின்றனர். இவ்வருட இறுதியில், கடன் பிரச்சினைகளைத் தாண்டி தனது உற்பத்தி பெறுமானத்தை அதிகரித்துக் கொள்ள தேவையான நிதியினை திரட்டிக் கொள்ள முடியுமென மொயிஸ் ஹுசைன் நம்பிக்கை கொண்டுள்ளார்.

### விடய ஆய்வு (9)

## இலங்கை

டபிள்யூ.ஏ.சாந்த ஜயலத் (20) கம்பஹா மாவட்டத்தில் மர முந்திரிகை பதனிடப்படுவதில் பிரசித்தி பெற்ற கிராமமொன்றில் வசித்து வருகிறார். தன்னை ஒரு முழு நேர மரமுந்திரிகை வியாபாரியாக அறிமுகப்படுத்திக் கொள்ளும் அவர், தனது குடும்பக் காணியில் நெல், அன்னாசி போன்றவற்றையும் பயிரிட்டு வருகிறார். பத்து வருடங்களுக்கு முன்னர், அவரது அன்னை மரமுந்திரிகை பதனிடுவதில் சிறு மூலதனத்தை முதலீடு செய்தார். தற்பொழுது முழு வியாபாரத்தையும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அவர், உண்மையில் தனது தாயையும் சகோதரிகளையும் மட்டுமன்றி வேறு இரு கூலியாட்களையும் மரமுந்திரிகை பதனிடுவதில் ஈடுபடுத்தியுள்ளார். இது பெண்களுக்கு உரித்தான வேலை எனக் கருதப்படுகின்றமையால் ஜயலத் மரமுந்திரிகை பதனிடும் வேலையில் ஈடுபடுவதில்லை.

வீண் விரயம், பழுதடைதல் முதலிய அபாய ஏதுக்கள் ஏற்படாமையால் ஜயலத் தற்பொழுது வருடம் பூராவும் மரமுந்திரிகையை இருப்பில் வைத்து, பதப்படுத்தி வருகிறார். இதற்காக அவர் பல்வேறு கடன் வழங்கும் தாபனங்களிடமிருந்து-குறிப்பாக, பிகிஅவ, சர்வோதய என்பவிற்றிடமிருந்து-கடனைப் பெற்றுக் கொண்டார். மரமுந்திரிகை தொழிலில் ஈடுபட்டுள்ள ஏனையோரைப் போல் அவருக்கும் அவற்றின் சர்வதேச தரம், உற்பத்தி வகைப்படுத்தல் என்பனபற்றி எதுவும் தெரியாது. விலைகள் தொடர்பாக கிராமக் கடை முதலாளியிடமும், ஏனைய வர்த்தக தொடர்புகள் மூலமும் பெற்றுக் கொள்ளும் தகவல்களில் திருப்தி அடைவதுதான் அவரதும் ஏனையோரதும் வழக்கம். கிராம முதலாளி பதனிடப்பட்ட மரமுந்திரிகையினை கொழும்பிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நேரடியாக வழங்குகின்றார்.

உலகப் பொருளியல் நிபுணர்களும், கடன் வழங்கும் தாபனங்களும் தாளாரமய சந்தைக் கொள்கைகளினால் கிராமிய உற்பத்தியாளர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கும் பயன்கள் அவர்களைச் சென்றடைவதில்லை. உண்மையில், ஏற்றுமதிச் சந்தைக்குத் தேவையான தகவல்கள் போதியளவு அவர்களுக்கு கிட்டுவதில்லை. மாறாக, இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதிச் சந்தையில் புகுந்துள்ள நடுவர்களே இலாபத்தின் பெரும் பகுதியை ஈட்டுகின்றனர். பாரிய மட்டத்தில் அனுகூலங்கள் பொதுவில் பால் அடிப்படையிலும், சமமின்றியும் பகிரப்படுகின்றன. நான்கு வருடங்களுக்குள் ஜயலத் வழங்குநராகவும், சேகரிப்பாளராகவும் தனது தொழிற்படு மூலதனத்தை அதிகரித்து, கடன்களை தீர்த்து ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கினார். இதற்கு மாறாக, கடந்த 15 வருடங்களாக மரமுந்திரிகை பதனிட்டு வரும் அவரது தாய் தொடர்ந்தும் அதே தொழிலில் ஈடுபட்டாலும் அவரது நிலைமை மாறவில்லை. இது மரமுந்திரிகைத் தொழிலுக்கு உரித்தான பண்பாகும். இத்தொழிலில் ஈடுபடும் ஆண்கள் சந்தைப்படுத்தல்/வழங்கல் நடவடிக்கைகளில் ஈடபட்டு நியாயமான முன்னேற்றத்தை அடையும் அதே வேளையில், கடினமான வேலைகளில் ஈடுபடும் பெண்கள் குறைவான பயனையே பெறுகின்றனர்.

### விடய ஆய்வு (10)

## இலங்கை

மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவந்த மாரியா இஸபெல்லா ஆறு வருடங்களுக்கு முன் தன் கணவர் நோய்வாய்ப்பட்டது முதல் அத் தொழிலை விட்டுவிட்டு, மரமுந்திரிகைத் தொழிலுக்கு இடம் பெயர்ந்தார். வில்பொத்த என்னும் இடத்திலுள்ள அவர்களது காணியில் இருந்த மர முந்திரிகை மரங்கள் மூலம் விதைகளை சேகரித்து, (ஆரம்பத்தில் எவ்வித பயிற்சியும் இன்றி) அவற்றை தோலுரித்து பழகிய அவர் நாளடைவில் அதில் தேர்ச்சி பெற்றுக் கொண்டார்.

உள்ளூர் மகளிர் இயக்கமான 'காந்தா பரிசிரமய' வின் உறுப்பினர் என்ற வகையில், சனசக்தி நிதியத்திலிருந்து கடன் பெற அவருக்கு வாய்ப்புக் கிட்டியது. இப்பணத்தையும் தனது சேமிப்பு பணத்தையும் கொண்டு அவர் மர முந்திரிகை விதைகளை வாங்கி, களஞ்சியப் படுத்தினார். இதனால் அவருக்கு மரமுந்திரிகை புழக்கத்தில் இல்லாத காலங்களிலும் தொழில் புரிய இயலுமாயிற்று.

தற்பொழுது கிலோ 35 ரூபா வீதம் மரமுந்திரிகை விதைகளை வாங்கி தோல் உரித்து அண்மையிலுள்ள கிராமக்கடை முதலாளிக்கு கிலோ ஒன்று 175 ரூபாவுக்கு

விற்பனை செய்துவருகிறார். தனது கிராமத்திற்கு வரும் வெளியூர் வியாபாரிகள் வாயிலாக அவர் சந்தை விலைகளை அறிந்து கொள்வார்.

ஏற்றுமதிச் சந்தை பற்றியோ அல்லது பதனிடும் முறையினை விருத்தி செய்து கொள்ளும் தொழில்நுட்ப வாய்ப்புக்கள் குறித்தோ அறிந்து கொள்ளும் நிலையில் அவர் இல்லை. மர முந்திரிகை பதனிடும் வேலையில் ஈடுபட்டிருக்கும் பெண்களிடையே மர முந்திரிகை தரத்தைக் கூட்டி அதன் பெறுமதியை அதிகாரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டுடுப்பு முறை வெற்றி அளிக்கவில்லை. இதற்குக் காரணம் ஏற்றுமதியாளர்களுடன் நேரடியாக தொடர்புகொள்ள முடியாமல் போகும் பட்சத்தில், தாம் எதிர்நோக்க வேண்டிவரும் அபாய ஏதுக்கள் பற்றி காணப்படும் அச்சமாகும். ஏனெனில், உள்ளூர் வியாபாரிகள் உலர்த்திய மர முந்திரிகைகளை வாங்குவதில்லை.

இதனால் மாரியாவுக்கு மர முந்திரிகை கூட்டுத்தாபனம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பவற்றுடன் எவ்வித தொடர்பும் கிடையாது. அவர் கிராமிய சமூகத்தை சேர்ந்தவராக இருப்பதும் மரமுந்திரிகை பதனிடுவதில் ஏற்படும் குறைந்தபட்ச அபாய ஏதுவும், கடன் வழங்கும் நிறுவனங்கள் கிராம மக்களுக்கு கடன் பெறும் வாய்ப்புக்களை அதிகரித் துள்ளமையும் அவருக்கு கடன் பெறும் வசதிகளை அளித்துள்ளது.

மரமுந்திரிகை புழக்கத்தில் இல்லாத காலங்களில் நைஜீரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மரமுந்திரிகை விதைகளைப் பதனிட்டுத் தர உப-ஒப்பந்தங்களை செய்து கொள்வது தொடர்பாக தற்சமயம் ஒரு ஏற்றுமதி இறக்குமதிக் கம்பனி பதனிடுவோருடன் பேரம் பேசி வருகிறது. ஏனெனில், உள்நாட்டு, சர்வதேச சந்தையில் மரமுந்திரிகை விதைகளுக்கு நல்ல கிராக்கி நிலவி வருகின்றது. பதனிடுவதில் கம்பனி விதிக்கும் நிபந்தனைகளை மிகக் கஷ்டத்துடன் நிறைவேற்ற வேண்டி இருப்பதனாலும் அதற்கு பிரதிபலனாக கிடைக்கும் விலை குறைவாக இருப்பதனாலும் மாரியா இந்த யோசனைக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. எனினும், இவ் ஒப்பந்தம் கிராமிய சமூகத்தின் ஊடாக பேரம் பேசப்பட்டால் சில சமயம் அவர் இணங்கக்கூடும். பொருளாதார தாராண்மைவாதத்தின் கீழ் ஏனைய உற்பத்தி/ பதனிடல் துறைகளில் தனியார் துறை ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளது போல மரமுந்திரிகைப் பதப்படுத்தல் தொழிலிலும் ஏற்படலாம். எனினும், விதிமுறைகள் ஏற்றுமதிக் கம்பனிகளாலேயே விதிக்கப்படும் என்பது தெளிவானதாகும்.

( 25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு ரீதியான சீராக்கம் தாக்கமானதாக அமைய வேண்டுமானால், ஒவ்வொரு நாட்டினதும் உள் மற்றும் வெளி சமூக, பொருளாதார நிலைமைகளை கவனத்திலெடுத்து, மிகவும் கவனமான முறையில் திட்டமிடப்பட்டு அவை அமுல் செய்யப்படுதல் அவசியமாகும். பல வளர்முக நாடுகள் இப்பொழுது மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கித் தவித்து வருகின்றன. இந்த நிலையில் அவை தமது பிரச்சினைகளுக்கு நீண்ட கால அடிப்படையில் தீர்வுகள் வரும் வரையில் காத்திருக்க முடியாது. பல சந்தர்ப்பங்களில், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் துரிதப்படுத்தப் படுகின்றன. புதிய நிதிகளை வெகு விரைவில் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் ஒழுங்குவிதித் தளர்ப்பும் தாராளமயமாக்கலும் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு ருகின்றன. கடன் வாங்கும் நாடுகள் கடனளிப்பு தொடர்பான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதனால், நிறுவனங்கள் கடன்களையும் தாராளமாக அளித்து வருகின்றன. அவ்விதம் பொறுப்பற்ற முறையில் நிதிகள் வழங்கப்படுவதனாலும், சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதனாலும் ஏற்றுமதிகளையும் மொத்த உ மட்டங்களையும் உயர்த்தி விட முடியும். ஆனால், இது பரவலான வறுமை, போஷாக்கின்மை, குற்றச் செயல்கள் மற்றும் சமூகச் சீர்குலைவு என்பவற்றுக்கு மத்தியிலேயே இடம்பெற முடியும். மோசமான தாக்கங்களை குறுங்காலத்தில் நிவர்த்திப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள உறுதிப் படுத்தல் வழிமுறைகள் வெற்றியீட்ட வில்லை. அவை பிரதானமாக அபிருத்தியின் சமூக அம்சங்களிலும் பார்க்க, பொருளாதார அம்சங்களிலேயே அக்கறை காட்டி வருகின்றன.

பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங்களும் கூட அசீநி களின் மோசமான தாக்கங்களை ஏற்றுக் கொண்டுள்ளன. எனினும், பிந்திய 1980 களில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ள போதிலும், கொள்கை வழியில் எத்தகைய மாற்றங்களும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அசீநி கள் மிகக் கடுமையான சிக்கன நடைமுறைகளை அறிமுகப் படுத்தியதன் விளைவாக பெரும் பாலான பொருளாதாரங்கள் கடுமையான பொருளாதார மந்தங்களுக்குள்ளும், பணவீக்க நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கித் தவித்து வருகின்றன.

சமூக சேவை மற்றும் கல்வி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெட்டுக்கள் ஊழியர் படையின் தரத்தை குறைந்துள்ள அதே வேளையில், வேலையில்லாத் திண்டாட்டத்தை உயர்த்தியுள்ளது. மெய் வேதனங்களும் குறைவடைந்து வந்துள்ளன. சிலி, பெரு, இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளில் ஆடைக் கைத்தொழில் துறையில் பெருந் தொகையான மகளிர் உழைத்து வருகின்றனர். பிரதானமாக மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக மகளிர் தொழில் புரிந்துவருகின்றனர். வளர்முக நாடுகளில் வேளாண்மைத்துறையிலும் மகளிர் உழைப்பே அதிகளவுக்கு நிலவி வருகின்றது. இந்த சீர்திருத்த நிகழுச்சித்திட்டங்களினால் இத்தகைய வறிய மகளிரே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# அமைப்பு ரீதியான சீராக்கமும் இலங்கையில் தொழில்வாய்ப்புக்களின் உருவாக்கமும்

கலாநிதி சமன் கலேகம என். திருச்செல்வம்
(கொள்கை கற்கைகள் நிறுவனம், கொழும்பு)

1. அறிமுகம்

இலங்கையில் 1977 இல் துவக்கி வைக்கப்பட்ட தாராளமயமாக்கல் நிகழ்வுப்போக்குடன் அமைப்பு ரீதியான சீராக்கல் செயற்படத் தொடங்கியது. பொருளாதாரத்தில் அமைப்பு ரீதியான சீராக்கத்தினை சாதித்துக் கொள்வதற்கான வழிமுறைகளாக தாராளமயமாக்கல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டன. எனவே, வேலைவாய்ப்புக்களின் மீது தாராளமயமாக்கல் கொள்கைகள் எடுத்து வந்துள்ள தாக்கத்தினை பகுப்பாய்வு செய்வதன் மூலம் அசீநிகளின் தாக்கத்தினை மதிப்பிட்டுக் கொள்ள முடியும். 1977 இல் துவக்கி வைக்கப்பட்ட தாராளமயமாக்கல் கொள்கைகள், அதனையடுத்து வந்த வருடங்களில் மேலும் பரவலான முறையில் முன்னெடுத்துச் செல்லப் பட்டன. 1977-88 காலப் பிரிவை தாராளமயமாக்கலின் முதலாவது அலை எனக் குறிப்பிட முடியும்; 1989-94 காலப்பிரிவு இதன் இரண்டாவது அலையாகும். முதலாவது தாராளமயமாக்கல் கட்டத்தின் போது மிகப் பிரமாண்டமான பொது முதலீட்டுத் திட்டமொன்றினை செயற்படுத்தி வைத்ததன் மூலம் இலங்கை அரசாங்கம் நிர்ணயகரமான ஒரு பங்கினை வகித்து வந்தது. எனவே, வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்தில் தாராளமயமாக்கல் வகித்து வந்திருக்கும் பங்கினை பரிசீலிக்கும்பொழுது, அரசினால் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புக்களை புறம்பாகப் பிரிப்பது அவசியமாகும்.

இந்தக் கட்டுரையில், 1977-94 காலப்பிரிவினை 1977-85 மற்றும் 1986-94 என இரண்டு கட்டங்களாக பிரித்து நோக்குகிறோம். ஏனென்றால், 1977-94 காலப்பிரிவின்போது 1985 ஆம் ஆண்டிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் ஆக உச்ச மட்டத்தை எட்டியிருந்து; அதனால் அந்த வருடத்தை நாங்கள் ஒரு பிரிவுக் கோடாக எடுக்கின்றோம். வேலைவாய்ப்பு தொடர்பான போக்குகளை பகுப்பாய்வு செய்வதற்கும், அதன் மூலம் வளர்ந்து வரும் வேலையில்லாத் திட்டாட்டத்தினை விளக்குவதற்கும் தொடக்கத்தில் முதலாவது கட்டம் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. அதனையடுத்து, 1985 க்குப் பிற்பட்ட காலப்பிரிவு கவனத்தில் எடுக்கப்படுவதுடன், தற்பொழுது நிலவி வரும் 13 சதவீத வேலையில்லாத் திண்டாட்ட மட்டத்தை விளக்குவதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

2. 1977-1985 காலப்பிரிவு

இலங்கையில் 1977 இல் பொருளாதார தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப் பட்டதனை உடனடுத்து வேலை வாய்ப்புகளின் உருவாக்கம் அதிகரித்தது. இதன் பின்விளைவாக, 1977 இல் 20 சதவீதமாக இருந்த வேலையில்லாத் திண்டாட்டம் 1981/82 அளவில் 11 சதவீதமாக கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்தில் தொடக்கத்தில் ஏற்பட்ட திடீர் பெருக்கம் தொடர்ந்தும் நிலைத்திருக்கவில்லை; 1985 அளவில் வேலையில்லாத் திண்டாட்ட மட்டம் 21 சதவீதம் வரையில் அதிகரித் திருந்தது. அடுத்துவரும் பகுதியில், வேலை வாய்ப்பு கட்டமைப்பினை வடிவமைப்பதில் தாராளமயமாக்கல் கொள்கைகள் வகித்து வந்துள்ள பங்கு கலந்துரையாடப்படுகிறது.

இலங்கையில், வருடாந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் என்பன குறித்த ஒட்டுமொத்தத் தரவுகளை துல்லியமாகப் பெற்றுக் கொள்வது கடினமாகும். உத்தியோக பூர்வ மதிப்பீட்டாய்வொன்றின் படி 1978-82 காலப்பிரிவின் போது வருடாந்தம் 175,000 - 200,000 வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன; அத்துடன், 1982 அளவில் வேலையில்லாதவர்களின் அளவு 850,000 - 900,000 என்ற மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்திருந்தது (கோரளே, 1988). பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கும் புள்ளிவிவரங்களை ஒப்பிடுவது சிரமமாக இருந்த போதிலும், கோரளே எடுத்துக் காட்டியதை ஒத்த புள்ளிவிவரங்கள் 1980 க்குப் பிற்பட்ட காலத்தில் குடிசனவியல் மற்றும் சமூக-பொருளாதார கற்கைகள் மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட நம்பகமான

மதிப்பீடுகளிலிருந்து கிடைக்கின்றன. அவை அட்டவணை - 1 இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இலங்கையில் சாதாரணமாக வருடாந்தம் சராசரி 120,000 ஆட்கள் புதிதாக ஊழியர் படையில் சேர்ந்து கொள்கின்றார்கள். ஆனால், 1982-85 காலப்பிரிவின் போது ஆண்டொன்றுக்கு சுமார் 54,000 தொழில்வாய்ப்புக்கள் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன என்பதனை இந்த அட்டவணை காட்டுகின்றது. 1972-82 காலப்பிரிவுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது 1982-85 காலப்பிரிவின் போது வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது என்பதனை இப்புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

புதிய பொருளாதார கொள்கைகள் 1977 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதனை உடனடுத்து வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்புக்குக் காரணம், தொழில் செய்வதற்காக ஆட்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதற்கு வாய்ப்பளிப்பதற்கான தீர்மானமாகும். குறிப்பாக, 1977 இன் பின்னர் ரூபாவின் பெறுமதி கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்து கொண்டு வந்தது. இதன் விளைவாக, வெளிநாடுகளில் தொழில் புரிந்து வந்தவர்களின் ரூபா சம்பாத்தியங்களில் பாரியளவில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. மேலும் ரூபா பெறுமதி யிறக்கம், ஏனையவர்களும் வெளிநாடுகளில் வேலைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஓர் ஊக்குவிப்பாக செயல்பட்டு வந்தது. எனவே, 1978 இன் பின்னர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள், புதிய வேலை வாய்ப்புக்களுக்கான முக்கியமான ஒரு மூலமாக இருந்து வந்தது; அதாவது, 1977-84 காலப்பிரிவின் போது மத்திய கிழக்கு நாடுகளில் சுமார் 350,000 - 400,000 பேர் வரையில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டார்கள் என தற்பொழுது கிடைக்கக் கூடியதாக இருக்கும் தரவுகள் காட்டுகின்றன. ஆனால், அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் மத்திய கிழக்கில் வேலை செய்து வரவில்லை. 1979இல்

அட்டவணை 1

இலங்கையில் குடித்தொகை, ஊழியர்படை, தொழில்வாய்ப்பு மற்றும் வேலை வாய்ப்பின்மை 1982 - 1985 ('000)

| | 1982 | 1983 | 1984 | 1985 | 19[illegible]-85 சராசரி அதிகரிப்பு | 1990 |
|---|---|---|---|---|---|---|
| குடித்தொகை | 15,189 | 15,416 | 15,599 | 15,702 | 178,500 | 16,993 |
| ஊழியர் படை | 5,135 | 5,255 | 5,375 | 5,495 | 120,000 | 6,969 |
| வேலை வாய்ப்பு | 4,173 | 4,227 | 4,281 | 4,336 | 54,011 | 5,964 |
| வேலையின்மை | 962 | 1,028 | 1,094 | 1,159 | 65,999 | 1,005 |

மூலம் : கருணாதிலக (1987), இலங்கை ஊழியர் படை மதிப்பீட்டாய்வு (1990)

அட்டவணை 2

சுற்றுலாத் துறையில் வேலை வாய்ப்பு

| வருடம் | மொத்த வேலைவாய்ப்பு |
|---|---|
| 1978 | 15,404 |
| 1979 | 18,472 |
| 1980 | 47,900 |
| 1981 | 52,800 |
| 1982 | 64,262 |
| 1983 | 53,608 |
| 1984 | 58,898 |
| 1985 | 54,533 |
| 1986 | 53,484 |
| 1987 | 48,811 |
| 1988 | 47,904 |
| 1989 | 48,000 |
| 1990 | 60,000 |
| 1991 | 64,800 |
| 1992 | 71,507 |
| 1993 | 75,000 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள்

இடம்பெற்ற இரண்டாவது எண்ணெய் விலையேற்றம் மத்திய கிழக்கு நாடுகளில் ஊழியத்துக்கான கேள்வியினை அதிகரிக்கச் செய்திருந்தது. எனவே, அந்நாடுகளை நோக்கி பாரியளவில் மக்கள் வெளியேறிச் சென்றமைக்கு தாராளமயமாக்கல் கொள்கைகள் பொறுப்பாக இருந்து வரவில்லை. சுமார் 200,000 குடும்பங்களில், குறைந்தது ஒரு உறுப்பினராவது வெளிநாட்டில் வேலை செய்து வந்தார் என திட்ட அமுலாக்கல் அமைச்சின் மதிப்பீடு ஒன்று தெரிவித்தது. (வீட்டுப் பணிப்பெண்களைத் தவிர) மத்திய கிழக்கு நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றவர்களில் பலருக்கு இலங்கையில் தொழில்கள் இருந்தன. அவர்கள் வெளியேறிச் சென்றமை இங்கிருந்த

அட்டவணை 3

இலங்கை பொருளாதாரத்தின் வேலைவாய்ப்பும் வெளியீடும் 1971, 1981/82, 1985/86 1990/91

| | 1971 | | 1981/82 | | 1985/86 | | 1990/91 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வெளியீடு | வேலை வாய்ப்பு | வெளியீடு | வேலை வாய்ப்பு | வெளியீடு | வேலை வாய்ப்பு | வெளியீடு | வேலை வாய்ப்பு |
| விவசாயம் | 28.3 | 50.1 | 24.6 | 51.2 | 27.7 | 49.3 | 26.9 | 47.7 |
| கைத்தொழில் | 17.4 | 9.7 | 17.0 | 14.1 | 17.0 | 13.9 | 16.4 | 15.7 |
| தயாரிப்பு | 16.7 | 9.3 | 13.6 | 12.4 | 14.7 | 12.6 | 14.3 | 14.1 |
| சுரங்கமகழ்தல் | 0.7 | 0.4 | 3.4 | 1.7 | 2.3 | 1.3 | 2.1 | 1.6 |
| சேவை, கட்டடவாக்கம் | 54.3 | 40.2 | 58.4 | 34.7 | 55.3 | 36.8 | 56.7 | 36.6 |

மூலம்: கோரளே (1986), தொகைமதிப்பு, புள்ளிவிவர திணைக்களம் (1987) மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கியது. வெளிநாட்டில்- குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில் - தொழில் பெற்றுச் சென்ற ஒவ்வொரு இலங்கையரையும் பொறுத்தவரையில், இங்கு ஒரு தொழில் வாய்ப்பு உருவாக்கப் பட்டிருக்குமென கருதிக் கொள்ள முடியும் (திட்ட அமுலாக்கல் அமைச்சு, 1985).

1977-82 காலப்பிரிவின் போது வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்டு வந்துள்ள அதிகரிப்பினை பார்க்கும் பொழுது சில சுவாரஸ்யமான அவதானிப்புக்களை பெற முடிகிறது.

இக்காலப் பிரிவின்போது சுமார் 200,000 தொழிலாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றுள்ளார்கள் (ரொட்ரிகோ மற்றும் ஜயதிஸ்ஸ, 1989). மேலும், 1964 இன் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தோட்டத் துறையைச் சேர்ந்த 337,000 இந்திய வம்சாவழியினர் 1977-82 காலப் பிரிவின்போது இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இது தவிர, குடித்தொகையில் வயது முதிர்ந்து செல்லும் ஒரு போக்கும் காணப்பட்டது. இந்தக் காரணிகள் அனைத்தும் ஊழியர் படை பங்கேற்பு விகிதங்களை குறைத்திருந்தன. )சுந்தரத்ன, 1985). எனவே, இந்தக் காரணிகளின் பின்னணியில் நோக்கும் பொழுது, இக்காலப் பிரிவின் போது உள்நாட்டுத் தொழில் வாய்ப்பு உருவாக்கத்தில் மிதமான அளவிலேயே ஒரு வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது என்பதனைக் காண முடிகின்றது. இந்த வகையில், 1978-82 காலப்பிரிவின் போது உருவாக்கப்பட்ட 175,000-200,000 தொழில் வாய்ப்புக்கள் (கோரளே, 1988) குடியகல்வினையும் சுயதொழில் வாய்ப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன போல் தோன்றுகின்றது.

இக்காலப் பிரிவின் போது பிரதானமாக சேவை மற்றும் கட்ட வாக்கத் துறைகளிலேயே அதிகளவுக்கு உள்நாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன. விவசாயத் துறையிலோ அல்லது கைத்தொழில் துறையிலோ குறிப்பிடக் கூடியளவுக்கு வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வில்லை. உதாரணமாக, பிரயாணத் தின் மீதான கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டமை போன்ற வர்த்தகம் மற்றும் கொடுப்பனவுகள் என்பவற்றின் தாராளமயமாக்கல், வேலை வாய்ப்புக்களில் உடனடி தாக்க மொன்றினை எடுத்து வந்தது. பெரும் எண்ணிக்கையிலான புதியவர்கள் இறக்குமதி வர்த்தகம், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை போன்ற வற்றில் பிரவேசிப்பதற்கு அது வாய்ப்புக்களை அளித்ததுடன், இந்தத் துறைகளில் இலிகிதர்கள், தட்டச் சாளர்கள், கணக்குவைப்பாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் சாரதிகள் போன்றவர்களுக்கு எண்ணற்ற தொழில் வாய்ப்புக்களை வழங்கியது. பொருட்கள் பெருமளவில் கிடைக்கக்கூடியதாக இருந்தமையின் விளைவாக வியாபார நடவடிக்கை களில் செங்குத்தான ஓர் அதிகரிப்பு ஏற்பட்டதுடன், அதனையடுத்து, மொத்த, சில்லறை வியாபாரத் துறைகளில் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன. இறக்குமதி தாராளமயமாக்கலின் விளைவாக நகர்ப்புறத்துக்கு வெளியே அமைந் திருந்த முறைசாராத் துறையில் - குறிப்பாக, கிராம வியாபார நிலையங்களிலும், சந்தைகளிலும் - வியாபாரத்தின் அளவு கணிசமான அளவில் பெருக்கம் கண்டது. சேவைத்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் 1977 இன் பின்னர் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்தன. இது தவிர, குறிப்பாக இலத்திரனியல் பொருட்கள், மின் உபகரணங்கள், குளிரூட்டல் மற்றும் வாகனப் பழுதுபார்ப்பு போன்ற பிரிவுகளைக் கொண்ட சேவைகளில் 1977 இன் பின்னர் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துச் சென்றன.

தாராளமயமாக்கல் கொள்கை களின் கீழ் இடம்பெற்ற மகாவலி அபிவிருத்திச் செய்திட்டம், (வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி போன்ற) நிர்மாண நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவும் அவற்றின் நிர்மாணக் கட்டங்களின் போது பெருமளவுக்கு வேலை வாய்ப்புக்களை அளித்தன. இச் செய்திட்டங்களால் உருவாக்கப் பட்ட வேலை வாய்ப்புக்களின் சரியான தரவுகள் கிடைக்கவில்லை. எவ்வாறிருப்பினும், 1978-82 காலப் பிரிவில் இடம்பெற்ற மொத்த வேலை வாய்ப்புக்களின்அதிகரிப்பில் சுமார் அரைவாசிப் பகுதியை இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கி யிருந்தன என ஸ்டேர்ன் (1984) குறிப்பிடுகிறார். எனவே, 1978-82 காலப்பிரிவின் போது மிதமான உள்நாட்டு வேலை வாய்ப்புக்களின் உருவாக்கததுக்கு தாராளமயமாக்கல் தவிர்ந்த ஏனைய கொள்கைகள் கணிசமான அளவில் பங்களிப்பினை வழங்கியிருப்பது போல் தெரிகிறது.

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை - 3 இலங்கைப் பொருளாதாரத்தின் பிரதான துறைகளின் வேலை வாய்ப்பு மற்றும் வெளியீட்டு விகிதங்களை எடுத்துக் காட்டுகின்றது. 1980 களின் முதல் அரைப்பகுதியில் நாட்டின் மொத்த வேலை வாய்ப்புக்களில் சுமார் 50 சதவிகிதத்துக்கு வேளாண்மைத் துறை பொறுப்பாக இருந்தது. இந்தத் துறை பாரியளவில் வேலை வாய்ப்புக்களை வழங்கி வந்த போதிலும், பிரதான மரப்பயிர் துறையின் ஊழியத்தை உறிஞ்சிக் கொள்ளும் திறன் 1950 களிலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டு வந்துள்ளது (குணரத்ன மற்றும் வெசும்பெரும, 1984). 1977 இன் பின்னர் மிகத் துரிதமாக வளர்ச்சி கண்டு வந்த நெல் உபதுறை, 1980 களின் நடுப்பகுதியில், வேலை வாய்ப்புக்களை அளிக்கும் ஒரு மூலம் என்ற முறையில் முக்கியத்துவம் இழந்திருந்தது. இந்தத் துறையில் வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்ட பெருக்கம், சேவைத்துறையிலும் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களிலும் உருவாக்கப்பட்ட பாரிய அளவிலான வேலை வாய்ப்புக்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது முக்கியத்துவம் அற்றதாக இருந்து வருகின்றது.

1980 களின் முதல் அரைப் பகுதியின் போது, நாட்டின் மொத்த வேலை வாய்ப்புக்களின் 12.5 சதவிகிதத்தை பொருள் உற்பத்தித் துறை பங்களிப்புச் செய்திருந்தது என்பதனை அட்டவணை - 3 எடுத்துக் காட்டுகின்றது. நடுத்தர காலத்திலும் நீண்ட காலத்திலும் இலங்கையில் வேலை வாய்ப்புக்களை நிர்ணயம் செய்யும் ஒரு முக்கிய காரணியாக இந்தத் துறை இருந்து வருவதாக கோரளே (1986) அவதானித்துள்ளார். பொருள் உற்பத்தித்துறையில் அதிகளவிலான வேலை வாய்ப்புக் களை உருவாக்குவதே பொருளாதார தாராளமயமாக்கலின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. எனினும், 1977-85 காலப் பிரிவின்போது இத்துறையின் வேலை வாய்ப்பு உருவாக்கம் திருப்தியற்றதாக இருந்து வந்துள்ளது என்பதனை 1985 இல் வேலையின்மை விகிதம் (21 சதவிகிதம்) குறித்துக் காட்டுகிறது. கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீட்டின் (1980) பிரகாரம், 1977

இன் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட புதிய கைத்தொழில்களின் வேலை வாய்ப்புக்கள் 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஏற்றுமதிக் கைத்தொழில்கள் கொள்கைச் சீர்திருததங்களுக்கு எதிர்விளைவு காட்டுவதற்கு சற்றுக் கால அவகாசத்தை எடுத்துக் கொள்கின்றன என்பதனை மறுக்க முடியாது. எனினும், வேலையில்லாத் திண்டாட்ட விகிதம் 1985 அளவில் 1977க்கு முற்பட்ட மட்டங்களுக்கு உயர்ந்து சென்றிருந்தது என்ற உண்மை, ஏற்றுமதி வழிப்பட்ட புதிய கைத்தொழில்களின் ஊழியத்தை உறிஞ்சும் திறன், ஊழியர் படையில் வருடாந்தம் புதிதாக சேர்ந்து கொள்ளும் அளவிலும் பார்க்க குறைவாக இருந்து வந்துள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

அட்டவணை 4

ஒழுங்கமைந்த துறை கைத்தொழில்களில் வேலைவாய்ப்பு

| கைத்தொழில் | 1977 மட்டம் | அதிகரிப்பு 1977-80 | அதிகரிப்பு 1977-85 |
|---|---|---|---|
| உணவு, பானம், புகையிலை | 28,429 | 3,936 | 35,453 |
| புடவை, ஆடை, தோல் பொருட்கள் | 33,180 | 15,793 | 41,658 |
| பலகை மற்றும் பலகை உற்பத்திகள் | 6,476 | 2,252 | 3,385 |
| கடதாசி, கடதாசி உற்பத்திகள் | 7,650 | 612 | -66 |
| பெட்ரோலிய இரசாயன பொருட்கள் | 14,446 | 2,750 | 7,808 |
| உலோகமல்லாதவையும் கனிப்பொருட் | 9,963 | 9,960 | 7, 951 |
| அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,790 | 453 | -222 |
| வார்க்கப்பட்ட உலோக உற்பத்திகள் | | -437 | -3937 |
| இயந்திரம் மற்றும் போக்குவரத்து உபகரணம் | 15.513 | | |
| ஏனைய தயாரிப்பு பொருட்கள் | 1,129 | 668 | 870 |
| மொத்த தயாரிப்பு | 118,576 | 35,987 | 93,576 |
| (அ) பாகொபொஆ | | 11,942 (33.2) | 31,846 (36.4) |
| (ஆ) வெமுமகு | | 9,465 (26.3) | 25,239 (28.8) |
| மொத்தம் (அ+ஆ) | | 21,407 (59.5) | 57,085 (65.2) |

குறிப்பு: அடைப்புக்குள் உள்ள தரவுகள், மொத்த தயாரிப்புத்துறை வேலை வாய்ப்பு அதிகரிப்பில் வெறேமு நிறுவனங்களின் வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பினைக் காட்டுகின்றன.

மூலம்: மத்திய வங்கி, நிதி திட்ட மிடல் அமைச்சு

புதிய கொள்கைகள் கைத்தொழில் துறையில் அதிகளவிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்காது ஏன்? உள்நாட்டுக் கைத்தொழில்கள் மீது இறக்குமதி தாராளமயமாக்கல் எடுத்து வந்த மோசமான தாக்கமே அதற்கான முக்கியமான காரணமாகும். கைத்தறித் துறையில் மட்டும் 1977-80 காலப்பிரிவின் போது 40,000 தொழில்கள் இழக்கப்பட்டன என மதிப்பிடப் பட்டுள்ளது (வைத்தியநாத, 1980). இந்த எண்ணிக்கை 1986 அளவில் 120,000 க்கும் மேல் அதிகரித்திருந்தது. இக்காலப் பிரிவின் போது, ஒழுங்கமையாத துறையைச் சேர்ந்த கிராமிய மற்றும் சிறு கைத்தொழில்களில் குறைந்தது 30,000 தொழில் வாய்ப்புக்கள் இழக்கப் பட்டுள்ளன. எனவே, 1970-80 காலப்பிரிவின் போது கைத்தொழில் துறையின் மேலே குறிப்பிடப்பட்ட உப துறைகளில் ஒட்டுமொத்தமாக 70,000 தொழில்வாய்ப்புக்கள் இழக்கப் பட்டுள்ளன. ஆனால், இதற்கு ஈடு செய்யக்கூடிய விதத்தில் ஒழுங்கமைந்த கைத்தொழில் துறையில் வேலை வாய்ப்புக்களில் அதிகரிப்பு ஏற்படவில்லை (அட்டவணை 4 ஐப் பார்க்கவும்).

இங்கு அட்டவணை - 4 இல் தரப்பட்டுள்ள கைத்தொழில் வேலை வாய்ப்புக்கள் தொடர்பான தரவுகள், ஒழுங்கமைந்த துறை வேலை வாய்ப்புக்களின் அதிகரிப்பில் உயர் அளவில் ஏற்றத்தாழ்வான போக்கு நிலவி வருவதனை மிகவும் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன. 197 க்கும் 1980 க்கும் இடைப்பட்ட காலத்தில் வேலைவாய்ப்புக்களில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் சுமார் 71 சதவிகிதம் புடவைகள் மற்றும் ஆடை வகைகள் (44 சதவிகிதம்), உலோகமல்லாத கனிப்பொருள் துறை (27 சதவீதம்) என்பவற்றிலிருந்தே வந்தது. உதாரணமாக, 1985 ஆம் வருடத்திலும் கூட வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் சுமார் 54 சதவீதம் இந்த இரு துறைகளிலுமிருந்தே வந்தது. புடவை மற்றும் ஆடை வகைகள் துறையில் வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்டு வந்துள்ள அதிகரிப்பு, வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கீழ் ஆடைக் கைத்தொழிலில் ஏற்பட்டு வந்துள்ள விரிவாக்கத்தினையே பிரதிபலிக்கின்றது. அதே வேளையில், கட்டடவாக்க கைத்தொழிலில் ஏற்பட்டுவந்த விஸ்தரிப்பின் விளைவாகவே உலோகமல்லாத கனிப்பொருள் துறையில் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இந்த இரு விடயங்களிலும், பிரதானமாக, தாராளமயமாக்கல் சாராத காரணிகளிலிருந்தே வளர்ச்சி உருவாகியுள்ளது. வெளிநாட்டு மூலதனப் பங்கேற்புடனான (1977 க்குப் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட) புதிய கைத்தொழில்கள், கைத்தொழில் துறையின் ஒட்டுமொத்த வேலை வாய்ப்புக்குச் செய்த பங்களிப்பு 1980 இல் 59.5 சதவீதமாகவும், 1985 இல் 65.2 சதவீதமாகவும் இருந்தது. இந்த சதவிகிதங்கள் கவர்ச்சிகரமானவையாக இருந்து வந்த போதிலும், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு மத்தியில், பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு என்பவற்றின் ஊழியத்தை உறிஞ்சிக் கொள்ளும் திறன் மிகச் சிறு அளவிலேயே இருந்து வந்துள்ளதனை காண முடிகிறது. ஆண்டுதோறும் ஊழியர் படையில் சுமார் 120,000 பேர் புதிதாக சேர்ந்து கொள்கிறார்கள்; பாகொபொஆ சராசரியாக வருடாந்தம் சுமார் 4,000 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வந்துள்ளது; அதேவேளையில், வெமுஆகு ஆண்டுதோறும் சராசரியாக சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வந்துள்ளது. எனவே, 1977-85 காலப் பிரிவில், ஊழியர்படையில் புதிதாக சேர்ந்து கொள்பவர்களில் சுமார் 7

சதவீதத்தினருக்கு மட்டுமே வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன.

1977 க்கு முற்பட்ட பாதுகாக்கப்பட்ட கைத்தொழில் துறையைச் சேர்ந்த பெருந்தொகையான ஊழியர்களின் மீள் வேலை வாய்ப்பை பொறுத்தமட்டில் நிலை என்ன? பொருளாதாரத்தின் விரிவடைந்து வரும் நடவடிக்கைகளுக்குள் அவர்கள் அனைவரும் உறுஞ்சிக் கொள்ளப்பட்டு விட்டார்களா ? இத்தகைய மீள் வேலை வாய்ப்பளிப்பு ஓரளவுக்கு இடம் பெற்று வந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை; ஏனினும், பாரிய தொழில் இழப்புக்களுக்கு ஈடு செய்யக்கூடிய அளவுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் அளிக்கப்பட வில்லை. தொழில்களை இழந்த சிலர் விரிவடைந்து வரும் கட்டடவாக்கத் துறையிலும் சேவைத்துறைகளிலும் வேலைகளைப் பெற்றுக் கொண்டனர். அதேவேளையில், மற்றும் சிலர் வெளிநாடுகளுக்கு -குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கு- குடிபெயர்ந்து சென்றனர். விரிவடைந்து வந்த புதிய கைத்தொழில்களிலும் மகாவலி செய்திட்டத்திலும் ஒரு சிலர் வேலை வாய்ப்பினைப் பெற்றனர்.

அட்டவணை 5

பொருள் தயாரிப்புத் துறையில்

பொருளாதார நடவடிக்கையின் பகிர்வு, 1981

| மாகாணம் | நிறுவனங்களின் எண்ணிக்கை (%) | வேலை வாய்ப்பு (%) |
|---|---|---|
| மேல் | 74.4 | 74.8 |
| மத்திய | 5.8 | 5.0 |
| தென் | 6.2 | 3.9 |
| வட | 3.1 | 2.8 |
| கீழ் | 1.0 | 4.1 |
| வடமேல் | 0.5 | 1.0 |
| ஊவா | 0.6 | 0.1 |
| சபரகமுவா | 3.4 | 5.0 |
| | 100.0 | 100.0 |

குறிப்பு மதிப்பீட்டு முறைகளில் உள்ள வேறுபாடுகள் காரணமாக இப்புள்ளிவிவரங்களை ஒப்பிட முடியவில்லை.

மூலம்: தொகைமதிப்பு, புள்ளிவிவர திணைக்களத்தின் தரவுகளிலிருந்து மதிப்பிடப்பட்டது (1981)

அட்டவணை 6

ஊழியர் படையில் வேலையற்றோர் விகிதம்
1978/79, 1981/82, – 1985/86

| | 1978/79 | 1981/82 | 1985/86 | 1990/91 |
|---|---|---|---|---|
| நகரத்துறை | 20.7 | 14.2 | 19.5 | 18.4 |
| கொழும்பு நகரம் | 20.5 | 12.3 | - | - |
| கிராமியத்துறை | 14.6 | 12.0 | 13.2 | 15.9 |
| தோட்டத்துறை | 5.6 | 5.0 | 7.8 | - |

மூலம்: நுகர்வோர் நிதியாய்வுகள் 1978/ 79, 1981/ 82
தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் (1987)

மகாவலி செய்திட்டத்தின் கீழ் 1981 இல் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் உச்ச கட்டத்தை எட்டியது என்றும், அதன் பின்னர், இத்திட்டத்தில் வேலையிலிருந்த பெருந்தொகையானோர் செய்திட்டம் பூர்த்தி அடைந்ததும் வேலைகளை இழந்தனர் என்றும் ஸ்டோன் (1984) சுட்டிக்காட்டுகிறார். எனவே, இந்த ஊழியர்களில் கணிசமான ஒரு பகுதியினர் புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாகும் வரையில், 1981-82 இல் வேலை இல்லாதிருந்தனர். இது புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்தின் மீது எடுத்து வந்திருந்து. இது தவிர, 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இடம் பெற்ற பொது வேலை நிறுத்தமொன்றினை அடுத்து சுமார் 60,000 தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். இது வேலையற்றோரின் தொகையை மேலும் அதிகரிக்கச் செய்தது. அரசாங்கம் இப்போக்குகளை தணிக்கும் பொருட்டு, (1980 வேலைநிறுத்தத்தின் போது வேலை இழந்தவர்களை தவிர்த்து) பெருந்தொகையானோரை அரச கூட்டுத்தாபனங்களில் வேலையில் சேர்த்துக் கொண்டது. இதன் விளைவாக, பெரும்பாலான கூட்டுத்தாபனங்களில் மிதமிஞ்சியளவில் ஊழியர்கள் அமர்த்தப்பட்டார்கள். எனவே, இந்த வகையில், வேலை இல்லாதிருப்பவர்களுக்கு உடனடியாக தொழில் வாய்ப்புக்களை வழங்கும் மூலங்களாக பொதுத்துறை தொழில் முயற்சிகள் மாற்றமடைந்தன. இந்த நிலையில், பொதுத்துறை தொழில் முயற்சிகளை செயல் திறன் மிக்கவையாக மாற்றி அமைக்கும் குறிக்கோள் இரண்டாவது இடத்தையே பெற்றுக் கொண்டது. புதிய தொழில் வாய்ப்புக்கள் குறித்த சாதகமற்ற சில அம்சங்களை இந்தக் கலந்துரையாடல் எடுத்துக் காட்டுகிறது. முதலாவதாக, வேலை வாய்ப்புக்களில் நிலையான வளர்ச்சியினை உருவாக்கும் ஆற்றல் இல்லாதிருந்த துறைகளே பெருமளவுக்கு ஊழியத்தை உறிஞ்சிக் கொண்டன. கட்டட நிர்மாணப் பணிகளுடன் சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்புக்களை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும். கட்டட நிர்மாண செழிப்பு நிலைக்கு இணையான விதத்தில் உள்நாட்டு மூலவளத் திரட்டல் இடம்பெற்றுவரவில்லை என்பது நன்கு அறியப்பட்ட விடயமாகும்: இந்தத் துறை, ஓரளவுக்குப் பற்றாக்குறை நிதிப்படுத்தல் மூலமும், ஓரளவுக்கு வெளிநாட்டு உதவி மூலமும் நிதிப்படுத் தப்பட்டு வந்தது. மேலும், அரசாங்கம் 1980 களின் தொடக்கத்தில் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறைகளை சீர்செய்வதற்கும், அதேபோல சென்மதி நிலுவை நெருக்கடிகளை தவிர்ப்பதற்கும் என அதன் கட்டட நிர்மாணத்திட்டங்களில் வெட்டுக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இறக்குமதி தாராளமயமாக்கலினால் தூண்டிவிடப்பட்ட இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளின் விளைவாகவே பெருமளவுக்கு சேவைத்துறைகளில் வேலை வாய்ப்புக்கள் விரிவடைந்திருந்தன. 1977க்குப் பின்னர் புதிய

உத்வேகத்தை பெற்றிருந்த பல கைத்தொழில் உபதுறைகள் பெருமளவுக்கு மூலப் பொருட்களும் மூலதன உபகரணங்களும் கிடைக்கக் கூடியதாக இருந்தமையினால் இறக்குமதி தாராளமயமாக்கலில் இருந்து பயனடைந்து கொண்டன. ஆனால், 1977-85 காலப்பிரிவின் போது, தாராளமயமாக்கப்பட்ட முழு இறக்குமதி கட்டமைப்பும் வெளி உதவிகளினாலேயே தாக்குப்பிடித்து வந்தது. உள்நாட்டுப் பொருளாதாரத்தின் இயக்கவிசை இதற்கு அவ்வளவாக உதவவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், நாணய விரிவாக்கம், அதிகரித்த அளவிலான மூலதன உட்பாய்ச்சல் என்பவற்றினால் அல்லது வெளிநாட்டு தொழிலாளர்களின் பண அனுப்பீடுகளினால் நிதிப்படுத்தப்பட்ட துறைகளிலேயே புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாகியிருந்தன.

இக்கால கட்டத்தின் போது உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புக்களின் தரம் குறித்த கவலையூட்டும் ஓர் அம்சம், அந்த வேலை வாய்ப்புக்களின் சமூக மதிப்புடன் சம்பந்தப்பட்டதாகும். இப்பிரச்சினை பல அம்சங்களை கொண்டுள்ளது. முதலாவதாக, 1977 இன் பின்னர் நாட்டின் கைத்தொழில் துறையின் அமைப்பு ரீதியான நிலை மாற்ற நிகழ்வுப்போக்கில் பொதுவாக ஒழுங்கமையாத துறையிலிருந்தும், குறிப்பாகக் கிராமியத்துறையிலிருந்தும் (கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய) ஒழுங்கமைந்த துறையை நோக்கி ஊழியம் நகர்ந்து செல்லும் ஒரு போக்கு தென்பட்டது. இது வளர்ச்சி தொடர்பான பிராந்திய சம நிலையின் மீது நிர்ணயகரமான தாக்கங்களை எடுத்து வந்தது. அட்டவணை - 5 இதனை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மேலும், நகரத்துறையே வேலை வாய்ப்பில் மிகப் பெரிய விஸ்தரிப்பினை காட்டியிருந்தது. அட்டவணை-6 காட்டுவது போல, நகர்ப்புறங்களில் - குறிப்பாக, தலைநகர் கொழும்பிலேயே - வேலையில்லாத்திண்டாட்டத்தில் பெருமளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. மேலும், நகர்ப்புற துறையைப் பொறுத்தமட்டில், மகளிரின் வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்தில் மிகப் பெரிய அளவிலான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இது மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக்கள், சுற்றுலாத்துறை போன்ற சேவைகளின் விரிவாக்கம் மற்றும் (பெரும்பாலும் பெண்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும்) ஆடைத் தொழிற்சாலைகளின் பெருக்கம் என்பவற்றினையே பிரதிபலித்துக் காட்டுகின்றது.

குறிப்பிட்ட சில கிராமப் பிரதேசங்களில் 1977-85 காலப்பிரிவின் போது வேலையில்லாத் திண்டாட்டம் வீழ்ச்சி அடைவதற்குப் பதிலாக அதிகரித்து வந்துள்ளது என்பதற்கு சான்றுகள் உள்ளன. குறிப்பாக, 1977 இன் பின்னர் கிராமிய இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் கணிசமான அளவில் அதிகரித்து வந்தது. 1984-85 காலத்தில் 15-25 வயதுத் தொகுதியினரிடையே வேலையின்மை 30-40 சதவீதம் வரையில் காணப்பட்டது (தொகை மதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களம், 1987). மேலும், கிராமிய கைத்தறிகளிலும் குடிசைக்கைத்தொழில்களிலும் வேலை செய்து வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வேலை இல்லாதவர்களாக மாறினார்கள். வேளாண்மைத் துறையிலோ கிராமப்பண்ணை அல்லாத நடவடிக்கைகளிலோ அநேகமாக புதிய தொழில் வாய்ப்புக்கள் எவையும் உருவாகவில்லை.

இரண்டாவதாக, வருமானப் பகிர்வின் ஏற்றத்தாழ்வு பிராந்தியச் சமநிலையின்மையை தீவிரப்படுத்தியது. அடிப்படை கைத்தொழில்களிலிருந்து கட்டட நிர்மாண வேலைகளுக்கும் சேவைகளுக்கும் ஊழியம் திசை திருப்பப்பட்டமை மூன்றாவது விசனிக்கத்தக்க அம்சமாகும். இதன் விளைவாக, பொருளாதாரம் சக்தி மிக்க இணைப்புத் தாக்கங்களை இழக்க வேண்டியிருந்தது. பொருள் உற்பத்தித்துறை வேலைவாய்ப்புக்களுடன் சம்பந்தப்பட்டிருந்த இதே மாதிரியான மோசமான தாக்கங்கள் வர்த்தக தாரளமயமாக்கலின் வேகத்தை தணித்து விட்டதுடன், அதனை இரண்டாவது கட்டத்துக்கு முன் எடுத்துச் செல்வதனையும் தடுத்தது (கலேகம, 1989).

நாட்டின் ஒட்டுமொத்த வேலை வாய்ப்பு உருவாக்க மாதிரியை பகுப்பாய்வு செய்வதன் மூலம் 1982-85 காலத்தில் வேலை வாய்ப்பு உருவாக்கத்தில் ஏற்பட்டிருந்த பின்னடைவுப் போக்கினை புரிந்துகொள்ள முடியும். முதலாவதாக, தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய குடிப்பெயர்ச்சி, அந்நாடுகளில் ஊழியத்துக்கு நிலவி வந்த மந்தமான கேள்வி காரணமாக 1983 தொடக்கம் குறைவடையத் தொடங்கியது. இரண்டாவதாக, மகாவலி செய்திட்டம் அதன் கட்டுமான வேலைகள் இடம் பெற்ற காலப்பிரிவில் உயர் அளவிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்கியது. இத்திட்டத்திலிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் 1986 அளவில் சுமார் 55,000 வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன என மதிப்பிடப் பட்டிருந்தது. இலங்கையின் ஊழியர் படைக்கு ஆண்டு தோறும் புதிதாக 120,000 ஆட்கள் சேர்ந்து கொண்டிருக்கும் ஒரு நிலையில், இந்த செய்திட்டம் ஆண்டொன்றுக்கு 6 சதவீதமான நிரந்தர வேலை வாய்ப்புக்களை மட்டுமே உருவாக்கி இருந்தது. மூன்றாவதாக, (உதாரணமாக போக்குவரத்து போன்ற) சேவைத் துறைகளின் குறிப்பிட்ட சில உப துறைகள் வேலை வாய்ப்பு உருவாக்கத்தின் உச்ச மட்டத்தை எட்டியிருந்தன. நான்காவதாக, பொருள் உற்பத்தித் துறையின் ஊழிய உறிஞ்சு திறன் தொடர்ந்தும் குறைந்த மட்டத்தில் நிலவி வந்தது (கலேகம மற்றும் விக்னராஜா, 1992).

*1986-1994 காலப்பிரிவு*

ஏற்கனவே எடுத்துக் காட்டப் பட்டது போல, 1977 தொடக்கம் 1985 வரையில் அரசதுறையே புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பிரதான அமைப்பாக இருந்து வந்தது. அரச தலையீட்டு வடிவிலான மகாவலி நீர்ப்பாசன செய்திட்டமும், ஏனைய கட்டுமான நிகழ்ச்சித் திட்டங்களும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதில் முன்னணியில் இருந்து வந்த அதே வேளையில், பொருளாதார தாராளமயமாக்கல் வழி முறைகள் வேலை வாய்ப்புக்களின்

உருவாக்கத்தில் இரண்டாம் பட்சமான ஒரு பங்கினையே வகித்து வந்துள்ளன. 1980 களின் பின்னரைப் பகுதியின் போது வேலையில்லாத் திண்டாட்டம் 18–20 சதவீதம் வரையில் உயர்ந்த மட்டங்களில் நிலவி வந்தது. 1986 இன் பின்னர் இதில் சிறிதளவான ஒரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது; இதற்கு 1987–89 காலப்பிரிவின் போது பாதுகாப்பு நிலைமையில் ஏற்பட்டிருந்த சீர்குலைவு காரணமாக பெருந்தொகையானவர்கள் குடிபெயர்ந்து சென்றமையும், இடம் பெற்ற மரணங்களும் (சுமார் 60,000) ஆயுதப் படைகளுக்கு பெருமளவுக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் காரணங்களாக இருந்திருக்க முடியும். நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுக் கொந்தளிப்பின் விளைவாக பொருளாதாரம் மந்தகதி அடைந்திருந்தமையினாலேயே வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்தில் எல்லை ரீதியிலான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் இந்திய அமைதிப்படையின் பிரசன்னம் நாட்டின் இன நெருக்கடி மேலும் தீவிரமடைவதற்கு வழிகோலியிருந்தது. இதன் விளைவாக, அப்பிராந்தியத்தில் அமைந்திருந்த (காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, யானையிறவு மற்றும் நிலாவெளி உப்பளங்கள், புல்மோட்டை இல்மனைட் படிவுகள், ஒட்டிசுட்டான் மற்றும் அம்பாறை பீங்கான் தொழிற்சாலைகள், வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை போன்ற) பல கைத்தொழில்கள் ஒன்றில் தொழிற்பாட்டை நிறுத்திக் கொண்டன; அல்லது கொள் அளவிலும் பார்க்க குறைந்த மட்டத்தில் இயங்கி வந்தன. இதனாலும் தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டன. வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் போர் சூழ்நிலை காரணமாக முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களில் நெல் உற்பத்தியும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கரையோரப் பகுதிகளில் தேங்காய் உற்பத்தியும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இது வேலை வாய்ப்புக்களிலும் பாதிப்பினை எடுத்து வந்தது. கடற்றொழிலை பொறுத்த வரையில், புத்தளம் தொடக்கம் பொத்துவில் வரையிலான கரையோரம் முழுவதும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன், பெருந்தொகையான மீனவர்கள் வேலை இழந்தனர். மேலும், பாசிக்குடா, நிலாவெளி, அருகம்குடா மற்றும் வில்பத்து போன்ற சுற்றுலா மையங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியாதிருந்தமையினால் இத்துறையில் பல வேலை வாய்ப்புக்கள் இழக்கப்பட்டன.

தென் இலங்கையில் இடம் பெற்று வந்த ஜே.வி.பி. கிளர்ச்சி காரணமாகவும் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு வேலை வாய்ப்புக்கள் இழக்கப்பட்டன. அத்துடன், நாட்டிலிருந்து வெளிநோக்கிய குடியகல்வும இடம் பெற்றது. வடக்கு-கிழக்கு யுத்தம் மற்றும் ஜே.வி.பி. கிளர்ச்சி ஆகிய இரு நிகழ்வுகளையும், நாட்டில் துவக்கி வைக்கப்பட்டிருந்த தாராளமயமாக்கல் கொள்கைகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிராத உள்நாட்டு நெருக்கடிகளாகவே கருத வேண்டியுள்ளது. இந்த உள்நாட்டு அதிர்ச்சிகள் ஒரு புறமிருக்க, இலங்கை 1990–91 வளைகுடா நெருக்கடியின் போது வெளி அதிர்ச்சியொன்றையும் எதிர்கொண்டது. வளைகுடா நெருக்கடி காரணமாக தொழில்களை இழந்து நாடு திரும்பியவர்களின் எண்ணிக்கை சுமார் 125,000 அளவில் இருந்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது (லக்ஷ்மன், 1993).

உள்நாட்டு அதிர்ச்சிகள் படிப்படியாக தணிந்து வந்தமையையும், 1986 இல் தாராளமயமாக்கல் புதுப்பிக்கப்பட்டமையையும் அடுத்து வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்குக் குறைவடையத் தொடங்கியது. பொருளாதார மீட்சியுடன் இணைந்த வகையில் தனியார் துறை வேலை வாய்ப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டு வந்தது. 1990 களின் தொடக்கத்தில் சுற்றுலாத்துறை வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்ட பெருக்கம் (அட்டவணை 2), புதிய ஊழியர் சேமலாப நிதிய பதிவுகள் மற்றும் பகொபொஆ வேலைவாய்ப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு (1990–84,600; 1992–104,220) என்பன இப்போக்கினை சுட்டிக் காட்டுகின்றன. தனியார் துறையால் நெறிப்படுத்தப்பட்ட இந்த முன்னேற்றங்களுக்கு மத்தியிலும் கூட, வேலையில்லாத்திண்டாட்ட மட்டம் கணிசமான அளவில் வீழ்ச்சி அடையவில்லை. கடைசியாக மேற்கொள்ளப்பட்ட ஊழியர் படை தொடர்பான மதிப்பீடு (1993 மூன்றாவது காலாண்டு) வேலையின்மை சுமார் 13 சதவீதமாக இருந்து வருவதனை சுட்டிக் காட்டியுள்ளது. ஆனால், 1990 இல் 15–16 சதவிகித வேலையின்மை பதிவு செய்யப்பட்டிருந்தது (தொகைமதிப்பு, புள்ளி விவரத்திணைக்களம், 1990). மேலதிக வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் விஷயத்தில் தாராளமயமாக்கல் கொள்கைகள் எந்த அளவுக்குத் தாக்கத்தை கொண்டிருந்தன என்பதை பரிசீலனை செய்து பார்ப்பதற்கு இது உசிதமான தருணமாகும்.

வேலை வாய்ப்பு உருவாக்க முயற்சியில் 1985 இன் பின்னர் மூன்று கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவதாக, அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் சொத்துகளில் உரிமை மாற்றம் செய்வது 1987 அளவில் இடம் பெற்றது. இந்தப்போக்கு 1989 இன் பின்னர் தீவிரமடைந்தது. இதனுடன் இணைந்த வகையில் ஓரளவுக்கு நிர்வாக மறுசீரமைப்பும் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவதாக, நிதிசார் துறை, விலைகள், வெளிநாட்டு முதலீடு மற்றும் செலாவணி கட்டுப்பாடுகள் போன்றவை 1990 களில் மேலும் அதிகளவில் தாராளமயமாக்கப்பட்டன. மூன்றாவதாக, சனசக்தி போன்ற சுயதொழில் திட்டங்களும் சிறிய மற்றும் நடுத்தர கொடுகடன் திட்டங்களும் சந்தை ஆதரவு கொள்கைகளின் வடிவில் செயற்படுத்தப்பட்டன.

முதலில் தனியார்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை நோக்குவோம். இந்தத் திட்டம் ஊழியச்சந்தையில் வேலை வாய்ப்பு தொடர்பான பின்னடைவுகளை எடுத்து வந்துள்ளது என்பதனை கிடைக்கும் சான்றுகள் தெரிவிக்கின்றன. உரிய வயதுக்கு முன்னர் ஓய்வு பெறச் செய்தல், ஆட்குறைப்பு போன்ற கொள்கைகளின் விளைவாகவே இது ஏற்பட்டுள்ளது. 1989 தொடக்கம் 1994 ஆகஸ்ட் நடுப்பகுதி வரை 43 தொழில்

முயற்சிகள் தனியார்மயமாக்கப்பட்டன. அரச தொழில் முயற்சிகள் இவ்விதம் தனியார் துறைக்கு கைமாற்றப்படுவதற்கு முன்னர் ஊழியர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. அந்த கொடுப்பனவுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டால் ஆட்குறைப்பு மேற்கொள்ளப்படும். தனியார்மயமாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் சுமார் 20,000 ஊழியர்கள் தாமாகவே முன்வந்து தமது தொழில்களிலிருந்து விலகிக் கொண்டுள்ளார்கள் என தொழில் ஆணையாளர் குறிப்பிடுகிறார். எனினும், தொழிற் சங்க வட்டாரங்கள் இந்தத் தொகை சுமார் 60,000 வரையில் இருக்கும் என குறிப்பிடுகின்றன. பலவந்தமாக ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் இது உள்ளடக்குகின்றது.

நிர்வாக மறு சீரமைப்பும் தொழில் வாய்ப்பு இழப்புக்களுக்கு வழிகோலியது. நான்கு - ஐந்து வருட காலப்பிரிவுக்குள் சுமார் 25 சதவீத (80,000 – 90,000 அளவிலான) ஆளணியினர் ஆட்குறைப்புச் செய்யப்பட வேண்டும் என நிர்வாக சீர்திருத்தக் குழு சிபார்சு செய்திருந்தது. இந்த சிபார்சினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் சுமார் 40,000 அரச ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்தது. இந்தவகையில், 1989 இல் ஆரம்பமாகிய தாராளமயமாக்கலின் இரண்டாவது அலையின் போது பொதுத்துறை தொழில் முயற்சிகளிலிருந்தும் அரசாங்க கூட்டுத்தாபனங்களிலிருந்தும் நிர்வாக அலுவலகங்களிலிருந்தும் சுமார் 100,000 பேர் ஆட்குறைப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.

இரண்டாவதாக, மேலும் அதிகளவிலான தாராளமயமாக்கல் வழிமுறைகள் புதிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கத்துக்கு பங்களிப்புச் செய்தன. பங்குச் சந்தை நடவடிக்கைகள், துணிகர மூலதன தொழில் மு ற்சிகள் மற்றும் வணிக வங்கித்தொழில் போன்றவற்றின் அபிவிருத்தியுடன் இணைந்த விதத்தில் நாட்டின் நிதிச் சந்தையில் பல புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகிக் கொண்டிருந்தன. பொருள் உற்பத்தித் துறையிலும் கூட புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது. 1977க்குப் பின்னர் ஒப்புதல் அளிக்கப்பட்ட பாகொபொஆ சாராத செய்திட்டங்களிலான மொத்த வேலை வாய்ப்புக்கள் 1978 இல் 2,500 ஆக இருந்து 1992 அளவில் சுமார் 70,000 ஆக அதிகரித்துக் காணப்பட்டன. மேலும், வெளிநாட்டு நேரடி முதலீடு வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்துக்கு கணிசமான அளவிலான ஒரு பங்களிப்பினை அளித்திருந்தது. பாகொபொஆ நிறுவனங்களில் உள்நாட்டவர்களுக்கான வேலை வாய்ப்பு 1980 க்கும் 1992 க்கும் இடையில் 10,538 ஆக இருந்து 104,220 ஆக 10 மடங்கிலான அதிகரிப்பினை பதிவு செய்திருந்தது.

இலங்கை முதலீட்டு சபையினால் அளிக்கப்பட்ட வரி விடு முறைகள் போன்ற பல்வேறு சலுகை ரீதியான திட்டங்கள் காரணமாக பொருள் உற்பத்தித்துறையின் வேலை வாய்ப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இவற்றுள் முக்கியமாக குறிப்பிடத்தக்கது 200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டமாகும். இந்தத் திட்டம் ஓரளவுக்கு ஊக்குவிப்புக்களினால் தூண்டப்பட்ட திட்டமாகவும், ஓரளவுக்கு பலவந்தத்தினால் தூண்டப்பட்ட திட்டமாகவும் இருந்து வந்தது. கிராமப் பிரதேசங்கள் மீது சிறப்பாகக் கவனம் செலுத்தி, இதற்கூடாக பிரமாண்டமான அளவில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு தொழிற்சாலையும் 200 தொடக்கம் 400 வரையிலான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதுவரையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் மொத்தம் 50,000 புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1989 அளவில் சுமார் 317,000 இலங்கையர்கள் (தேசிய ஊழியர் படையில் சுமார் 5 சதவிகிதம்) வெளிநாடுகளில் தொழில் புரிந்து வந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது (ரொட்ரிகோ, 1991). வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கென இடம் பெற்ற குடியகல்வில் சுமார் 80 சதவிகிதம் வளைகுடா நாடுகளை நோக்கியே இடம்பெற்றுள்ளது. குறிப்பாக, 1989 தொடக்கம் சராசரியாக சுமார் 80,000 பேர் வளைகுடா நாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்களுக்காக சென்று கொண்டிருந்தனர். இத்தொழில்கள் தொடர்பாக 1980 களின் நடுப்பகுதியில் நிலவிய மந்த நிலையுடன் ஒப்பிடும் பொழுது இதனை ஒரு முன்னேற்றமாகவே குறிப்பிட வேண்டியுள்ளது. மேலும், செலாவணிக் கட்டுப்பாடுகள் தாராளமயமாக்கப்பட்டமையும், என். ஆர்.எப்.சி. கணக்கு வசதிகள் அளிக்கப்பட்டமையும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான குடிப்பெயர்ச்சி அதிகரிப்பதற்கு உதவியிருந்தன.

மூன்றாவதாக, பிந்திய 1980 கள் தொடக்கம் சுய தொழில் திட்டங்களில் ஒரு திடீர் பெருக்கம் ஏற்பட்டு வந்துள்ளது. நிதி தாராளமயமாக்கலின் விளைவாகவே இத்திட்டங்கள் தூண்டப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிக முயற்சிகளுக்கான கொடுகடன் தாராளமயமாக்கலையும் இத்திட்டங்களில் ஒன்று உள்ளடக்குகின்றது. இது சிறு தொழில் முயற்சியாளர்கள் அதிகளவுக்கு கடன் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான கதவுகளை திறந்து விட்டுள்ளது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி போன்ற கொடுகடன் நிறுவனங்களினால் துவக்கி வைக்கப்பட்ட இக்கடன் திட்டத்தின் மிக முக்கியமான கொள்கை கடன் பெறுவதற்குத் தடையாக இருந்து வந்த அதிகார வர்க்க தடங்கல்களை களைவதாகும். இக்கடன்கள் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதனால் சுய தொழில் வாய்ப்புத் திட்டங்களில் அவை மிக முக்கியமான தாக்கங்களை கொண்டுள்ளன.

சனசக்தி வறுமை ஒழிப்புத் திட்டம் மிக முக்கியமான சுய தொழில் திட்டமாகும். அது தலையீட்டுத்தன்மை கொண்ட வருமான பதிலீட்டு திட்டமொன்றுபோல இருப்பதாக தென்பட்டாலும் கூட, நடைமுறையில் அது தற்சார்பினை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்ட உற்பத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், சனசக்தித்திட்டம் சந்தை ஆதரவு வழிமுறையொன்றாக

இருந்து வருகின்றது. சிறப்பாக இலக்காக்கிக் கொள்ளப்பட்ட வறிய பிரிவினருக்கு இரண்டுவருட காலப் பிரிவின் போது நுகர்வுத் தேவைக்கென மாதாந்தம் ரூபா 1,458 வழங்கப்படுகிறது. மாதமொன்றுக்கான சேமிப்புக்கூறு ரூபா 1,042 ஆகும். இரண்டு வருடங்களின் முடிவில் இது ரூபா 25,000 சேமிப்பு நிதியமொன்றை கட்டி எழுப்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச் சேமிப்புக் கூறினை தொழில் ஒன்றை துவக்குவதற்காகப் பெறப்படும் வங்கிக் கடனுக்கான பிணையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இத் திட்டத்துக்கென சனசக்தி வங்கிகள் போன்ற சிறப்பு கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவாக சுமார் 40,000 - 60,000 பேர் வேலை வாய்ப்பினை பெற்றிருப்பதாக பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. எனினும், இவற்றின் முறைசாராத இயல்பு காரணமாக இத்தரவுகளை உறுதியாக நிரூபித்துக் காட்ட முடியவில்லை. தேசிய இளைஞர் சேவை மற்றும் கடன் நிறுவனம் (NYSCO), மகளிர் பணியகம், சர்வோதய இயக்கம் மற்றும் 'சணச' போன்ற பல அரசு சாரா அமைப்புக்களும் விசேஷ சுயதொழில் உருவாக்கத் திட்டங்களை துவக்கி வைத்துள்ளன.

தாராளமயமாக்கல் வழிமுறைகள், (பதவி நீக்கங்களுடன் ஒப்பிடும் பொழுது) அதிக அளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்துள்ளன என்பது தெளிவாகும். எனினும், இது வேலையில்லாத்திண்டாட்ட விகிதத்தை ஒற்றை இலக்கத்துக்கு இறக்கி விடுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. தொழில் தொடர்பான சில சட்டவாக்கங்களுடன் சம்பந்தப்பட்டிருந்த குறிப்பிட்ட சில நெகிழ்வற்ற தன்மைகளை அகற்றும் விதத்தில் ஊழியச் சந்தையின் தாராளமயமாக்கல் நிகழ்வுப்போக்கோ தானாகவே ஊடுருவிச் செல்லவில்லை என்பது இதற்கு அளிக்கப்படும் ஒரு விளக்கமாகும். எனவே, (ஏனைய பல காரணிகளுக்கு மத்தியில்) தற்பொழுது நிலவி வரும் தொழில் சட்டவாக்கங்கள் காரணமாக, பாரிய அளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதில் தனியார் துறை கணிசமான அளவில் சிரமங்களை எதிர்கொண்டது.

பின்வரும் காரணிகள் நாட்டில் நிலவி வரும் உயர் மட்டத்திலான வேலையில்லாத் திண்டாட்டத்தினை சற்று விரிவாக எடுத்து விளக்குகின்றன:

1. நீண்டகாலமாக வேலை தேடுதல்

வறுமை தொடர்பான மதிப்பீட்டு ஆய்வுகள், வேலை இன்மையினால் அன்றி, சம்பாத்தியங்கள் குறைவாக இருப்பதனாலேயே வறுமை நிலவி வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றன (உலகவங்கி, 1992). குடித்தொகையின் மிக வறிய பிரிவினரைப் பொறுத்தவரையில் கீழ் உழைப்பு மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக உள்ளது. பொதுவாக, "தொழில் வாய்ப்பு" என வரைவிலக்கணம் செய்யப்படும் முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டு வந்த போதிலும் இந்த வேலைவாய்ப்பு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறைந்த எல்லை விளைதிறனையே கொண்டுள்ளது. நாளொன்றுக்கு ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவான வருமானத்தைப் பெற்றுக் கொள்பவர்கள் "வறியவர்கள்" என உலக வங்கி வரைவிலக்கணம் வழங்கியுள்ளது. இந்த வறியவர்களிடையேயான வேலையின்மை முற்றுமுழுதான ஊழியர்படையினதும் வேலையின்மை மாதிரியிலிருந்து வேறுபட்டதாக இருந்து வரவில்லை. மேலும், வேலையில்லாது இருப்பவர்களில் சுமார் 90 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் நிதி உதவிகளுக்காக தமது குடும்பங்களில் தங்கி உள்ளனர்.

ஒழுங்குபடுத்தப்படாத துறையில் பெருமளவில் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடியதாக இருந்த போதிலும், வேலையற்றிருப்பவர்கள் பொருளாதாரத்தின் ஒழுங்கமைந்த துறையில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் அருமையான தொழில்களை பெற்றுக்கொள்வதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றார்கள் போல் தோன்றுகின்றது. ஒழுங்கமைந்த துறையில் நிலவி வரும் தொழில் பாதுகாப்பு இதற்கு ஒரு காரணமாக இருக்க முடியும். மறுபுறத்தில், முறைசாராத துறையில் தொழில் பாதுகாப்பும் அனுகூலங்களும் குறைந்த அளவிலேயே உள்ளன. இந்த அடிப்படையில் வேலையற்றிருப்பவர்கள் தமக்கு ஒரு பொருத்தமான வேலை கிடைக்கும் வரையில் வேலை தேடுவதில் நீண்ட காலத்தை செலவிட்டு வருகிறார்கள்.

2. ஊழியர்படை பங்கேற்பு விகிதத்தில் அதிகரிப்பு

வேலை வாய்ப்புக்கள் விரிவடைந்து வந்ததுடன் இணைந்த விதத்தில் 1982 க்கு பிற்பட்ட காலத்தில் ஊழியர் படை பங்கேற்பு விகிதங்களில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, பெருந்தொகையான மகளிர் ஊழியர்படையில் பிரவேசித்துள்ளார்கள். ஊழியர் வெளிப்பாய்ச்சலும் இந்த பங்கேற்பு விகிதங்களை அதிகரிக்கச் செய்துள்ளது. சுதந்தர வர்த்தக வலயத்தின் ஊழியர்களில் சுமார் 78 சதவீதத்தினர் (1992-81,412 பேர்) இளம் பெண்களாக உள்ளனர். சுதந்திர வர்த்தக வலயங்களில் இளம் பெண்கள் பாரிய அளவில் வேலை செய்து வருவது உலகெங்கிலும் காணப்படும் ஒரு பொதுப் பண்பாகும். சுவவ தொழில் வாய்ப்புக்கள் இல்லாதிருந்தால் இப் பெண்கள் ஊழியர் படைக்கு வெளியே இருந்திருப்பார்கள். வெளிநாடுகளில் வேலை செய்பவர்களிலும் பெரும்பாலானவர்கள் பெண்களாவார்கள். இவ்விதம் குடிபெயர்ந்து செல்வதற்கு வாய்ப்புக் கிடைக்காதிருந்தால் அவர்களும் ஊழியச் சந்தையில் சேர்ந்திருக்கமாட்டார்கள். ஊழியர் படை பங்கேற்பு விகிதம் 1985-86 ல் 47 ஆக இருந்து 1990 இல் 52.2 ஆக அதிகரித்திருந்தது.

3. குடிபெயர்ந்த தொழிலாளர்களின் உள்வருகை

வெளிநாடுகளை நோக்கிய ஊழியப் பெயர்ச்சி ஒருவகையில் வேலையில்லாத்திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைத்துள்ளது; அதாவது, குடிப் பெயர்ச்சியின் விளைவாக 1980 களின் நடுப்பகுதி தொடக்கம் வருடாந்தம் சராசரியாக

சுமார் 50,000 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால், தொழிலாளர்கள் (உள்நாட்டில் வேலைகளை நாடி) மீண்டும் நாட்டுக்குள் திரும்பி வரும் விடயம் பொதுவாக வேலைவாய்ப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பெருமளவுக்கு ஒப்பந்த அடிப் படையிலேயே இடம் பெற்று வருவதனால், தொழிலாளர் வெளிப்பாய்ச்சலைப் போலவே உட்பாய்ச்சலும் இடம் பெறுவது இதன் ஓர் உள்ளார்ந்த இயல்பாக இருந்து வருகின்றது என ரொட்ரிகோ (1991) சுட்டிக்காட்டுகிறார். தமது ஒப்பந்தம் முடிவடைந்ததும் ஆண்டு தோறும் பெருந்தொகையான தொழிலாளர்கள் தாயகம் திரும்புகிறார்கள். இவ்விதம் வருடாந்தம் திரும்பி வருபவர்களின் எண்ணிக்கை 1989 இல் 67,000 ஆக இருந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது. வேறு சில வருடங்களின் போது - குறிப்பாக, வளைகுடா நெருக்கடி இடம் பெற்ற 1990 களின் தொடக்கத்தின் போது- நாடு திரும்பிய தொழிலாளர்களின் எண்ணிக்கை குடிபெயர்ந்து சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க உயர்வானதாக இருந்துள்ளது.

நாடு திரும்பியவர்களிடையே வேலையின்மை விகிதம் மிக உயர்வாக இருந்து வருவதனை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. மார்கா நிறுவனத்தின் ஆய்வொன்றின் படி, இது 1986 இல் 45 சதவீதமாக இருந்தது. நாடு திரும்பியவர்களில் முக்கியமாக பெண்களிடையே வேலையின்மை விகிதம் மிக மோசமானதாக இருந்தது. உயர் சம்பள எதிர்பார்ப்புக்கள், மோசமான வேலை நிலைமைகள் மற்றும் பொருத்தமற்ற திறன்கள் என்பன முக்கிய இடையூறுகளாக இருந்து வருகின்றன. வீட்டுப் பணிப் பெண்களாக தொழில் புரிந்துவிட்டு நாடு திரும்பியவர்கள், உள் நாட்டில் குறைந்த சம்பளத்தில் மோசமான நிலைமைகளின் கீழ் வேலை செய்வதிலும் பார்க்க தமது சேமிப்புக் களைக் கொண்டு வாழ்க்கை நடத்தவே விரும்பினார்கள் என்பதனை மார்கா ஆய்வு கண்டறிந்துள்ளது. மேலும், பெருந்தொகையான தொழிலாளர்கள் மீண்டும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார்கள்.

தொழில் வாய்ப்புக்களுக்காக இடம்பெற்று வரும் குடிப் பெயர்ச்சியின் மற்றொரு சிறப்பம்சம், உறவினர்கள் இவர்கள் மீது தங்கியிருக்கும் நிலையாகும். குறிப்பாக, 1983 இன் பின்னர் அகதிகளாக நாட்டை விட்டுச் சென்றுள்ள தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரையில் இது ஒரு பொதுவான குணாம்சமாக இருந்து வருகின்றது. பெரும்பாலான வர்கள் தமது வாழ்க்கைத் துணைகள், பிள்ளைகள் மற்றும் ஏனைய உறவினர் போன்றோர் வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் பணத்தில் தங்கியிருந்து வருவதனால், குடும்ப உதவியாகத் தாம் பெற்றுக் கொள்ளும் அளவிலும் பார்க்க குறைந்த வேதன விகிதங்களில் வேலை செய்வதற்கு விரும்புவதில்லை. பொதுவாக வெளிநாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகப் பணி புரிந்து வரும் பெண்களின் கணவன்மாரின் நிலை இவ்விதமே உள்ளது.

## 4. முடிவுக் குறிப்புக்கள்

இதுவரையில் எடுத்துக்காட்டப் பட்ட விடயங்கள் இலங்கையில் நிலவி வரும் இரட்டை இலக்க வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்தை ஓரளவுக்கு எடுத்து விளக்குகின்றன. இலங்கை, பரந்த அமைப்பு ரீதியான சீராக்கல் கட்டமைப்புக்குள் வருங் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்தை குறைப்பதற்கு கொள்கை களை உருவாக்க வேண்டியது அவசியமாகும். வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதற்கான நுண்மட்ட கொள்கை தெரிவுகளை முன் வைப்பது எமது நோக்கமாக இருக்கவில்லை. ஆனால், பரந்த ஒரு பேரண்ட பொருளியல் மட்டத்தில் வேலையிலலாத் திண்டாட்டப் பிரச்சினை பின்வரும் விதத்தில் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

நாட்டின் தற்போதைய வேலையில்லாத் திண்டாட்ட விகிதம் ஊழியர் படையின் சுமார் 13 சதவிகிதமாக இருந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, ஆண்டுதோறும் ஊழியர் படைக்கு புதிதாக பெருந்தொகையானோர் சேர்ந்து கொள்கின்றனர்; இவ்விதம் வருடாந்தம் புதிதாக சேர்ந்து கொள்பவர்களின் அளவு சுமார் 120,000 ஆகும். 1990 களின் போது சராசரி வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் ஆண்டொன்றுக்கு 70,000 ஆக இருந்து வந்துள்ளது. ஏற்கனவே திரண்டிருக்கும் வேலையற்றவர் களையும் ஊழியர் படையில் புதிதாகச் சேர்ந்து கொள்பவர்களையும் அடுத்த தசாப்தத்தின் போது ஊழியர் படைக்குள் உறிஞ்சிக் கொள்வதற்காக நாட்டின் வளர்ச்சி செயல்திறன் உயர் அளவில் இருந்து வர வேண்டும் என்பது தெளிவாகும். அதாவது, சுமார் 120,000 ஆட்களை ஊழியர் படையில் உறிஞ்சிக் கொள்வதற்கு குறைந்தது 8.5 சதவீத வளர்ச்சி ஏற்பட வேண்டியிருக்கும். ஆனால், ஏற்கனவே திரண்டிருக்கும் வேலையற்றோரின் எண்ணிக்கையையும் கவனத்தில் எடுக்கும் போது இதைவிட உயர்ந்த ஒரு வள்ர்ச்சி விகிதம் அவசியப்படும்.

( 18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திக் கருதுகோள் தொடர்பான பிறிதொரு அணுகுமுறை சுற்றுச் சூழல் குறித்த அம்சங்களையும் தனக்குள் அடக்கியிருக்கும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்ற கருதுகோளாகும். இந்த கருதுகோளின் அடிப்படையில், அபிவிருத்தி என்பது, வருங்காலத் தலைமுறையினரின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு பங்கம் எதனையும் ஏற்படுத்தாத வகையில் இன்றைய தலைமுறையின் தேவைகளை நிறைவு செய்வதாகும்.

இன்றைய சூழ்நிலையில் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு சமூக நலனில் ஓர் அதிகரிப்பினை எடுத்து வருவதற்குப் போதுமான ஒரு நிலைமையாக இருந்துவரவில்லை. எனவே, வளர்ச்சி, தானாகவே நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு வழிகோலுவதில்லை. இலத்தீன் அமெரிக்க நாடுகள் இதற்கான சிறந்த உதாரணங்களாகும். இந்நாடுகளில் ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சிகளுடன் இணைந்த விதத்தில் அபிவிருத்தி ஏற்படவில்லை.

# குற்றங்களின் பொருளியல்

டப்.ஏ.விஜேவர்தன

பொருளியலாளர்கள் "குற்றம்" என்ற பதத்தினை சொத்து உரிமைகளின் மீறல் என்ற வகையில் நோக்குகிறார்கள். பொருளாதார ஜனநாயமொன்றில், ஒவ்வொரு தனி நபரும் தனது ஆளுமை மீதும் மற்றும் தனக்கு உரித்தாக இருக்கும் ஏதாவதொரு பௌதீக சொத்தின் மீதும் முழுமையான சொத்துரிமை ஒன்றினைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படுகிறது. எனவே, இந்த அடிப்படையில், தனி நபர் ஒருவர் தனது ஆளுமையின் ஆதாயங்களை (ஊழியச் சேவைகளை) அல்லது பௌதீகச் சொத்தினை (ஏனைய உற்பத்திக் காரணிகளை) சந்தையொன்றில் விற்பனை செய்ய முடியும் அல்லது விற்பனை செய்யாதிருக்கத் தீர்மானிக்க முடியும். ஆகவே, ஒருவரின் இணக்கத்துடனும் போதிய நட்ட ஈட்டுடனும் மற்றொருவர் அவருடைய சொத்து உரிமையை மீறினால் அது ஒரு சொத்து உரிமை மீறலாக கருதப்படமாட்டாது. அந்த வகையில், பொருளாதார நோக்கில் அது ஒரு குற்றமாக கருதப்படுவதில்லை. சம்மதம் இல்லாமலும் பொருத்தமான நட்டஈடு வழங்கப்படாமலும் அத்தகைய மீறல் ஒன்று இடம் பெறும் பொழுது அது ஒரு குற்றச் செயலாகி விடுகின்றது.

எனவே, பொருளாதார அடிப்படையில் "குற்றம்" என கருதப்படும் விடயம், சட்டத்தின் கண்ணோட்டத்தில் குற்றம் எனக் கருதப்படும் விடயத்திலும் பார்க்க பரவலான ஒரு வீச்சியினைக் கொண்டிருப்பதனை மேலே உள்ள பகுப்பாய்வு சுட்டிக் காட்டுகிறது. இறைமையினால் விதிக்கப்பட்டிருக்கும் ஒரு சட்டம் அல்லது சட்ட விதி மீறப்படும் பொழுது ஒரு குற்றம் இழைக்கப்படுவதாக சட்டவியலாளர் கருதுகிறார். ஊழியச் சேவைகளின் ஆதாயங்களை அல்லது வேறேதேனும் பௌதீகச் சொத்தினை அரசு பலவந்தமாக கையகப்படுத்துவதை சட்டவியலாளர்கள் ஒரு குற்றச் செயலாக கருதுவதில்லை. அந்த நடவடிக்கைக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு சட்டம் இருந்தால் அல்லது அத்தகைய கையேற்புக்குப் பணிப்புரை வழங்குவதற்கு அரசுக்கு அதிகாரம் இருந்தால் அச்செயல் சட்டவறிஞர்களால் ஒரு குற்றச்செயலாகக் கருதப்படுவதில்லை. எனவே, தனியார் சொத்துக்கள் அரசினால் தேசியமயமாக்கப்படுதல், ஊழியத்தினை பலவந்தமாகப் பெற்றுக் கொள்ளல் மற்றும் கட்டாய சேவை போன்றவை-சட்டபூர்வமாக விதித்துரைக்கப்பட்ட முறையில் அவை மேற்கொள்ளப்படும் வரையில்-சட்டவியலாளர்களால் குற்றச் செயல்களாக கருதப்படுவதில்லை. எனினும், பொருளாதாரக் கண்ணோட்டத்தைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட சொத்துக்களின் சொந்தக்காரர்களின் விருப்பத்துக்கு மாறாக மேற்கொள்ளப்பட்டு வருவதனால் (ஒரு சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ நட்டஈடு வழங்கப்பட்டு வந்தபோதிலும்) இவை குற்றச் செயல்களாக கருதப்பட்டு வருகின்றன.

பொருளியலாளர்கள், வழமையாக இரண்டு காரணங்களுக்காக குற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள்: முதலாவதாக, சொத்து உரிமை மீறல் பொருளாதாரமொன்றின் மூலவள ஒதுக்கினை மிக மோசமாகப் பாதித்து வருகின்றது. ஏனெனில், மற்றொருவரின் உழைப்பின் பயன்களை, அதற்கு ஈடாகக்கூடிய நட்ட ஈடு எதுவுமின்றி அனுபவிப்பதற்கு இது மற்றொருவருக்கு - அரசாக இருந்தாலும் சரி தனி நபர் ஒருவராக இருந்தாலும் சரி இடமளிக்கின்றது. பொருளாதார ஜனநாயகமொன்றில் தனிநபர்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்கிறார்கள். ஆனால், சந்தையில் இடம் பெறும் இருவர் சுயவிருப்புப் பரிமாற்றங்களுக் கூடாகவே இந்த உதவி வழங்கப்படுகிறது. உதாரணமாக, நான் எனது ஊழியச் சேவைகளை வழங்குவதன் மூலம் எனது வேலை கொள்வோருக்கு உதவுகிறேன்; ஆனால், சீவனோபாயத்துக்கான சம்பளமொன்றை வழங்குவதன் மூலம் அவரும் எனக்கு உதவுகிறார். இந்தப் பரிமாற்றம் சுய விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெற்று வரும் வரையில், எனக்கோ அல்லது எனது வேலை கொள்வோருக்கோ இந்த ஏற்பாட்டில் திருப்தி ஏற்படாவிட்டால், இதிலிருந்து விலகிக் கொள்வதற்கான சுதந்திரம் உள்ளது. குற்றச் செயல் ஒன்றில் இடம் பெறுவது போல விற்பனை செய்வதற்கான அல்லது விற்பனை செய்யாதிருப்பதற்கான இந்த சுதந்திரமான தெரிவு ஒடுக்கப்படும் பொழுது அந்த மீறல் பொருளாதாரமொன்றில் மூலவளப் பகிர்வுக்கு இடையூறு விளைவிக்கின்றது. ஏனெனில், இத்தகைய சூழ்நிலைகளில் செயல் திறன் குறித்த அளவு கோல்களை பின்பற்றாது பல்வேறு நடவடிக்கை களுக்காக மூலவளங்கள் பலவந்தமாக திசை திருப்பப்பட முடியும். இரண்டாவதாக, ஒரு தரப்பினரின் செலவில் பிறிதொரு தரப்பினர் ஆதாயமடைவதற்கு வாய்ப்பளிக்கப் படுவதனால் பொருளியலாளர்கள் இத்தகைய குற்றங்களை வெறுக் கின்றனர். இத்தகைய வாய்ப்புக்கள் அளிக்கப்படும் பொழுது சமுகத்தின் ஒரு பிரிவினரை தமக்கு இரையாக்கிக் கொள்ளும் மற்றொரு பிரிவினர் செழித் தோங்குவதற்கு அது வழிகோலக் கூடியதாக இருந்து வருவதனால், அத்தகைய ஒரு நிலைமை பொருளாதாரத்தின் நீண்ட கால நிலைத்த தன்மைக்கு உகந்ததாக இருக்க மாட்டாது. இந்த வகையில், அளவற்ற பொருளாதார அனுகூலங்களை ஈட்டிக் கொள்வதற்கான சாத்தியப்பாடு உள்ளது என்பதனை தெரிந்து கொள்ளும்பொழுது, ஒவ்வொருவரும் தமது மூலவளங்களை உற்பத்திசார் வேலை வாய்ப்புக்களில் முடக்குவதற்குப் பதிலாக, சும்மா இருந்து சம்பாதிக்கக்கூடிய இந்த வழியில் ஒதுக்குவதற்குத் தூண்டப்பட்டு விடுவார்கள். சமுகத்தில் இத்தகைய ஆட்கள் நிறையப் பேர் இருந்து வருகின்றார்கள். பொருளியலாளர்கள்

இதனை "வாடகை தேடும் சமூகங்கள்" என வருணித்து வருகின்றார்கள். ஏனெனில், வாடகை என்பது சம்பாதிக்கப்படாத வருமானத்துக்கான மறு பெயராகவே உள்ளது. எனவே, பொருளியலாளர்களின் கண்ணோட்டத்தில் அரசினாலும் அதே போல தனி நபர்களினாலும் இழைக்கப்படும் குற்றங்கள், பொருளாதாரத்தின் பொருத்தமான செயற்பாட்டுக்கும் நீண்ட கால நிலைத்த தன்மைக்கும் ஒரேயளவில் ஊறு விளைவிக்கத் தக்கவையாகும்.

நட்ட ஈடு வழங்கப்படாத பலவந்தமான கையேற்புக்களிலிருந்து அரசு தவிர்ந்துகொள்ள வேண்டும் என்றும், தனி நபர்கள் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை தடுக்க வேண்டும் என்றும் பொருளியலாளர்கள் இதற்குப் பரிகாரம் தெரிவிக்கிறார்கள். இவ்விதம் இலவசமாக கையகப்படுத்திக் கொள்ளும் பொருளாதார அனுகூலங்களின் செலவை உயர்த்தக்கூடிய தாக்கமான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் இந்தத் தடை மேற்கொள்ளப்பட முடியும். இச் சந்தர்ப்பத்தில், பொருளியலாளர்கள் பயன்பாட்டுவாதம் என்ற ஒரு கோட்பாட்டினை விரிவாகப் பயன்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு மனிதச் செயலும் மகிழ்ச்சியை அல்லது வேதனையை ஏற்படுத்துகின்றது என்றும், வேதனையை தவிர்த்து மகிழ்ச்சியைத் தேடிச் செல்லும் போக்கினை மனிதர்கள் இயல்பாகவே பெற்றுள்ளார்கள் என்றும் இக்கோட்பாடு விளக்குகிறது. எனவே, ஒரு நடவடிக்கையை தடுப்பதற்கு விரும்பினால், அந்தக் குறிக்கோளை எட்டிக் கொள்வதற்கான மிகத் தாக்கமான உபாயம் மூன்று வேறுபட்ட வடிவங்களைப் பெற முடியும்: மகிழ்ச்சியை குறைத்தல், வேதனையை அதிகரித்தல் அல்லது இவை இரண்டினதும் சேர்க்கையை அனுபவித்தல். அதன் பிரகாரம் உயிரைப் பறித்தல் (மரண தண்டனை), விடுதலை மறுப்பு (சிறைத் தண்டனை) அல்லது சொத்துக்களைப் பறித்தல் (அபராதங்கள்) போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி வேதனை அளிக்கப்படும் பொழுது, ஒரு குற்றவாளி தனது செய்கையிலிருந்து பின்வாங்கச் செய்யப்படுவான் என்று கூறப்படுகிறது. எனினும், விவேகமுள்ள ஒரு குற்றவாளி தனது குற்றச் செயலின் மூலம் கிடைக்கக்கூடிய ஆதாயத்தை, தான் சட்டத்தின் கைகளில் பிடிபட நேரிட்டால் அனுபவிக்கக் கூடிய வேதனையுடன் எப்பொழுதும் ஒப்பிட்டு நோக்குவான். அனுபவிக்க வேண்டியிருக்கும் வேதனை கிட்டும் ஆதாயத்திலும் பார்க்க உயர்வானதாக இருந்தால் மட்டுமே அக்குற்றச் செயலிலிருந்து அவன் பின்வாங்க முடியும். எனவே, பொருளியலாளர்கள் சமூகத்தில் குற்றச் செயல்களை தடுப்பதற்கு எனச் சில பரிகாரங்களை முன்வைக்கின்றனர். குற்றவாளிகள் பிடிபடக்கூடிய சந்தர்ப்பங்களை அதிகரித்தல், ஒவ்வொரு குற்றச் செயலின் மூலமும் வறிதாக்கப்பட்டுள்ள பொருளாதார அனுகூலங்களின் அளவுக்கு ஏற்ற விதத்தில் பல்வேறு அளவுகளில் அபராதங்களை விதித்தல் என்பன இந்தப் பரிகாரங்களாகும். மிகக் கடுமையான அபராதங்கள் விதிக்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாகும். ஆனால், இந்நோக்கத்துக்கென குற்றத் தடுப்பின் செலவுகள் மற்றும் அனுகூலங்கள் என்பன குறித்த ஒப்பீடு ஒன்றை மேற்கொள்ளாது, சமூகத்தின் அருமையான மூலவளங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என பொருளியலாளர்கள் கருதுகின்றனர். எனவே, இந்த அடிப்படையிலேயே பொலிஸ் அமைப்புக்கள், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் என்பவற்றை பராமரிப்பதற்காக மூலவளங்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வருதல் வேண்டும். இதன் பின் விளைவாக சமூகமொன்றில் குற்றச் செயல்கள் பூச்சியமட்டத்தில் இடம்பெற வேண்டும் என பொருளியலாளர்கள் வாதிடுவதில்லை. மாறாக, கிடைக்கக் கூடியதாக இருக்கும் மூலவளங்கள் இடமளிக்கும் அளவுக்கு குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். இந்த நிலையில், சமூகத்தில் ஓரளவுக்கு குற்றச் செயல்கள் இடம்பெற முடியும்; ஆனால், அவற்றைத்தடுப்பதற்காக மூல வளங்களைப் பயன்படுத்துவது என்பது சமூகத்துக்கு செலவு மிக்க ஒரு நடவடிக்கையாக இருக்கலாம். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், ஒரு சமூகம், குற்றச் செயலொன்றைத் தடுப்பதன் மூலம் தனக்கு எந்த ஆதாயமும் கிட்டவில்லை என்பனதக் கண்டு கொண்டால், அது அக்குற்றச் செயலைத் தடுப்பதற்கு முயற்சிக்கக் கூடாது. எனவே, அரசின் குற்றத் தடுப்பு பொறிமுறையை விரிவாக்குவதற்குப் பதிலாக, அப்பொறிமுறையின் ஆற்றலை உயர்த்துவதன் மூலம் குற்றங்களை தடுப்பதற்கு முயற்சிக்கப் படுதல் வேண்டும்.

குற்றச் செயல்களை முழு அளவில் ஒழித்து விடும் குறிக்கோளை ஒரு சமூகம் கொண்டிருப்பது சாத்தியமானது அல்ல என்ற பொறியலாளர்களின் யோசனை சமூகத்தின் சில பிரிவினர்களால் ஏற்கப்படாதிருக்கக் கூடும். ஆனால், மேலைய நாடுகளின்- குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் - நடைமுறை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த யோசனை முன் வைக்கப்படுகிறது. அந் நாட்டில் மிகக் கடுமையான குற்றத் தடுப்பு முயற்சிகளின் விளைவாக புதிய புதிய வகைகளிலான குற்றச் செயல்கள் பரவியுள்ளன. பூச்சிக் கட்டப்பாட்டு முயற்சியில் உயிரியலாளர்கள்அடிக்கடி சந்தித்து வரும் "எதிர்த்து நின்று மீண்டும் உயிர்த்தெழும் பிரச்சினை" என்ற நிலைமையுடன் இதனை ஒப்பிட முடியும். (ஒரு பூச்சியை ஒரு குற்றவாளியாகக் கருதிக் கொள்ளுங்கள்). குறிப்பிட்ட ஒரு பூச்சித் தொகுதியின் மீது நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனம் ஒன்று பிரயோகிக்கப்படும் பொழுது, அவற்றில் சில சக்திவாய்ந்த பூச்சிகள் அந்த நச்சினை எதிர்த்து நின்று, கெடுதல் விளைவிக்கும் தாக்கத்திலிருந்து தப்பிக் கொள்கின்றன. இவ்விதம் தப்பி உயிர் வாழும் பூச்சிகள் வெற்றிகரமாக எதிர்த்து நிற்பதன் விளைவாக, சக்தி வாய்ந்த கிருமிகள் தொகுதியொன்றின் புத்துயிர்ப்பு இடம் பெறுகின்றது. அவை மிகக் குறுகிய காலத்துக்குள் பாரியளவில் பெருக்க மடைகின்றன. இதே போல, சக்தி வாய்ந்த சில குற்றவாளிகள் குற்றத் தடுப்பு செயல்களிலிருந்து வெற்றிகர மாகத் தம்மைக் காத்துக்கொண்டு தமது செயல்பாடுகளில் அதி நவீன முறைகளைப் பயன்படுத்தக் கூடியவர்களாக மாற முடியும்.

# கல்வியில் மகளிரின் பங்கேற்பும் அபிவிருத்தியின் மீதான அதன் தாக்கமும்

ஏ.ஜே.சதரசிங்க
(தொகை மதிப்பு, புள்ளிவிவர திணைக்களம்)


## 1. அறிமுகம்

அபிவிருத்தியில் மகளிரின் பங்கு குறித்து இன்று தேசிய மற்றும் சர்வதேசிய நிறுவனங்கள் உலகெங்கிலும் தீவிரமாக கலந்துரையாடி வருகின்றன. மகளிரின் ஒரு பொதுவான மனக்குறை அபிவிருத்தி நிகழ்வுப்போக்கில் தமக்குப் பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றது என்பதாகும்: நிலம், கடன் மற்றும் வசதிகள் என்பன தொடர்பாக மூலவளங்களைப் பெற்றுக் கொள்வதில் ஆண்கள் தங்களை முந்திக் கொள்கிறார்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள். மிக முக்கியமாக, சமமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அத்தியாவசியமானதாக இருந்து வரும் கல்வியில் அவர்களுக்குப் போதிய வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை என்று கூறப்பட்டு வருகிறது.

எனினும், கடந்த ஐந்து தசாப்த காலத்தின் போது, இலங்கையில் வாழும் மகளிர் சமுதாயம் பல்வேறு துறைகளில் - குறிப்பாக கல்வி போன்ற மிக முக்கியமான துறைகளில் - சம வாய்ப்புக்களை சாதித்துக் கொள்வதில் கணிசமான அளவில் முன்னேற்றம் கண்டு வந்துள்ளது. இலங்கையில் 1945 இல் இலவச கல்வி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது: 1950 களில் போதனாமொழி ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கும் தமிழுக்கும் மாற்றப்பட்டது: 1940 கள் தொடக்கம் நாடெங்கிலும் மத்திய கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டு வந்துள்ளதுடன், பிந்திய 1960 களில் கிராம மட்டத்திலான மகா வித்தியாலயங்கள் அமைக்கப்பட்டன. இந்த மாற்றங்கள் அனைத்தும் கல்விக்கான பரவலான வாய்ப்புக்களை திறந்து விட்டதுடன், ஆரம்பக் கல்வியிலும் நடுநிலைக் கல்வியிலும் சேர்ந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை இடையறாது அதிகரிக்கச் செய்தன. இவற்றின் விளைவாக, நாட்டு மக்களில் எழுத்தறிவு பெற்றவர்களின் விகிதம் உயர்ந்து சென்றதுடன், கல்விச் சாதனையிலும் ஏனைய பல ஆசிய நாடுகளிலும் பார்க்க இலங்கை முன்னணியில் நின்றிருந்தது. இன்று கல்வியில் பால் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாக தெரியவில்லை.

மகளிரின் எழுத்தறிவு விகிதமும் கல்வி மட்டங்களும் உயர்வாக இருந்த போதிலும் ஊழியச் சந்தையில் இன்னமும் கூட பால் வேறுபாடு நிலவி வருகின்றது. பெண்கள் பெருமளவுக்கு "பெண்களுக்குப் பொருத்தமானவை" எனக் கருதப்படும் தொழில்களிலேயே செறிந்து காணப்படுகின்றனர். பெரும்பாலான மகளிர் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தொழிற்பயிற்சி மையங்களிலும் கலைத்துறை சார்ந்த பாடநெறிகளையே பயின்று வருகின்றனர்.

ஆறு பாகங்களைக் கொண்ட இக்கட்டுரை கல்வியல் மகளிரின் சேர்வு மற்றும் பங்கெடுப்பு என்பன தொடர்பான போக்குகளையும் அபிவித்தி நிகழ்வுப்போக்கு மீதான அதன் தாக்கத்தினையும் பரிசீலனை செய்கின்றது. முதலாம் பாகம் பாடசாலை வகைகளையும் கல்வி முறையில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்களையும் எடுத்து விளக்குகிறது. ஆண் மற்றும் பெண் பிள்ளைகளின் கல்வி ஆற்றல்கள் இரண்டாம் பாகத்தில்



கலந்துரையாடப்படுகின்றன. மூன்றாம் பாகம் பாடசாலைச் சேர்வு தொடர்பான தரவுகளை கவனத்தில் எடுக்கின்றது. அடுத்து வரும் இரு பாகங்களிலும் உயர் கல்வியில் மகளிரின் பங்கு குறித்தும், அபிவிருத்தியில் கல்வியின் தாக்கம் குறித்தும் கவனத்தில் எடுக்கப் படுகின்றது. முடிவுக் குறிப்புக்கள் இறுதிப் பாகத்தில் தரப்பட்டுள்ளன.

## 2. பாடசாலைகளின் வகைகளும் ஆசிரியர்களும்

### 2.1 பாடசாலைகள்

நாட்டில் 1991 அளவில் சுமார் 10,000 அரசாங்கப்பாடசாலைகளும், 69 தனியார் பாடசாலைகளும், 547 பிரிவினாக்களும் 3,000 தொழிற்பயிற்சி மையங்களும், 9 பல்கலைக்கழகங்களும் பெருந்தொகையான இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகளும் இயங்கி வந்தன. அரசாங்கப் பாடசாலைகள் வகைகள் IAB, IC , 2 மற்றும் 3 என நான்கு வகைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. IAB பாடசாலைகள் க.பொ.த. (உ.த.) விஞ்ஞான வகுப்புக்கள் வரைகொண்டுள்ளதுடன், IC பாடசாலை க.பொ.த. (உ.த.) வர்த்தகம், கலை வகுப்புக்கள் வரை வகுப்புக்களை கொண்டுள்ளன. ஆண்டு 11 வரையில் வகுப்புக்களைக் கொண்டிருக்கும் பாடசாலைகள் வகை 2 எனவும் ஆண்டு 1 - 5 வரையில் அல்லது ஆண்டு 1- 8 வரையில் வகுப்புக்களை கொண்டிருக்கும் பாடசாலைகள் வகை 3 எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. சரியாக மாணவர்களில் 97 சத வீதத்தினர் அரசாங்கப் பாடசாலை களிலும், இரண்டு சதவீதத்தினர் தனியார் பாடசாலைகளிலும், ஒரு சத வீதத்தினர் பிரிவினாக்களிலும், கல்வி பயின்று வருகின்றனர். மொத்தம் சுமார் 10,000 அரசாங்கப் பாடசாலைகளில் 513 (5%) பாடசாலைகள் மட்டுமே IAB வகையைச் சேர்ந்த பாடசாலைகளாக உள்ளன. பெரும்பாலானவை (43%) வகை 3 ஐச் சேர்ந்த பாடசாலை களாகும்.

வருடாந்தம் குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையிலான வகை 3 பாடசாலைகள் பாடசாலை அமைப்புக்குள் சேர்ந்து கொள்கின்றன. அதே வேளையில், தேவைப்படும் வசதிகளை அளிப்பதன் மூலம் பாடசாலைகள் அடுத்த உயர்தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, IAB, IC வகைகளைச் சேர்ந்த பாடசாலைகளின் சதவீதம் படிப்படியாக அதிகரித்து வந்துள்ள அதே வேளையில், அதற்கு இணையான விதத்தில் வகை 2 பாடசாலைகளின் சதவீதம் வீழ்ச்சி அடைந்து வந்துள்ளது.

தனியார் பாடசாலைகள் பெரும்பாலும் வசதிபடைத்த குடும்பங்களையும் வெளிநாட்டவர் களின் குடும்பங்களையும் சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்வி அளித்து வருகின்றன. போதனா மொழி ஆங்கிலமாக இருந்து வரும் தனியார் பாடசாலைகள் மேல் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் மட்டுமே அமைந்துள்ளன. இந்தப் பாட சாலைகள் அறவிடும் கட்டணங்கள் விதிவிலக்காக உயர் அளவில் இருந்து வருகின்றன.

பாடசாலைகளில் மிகப் பெருந்தொகையானவை (96.5%) கலவன் பாடசாலைகளாகவே இருந்து வருகின்றன. மகளிர் பாடசாலைகள் 2 சதவீதமாகவும், ஆண்கள் பாடசாலைகள் 1.4 சதவீதமாகவும் உள்ளன. சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மாணவர்களும் முஸ்லிம் மாணவர்களும் சேர்ந்து படித்து வருவதனால், மாணவர்களின் இனத்துவ அடிப்படையில் பாடசாலைகளை வகைப்படுத்துவது சிரமமான காரியமாகும். சராசரியாக 72 சதவீதமான பாடசாலைகள் பிரதானமாக சிங்களப் பாடசாலை களாக இருந்து வருவதுடன், தமிழ் பாடசாலைகளும் முஸ்லிம் பாட சாலைகளும் முறையே 20.6 சத வீதமாகவும், 7.1 சதவீதமாகவும் இருந்து வருகின்றன. இந்த சதவிகிதங் களில் கடந்த தசாப்தத்தின் போது கணிசமான அளவில் மாற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை.


அரசாங்கப் பாடசாலைகளில் பெரும்பாலானவை (77%) கிராமப் பிரதேசங்களில் அமைந்திருப்பதுடன், இவை ஒவ்வொன்றும் 500 க்குக் குறைவான மாணவர்களைக் கொண் டுள்ளன. நாட்டில் செயற்பட்டு வரும் பாடசாலைகளில் 5.1 சதவீதப் பாடசாலைகள் மட்டுமே 1500 க்கு மேற் பட்ட மாணவர் தொகையையும், விஞ்ஞான வகுப்புக்களையும் ஏனைய வசதிகளையும் கொண்டுள்ளன. எனவே, கிராமப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் பிள்ளைகள் உயர் கல்வியில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே உள்ளன. பெண் பிள்ளைகள் நீண்ட காலத்துக்கு தமது வீட்டை விட்டு வெளியே செல்வதனை சமூக, கலாச்சார விழுமியங்கள் தடுத்து வருவதனால், இந்த நிலையில் பெண்கள், ஆண்களிலும் பார்க்க அதிகளவுக்கு பாதிப்படையக் கூடியவர்களாக உள்ளனர். பிள்ளை களைப் படிப்பதற்கென நகர்ப் புறங்களுக்கு அனுப்புவது செலவு கூடியதாக இருந்து வருவதனால் உயர் கல்வி அளிக்கும் விஷயத்தில் ஆண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டு வருகின்றது. கிராமப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில், பொதுக் கட்டமைப்பு வசதிகள் பெருமளவுக்கு குறைவாகவே உள்ளன. இது நகரப் பாடசாலைகளுக்கும் கிராமப் பாடசாலைகளுக் கு மிடையிலான கல்வி மட்டங்களில் ஏற்றத்தாழ்வினை எடுத்து வருகின்றது. பாடசாலைகளின் செயல் திறனைப் பாதித்து வரும் மற்றொரு காரணி கற்பித்தலின் தரத்தில் நிலவி வரும் ஏற்றத்தாழ்வாகும்.

### 2.2 அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள்

அரசாங்கப் பாடசாலைகளில் சுமார் 185,000 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் 113,912 பேர் -அல்லது 62 சத வீதத்தினர் - பெண் களாவார்கள். அதிகளவுக்குத் தகைமை பெற்றுள்ள ஆசிரியர்கள் வளர்ச்சி யடைந்துள்ள மாவட்டங்களிலேயே செறிந்துள்ளனர். இதன் விளைவாக, நகர்ப்புறங்களுக்கும் கிராமப் புறங்களுக்குமிடையே கல்விப் போதனையின் தரத்தில் வேறுபாடு தோன்றுகிறது. மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருவதுடன் இணைந்த விதத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் துரிதமாக அதிகரித்து


வந்துள்ளது. ஆசிரியர்களின் எண்ணிக்கை 1981 இல் 135,000 ஆக இருந்து 1994 இல் 184,822 ஆக உயர்ந்திருந்தது. இவ்விதம் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் பெருக்கம் ஏற்பட்டு வந்தமையினால், ஆசிரிய-மாணவ விகிதம் ஆசிரியர் ஒருவருக்கு 25-26 மாணவர்கள் என்ற அளவில் திருப்திகரமான விதத்தில் இருந்து வந்துள்ளது. ஆசிரியர் சேவைக்கு 1990 இல் கணிசமான அளவில் ஆட்சேர்ப்பு இடம் பெற்றதனையடுத்து இந்த விகிதம் 23 ஆக விருத்தி கண்டிருந்தது. தனியார் பாடசாலைகளில் இது ஆசிரியர் ஒருவருக்கு 27.2 மாணவர்கள் என்ற அளவில் உள்ளது.

வரைபடம் 2
ஆசிரியர் எண்ணிக்கை




தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கிடையே சமனற்ற முறையில் பகிரப்பட்டுள்ளனர். ஆசிரியர்களில் சராசரியாக நான்கிலொரு பங்கினர் பட்டதாரிகளாக இருந்து வருவதுடன், 27 சதவீதத்தினர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக உள்ளனர்; க.பொ.த.(சா.த.), க.பொ.த. (உ.த.) தகைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ள ஆசிரியர்களின் அளவு சுமார் 27 சதவீதமாகும். இந்த வகையைச் சேர்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1981 இல் 28,857 ஆக இருந்து 1991 இல் 46,544 ஆக துரிதமாக விரிவாக்கம் கண்டிருந்தது. ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருந்து வந்த போதிலும், தகைமை பெற்றுள்ளவர்களில் பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகமாக உள்ளனர். அரசாங்கம் 1990 இல் செயற்படுத்திய ஓய்வு பெறும் திட்டத்தின் விளைவாக பயிற்றப்பட்ட, நன்கு அனுபவம் வாய்ந்த பல ஆசிரியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் பெரும்பாலும் பயிற்றப்படாத ஆசிரியர்களாகவே இருந்தனர். அதாவது, 1991 இல் சுமார் 55,000 ஆசிரியர்கள் (மொத்தத்தில் 32%) பயிற்றப்படாதவர்களாக இருந்து வந்தனர். இது ஆசிரியர் பயிற்சியை ஒரு முன்னுரிமை விடயமாக்கியிருந்தது. ஆண்டு 5 வரையில் வகுப்புக்களைக் கொண்டிருக்கும் சிறிய பாடசாலைகள் பெரும்பாலும் கிராமப் பிரதேசங்களிலேயே அமைந்திருப்பதுடன், குறைந்த அளவிலான ஆசிரியர்களையும் கொண்டுள்ளன. இப்பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவருக்கு சராசரியாக 50 மாணவர்கள் அளவில் இருந்து வருகின்றனர். இது தேசிய சராசரியிலும் பார்க்க இரு மடங்கு உயர்வானதாகும். குறிப்பிட்ட சில மாவட்டங்களில் ஒரு ஆசிரியருக்கு 100 மாணவர்கள் என்ற அளவில் இது விதிவிலக்கான முறையில் உயர்வாகக் காணப்படுகின்றது.

வரைபடம் 3
தகைமை அடிப்படையில் ஆசிரியர் பங்கீடு 1991




## 3. ஆண் மற்றும் பெண் பிள்ளைகளின் கல்வி ஆற்றல்கள்

ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்குமிடையே ஆற்றல் மற்றும் கல்வித்திறன் என்பவற்றில் வேறுபாடுகள் இருந்து வருவதாக நம்பப்பட்டது. ஆனால், பெறுபேறுகள் இதனை பொய்யானது என நிரூபித்துள்ளன. கணிதம் மற்றும் விஞ்ஞானம் என்பவற்றில் சாதனைகளை நிகழ்த்துவதற்கு முக்கியமானதென கருதப்படும் உள்ளார்ந்த ஆற்றலில் பால்களுக்கிடையே ஒரு வேறுபாடு நிலவி வருகின்றது என்ற கூற்றுக்கு ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் ஆதரவளிக்கும் ஒரு போக்கினை காட்டி வந்துள்ளனர். ஆனால், இதனையடுத்து, பல ஆராய்ச்சியாளர்கள் இக்கோட்பாட்டினை நிராகரித்துள்ளனர் (ஜயவீர, பெரேரா, ரூபசுங்க 1991). ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் போதும் நடுநிலைக் கல்வி மட்டங்களிலும் ஆண் மற்றும் பெண் பிள்ளைகளின் செயல் திறன்களில் முக்கியமான வேறுபாடுகள் எவையும் நிலவி வரவில்லை என பல ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. மேலும், ஆரம்பக் கல்வி மட்டங்களில் பெண்கள் ஆண்களிலும் பார்க்க சிறந்த செயல் திறனைக் காட்டியுள்ளார்கள் என்பதனை ஓர் ஆய்வு (அபயதேவ, 1991) எடுத்துக் காட்டியுள்ளது.

நடு நிலைக் கல்வி மட்டத்தில் செயல் திறனில் ஆண் / பெண் அடிப்படையில் ஒரு வேறுபாடு நிலவி வருகின்றதா என்பதைக் கண்டறிவதற்கென பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயல்திறனை பொறுத்த மட்டில், ஒருவரின் பால் எத்தகைய முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதனை 9 ஆய்வுகளில் 6 ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. ஏனைய மூன்று ஆய்வுகளில் புள்ளி விவர ரீதியில் கணிசமான அளவில் வேறுபாடுகள் காணப்பட்டன. பெண்களிலும் பார்க்க ஆண்களின் செயல்திறன் சிறந்ததாக இருந்து வந்துள்ளதென இரு ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. பால் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்ட ஆய்வுகளில் மாணவர்கள் கலவன் இல்லாத பாடசாலைகளிலிருந்து வந்திருந்தார்கள். ஆண்களும் பெண்களும் ஒரே முறையிலான கல்விப் போதனையைப் பெற்று வந்த கலவன் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான செயல் திறனில் அவ்வளவாக வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் ஒரே விதமான ஆற்றல்களைக் கொண்டிருந்த போதிலும் விஞ்ஞானம், வர்த்தகம்,

கலைகள் போன்ற பிரதான கல்விப் பிரிவுகளில் பெண்கள் தமக்குரித்தான விகிதாசாரத்தை பெற்றிருக்கவில்லை. பாடநூல்களிலும் கூட பெண்களிலும் பார்க்க ஆண்களுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இன்றைய மாறிவரும் சூழ்நிலையில் பெண்களின் அபிலாஷைகள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றுக்கு பொருந்தக் கூடிய விதத்தில் அவர்கள் சித்தரிக்கப் படுவது அவசியமாகும். பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்கும் நோக்கில் பல செய்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், சமூக கலாசார அணுகுமுறைகளில் ஒரு மாற்றமும், மீள் சிந்தனையும் தோன்றுவது இதற்கு அவசியமாகும்.


அட்டவணை 1

| ஆங்கில வாசிப்பு புத்தகங்களில் ஆண், பெண் பாத்திரங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| புத்தகம் | ஆண்டு | பெண் பாத்திரங்கள் | ஆண் பாத்திரங்கள் |
| ஆங்கிலம் | 6 | 7 | 14 |
| ஆங்கிலம் | 8 | 9 | 42 |
| ஆங்கிலம் | 10 | 13 | 45 |


### 4. பாடசாலைகளில் மாணவர்களின் சேர்வு

இலங்கையில் ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வழிமுறையொன்று என்ற முறையில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வியூட்டுவதற்கு முன்னுரிமை அளித்து வந்துள்ளன. இதன் விளைவாக, தொடக்கக் கல்வியிலும் நடுநிலைக் கல்வியுலும் உயர் கல்வியிலும் சேர்ந்து படிக்கும் பெண்களின் எண்ணிக்கையில் இடையறாது அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. எழுத்தறிவு, பாடசாலை சேர்வு என்பவற்றில் இலங்கை உயர் விகிதங்களை பதிவுசெய்து வந்துள்ளது. பாடசாலை செல்லும் வயதைச் சேர்ந்த பிள்ளைகளில் சுமார் 2 சதவீத பிள்ளைகள் மட்டுமே பாடசாலைகளுக்கு முகமளிக்காதிருந்தனர் என்பதனை 1991 இன் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இது ஒரு தசாப்தத்துக்கு முன்னர் 1981 இல் 323,694 மாணவர்கள் புதிதாக பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; இது 1991 இல் 388,315 ஆக இருந்தது. குடிசனவியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் விளைவாக பள்ளி வயதை எட்டும் சிறுவர்களின் எண்ணிக்கை இப்பொழுது வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது.

இடையில் கல்வியை விட்டுச் செல்லுதல் மற்றும் ஒரே வகுப்பில், தொடர்ந்தும் இருத்தல் என்பவற்றை பொறுத்தமட்டில், பெண்களிலும் பார்க்க ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகும். 1991 இல் சுமார் 127,000 (4.5%) பிள்ளைகள் ஆண்டு 1 க்கும் 9 க்கும் இடையில் கல்வி அமைப்பைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளனர். இதில் ஆண்கள் 4.9% ஆக இருந்ததுடன், பெண்கள் 3.8% ஆக இருந்தனர். இதில் ஆகக்கூடிய விகிதமான 10.6 சதவிகிதம் வட மாகாணத்தில் பதிவு செய்யப் பட்டிருந்துடன், ஆகக் குறைந்த விகிதமான 3.3% மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருந்து. ஒரே வகுப்பில் தொடர்ந்து இருந்து வருவதனை பொறுத்தவரையில் ஆண்களின் விகிதம் 9.8% ஆகவும் பெண்களின் விகிதம் 8.7% ஆகவும் இருந்துள்ளது.




ஆண்களிலும் பார்க்க பெண்கள் அதிகமானோர் உயர் கல்வியை நாடிச் செல்கின்றனர். ஆனால், ஆண்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இளம் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் மட்டுமே கிடைக்கக்கூடியதாக உள்ளது. பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கும் குடும்பங்கள் ஆண் பிள்ளைகளை இளம் வயதிலேயே வேலைக்கு அனுப்புவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இந்த நிலையில் பெண் பிள்ளைகள் தமது கல்வியை தொடர்கிறார்கள். கல்விப் பங்கேற்பு விகிதம் 15-19 வயது தொகுதியைச் சேர்ந்த ஆண்களிடையே 1991 இல் 41.2% ஆக இருந்து வந்ததுடன், அதே வயதுத் தொகுதியைச் சேர்ந்த பெண்களிடையே 42.7% ஆக இருந்தது. கல்வி பங்கேற்பு விகிதங்களிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே அவ்வளவாக வேறுபாடுகள் நிலவி வரவில்லை. இது 1991 இல் ஆண்கள் தொடர்பாக 62.1% ஆகவும் பெண்கள் தொடர்பாக 63.4% ஆகவும் இருந்தது. முறைசார்ந்த உயர் கல்வி நிறுவனங்களில் வரையறுக்கப் பட்ட அளவில் மட்டுமே வசதிகள் காரணப்பட்டு வருவதன் விளைவாக, ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களும் மாணவிகளும் முறைசார்ந்த கல்வி அமைப்பை விட்டு வெளியேறிச் செல்கின்றனர். வறுமை, கல்விக்காகும் செலவு மற்றும் பிள்ளைகளின் சம்பாத்தியத்தில் குடும்பங்கள் தங்கியிருக்கும் நிலை போன்ற காரணிகள் இதற்குப் பங்களிப்புச் செய்து வருகின்றன.




### 5. உயர் கல்வியில் மகளிர்

இலங்கையில், பொதுவாக பல்கலைக்கழகங்களே உயர்கல்வி நிறுவனங்களாக இருந்து வருகின்றன. சிறந்த தொழில் வாய்ப்புக்களுக்கான வழிகளை இப்பல்கலைக்கழகங்களே அளிக்கின்றன. இப்பொழுது திறமையின் அடிப்படையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உயர் கல்வியில் சம வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகின்றது. பெண்களுக்கு கல்வி ஊட்டுவது தொடர்பான மனப்


பாங்குகள் சமூக, பொருளாதாரப் பின்னணி, வதிவிடம், பெற்றோரின் கல்வி மட்டம், கல்விக்காகும் செலவு போன்ற பல காரணிகளுக்கேற்ப வேறுபடுகின்றன. இலங்கையில், 1940 களின் போது மகளிரின் பங்கும் எதிர்பார்ப்புக்களும் உயர் கல்வியையும், தொழில் ஒன்றையும் நோக்கியதாக இருந்து வரவில்லை. இக்காலப் பிரிவில் நடுத்தட்டு வர்க்கத்தை சேர்ந்த தொழில்களில ஈடுபட்டு வந்த மக்கள் தமது பிள்ளைகளை பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பக்கூடியதாக இருந்தது. இப்பொழுது நிலைமை மாறியுள்ளது. சமூகத்தின் அனைத்து மட்டங்களையும் சேர்ந்த பொற்றோர் தகுதியின் அடிப்படையில் தமது பிள்ளைகளை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப முடியும்.

பெற்றோர் அளிக்கும ஊக்குவிப்பு ஒருபுறம் இருக்க, நடுநிலைக் கல்வியை பெற்று வரும் மாணவர்கள் உயர் கல்வியை தொடர்வதில் இப்பொழுது தீவிரமாக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். க.பொ.த.(சா.த.) வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் (பால் வேறுபாடோ இனத்துவ வேறுபாடுகளோ எவையும் இன்றி) பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியை தொடர்வதில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்துக் காட்டியுள்ளார்கள்.

1960 களின் பிற்பகுதியில் நடுநிலைக் கல்வி விஸ்தரிக்கப் பட்டமையையும் உள்ளடக்கிய கல்விக் கொள்கைகளின் விளைவாக உயர் கல்வியில் சேர்ந்து கொள்ளும் மகளிரின் விகிதாசாரம் கணிசமான அளவில்அதிகரித்தது. உதாரணமாக, 1942 இல் பல்கலைக்கழகங்களில் சுமார் 10.1 சதவீதமான மகளிர் மட்டுமே கல்வி கற்று வந்தனர். இது 1967இல் 40 சதவீதமாக உயர்ந்ததுடன், அதன் பின்னர் அது ஒரு போதும் 40 சதவீத மட்டத்துக்கு கீழ் வீழ்ச்சியடையவில்லை. முஸ்லிம்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்து இனக் குழுக்களிலும் இதனை மிகத் தெளிவாக காண முடிகிறது. முஸ்லிம் மகளிர் தொழில்சார் கல்வி நெறிகளிலும் பார்க்க வணிகத்துறையின் மீது அதிக அளவில் ஈடுபாடு காட்டி வருவதே உயர் கல்வியில் அவர்களுடைய பங்கேற்பு குறைவாக இருப்பதற்கு காரணமாகுமென ஓர் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. மேலும், பர்தா நடைமுறை உயர் கல்வியில் நுழையும் மகளிரின் எண்ணிக்கையை குறைவடையச் செய்துள்ளது (ஜயவீர, 1993). கல்வியில்சமத்துவமான கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்த போதிலும், இத்தகைய சமூக, பொருளாதாரக் காரணிகள் உயர் கல்வியில் மகளிரின் பங்கேற்பு மீது தாக்கத்தை எடுத்து வருகின்றன.

கடந்த நான்கு தசாப்த காலத்தின் போது உயர் கல்வியில் மகளிரின் பங்கேற்பு அதிகரித்து வந்துள்ளபோதிலும் பெரும்பாலான மகளிர் கலைத்துறை சார்ந்த பாடநெறிகளைக் கற்று வரும் ஒரு போக்கினை அவதானிக்க முடிகிறது. கல்வியைப் பொறுத்தவரையில், ஆண்கள் தொடர்பாக பொதுவான உயர் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பன வலியுறுத்தப்பட்டு வரும் அதே வேளையில், பெண்களைப் பொறுத்தவரையில் குடும்ப வாழ்க்கையுடன் தொடர்பான விடயங்கள் மற்றும் வீட்டு நடவடிக்கைகள் என்பவற்றுக்கே அதிக அளவில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. 1990 இல் பல்கலைக்கழகங்களில் 56.5 வீதமான மகளிர் கலைத்துறைப் பாடங்களைப் பயின்று வருகின்றனர். ஆனால், விஞ்ஞானத்துறையில் 100 ஆண்களில் பெண்கள் 59 தொடக்கம் 94 வரையில் உள்ளனர்; கலைப் பாடங்களைப் பொறுத்தவரையில் 142 ஆண்களுக்கு 342 பெண்களும், வர்த்தகத்தில் 90 ஆண்களுக்கு 130 பெண்களும் உள்ளனர்.

இப்பொழுது அதிக அளவிலான பெண்கள் விவசாயம், முகாமை மற்றும் சமூக விஞ்ஞானம் போன்ற கல்விப் பீடங்களில் பிரவேசித்து வருகின்றனர். ஆனால், பொறியியல் பீடத்தில் தொடர்ந்தும் ஆண்களின் ஆதிக்கமே நிலவி வருகின்றது. 1990 இல் பல்கலைக்கழகங்களின் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடங்களில் சுமார் 40 சதவீதமான பெண்கள் பயின்று வந்தனர். இதே வேளையில் கட்டடக் கலைத்துறையில் அவர்களின் விகிதம் 4.6 சதவீதமாகவும், மருத்துவத் துறையில் 11.3 சதவீதமாகவும், பொறியியல் துறையில் 2.6 சதவீதமாகவும் மட்டுமே இருந்து வந்தது. இந்த ஏற்றத்தாழ்வு பெண்களின் வேலை வாய்ப்புக்களிலும் ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியும்




## 6. கல்வியும் அபிவிருத்தியும்

மகளிருக்கு சிறந்த கல்வியை அளிப்பது நாட்டின் அபிவிருத்தியின் மீது ஒரு நேரடியான தாக்கத்தை எடுத்து வருகிறது என சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகம் குறிப்பிடுகின்றது. செல்வத்தை உருவாக்கும் பொருட்டு

ஆண்களினதும் பெண்களினதும் ஆற்றல்களை மேம்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவது என்பதே பொருளாதார அபிவிருத்தி என்ற பதத்தின் பொருளாகும்.

இளம் பெண்களும் மகளிரும் பொருளாதார அபிவிருத்திக்குப் பெருமளவுக்கு பங்களிப்பினை நல்கி வருகின்றனர். எனவே, அவர்களுக்குப் பொருத்தமான கல்வி மற்றும் தொழில் நோக்கிலான திறன்களை பெற்றுக் கொடுக்காதிருப்பதன் மூலம் பல நாடுகள் இந்தப் பெறுமதிமிக்க மூலவளங்களிலிருந்து பயனடையத் தவறியுள்ளன. இலங்கையில் அனைத்து மட்டங்களிலும் மகளிருக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் சிறந்த கல்வி வாய்ப்புக்கள் அவர்களுடைய வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதுடன், ஒட்டுமொத்தமாக சமூகத்திற்கு நன்மையளிக்கின்றது.

அட்டவணை 2

| எழுத்தறிவு விகிதம் | | | |
|---|---|---|---|
| பால் | 1946 | 1963 | 1992 |
| ஆண் | 76.5 | 76.8 | 86.9 |
| பெண் | 46.2 | 67.1 | 83.8 |
| மொத்தம் | 62.8 | 76.8 | 86.9 |

பெண்கள் நீண்டகாலத்தை பாடசாலைகளில் கழித்து வருவதனால் திருமண வயது பின்போடப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக, நாட்டின் கருவள விகிதத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்படுகிறது. உதாரணமாக, 1940 இல் 2.7 சதவீதமாக இருந்த குடித்தொகை வளர்ச்சி, கருவளத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்துள்ள வீழ்ச்சியின் காரணமாக 1990 களில் 1.4 சதவீதமாகக் குறைவடைந்திருந்தது. கடந்த மூன்று தசாப்த காலத்தின் போது சராசரி திருமண வயது 25 வருடங்களாக அதிகரித்திருந்ததுடன், சராசரி குடும்ப அளவு 4.9 ஆக வீழ்ச்சி கண்டது. 1946 இல் 46.2 சதவீதமாக இருந்த மகளிரின் எழுத்தறிவு 1992 இல் 83.8 சதவீதமாக கணிசமான அளவில் உயர்ந்து சென்றிருந்தது.

அபிவிருத்தி நிகழ்வுப்போக்கு பாரம்பரிய ஊழியப்பிரிவு முறையை மாற்றியமைக்கிறது. மகளிர் சுதந்திர மானவர்களாக இருந்து வர வேண்டு மானால் அவர்கள் வருமானம் உழைக்கக் கூடியவர்களாக ஆக்கப் படுதல் வேண்டும். மகளிருடன் சம்பந்தப்பட்டுள்ள பெரும்பாலான சமூக, கலாச்சாரப் பிரச்சினைகள் அவர்கள் ஆண்கள் மீது தங்கியிருக்கும் நிலையிலிருந்தே தோன்றுகின்றன. கல்வியைப் பூர்த்தி செய்யும் பெண்களுக்கு ஆண்களுக்கு இணையான விதத்தில் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால், பெண்கள் இங்கு ஒரு முரண் பாட்டினைச் சந்திக்கிறார்கள்; அபிலாஷைகளுக்கும் நடத்தைப் பாங்கு களுக்கும் இடையே சமூகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் ஒரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றன. தொழிற் சந்தையில் பால் வித்தியாசத்தை உருவாக்குதல் போன்ற வழிமுறைகளின் மூலம் அவர்களின் தொழில் வாய்ப்புக்கள் கட்டுப் படுத்தப்படும் ஒரு போக்கு தென்படுகிறது.

இலங்கையில் குடித்தொகை வளர்ச்சி மற்றும் கல்விப் பெருக்கம் என்பவற்றின் பின்விளைவாக 1960 கள் தொடக்கம் பெண் ஊழியா படை ஆண் ஊழியர் படையிலும் பார்க்க விரைவான வேகத்தில் வளர்ச்சி கண்டு வந்துள்ளது (ஜயவீர 1993). ஆனால், வேலை தேடும் அனைவரையும் பொருளாதாரத்தினால் உறிஞ்சிக் கொள்ள முடியாதிருந்ததனால் பிந்திய 1960 கள் தொடக்கம் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வந்தது. இதில் 1970 களில் சிறிதளவிலான ஒருவீழ்ச்சி தென்பட்ட போதிலும், 1980-1990 காலப்பிரிவின் போது இது மீண்டும் உயர்ந்து சென்றது. எனினும், 1990 தொடக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தில் வீழ்ச்சி ஏற்படும் ஒரு

அட்டவணை 3

| வேலையின்மை விகிதங்கள்: 1990, 1993 | | |
|---|---|---|
| பால் | 1990 | 1993 |
| ஆண் | 10.2 | 9.9 |
| பெண் | 24.1 | 21.0 |
| மொத்தம் | 15.2 | 13.6 |


போக்கு தென்பட்டு வருகிறது. ஆனால், வேலையில்லாதிருக்கும் பெண்களின் அளவு ஆண்களின் அளவிலும் பார்க்க இருமடங்காகும்.

பெண்கள் தமது குடும்பப் பொறுப்புக்களுக்கு இடையே தாம் பெற்றிருக்கும் கல்வித்தகைமைக்கு ஏற்ற விதத்தில் தொழில்களை தேடிச் செல்வதற்கான வாய்ப்பும் சுதந்திரமும் வரை யறுக்கப்பட்டிருப்பது இதற்கு ஓரளவு காரணமாகும். இதன் காரணமாக, அவர்கள் சார்புரீதியில் குறைந்த வேதனங்களும் குறைந்த் திறன்களும் கொண்ட தொழில் களுக்குள் தம்மை வரையறுத்துக் கொள்ளும் ஒரு போக்கு தென்படுகிறது. பெருந்தொகையான பெண்கள் கல்வி மூலம் பெற்றுக் கொண்டிருக்கும் அறிவு நமது நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டு வரவில்லை யென்பதே இதன் பொருளாகும்.

1981 இல் தொழில் செய்து வந்த பெண்களில் 80 சதவிகிதத்தினர் வேதனம் பெறும் தொலில்களில் ஈடுபட்டிருந்தனர். இது 1990 இல் 55.6 சதவீதமாக விழ்ச்சி அடைந்ததுடன், சுமார் அரைவாசிப் பகுதியினர் சமயாசமய ஊழியர்களாகவே தொழில் புரிந்து வந்தனர். கூலி பெறாத குடும்ப உழைப்பாளர்கள் என்ற முறையில் 1981 இல் 6.5 சதவீத மாகவிருந்த பெண்களின் அளவு 1990 இல் 25.1 சதவீதமாக அதிகரித்திருந்தது (ஜயவீர 1993). அரசாங்கத்துறையிலும் கூட்டுத்தாபனத்துறையிலும் மகளிர் ஊழியர்களின் ஆட்சேர்ப்பில் கணிசமான அளவில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு வந்துள்ளது என்பது உற்சாகமளிக்கக் கூடிய ஒரு விடயமாகும். 1985-1990 காலத்தின் போது தற்காலிக மகளிர் ஊழியரின் சதவீதம் 63.9 வித்திலிருந்து 45.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

பெண்களில் மிகப் பெருந் தொகையானோர் இன்னமும் விவசாயம், பெருந்தோட்டக் கைத்தொழில், பாரம்பரியக் கைத்தொழில்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் வீட்டுச் சேவைகள் போன்ற துறைகளிலேயே வேலை செய்து வருகிறார்கள். 1990 இல் வேலை வாய்ப்பு தொகை மதிப்பின் பிரகாரம் தாதிமாரில் 90 சதவீதத்தினர் பெண்களாக இருந்தனர்; அதே வேளையில், பொறியியலாளர்களில் பெண்கள் 9 சதவீதமாக மட்டுமே

வரைபடம் 7
தற்பொழுது வேலை செய்பவர்களின்
சதவீத பகிர்வு




இருந்தனர். உயர் முகாமை மட்டத்தைப் பொறுத்தவரையில் 1984 இல் 3.7 சதவீதமாகவிருந்த பெண்களின் விகிதம் 1992 இல் 17.5 சதவீதமாக அதிகரித்திருந்தது. மகளிர் பொதுவாக குறை நிரப்பு வருமான உழைப்போராகக் கருதப்பட்டு வருவதுடன், ஊழியச் செறிவு மிகுந்த கைத்தொழில் பிரிவுகளில் விரும்பி வேலை செய்யக் கூடியவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

ஊழியச் சந்தையில் காணப்படும் பால் அடிப்படையிலான பாரபட்சத்தை நீக்கும் பொருட்டு இரண்டு விடயங்கள் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்: தொழில்சார் பாடநெறிகளைப் பயிலுமாறு பெண்களை ஊக்குவிப்பது இதில் முதலாவதாகும். கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கி, செயற்படுத்துவதற்கு பொறுப்பாக இருப்பவர்களிடம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஒரு ஆடுகளத்தினை வழங்க வேண்டியதன் அவசியத்தை உணர வைப்பது இரண்டாவதாகும்.

பெற்றோர் இருவரும் ஒரே அளவில் கல்வி மட்டங்களை பெற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவதில், தாய் அதிக நேரத்தை செலவிட்டு வருவதாகவும், குடும்பத்தின் கல்வியில் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வருவதாகவும் அறியப்பட்டுள்ளது.

| தொழில்வகை | மொத்த ஊழியர் | பெண் ஊழியர் | பெண்கள் விகிதம் |
|---|---|---|---|
| அனைத்து வகைகளும் | 700,592 | 207,856 | 29.67 |
| தெரிவு செய்யப்பட்ட வகைகள் | | | |
| மூத்த அரச அதிகாரிகள், முகாமையாளர்கள் | | 1,007 | 11.14 |
| பொறியியலாளர் | 2,752 | 272 | 9.88 |
| மருத்துவா | 1,745 | 733 | 42.01 |
| பல மருத்துவர் | 238 | 123 | 51.68 |
| தாதிமார் | 11,261 | 10,179 | 90.39 |
| மருத்துவிச்சி | 4,413 | 4,413 | 100.00 |
| அளவையாளர் | 811 | 82 | 10.11 |
| பட வரைவோர் | 2,341 | 875 | 37.38 |
| நீதிபதிகள், வழக்கறிஞர்கள் | 278 | 154 | 55.40 |
| கணக்காளர்கள் | 1,821 | 349 | 19.17 |
| புள்ளிவிவரவியலாளர் | 91 | 28 | 30.77 |
| கம்ப்யூட்டர் ஆளணி | 301 | 98 | 32.5 |
| பள்ளி ஆசிரியர் | 144,182 | 98,123 | 68.05 |
| தொழில்நுட்பவியலாளர் | 24,844 | 2,862 | 11.52 |
| எழுதுவினைஞர் போன்றோர் | 82,957 | 28,586 | 34.46 |
| தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் | 14,148 | 11,517 | 81.40 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 82,202 | 3,109 | 3.78 |
| சிற்றூழியர், அலுவலக தொழிலாளர் | 47,583 | 2,292 | 4.82 |

மூலம் : தொகைமதிப்பு, புள்ளிவிவர திணைக்களம்

இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் காலத்துக்குக் காலம் செயற்படுத்தப்பட்டு வந்த கல்விக் கொள்கைகள் மக்களின் வாழ்க்கை தரத்தை கணிசமான அளவில் விருத்தி செய்துள்ளன. இக்கொள்கைகளில் இருந்து மகளிர் பெருமளவுக்குப் பயன் அடைந்துள்ளனர். மகளிரின் எழுத்தறிவு விகிதத்திலும், பல்கலைக் கழக பிரவேசத்திலும் இடையறாது ஏற்பட்டு வந்துள்ள அதிகரிப்புக்கள் இதனை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், தகுதி பெற்றுக் கொள்ளும் பெண்களை பொருத்தமான தொழில்களுக்குள் உறிஞ்சிக் கொள்வதற்கு போதியளவில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படாதிருப்பது கவலையளிக்கும் ஒரு விஷயமாகும். இதன் விளைவாக, மகளிரின் நிலை அவர்களின் கல்விச் சாதனைகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்துக்கு இணையான விதத்தில் விருத்தியடைய வில்லை.

கல்விக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் மூன்று வழிகளில் மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவ முடியும் :

1. மகளிரின் ஆற்றல்களையும் திறன்களையும் விருத்தி செய்வதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.
2. தொழில்களுக்கான ஆட்சேர்ப்பில் பால் பாரபட்சத்தை ஒழித்தல்.
3. மகளிர் சமமான அந்தஸ்தை பெறுவதற்கு இடையூறாக இருந்து வரும் பாரம்பரிய அணுகுமுறைகளை மாற்றியமைத்தல்.

# இலங்கையின் அரசிறை அமைப்பு

## அறிமுகம்

கலப்புப் பொருளாதாரமொன்றில் அரசு கொண்டிருக்கும் பல பொறுப்புக்கள் குறித்து சென்ற இதழ் கட்டுரையில் கலந்தாலோசித்தோம். இப்பணிகளை நிறைவு செய்வதற்காக அரசாங்கமொன்று பெருந்தொகையில் பணத்தை செலுவு செய்ய வேண்டியிருப்பதுடன், அதற்கென பல வழிகளில் (பொருளாதாரத்துக்கு ஒரு நெருக்குதல் ஏற்படாத விதத்தில்) நிதிகளை திரட்டுவது அவசியமாகும். அதனை நாங்கள் அரசிறை (Government Revenue) என அழைக்கிறோம். அரசாங்கத்துக்கு பிரதானமாக இரண்டு வழிகள் மூலம் வருமானம் கிடைத்து வருகின்றது. வரிகள் மூலமும் வரிகள் அல்லாத அரசாங்க தொழில் நடவடிக்கைகள் மூலமும் இவ்விதம் வருமானம் திரட்டிக் கொள்ளப் படுகிறது. பொதுவாக நோக்கும் பொழுது இந்த வழிமுறைகள் ஒரு சில வரையறைகளைக் கொண்டிருப்பதனைக் காண முடிகிறது. திரட்டிக் கொள்ளக் கூடிய வருமானம் ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார கட்டமைப்பைப் பொறுத்தும், சமூக குறிக்கோள்களைப் பொறுத்தும் வேறுபடுகின்றது. பொதுவாக, அரசாங்கம் நாட்டின் மொத்த உற்பத்திப் பெறுமதியில் – அதாவது, மொத்த வருமானத்தில்– குறிப்பிட்ட ஒரு சதவிகிதத்தை மட்டுமே வரிகளாக அறவிட்டுக் கொள்ள முடியும். இத சதவிகிதம் ஒவ்வொரு வரிவகையைப் பொறுத்தும் வேறுபடும். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் முயற்சிகளிலிருந்து கட்டணங்களை அறவிடுவதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதிலும் சில வரையறைகள் உண்டு. எவ்வாறிருந்தபோதிலும், இலங்கையின் அனுபவத்துக்கூடாக, வரி மற்றும் வரியல்லாத வருமான முறைகள் குறித்து சற்று விரிவாக நோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அரசிறை கொள்கையின் நோக்கங்கள்

விரிவாக நோக்கும்பொழுது, அரசிறைக் கொள்கையொன்று பல்வேறு குறிக்கோள்களை நிறைவேற்றும் எதிர்பார்ப்பைக் கொண்டிருப்பதனைக் காண முடிகிறது. அதன் மூலம் முதலில் எதிர்பார்க்கப்படுவது அரசாங்கத்தின் செலவை ஈடு செய்வதற்கு அவசியமான மூல வளங்களை ஒன்று திரட்டுவதாகும் (Resource Mobilisation). இது தொடர்பாக வலு, தொலைத் தொடர்பு சேவைகள், புகையிரதப் பாதைகள், நெடுஞ் சாலைகள், நீர் விநியோகம், விமான நிலைய அபிவிருத்தி மற்றும் துறைமுக நடவடிக்கைகள் போன்ற அரசாங்கத்தின் பொதுவான பொருளாதார பணிகளுக்கும், அதேபோல கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பணிகளுக்கும் என மூலவளங்களை ஒன்று திரட்டுவது அவசியமாகும். இதற்கென அரசாங்கம் வரிகளையும் வரிகள் அல்லாத ஏனைய மூலங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. இரண்டாவதாக, வேலைவாய்ப்பு, பொர்ருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றை பாதுகாத்துக் கொள்வதும் அரசிறைக் கொள்கையின் குறிக்கோளாக உள்ளது. இந்த விடயத்தில், தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதற்கு அவசியமான வரிச் சலுகைகளும், வரி விடுமுறைகளும் அளிப்பதற்கென வரிக்கொள்கையை பயன்படுத்த முடியும். மூன்றாவதாக, பொருளாதாரமொன்றில் வருமானப் பகிர்வினை மேற்கொள்வதற்கும் அரசிறைக் கொள்கையை பயன்படுத்த முடியும். அதாவது, வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடுவது அல்லது வருமானம் உயர்ந்து செல்லும் பொழுது வரி விகிதத்தை அதிகரிப்பது, ஆட்கள் வைத்தருக்கும் தானியங்கள் மற்றும் சொத்துக்கள் என்பவை மீது வரி விதிப்பது, ஆடம்பர பொருட்களுக்கு உயர்ந்த வீதத்தில் வரி விதிப்பது மற்றும் பொது மக்கள் உபயோகிக்கும் பண்டங்களுக்கு வரி விலக்களிப்பது அல்லது வரியை குறைப்பது என்பவற்றுக்கூடாக வருமானப் பகிர்வின் ஏற்றத்தாழ்வினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இந்த குறிக்கோள்களை நோக்கும் பொழுது அரசிறைக் கொள்கை அரச நிதி இயலில் மிக முக்கியமான ஓர் இடத்தை பெற்றிருப்பதைக் காண முடிகிறது. மேலும், அரசிறைக் கொள்கைக்குள் அரச வரிக் கொள்கையும் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொள்கிறது.

## அரச வரிக் கொள்கை

சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் "Manual on Government Finance Statistics 1986" என்ற பிரசுரத்தின் பிரகாரம், ஒரு வரி (Tax) என்பது, பொது நோக்கங்களுக்கென அரசாங்கத்தினால் கட்டாயமாக அறவிடப்படும், திருப்பிச் செலுத்தப்படாத ஒரு தொகையாகும். எனினும், ஓர் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில விதிமுறைகளின் அடிப்படையிலேயே இந்த வரிகளை அறவிட்டு வருகின்றது. இவை வரி விதிமுறைகள் (Canons of taxation) என அழைக்கப்படுகின்றன.

வரி விதிமுறைகளில் சமத்துவக் கோட்பாடே (Canon of Equity) மிகுந்த முக்கியத்துவத்தை பெறுகின்றது. வரி அறவிடுவதில் சமத்துவம் என்று கூறப்படுவதன் பொருள், வரிகளைத்தாங்கிக் கொள்ளும் சக்தி அல்லது செலுத்தும் சக்தி என்பவற்றுக்கேற்ப வரிச் சுமை மாற்றமடைய வேண்டும் என்பதாகும்; அல்லது சமமான வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றை கொண்டிருப்

பவர்களிடமிருந்து சமசமான அளவில் வரி அறவிடப்பட வேண்டுமென்பதாகும். இங்கு ஒருவரின் வரி செலுத்தும் சக்தியை அவருடைய வருமானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்க முடியாது. மாறாக, அவரிடமுள்ள செல்வம், அவர் கடன் பட்டிருக்கும் அளவு பொருளாதாரத்தின் பணவீக்க நிலை மற்றும் குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை போன்ற விடயங்களின் அடிப்படையில் இது நிர்ணயிக்கப் படுதல் வேண்டும். அதேபோல, சமமான வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றை கொண்டிருப்பவர்கள் மீது சமமான அளவில் வரிச் சுமையை திணிக்க வேண்டுமானால், வருமான வரி அறவிடுவதில் உயர் வருமானம் பெறுபவர்களிடமிருந்து அதிகரித் தளவில் வரி அறவிட்டுக் கொள்ளும் வரிமுறை பின்பற்றப்படுதல் வேணடும். மறுபுறத்தில், பண்டங்கள் மீது வரிகளை அறவிடும் பொழுது ஆடம்பர நுகர்பொருட்கள் மீது உயர்ந்த சத வீதத்திலான வரியையும், சாதாரண நுகர்வுப் பொருட்களின் மீது குறைந்த சதவீதத்திலான வரியும் அறவிடப் படுவது அவசியமாகும்.

சிறந்த வரி முறையொன்றில் இருந்துவர வேண்டிய அடுத்த சிறப்பம்சம் நிச்சயத்தன்மை (Canon of certernity) ஆகும். விதிக்கப்பட்டிருக்கும் ஒரு வரியை திடீரென மாற்றக்கூடாது என்பதும், முதலீடு செய்பவர்களின் முதலீடுகளுக்குப் பாதகமான முறையில் இருக்கக்கூடிய விதத்தில் வரி விதிக்கா திருப்பதுமே நிச்சயத்தன்மை என்பதன் பொருளாகும். இவ்விதம் நிச்சயத் தன்மை பாதுகாக்கப்படும் வரி முறையொன்றில் எளிமைக் கோட் பாடும் பாதுகாக்கப்படும். அதாவது, ஒரு வரி எதற்காக செலுத்தப்படுகிறது, எவ்விதம் மதிப்பீடு செய்யப்படுகின்றது என்பவற்றை வரி செலுத்துபவர் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், சம்பந்தப்பட்ட வரிமுறை, வரி செலுத்துபவருக்கு ஒரு தொல்லையாக இருந்துவர மாட்டாது. அதேபோல வருமான வரியை திரட்டுவதற்கான செலவு அதன் மூலம் கிட்டும் ஆதாயத்திலும் பார்க்க உயர்வாக இருக்கும் ஒரு நிலைமையையும் அது உருவாக்க மாட்டாது.

பொருளாதார வளர்ச்சிக்கு வசதி செய்து கொடுக்கும் கோட்பாடு சிறந்த வரிமுறை ஒன்றின் மற்றொரு சிறப்பம்சமாகும். அறவிடப்படும் ஒரு வரி நாட்டின் உற்பத்தி மீது மோசமான தாக்கத்தை எடுத்து வரக் கூடாதென்பதே இதன் பொருளாகும். அதாவது, நாட்டு மக்களின் சேமிப்புக் களை அல்லது முதலீடுகளை ஊக்க மிழக்கச் செய்யக் கூடிய விதத்தில் அது அமையக்கூடாது.

### வரிப் பகுப்பும் இலங்கையில் வரிக் கட்டமைப்பும்

பொதுவாக ஒரு நாட்டின் வரிப் பகுப்பாய்வினை (Classification of taxes) மூன்று முறைகளில் மேற்கொள்ள முடியும்: வரி அடிப்படை மற்றும் வரி விகிதங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு வரிகளை வகைப்படுததுவது ஒரு முறையாகும். இதன் கீழ் விகிதாசார வரிகள், படிப்படியாக உயர்ந்து செல்லும் வரிகள் மற்றும் குறைந்து செல்லும் வரிகள் என மூன்று வகைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. வருமானத்தில் அல்லது பெறுமதியில் ஏற்பட்டு வரும் மாற்றத்தின் விகிதாசாரத்துக்கேற்ப அறவிடப்படும் வரி மாற்றமடைந்து வந்தால் அது விகிதாசார வரியாகும். வரி செலுத்துபவரின் தேறிய வருமானம் அல்லது வரி அறவிடப்படும் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துச் செல்வதுடன் இணைந்த விதத்தில் அறவிடப்படும் வரியும் படிப்படியாக அதிகரித்துச் சென்றால்அது வரிசைக் கிரமமான வரி என அழைக்கப் படுகின்றது. குறைந்து செல்லும் வரி இதற்கு நேர்மாறானதாகும்; அதாவது, வரி செலுத்தக்கூடிய சக்தி உயர்ந்து செல்வதுடன் இணைந்த விதத்தில் செலுத்தப்படும் வரி படிப்படியாக குறைவடைந்து கொண்டு வருகின்றது.

வரிச்சுமையை தாங்கும் அடிப் படையில் வரிகளை வகைப்படுத்துவது இரண்டாவது முறையாகும். வரிச் சுமை என்பதன் பொருள் குறிப்பிட்ட ஒரு வரியின் சுமையை இறுதியில் ஏற்பவர் யார் என்பதாகும். அதன் பிரகாரம், அரசாங்கம் அறவிட்டு வரும் வரிகளை பிரதானமாக இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவை நேரடி வரிகள் (direct taxes) மறைமுக வரிகள் (Indirect taxes) என்வனவாகும். நேரடி வரி என்பதன் பொருள் அரசாங்கத்தினால் விதிக்கப்படவும் ஒரு வரியின் சுமையை வேறு ஒருவர் மீது திணிக்க (மாற்றிக் கொடுக்க) முடியாதிருப்பதாகும். இலங்கையில் அறவிடப்பட்டு வரும் வரிகளில், வருமான வருகள் – அதாவது, கூட்டு (கம்பெனி) வருமான வரி மற்றும் கூட்டு அல்லாத (தனிநபர்) வருமான வரி – சொத்து வரி, செல்வ வரி, வெகுமதி வரி மற்றும் லைஸன்ஸ் கட்டங்கள் என்பன நேரடி வரிகளாக கருதப்பட்டு வருகின்றன. ஏற்றுமதிக் கட்டணங் களையும் நேரடி வரிகளைாக கருத முடியும் எனச்சிலர் குறிப்பிடுகின்றனர். ஒரு மறைமுக வரி என்பது, அரசாங்கத்தினால் ஒருவர் மீது விதிக்கப்பட்டுள்ள வரிச் சுமையை மற்றொருவர் மீது திணித்து விடக் கூடிய (மாற்றிக் கொடுக்கக்கூடிய) வரியாகும். இலங்கையின் பின் னணியில் உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள், மது வரிகள், இறக்குமதி வரிகள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் என்பன மறைமுக வரிகளாக கருதப்படட்டு வருகின்றன. வருமான மட்டம் எதுவாக இருந்த போதிலும், இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும் அரசாங்கத் துக்குச் செலுத்த வேண்டியிருக்கும் ஒரு வரி வகையென மறைமுக வரிகளைக் குறிப்பிட முடியும். வரிகளை வகைப் படுத்துவதில் மேற்கொள்ளப்படும் பிறி தொரு முறை வரிக்கு அடிப்படையாக அமையும் விடயத்தை அடிப்படை யாகக் கொண்டு வரிகளை வகைப்படுத்துவதாகும். இலங்கையின் வரிகள் இந்த அடிப்படையிலேயே கைப்படுத்தப்பட்டுள்ளள என்பதனை அட்டவணை – I எடுத்துக் காட்டு கின்றது.

### இலங்கையின் அரசிறை போக்குகள்

இலங்கையின் அரசிறையின் சார்பு ரீதியான முக்கியத்துவத்தினை மொத்த தேசிய உற்பத்தியுடன்

தொடர்புபடுத்தி நோக்கும் பொழுது, 1978 கால கட்டத்துக்கு முன்னர் இது 16.3 % வீச்சிலிருந்து 25.9% வீச்சு வரையில் வேறுபட்டுச் சென்றிருப்பதனைக் காண முடிகிறது. அரசிறையின் உச்ச மட்ட சார்புரீதியிலான முக்கியத்துவம் 1978ஆம் ஆண்டிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. அது மொத்த தேசிய உற்பத்தியில் 25.9 % ஆகும். அந்த வருடத்தில் அரசாங்க வருமானம் 11,061 மில்லியன் ரூபாவாக இருந்தது. தேயிலை, இறப்பர்மற்றும் தேங்காய் போன்ற முதல் நிலை ஏற்றுமதிகளின் போது கிட்டிய வரி வருமானம் உயர்வாக இருந்தமையே இதற்கான காரணமாகும்.

அட்டவணை 1

| இலங்கை அரசிறை அமைப்பு | | |
|---|---|---|
| 1. தனியார் வருமான வரி | x | x |
| 2. கம்பெனி வருமான வரி | x | |
| 3. வருமான வரி (1 + 2) | | x |
| 4. சொத்து வரி | | x |
| 5. மத்திய வங்கி திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | | x |
| 4. பொது விற்பனை, மொத்த வியாபார வரி | x | |
| 7. மது வரி | x | |
| 8. பாதுகாப்பு வரி | x | |
| 9. லைசென்ஸ் கட்டணம் | x | |
| 10. உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் (6-9) | | x |
| 11. சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரி | x | |
| 12. ஒட்டுமொத்த வருமானம் (3 + 4 + 5 + 10 + 11) | | x |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

எவ்வாறிருந்தபோதிலும், ஏற்றுமதித் துறை வரிகளின் முக்கியத்துவம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்ததுடன் இணைந்த விதத்தில், 1982இல் ஒட்டுமொத்த அரச வருமானத்தின் முக்கியத்துவம் அந்த வருடத்தின் மொத்த தேசிய உற்பத்தியின் 14.3% என்ற அளவில் வீழ்ச்சி கண்டிருந்தது. இது 1983 இல் 19.2% ஆக உயர்ந்து சென்றதுடன் 1994 வரையில் 19.2 – 20.3% என்ற வீச்சுக்குள் இருந்து வந்துள்ளது. இலங்கையின் அரச வருமானத்தை 1995–97 காலப் பிரிவிலும் மொத்த தேசிய வருமானத்தின் 21% அளவில் பராமரித்து வருவதற்கு எதிர்பார்க்கப் படுவதாக 1995 இன் வரவு செலவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அரச வருமானத்தில் வரிகள் மூலம் கிடைக்கும் வருமானமும் வரிகள் அல்லாத மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானமும் 1978–1993 காலப்பிரிவின் போது மாற்றமடைந்து வந்துள்ளமையை அட்டவணை -1 எடுத்துக் காட்டுகின்றது. அரச வருமானத்தில் வரி வருமானம் சுமார் 89% அளவில் இருந்து வந்துள்ளதுடன், வரி அல்லாத மூலங்களின் வருமானம் 11% வரையில் இருந்து வந்துள்ளது. தேசிய வருமானத்துடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, அரச வருமானம் சுமார் 18% அளவிலும் வரியல்லாத வருமானம் சுமார் 2% அளவிலும் இருந்து வந்துள்ளது. மறைமுக வரிகளைப் பொறுத்தமட்டில் அவை 1978 இல் மொத்த வரி வருமானத்தில் 41% ஐ பங்களிப்புச் செய்திருந்தன. அண்மைக்காலத்தில் இது 80 சதவீதம் வரையில் உயர்ந்து சென்றுள்ளது. மொத்த வியாபார வரி (Turnover Taxes) 11% திலிருந்து 34% ஆக உயர்த்தப் பட்டதும், இறக்குமதி வரிகள் 14% த்திலிருந்து 24% ஆக உயர்த்தப் பட்டதும் இந்த அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும்.

மொத்த வியாபார வரி

இலங்கையின் வரி வருமானத்தில் சுமார் மூன்றிலொரு பங்கினை பிரதிநிதித்துவம் செய்யும் மொத்த வியாபார வரிகள் முதன் முதலில் 1963 ஆம் வருட 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அது 1964 தொடக்கம் மொத்த வியாபார வரி (Business Turnover Tax - BTT) என்ற பெயரில் செயற்படுத்தப் பட்டு வந்தது. இதனையடுத்து, 1968 இல் எடுத்து வரப்பட்ட ஒரு சட்ட திருத்தத்தின் பிரகாரம், மொத்த சேவை வரிகளும் மொத்த வியாபார வரிகளுடன் சேர்த்துக் கொள்ளப் பட்டன. 1981 இன் 69 ஆம் இலக்க மொத்த வியாபார வரிச் சட்டத்தின் மூலம் நிறுவனங்களுக்கும் இந்த வரி அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1981 தொடக்கம் செயற்படுத்தப்பட்டது. இதன்படி, இலங்கையின் பொது விற்பனை மற்றும் மொத்த விற்பனை வரிகளுக்கு உற்பத்தி, உற்பத்தி சாராத மற்றும் இறக்குமதிகள் என்ற மூன்று பிரிவுகள் உள்ளடக்கப்பட்டன. உள்நாட்டுப் பொருள் உற்பத்தி மற்றும் (உற்பத்திகள் அல்லாத) சேவைத் துறைகளுக்கென, அவற்றின் உள்நாட்டு மொத்த வியாபாரத்தின் அடிப்படையிலேயே வரி அறவிடப்பட்டது. இங்கு மொத்த வியாபாரம் என்பது விற்பனையின் முழுப் பெறுமதி என்ற பொருளைத் தருகிறது. ஆனால், இறக்குமதிகளைப் பொறுத்தவரையில், இறக்குமதிகளின் பெறுமதி + இறக்குமதி கட்டணங்கள் + 10% இலாப எல்லை என்றவற்றின் அடிப்படையிலேயே வரி அறவிடப்பட்டது.

மொத்த வியாபார வரி வருமானத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கினை உற்பத்தி வரிகள் பங்களிப்புச் செய்வதுடன், சேவை வரிகளின் பங்களிப்பு 15% வரையில் உள்ளது. அதே வேளையில், இறக்குமதி வரிகள் மொத்த வியாபார வரிகளில் சுமார் அரைவாசிப் பகுதியை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இறக்குமதிகள் மீது மொத்த வியாபார வரு விதிக்கப்பட்டதன் மூலம், அதுவரை காலமும் இந்த வரி உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டிருந்தமையால் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் இலாப எல்லைகளில் ஏற்பட்ட இழப்புக்கு ஈடுசெய்யப்பட்டது. இந்த மொத்த வியாபார வரிகளின்முக்கியத்துவம் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதனைக் காண முடிகிறது. இந்த வரிகள் 1978 இல் மொத்த அரசாங்க

அட்டவணை 2

| வருடம் | வரி வருமானம் (TR) $\frac{(TR)}{R} \times 100$ | $\frac{(TR)}{GDP} \times 100$ | வரி அல்லாத வருமானம் (NTR) $\frac{(NTR)}{R} \times 100$ | $\frac{(NTR)}{GDP} \times 100$ | வருமானம் (R) $\frac{(R)}{GDP} \times 100$ |
|---|---|---|---|---|---|
| 1978 | 93.3 | 24.2 | 6.7 | 1.7 | 25.9 |
| 1979 | 92.1 | 21..0 | 7.9 | 1.8 | 22.8 |
| 1980 | 93.4 | 18.3 | 6.6 | 1.3 | 19.6 |
| 1981 | 92.7 | 16.1 | 7.3 | 1.3 | 17.4 |
| 1982 | 90.9 | 14.9 | 9.1 | 1.5 | 16.3 |
| 1983 | 85.4 | 16.4 | 14.6 | 2.8 | 19.2 |
| 1984 | 87.9 | 19.5 | 12.1 | 2.7 | 22.2 |
| 1985 | 84.0 | 18.7 | 16.0 | 3.6 | 22.3 |
| 1986 | 84.0 | 17.4 | 16.0 | 3.3 | 20.8 |
| 1987 | 83.3 | 17.9 | 16.7 | 3.6 | 21.4 |
| 1988 | 86.1 | 16.1 | 13.9 | 2.6 | 18.7 |
| 1989 | 88.0 | 18.9 | 12.0 | 2.6 | 21.4 |
| 1990 | 90.0 | 19.0 | 10.0 | 2.1 | 21.1 |
| 1991 | 89.5 | 18.3 | 10.5 | 2.2 | 20.4 |
| 1992 | 89.0 | 17.9 | 11.0 | 2.2 | 20.2 |
| 1993 | 88.6 | 17.6 | 11.4 | 2.3 | 19.8 |
| 1978-93 සාමාන | 88.6 | 18.3 | 11.4 | 2.4 | 20.4 |

இங்கு TR/R x 100 = வரி வருமானம் அரச வருமானத்தின் சதவிகிதமாக
TR/GDP x 100 = வரி வருமானம், மொஉஉ யின் சதவிகிதமாக
NTR/R x 100 = வரி அல்லாத வருமானம், அரச வருமானத்தின் சதவிகிதமாக
NTR/GDP x 100 = வரி அல்லாத வருமானம், மொஉஉ யின் சதவிகிதமாக
R/GDP x 100 = அரச வருமானம் மொஉஉ யின் சதவிகிதமாக

வருமானத்தில் 10 சதவீதமாகவும், மொத்த தேசிய வருமானத்தில் 3 சதவீதமாகவும் இருந்து வந்தன. இது 1993 அளவில் முறையே 30% ஆகவும் 6% ஆகவும் உயர்ந்து சென்றிருந்தது.

தற்போதைய மொத்த வியாபார வரியை பொருட்கள்மற்றும் சேவைகள் வரி என்ற பெயரில் குறிப்பிடப்படும் சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரியொன்றாக (Value Added Tax - VAT) ஆக மாற்றி அமைப்பதற்கு கடந்த காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1995 இன் வரவு செலவுத்திட்டமும் இதனை குறிப்பிடுகிறது. இதற்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் இதுவரையில் நிலவி வந்த பல்வேறு வரி விகிதங்கள் 1992 இல் 5%, 10%, 15% மற்றும் 20% என்ற நான்கு அடுக்குகளைக் கொண்ட ஒரு வரி அமைப்பாகவும், 1993 இல் 5%, 10% மற்றும் 20% என மூன்று அடுக்குகளை கொண்ட ஒரு வரி அமைப்பாகவும் மாற்றி அமைக்கப் பட்டது.

மொத்த வியாபார வரி (Turnover Tax) மொக்க விற்பனவுப் பெறுமதியின் மீது விதிக்கப்படும் ஒரு வரியாகும். சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி (VAT) மொத்த வியாபாரப் புறழ்வில் வேறு உற்பத்தியாளர்ளிடமிலுந்து கொள்வனவு செய்த பொருட்களின் பெறுமதியை கழிக்கும் பொழுது கிடைக்கும் சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீது விதிக்கப்படும் வரியாகும். தற்பொழுது நிலவி வரும் மொத்த வியாபார வரியில் முக்கியமான ஒரு குறைபாடு அவதானிக்கப்பட்டுள்ளது. இநத வரி பண்ட உற்பத்தி மற்றும் விநியோகம் என்றவற்றின் அனைத்துக் கட்டங்களுடனும் சம்பந்தப்பட்ட முழுப் பெறுமதியின்மீதும் விதிக்கப்பட்டு வருவதால், அதன்மூலம் ஒரு முறை வரி அறவிடப்பட்ட பண்டங்களுக்கு மீண்டும் மீண்டும் வரிகள் அறவிடப் படுகின்றது என கூறப்படுகிறது. இதனால் பொருட்களுக்கு நுகர்வோர் உயர் விலைகளை, செலுத்த வேண்டி யிருப்பதுடன், பொருளாதாரத்தின் பணவீக்க நிலை துரிதப்படுத்தப் படுகின்றது. ஆனால், சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீது வரி அறவிடப்படும் பொழுது அது உற்பத்தியாளரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப் படுவதால் சார்புரீதியில் நுகர்வோர் அவ்வளவு உயர்ந்த விலைகளைச் செலுத்த வேண்டிய நிலை உருவாகமாட்டாது. இன்று உலகில் சுமார் 80 நாடுகளில் சேர்க்கப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட வரி முறையே செயற்படுத் தப்பட்டு வருகின்றது. இந்த வரி முறை வரி நிர்வாகத்தையும் எளிதாக்கி விடுகின்றது. ஏனெனில், பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் அவற்றுக்கான பற்றுச் சீட்டுக்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்வார்கள். அதன்மூலம் வரி ஏய்ப்பும் முடியுமான அளவுக்கு குறைவடைந்து விடும்.

புதிய வரித் திட்டத்தை 1995 அக்டோபர் மாதம் தொடக்கம் செயற்படுத்துவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டிருந்து. தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் சிலவற்றுக்கு வரி விலக்கு அளிப்பது, ஒரு காலாண்டுக் கான மொத்த வியாபாரம் ரூபா 200,000 க்கு மேற்பட்டதாக இருந்து வரும் ஆட்களிடமிருந்து மட்டும் வரி அறவிடுதல், இரண்டு வரிசைக் கிரமங்களுக்கு மட்டும் அந்த வரியை மட்டுப்படுத்துதல் என்பன இந்த வரி முறையின் சிறப்பம்சங்கள் ஆகும். இந்த வரிசைக் கிரம முறைகளில் ஒன்று சலுகைகளுடன் கூடிய வரி முறை என்றும் மற்றையது சாதாரண வரி முறை என்றும் அழைக்கப்படும்.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் என்பனவற்றின் மீது அறவிடப்பட்டு வரும் வரிகள் வெளிநாட்டு வியாபார வரிகள் என அழைக்கப்படுகின்றன. ஏற்றுமதி வருமானங்கள் 1978 இல் மொத்த அரசாங்க வருமானத்தில் 43% ஆகவும், மொத்த வரி வருமானத்தில் 48% ஆகவும் மிகப் பெரிய பங்களிப்பொன்றை வழங்கியிருந்தன. ஆனால், இன்று அவை பூச்சிய மட்டத்தை எட்டியுள்ளன.

ஏற்றுமதி வரிகள்

நாட்டின் ஏற்றுமதி வருமானம் 1977 இல் 620 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது 1978 இல் சுமார் 7 மடங்கினால் அதிகரித்து 4,744 மில்லியன் ரூபாவாக இருந்தது. இந்த அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்த

காரணிகளில் ரூபா பெறுமதி இறக்கம், ஏற்றுமதித் தீர்வைகள் உயர்த்தப் பட்டமை (உதாரணமாக, தேயிலை கிலோ கிராம் ஒன்றுக்கான தீர்வை வரி 86 சதத்திலிருந்து ரூபா 15.50 அதிகரிக்கப்பட்டமை), ரூபா பெறுமதி இறக்கத்தினால் ஏற்றுமதிகளின் ரூபா மதிப்பு அதிகரித்தமை என்பன முக்கிய மானவையாகும். எனினும், 1992 டிசம்பர் மாதமளவில் ஏற்றுமதி வரிக்கொள்கையில் முக்கியமான ஒரு மாற்றம் எடுத்து வரப்பட்டது. அதாவது, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை என்பவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் முற்றாக ரத்து செய்யப்பட்டன. மேலும், 1993 மே மாதத்தில் உலோகம் கலந்த கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய கழிவுகள் தொடர்பாக நிலவி வந்த தீர்வைகள் ஒழிக்கப்பட்டதுடன், வருமான மூலாதாரமொன்று என்ற முறையில் ஏற்றுமதி வரிகள் முழு அளவில் முக்கியத்துவம் இழந்துவிட்டன. தேயிலை, இறப்பர், தென்னை போன்ற பாரம்பரிய ஏற்றுமதிப் பயிர்கள் அரசாங்கத்தின் முக்கிய வருமான மூலாதாரமாகப் பெற்றிருந்த முக்கியத்துவத்தை கவனத்திலெடுக்கும் பொழுது, ஏற்றுமதி வரிகள் முழு அளவில் ஒழிக்கப்பட்டமை அரசாங்க வரவுசெலவுத்திட்டம் மற்றும் பெருந் தோட்டப்பயிர்கள் என்பவற்றுக் கிடையில் நிலவி வந்த உறவின் முறிவினை அது குறிப்பதனையே காண முடிகிறது. இந்தக் கொள்கை மாற்றத்துக்கூடாக பெருந்தோட்டக் கைத்தொழிலின் இலாபம் அதிகரித்து எதிர்காலத்தில் அத்துறையில் கணிசமான அளவிலான ஒரு முன்னேற்றம் ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## இறக்குமதி வரிகள்

வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வைகள் 1978 இல் மொத்த அரசாங்க வருமானத்தில் 13% ஆக இருந்தது; இது இப்பொழுது 21% வரையில் உயர்ந்து சென்றுள்ளது. இப்பொழுது வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது விதிக்கப் படும் வரி சுமார் 100 சதவீதம் வரையில் இறக்குமதி வரிகளுக்கு மட்டுமே வரையறுக்கப்படடுள்ளது. இலங்கையில் இறக்குமதி வரி வருமானம் கிடைக்கும் பிரதான பொருட்களில் பெற்றோலிய உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள், மோட்டார் வாகனங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள், புடவைகள் என்பவற்றை குறிப்பிடலாம். அரசாங்கத்தின் வருமான நோக்கங்களுக்காக சர்வதேச வர்த்தகத்தில் தங்கி இருக்கும் நிலையை குறைத்துக்கொள்வதற்காக, 1980 இல் ஜனாதிபதி தீர்வை வரி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இறக்குமதி வரி அமைப்பின் மீது மேற்கொள்ளப் பட்ட பல்வேறு சீராக்கங்களின் மூலம் இடையறாது முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. மிக அத்தியாவசியமான நுகர்வுப் பொருட்கள் தொடர்பான தீர்வை விகிதங்கள் குறைவாக இருந்து வருவதுடன், இடைத்தர பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்கள் என்பன தொடர்பாக நடுத்தர அளவில் தீர்வைகள் விதிக்கப் படுகின்றன. ஆடம்பர பொருட்கள் தொடர்பாக உயர்ந்த விகிதத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன.

1995 வரவுசெலவுத்திட்டத்தில் இறக்குமதி வரிகளை மறுசீரமைக்கும் விடயம் தொடர்பாக முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டது. உண்மையிலேயே இதுவரை காலமும் பிரதானமாக இரண்டு நோக்கங்களுக் காகவே இறக்குமதித் தீர்வைகள் அறவிடப்பட்டு வந்துள்ளன: இதில் ஒன்று அரசாங்கத்துக்கு வருமானம் பெற்றுக் கொள்வதாகும்; உள்நாட்டுக் கைத்தொழில்களை பாதுகாத்து, பொருளாதார வளர்ச்சியை மேம் படுத்துவது இரண்டாவது நோக்கமாகும். ஆனால், அதன் மூலம் ஏற்படக்கூடிய ஒரு சில பொருளாதார தாக்கங்கள் குறித்து இந்த வரவு செலவுத் திட்டம் கவனத்தை ஈர்த்துள்ளது. இறக்குமதித் தீர்வைகள் காரணமாக இறக்குமதிப் பொருட் களின் விலைகள் உயர்ந்து செல்வது இதில் ஒன்றாகும். அதன் காரணமாக, உள்நாட்டு உற்பத்தியாளர்களும் அதற்கு இணையான ஒரு சத விகிதத்தில் தமது உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரித்துக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. அது உள்ளூர் நுகர்வோர் மீது ஒரு மேலதிக வரிச் சுமையை திணிப்பதனை ஒத்ததாகும்.

வளர்முக நாடு ஒன்று என்ற முறையில் உள்நாட்டுக் கைத்தொழில் களை பாதுகாத்துக் கொள்வது முக்கியமானதாக இருந்து வந்த போதிலும், இலங்கையில் தற்பொழுது நிலவிவரும் இறக்குமதி வரி முறை இரண்டு சிக்கல்களை எடுத்து வருவதாகக் கூறப்படுகிறது. உற்பத்தியின் மீது மோசமான தாக்கத்தை எடுத்து வருவதன் மூலம் ஏற்படும் குறைந்த பொருளாதார வளர்ச்சி ஒன்றாகும். அதற்கூடாக, உற்பத்தியிலும் பார்க்க வியாபாரத் துறை இலாபகரமானது என்ற எண்ணம் தோன்றுகின்றது. பாதுகாப்புக் கூடாக உருவாகக் கூடிய தொழில் வாய்ப்புக்களிலிருந்து கிட்டும் அனுகூலத்திலும் பார்க்க உயர்வான பிரதிகூல நிலைமைகள் தோன்று கின்றன. தற்பொழுது நிலவி வரும் இறக்குமதி வரி முறை ஏற்றுமதிகள் மீதான வருமானங்கள் குறைவடை வதற்கும் வழிகோலுகின்றன என்பது இனங்காணப்பட்டுள்ள இரண்டாவது சிக்கலாகும். எனவே, 1995 இன் வரவுசெலவுத் திட்டம் தற் பொழுது நிலவி வரும் உச்சமட்ட பெயரளவு வரி விகிதத்தை 45%, 35% வரையில் குறைத்துள்ளது.

இறக்குமதி வரிகளை குறைப்பது பொருளாதார வளர்ச்சியை மேம் படுத்துவதற்கு வகை செய்வதுடன், அதன்மூலம் அதிக அளவிலான தொழில்வாய்ப்புக்களும் வருமானங் களும் உருவாக்கப்படுகின்றன. மேலும், கைத்தொழில்கள் உயர்ந்த செயல்திறனை பெற்றுக் கொள்கின்றன. அது கைத்தொழில்மயமாக்கலை தூண்டிவிடுவதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை தோற்றுவிக்கின்றது.

உயர் அளவிலான இறக்குமதி வரிகள் பொருட்களின் விலைகளை அதிகரிக்கச் செய்கின்றன. அப் பொழுது நுகர்வோர் அப்பொருட் களுக்கான கேள்வியை குறைத்து வேறு பொருட்களை நாடிச் செல்கின்றனர். அச்சந்தர்ப்பத்தில் (பாதுகாப்பு இல்லாத பிரிவில்) பொருட்களின் விலைகள் உயர்கின்றன. ஏற்றுமதி யாளர்கள் அவற்றை உள்ளீடுகளாகப்

பயன்படுததும் பொழுது ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளும் உயர்கின்றன. அது ஏற்றுமதியாளர்கள் மீது ஒரு வரியை அறவிடுவது போன்ற தாகும். அதனால் ஏற்றுமதிகளின் போட்டித்திறன் குறைவடைந்து அவற்றின் மூலமான வருமானம் வீழ்ச்சியடைய முடியும். மறுபுறத்தில், பாதுகாப்புவாதத்தின் மோசமான தாக்கம் அந்நியச் செலாவணி விகிதத்திலும் பாதிப்பினை எடுத்து வருவதன் மூலம் ஏற்றுமதியாளர் களுக்குக் கிடைக்கும் ரூபா சம்பாத்தியங்களின் அளவு குறை வடைகின்றது. இலங்கை இந்தக் காரணிகளைக் கருத்தில் கொண்டு ஏற்றுமதி வரிகளைப் போலவே இறக்குமதி வரிகளையும் படிப்படியாகக் குறைத்து விடுவதற்கும், ஒரே சீரான, குறைந்த மட்டத்திலான வரி விகிதமொன்றை எடுத்து வருவதற்கும் எதிர்பார்க்கின்றது.

1995 வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் 10%, 20%, 35% என்ற வகையில் இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டுள்ள பொருட்கள் வருமாறு:

தொகுதி 1 : 10% வரையில் வரி குறைக்கப்பட்டுள்ள பொருட்கள் (முன்னர் 20% ஆக இருந்தவை)

விவசாய இயந்திரங்கள் பொருட்கள் மற்றும் உப கரணங்கள், உள்நாட்டில் ஒன்று சேர்க்கப்படும் பஸ் மற்றும் லொரி என்பவற்றுக்காக இறக்குமதி செய்யப்படும் உதிரிப்பாகங்கள், முச்சக்கர வண்டிகள், சிறிய மோட்டார் சைக்கிள்கள்.

தொகுதி 2 : 20% வரையில் வரி குறைக்கப்பட்டுள்ள பொருட்கள் (முன்னர் 35% ஆக இருந்தவை)

30 ஆசனங்களுக்கு மேலுள்ள பஸ் வண்டிகள், மின்சார மோட்டார் வாகனங்கள்.

தொகுதி 3 : 35% வரையில் வரி குறைக்கப்பட்டுள்ள பொருட்கள் (முன்னர் 45% ஆக இருந்தவை)

புடவைகள், மோட்டார் வாகனப் பாகங்கள், டயர்கள் டியூப்கள், அச்சுக் கடதாசி, எழுது பொருட்கள், பொதிப்படுத்தும் பொருட்கள், குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள், குளிரூட்டிகள், அதி குளி ரூட்டிகள்.

### மதுவரிகள்

இலங்கையின் மறைமுக வரி வருமான வகையொன்று என்ற முறையில் மது வரிகளை (Excise duties) குறிப்பிட முடியும். மதுவரி என்பதன் பொருள் மதுபானம் மற்றும் புகை யிலை உற்பத்திப் பொருட்கள் என்பன மீது விதிக்கப்படும் வரியாகும். இலங்கையில் முதல்முதலாக 1912 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க மதுவரிச் சட்டத்தின் மூலம் இந்த வரி முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சமீப காலம் வரையில் மதுவரிகளின் கீழ் மதுபானம் மற்றும் புகையிலை என்பன மட்டும் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால், தற்பொழுது சீமெந்து, மின் உபகரணங்கள், டீசல் வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் என்பவற்றின் மீது விதிக்கப் படும் ஒர சில வரிகளும் இதில் சேர்க்கப்படடுள்ளன. மதுவரிகள் மூலம் அரசாங்கததுக்குக் கிடைக்கும் வருமானம் மொத்த தேசிய வருமானத்தில் 3 சதவீதமாகவும், மொத்த அரசாங்க வருமானத்தில் 13 சதவீதமாகவும் உள்ளது. மொத்த அரசாங்க வரி வருமானத்தில் மது வரிகளின் பங்கு 14% ஆகும்.

நேரடி வரியின் முக்கியத்துவம்

| நாடு | அரச வருமானத்தின் விகிதமாக வருமானம் |
|---|---|
| குறைவருமான நாடுகள் | |
| மலாவி | 37% |
| இலங்கை | 11% |
| கென்யா | 26% |
| சிம்பாம்வே | 44% |
| இந்தோனேஷியா | 58% |
| நடுத்தர வருமான நாடுகள் | |
| பிலிப்பைன்ஸ் | 29% |
| ஈக்வடோர் | 57% |
| துருக்கி | 40% |
| வளர்ச்சியடைந்த நாடுகள் | |
| நியூசிலாந்து | 57% |
| அவுஸ்திரேலியா | 65% |
| அமெரிக்கா | 50% |

மூலம்: World Development Report, 1994

### நேரடி வரிகள்

வரி செலுத்தப்படுபவராலேயே வரிச் சுமை ஏற்றுக் கொள்ளப்படும் வரிகள் நேரடி வரிகளாகும். தற்பொழுது இலங்கையின் வரி வருமானத்தில் நேரடி வரிகள் சுமார் 20% ஐ பங்களிப்புச் செய்கின்றன. இது 1978 இல் 13% ஆக இருந்தது. வருமான வரி, சொத்துவரி மற்றும் லைஸன்ஸ் கட்டணங்கள் என்பவற்றின் அடிப்படையில் நேரடி வரிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சிலர் ஏற்றுமதிக் கட்டணங்களையும் நேரடி வரிகளாக வகைப்படுத்துகின்றனர். ஆனால், நாங்கள் இங்கு இறக்குமதி வரிகளை மறைமுக வரிகளாக நோக்கி யிருப்பதனால் ஏற்றுமதி வரிகளையும் மறைமுக வரிகளாக கவனத்தில் எடுத்துள்ளோம்.

### வருமான வரி

தனி நபர்களின் அல்லது நிறுவனங்களின் வருமானததை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் அறவிட்டு வரும் வரியே வருமான வரியாகும். அந்த அடிப்படையில் வருமான வரிகள் தனிநபர் வரி மற்றும் கூட்டு வரிகள் என இரண்டு வகைகளில் அடங்குகிறது. தனியார் வருமான வரி தொழில்கள், தொழில் முயற்சிகள், தனியார்துறை தொழில்கள், வட்டி, இலாபப் பங்கு போன்றவற்றின் மீது அறவிடப்பட்டு வருகின்றது. உற்பத்தி, விவசாயம், வியாபாரம், வங்கிகள், சுரங்கங்கள், கட்டுமான வேலைகள் மற்றும் போக்குவரத்துத் துறை என்ப வற்றிலிருந்து நிறுவன ரீதியான வருமான வரி அறவிடப்படுகின்றது.

வருமான வரிகளின் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்த வருமானம் 1978-93 காலப்பிரிவின் போது மொத்த அரசாங்க வருமானத்தில் 10% – 18% வீச்சுக்களில் இருந்து வந்துள்ளதுடன், அண்மைய

வருடங்களில் 10% - 13% அளவுகளில் நிலவி வந்துள்ளது. மொத்த தேசிய வருமானத்தின் சதவீதம் என்ற முறையில் 1978—93 காலப்பிரிவின் போது அதன் பங்கு 2% - 5% என்ற அளவுகளில் இருந்து வந்துள்ளது. வருமான வரிகளின் பங்களிப்பு சத விகிதம் இவ்விதம் குறைவாக இருப்பதற்கு பல காரணிகள் வழிகோலியுள்ளன:

- வரி செலுத்த வேண்டிய வர்களில் பெருந்தொகை யானோர் வரி செலுத்தா திருந்தமை; உதாரணமாக, இலங்கையில் சுமார் 200,000 - 250,000 பேர் வரையில் வருமான வரி செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். உள்நாட்டு இறைவரி திணைக் களத்தின் உள்ளக நிர்வாகத்தை மேம்படுத்தி கிடைக்க வேண்டிய வரி வருமானத்தை மேலும் 50 கோடி ரூபாவால் உயர்த்திக் கொள்வதற்கு 1995 இன் வரவு செலவுத்திட்டம் எதிர்பார்க் கின்றது.
- வருமான வரி அறவிடக்கூடிய ஆட்களின் வருமானம் தாழ்ந்த மட்டத்தில் நிலவி வருதல்; 1995 ஏப்ரல் 01 ஆந்திகதி தொடக்கம் ரூபா 5,000 க்குக் குறைவாக வருமானம் பெறுபவர்கள் அனைவரும் முழு அளவில் வரி விலக்குப் பெற்றுள்ளனர். ரூபா 5,000 க்கு மேல் வருமானம் பெறுபவர்களின் எண்ணிகை குறைவாகவே உள்ளது.
- அரச ஊழியர்களின் சம்பளங் களுக்கு வருமான வரி விலக்களிக் கப்பட்டிருத்தல்.
- தொழில் முயற்சிகளுக்கு வரிச் சலுகைகள் மற்றும் வரி விடு முறைகள் அளிக்கப்பட்டிருத்தல்.

உலகின் ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இலங்கையின் நேரடி வரி வருமானம் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருந்து வருவதனை காண முடிகிறது.

## வரி அல்லாத வருமானம்

இலங்கையின் அரசிறையின் அடுத்த முக்கிய அம்சம் வரி அல்லாத வருமானம் (Non-tax revenue) ஆகும். இலங்கையில் பின்வருவன வரி அல்லாத வருமானங்களாகக் கருதப்படுகின்றன:

- அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கும் இலாபங்களும் இலாப பங்குகளும்.
- அரசாங்கம் வழங்கும் கடன்கள் மீதான வட்டி.
- புகையிரதம், தபால் மற்றும் தொலைத்தொடர்பு, துறை முகங்கள், மின்சாரம் போன்ற தொழில் முயற்சிகளிலிருந்து கிடைக்கும் மொத்த கிடைப் பனவுகள்.
- கட்டடங்கள் போன்றவற்றி லிருந்து கிடைக்கும் வாடகை.
- இலங்கை மத்திய வங்கியின் இலாபப் பகிர்வு.
- தேசிய லொத்தரிலிருந்து கிடைக்கும் ஆதாயம்.
- நிர்வாக சேவைகள் மற்றும் கட்டணங்கள்.

வரி அல்லாத வருமான மூலம் இலங்கையின் வருமானக் கட்டமைப் பில் 1978 அளவில் பெற்றிருந்த குறைந்தளவிலான முக்கியத்துவம் இன்று வரையில் மாற்றம் எதுவுமின்றி நிலைத்து வருகிறது. இக்காலப் பிரிவு முழுவதிலும் இந்த வருமானம் மொத்த அரசாங்க வருமானத்தில் சராசரியாக 11% அளவிலும், மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 2% அளவிலும் இருந்து வந்துள்ளது. இந்த வருமான மூலத்தில் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த கடன்கள் மீது அறவிட்ட வட்டியே மிக முக்கிய பங்கினை பெற்றிருந்தது. 1990 வரையில் தொலைத்தொடர்பு திணைக்களத்தின் மிகைகளிலிருந்து அரசாங்கம் கணிசமான அளவில் வருமானங் களைப் பெற்று வந்தது. இலங்கை மத்திய வங்கி 1993 தொடக்கம் தனது வருமானத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு வழங்கி வந்தமையும், வரி அல்லாத வருமானங்களின் ஒரு முக்கிய கூறாக இருந்து வந்தது.

## முடிவுரை

இலங்கையின் பொருளாதாரம் கட்டற்ற வர்த்தக கொள்கையொன்றை நோக்கிச் செல்வதற்கு முன்னர் இலங்கையின் அரசிறைக் கொள்கை களின் உத்தி, குறிப்பாக வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைப்பதில் கவனம் செலுத்தி வந்தபோதிலும், 1978 இன் பின்னர் தனியார் துறையின் வளர்ச்சிக்கு உசிதமான முறையில் வருமானக் கட்டமைப்பில் ஒரு மறு சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கூடாக, சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகள் என்பவற்றுக்கு இடையூறாக இருந்து வந்த பல்வேறு வரி முறைகள் சீர்திருத்தப்பட்டதுடன், வரிச் சலுகைகளும் அளிக்கப்பட்டன. செல்வ வரி, வெகுமதி வரி, சொத்து வரி மற்றும் நேரடி வரி என்பன முற்றிலும் ஒழிக்கப்பட்டன. அதேபோல, ஏற்றுமதி வரிகளும் ஒழிக்கப்பட்டன. இறக்குமதி வரிகள் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றன. மொத்த வியாபார வரி மாற்றி அமைக்கப்படவிருக்கின்றது. இவற்றுக்கூடாக பொருளாதார வளர்ச்சிக்கு உசிதமான மறைமுக வரிமுறை ஒன்றை நோக்கி நகர்ந்து செல்லும் ஒரு போக்குத் தென் படுகிறது.

**வின்சன்ட் மர்வின் பெர்னான்டோ**

( 15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புக்களை இழந்து வரும் ஒரு சூழ்நிலையிலும், உலகளாவிய வருமான ஏற்றத்தாழ்வும் தீவிரமடைந்து வரும் ஒரு சூழ் நிலையிலும் 'GATT' தீர்மானங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வருமான ஏற்றத்தாழ்வு இத் தீர்மானங்களின் அமுலாக்கலுடன் மேலும் தீவிரமடைய முடியும். இந்த அடிப்படையில், தாராளமயமாக்கல் என்பது ஒரு கலோகம் மட்டுமேயாகும், பல மறைமுகமான வழிகளில் வட புல நாடுகளுக்குப் பொருத்தமான பாதுகாப்பு வழிமுறைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

# இயற்கை இறப்பர் - சர்வதேச விலை உறுதிப்பாட்டு வழிமுறைகள் : வரலாற்று ரீதியான மீளாய்வு

ரஞ்சித் மலிகஸ்பே
(பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலைச் சபை)

வேளாண்மைத் துறைப் பண்டங்களின் விலைகள் குறைந்த மட்டங்களில் நிலவி வந்தமை தொடர்ந்தும் வளர்முக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. இதன் விளைவாக, வருமானக்குறைவும் சேமிப்புக் குறைவும் தோன்றுவதுடன், அவை இந்த நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியையும் கைத்தொழில்மயமாக்கலையும் தடுத்து வருகின்றன. இத்தகைய பண்டங்களுக்கு மிகச் சிறந்த விலைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சர்வதேசப் பண்ட உடன்படிக்கைகள், ஏற்றுமதிக் கோட்டாக்கள், பல தரப்பு ஒப்பந்தங்கள், இரு தரப்பு வியாபார ஏற்பாடுகள் போன்ற வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சர்வதேச பண்ட உடன்படிக்கைகள் 1960 களிலும் 1970 களிலும் பெருமளவுக்குப் பிரபல்யம் பெற்றிருந்தன. ஆனால், சீனி, கொக்கோ மற்றும் கோப்பி போன்ற பண்டங்கள் தொடர்பான உடன்படிக்கைகள் பெற்ற வரையறுக்கப் பட்ட வெற்றி, மற்றும் 1985 இல் தகர உடன்படிக்கை முறிவடைந்தமை போன்றவற்றின் விளைவாக இந்த உடன்படிக்கைகளின் மதிப்பு குறைந்து வருகின்றது. சர்வதேச இயற்கை இறப்பர் ஒப்பந்தம் (சஇஇஒ) சந்தைத் தலையீட்டு வழிமுறைகளைக் கொண்ட ஒரேயொரு ஒப்பந்தமாக இருந்து வருவதுடன், அது இன்னமும் செயற்பட்டும் வருகின்றது.

இக்கட்டுரையில், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள இயற்கை இறப்பரின் விலை உறுதிப்பாட்டு முயற்சிகளின் வரலாற்றை எடுத்து விளக்குவதே எனது நோக்கமாகும். இந்த வரலாற்றுப் பகுப்பாய்வில் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப் படுகின்றன. உற்பத்தியாளர் மற்றும் வழங்கலை விவேகமான முறையில் மேற்கொள்ளும் வழிமுறைகளின் பரிணாம வளர்ச்சி, உற்பத்தியாளர் நுகர்வோர் ஒத்துழைப்பு மற்றும் கிடைக்கக் கூடிய விலையை உச்ச மட்டத்தில் வைத்துக் கொள்வதிலிருந்து விலை உறுதிப்பாட்டை நோக்கிய நகர்வு ஆகிய இரு அம்சங்களும் இந்த வரலாற்றுப் பகுப்பாய்வில் எடுத்து நோக்கப்படுகின்றன.

இயற்கை இறப்பர் விலைகளில் தலையிடுவதற்கான முதலாவது முயற்சி 1911 இல் பிரேசிலிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் பட்டது. உற்பத்தியாளர்களிடமிருந்து வந்த நெருக்குதல்களையடுத்து, அரசாங்கம், இறப்பரை கையிருப்பில் வைத்துக் கொள்ளும் பொறுப்பையும் அதனை சந்தைக்கு வெளியிடாது வைத்திருக்கும் பொறுப்பையும் பிரேசில் வங்கியிடம் ஒப்படைத்தது. ஆனால், தூர கிழக்கிலிருந்து பெருமளவுக்கு இறப்பர் வரத்தொடங்கியமையினால் இந்த முயற்சி தோல்வி கண்டது.

இதனையடுத்து, தலையீடு தூரகிழக்குப் பிராந்தியத்தை நோக்கி நகர்ந்து சென்றது. ஆரம்ப காலத்தில் சுய விருப்பில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவை அரசாங்கத் தலையீடு இன்றி உற்பததியாளர்களாலேயே கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இயற்கை இறப்பர் உற்பத்தியை நான்கில் மூன்று பங்கிற்குள் கட்டுப்படுத்துவதற்கு 1917 இல் மலேயாவின் பெருந்தோட்டக் கம்பெனிகளினால் இத்தகைய ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இது அற்ப ஆயுளைக் கொண்டிருந்ததுடன், 1920 இல் மலேயாவிலும் இலங்கையிலும் இறப்பர் உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்காக பிரிட்டிஷ் இறப்பர் விளைவிப்போர் சங்கம் இத்தகைய திட்டமொன்றை அறிமுகம் செய்து வைத்தது. ஆனால், பிற உற்பத்தியாளர்களின் பங்கேற்பு இல்லாதிருந்தமையினாலும், ஐக்கிய அமெரிக்க கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகவும் இத் திட்டமும் போதியளவில் வெற்றியளிக்கவில்லை.

இறப்பர் விலைகள் தொடர்பாக இந்த நூற்றாண்டில் மேற்கொள்ளப் பட்ட மிகப் பிரபல்யமான முயற்சி 1922 இன் ஸ்டீவன்சன் திட்டமாகும். உற்பத்தியாளர் முயற்சியுடனான ஏனைய விலைத் தலையீட்டுத் திட்டங்களைப் போலவே இதுவும் மந்தமான சந்தை நிலைமையொன்றில் விலைகளை உயர்த்திக் கொள்ளும் நோக்கத்தையே கொண்டிருந்தது.

பெருமளவுக்கு ஐக்கிய அமெரிக்காவின் கேள்வி வீழ்ச்சி அடைந்து வந்தமையின் விளைவாக இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இறப்பர் விலைகள் வீழ்ச்சி அடைந்து கொண்டு வந்தன. இந்த விலை வீழ்ச்சியை தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் கண்டறியும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் சேர் ஜேம்ஸ் ஸ்டீவன்சன் என்பவரின் தலைமையின் கீழ் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. இக்குழுவின் அறிக்கையை அடிப் படையாகக் கொண்டே ஸ்டீவன்சன் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டம் வரலாற்று ரீதியான உற்பத்தி

மட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி கோட்டா முறையொன்றையும் உள்ளடக்கியது. இந்தத் திட்டத்தின் கீழ் தோட்ட உற்பத்தியாளர்களாகவும் வியாபாரிகளாகவும் இருந்து வந்த பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தமது ஏற்றுமதி உரிமைகளை பதிவு செய்வதற்கும், உண்மையான ஏற்றுமதிகளை பதிவு செய்வதற்கும் ஒரு பதிவேடு வழங்கப்பட்டது. இதேபோல, சிறு உற்பத்தியாளர்களுக்கு கைமாற்றிக் கொடுக்கத்தக்க ஏற்றுமதிக் கூப்பன்கள் வழங்கப்பட்டன. இறப்பர், ஏற்றுமதியாளரை சென்றடையும் வரையில் இக் கூப்பன்களை அதனுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

ஸ்டீவன்சன் திட்டம் மலேயா மற்றும் இலங்கை என்பவற்றின் ஏற்றுமதிகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தமை அதன் முக்கிய குறைபாடாக இருந்தது. இந்தோனேஷியாவின் டச்சு இறப்பர் உற்பத்தியாளர்கள் இதில் பங்கேற்கவில்லை. பிரதான உற்பத்தியாளர்கள் அனைவரினதும் பங்கேற்பு இல்லாமல் வழங்கலைக் கட்டுப்படுத்தும் ஒரு திட்டம் வெற்றியடைய முடியாது. அந்த அடிப்படையில் இதுவும் அற்ப ஆயுளைக் கொண்டிருந்தது.' இந்தத் திட்டத்தில் உறுப்புரிமை பெற்றுக் கொள்ளாதிருந்த நாடுகள் தமது உற்பத்தியை அதிகரித்ததுடன், விலைகளும் வீழ்ச்சியடைந்தன. இதனால் 1928 அளவில் இத்திட்டத்தை கைவிட வேண்டி நேரிட்டது.

ஸ்டீவன்சன் திட்டம் குறித்து பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவி வருகின்றன. இதுவரை காலமும் ஆகக் கூடிய அளவில் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்ட பண்டக் கட்டுப்பாட்டுத் திட்டமாக இது இருந்து வந்துள்ளது என ஏ.டி.லோ என்பவர் கருதுகிறார். இக்கால கட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவே மிகப்பெரிய இறப்பர் இறக்குமதி நாடாக இருந்து வந்தது. அந்நாட்டில் இத்திட்டம் தொடர்பாக பெருமளவுக்கு வெறுப்பு நிலவி வந்தது. இந்தத் திட்டம் மலேயாவின் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்களையும் மிக மோசமாகப் பாதித்தது; அவர்களுக்கு வழங்கப்பட்ட கோட்டாக்கள் அளவில் குறைந்தவையாக இருந்து வந்ததுடன், மாற்று வருமான மூலங்களையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. சர்வதேச இறப்பர் சந்தைக்கு ஓர் உறுதிப்பாட்டை அளித்ததன் மூலம் புதிய இறப்பர் உற்பத்திக்கு அது வழங்கிய தூண்டுதல் இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான நீண்ட கால சாதனையாகும் என கோடன் அஸ்வோத் என்பவர் கருதுகிறார். 1920 களின் போது இறப்பர் விலைகள் சார்பு ரீதியில் நிலையாக இருந்து வந்தன என்றும், இந்தத் திட்டம் விலை வீழ்ச்சியை தடுத்து வந்தது என்றும் அவர் குறிப்பிடுகறார்.

பிரேசில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோப்பி ஏற்றுமதிகளின் மீது கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. அதனையடுத்து, அதன் உலகச் சந்தைப் பங்குகளில் அது கணிசமான அளவில் இழப்புக்களை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. அதேபோல, மிகப்பிரதான உற்பத்தி நாடான ஐவரி கோஸ்டின் பங்கேற்பின்றி அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச கொக்கோ ஒப்பந்தமும் படுதோல்வியடைந்தது. அநேகமாக ஸ்டீவன்சன் திட்டத்தின் அனுபவம் தரும் படிப்பினையும் இதுவாகும். அதாவது, பிரதான உற்பத்தியாளர்களின் பங்கேற்பு இன்றி குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் வழங்கல்களை கட்டுப்படுததுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றியளிக்க முடியாது.

நெதர்லாந்து ஸ்டீவன்சன் திட்டத்திலிருந்து பெருமளவுக்குப் பயனடைந்துள்ளது என்பதனை தெளிவாகக் காணமுடிகிறது. அது இந்தோனேஷியாவில் தனது குடியேற்ற நாடுகளான போர்னியோவிலும் சுமாத்திராவிலும் இறப்பர் உற்பத்தியை அதிகரித்துக் கொண்டது. ஆனால், ஐக்கிய அமெரிக்காவின் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் பெருமளவுக்குக் கையிருப்புக்கள் குவிந்தமையினாலும் இதன் மூலம் வெற்றியடைந்த நாடுகளும் கூட இறப்பர் விலை வீழ்ச்சியின் தாக்கங்களை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது.

மலேயாவையும் இலங்கையையும் சேர்ந்த இறப்பர் உற்பத்தியாளர்களே இறப்பர் வழங்கல் தொடர்பான கட்டுப்பாடுகளை எடுத்து வருவதில் முன்முயற்சியை மேற்கொண்டிருந்தனர். ஆனால், 1928 அளவில் இதே உற்பத்தியாளர்கள் இக் கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட வேண்டும் என குரல் எழுப்பத் தொடங்கியிருந்தனர். இந்தோனேஷியாவிடம் அவை தமது சந்தைகளை இழந்து விட்டமையே இதற்கான காரணமாகக் கூறப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த நெருக்குதர்களுக்குப் பணிந்து, ஸ்டீவன்சன் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் பெருமளவுக்கு பங்களிப்புச் செய்திருந்தது.

1930 களின் தொடக்கத்தில் தோன்றிய மாபெரும் பொருளாதார மந்தம் இறப்பர் வழங்கலை கட்டுப்படுத்துவதில் மீண்டும் ஆர்வத்தை தூண்டிவிடடது. இக்காலப் பிரிவு அளவில் ஐக்கிய அமெரிக்காவின் கொள்வனவு அநேகமாக ஸ்தம்பிதம் அடைந்திருந்து. உற்பத்தியாளர்கள் மரங்களிலிருந்து பாலை எடுக்காதிருந்த போதிலும் கூட விலைகள் மேலும் வீழ்ச்சி அடைவதையும் கையிருப்புக்கள் அதிகரிப்பதையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. விலை வீழ்ச்சிப் போக்கு மிகுவம் தீவிரமடைந்து 1932 அளவில் இறப்பர் விலைகள் 1925 இல் நிலவிய விலைகளின் மூன்று சதவீதமாக வீழ்ச்சியடைந்திந்தன.

வீழ்ச்சியடைந்து வரும் விலைகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் இறப்பர் உற்பத்தியாளர்கள் மீண்டும் களத்துக்கு வந்தார்கள். அவர்கள் இந் நோக்கத்துக்கென 1930 அளவில் பிரிட்டிஷ்-டச்சு ஒருங்கிணைப்பு குழுவினை உருவாக்கினார்கள். இறப்பர் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதற்கும், 'சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு அதிகரிக்கப்படுவதனை தடுப்பதற்கும் என சட்டபூர்வமான ஒரு திட்டம் அவசியமாகும் என்ற கருத்தினை இக்குழு கொண்டிருந்தது.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த பத்தொன்பது வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உள்ளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

- இலங்கையில் வெளிநாட்டு முதலீடு
- சுற்றுலாத்துறையும் பொருளாதாரமும்
- இலங்கையில் பங்குச் சந்தை
- குடித்தொகையும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியும்

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

(இரட்டை இதழ்) விலை: ரூ.20/- ஆண்டு சந்தா : ரூ.120/-
ஆண்டு சந்தா (வெளிநாடு),

தென்னாசியா US$ 24
தென்கிழக்காசியா /ஆபிரிக்கா - US$ 24
ஜப்பான் - US$ 24
உலகின் ஏனைய பாகங்கள US$ 33

காசோலைகள் / காசுக்கட்டளைகள் "People's Bank Economic Review" என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி : 327082, 436940.

பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்
ஒரு சமூகப் பணித்திட்டம்

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

Printed at the Sumathi Book Printing (Pvt) Ltd, Colombo 14, Sri Lanka.